மாணிக்கவாசக சுவாமிகள்

அருளிச்செய்த

# திருவாசகம்

[ குறிப்புரையுடன் ]

வெளியீடு :

சிவதொண்டன் நிலையம்

செங்கலடி.

1987

உ
சிவமயம்

மாணிக்கவாசக சுவாமிகள்

அருளிச்செய்த

# திருவாசகம்

[ குறிப்புரையுடன் ]

வெளியீடு :

சிவதொண்டன் நிலையம்

செங்கலடி.

1987

1987

C பதிப்புரிமை

விலை 60/-


294.5/2

வெளியீடு :

அ. செல்லத்துரை
சிவதொண்டன் நிலையம்,
செங்கலடி கி. மா.
இலங்கை.

அச்சுப்பதிவு :

கு. வி. அச்சகம்
386, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.



தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்.
87161

'' அனைத்தெலும்பு உள்நெக ஆனந்த தேன் சொரியும் குனிப்புடையான். ''

# மாணிக்கவாசகசுவாமிகள்



திருப்பெருந்துறையிலுள்ள மூலப்படிமம்

உ

சிவமயம்

## உள்ளுறை


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| சிவபுராணம் | 1 | புணர்ச்சிப்பத்து | 169 |
| கீர்த்தித் திருவகவல் | 5 | வாழாப்பத்து | 173 |
| திருவண்டப்பகுதி | 12 | அருட்பத்து | 177 |
| போற்றித் திருவகவல் | 21 | திருக்கழுக்குன்றப்பதிகம் | 181 |
| திருச்சதகம் | 32 | கண்டபத்து | 184 |
| நீத்தல் விண்ணப்பம் | 65 | பிரார்த்தனைப்பத்து | 187 |
| திருவெம்பாவை | 82 | குழைத்தபத்து | 191 |
| திருவம்மானை | 89 | உயிருண்ணிப்பத்து | 195 |
| திருப்பொற்சுண்ணம் | 96 | அச்சப்பத்து | 198 |
| திருக்கோத்தும்பி | 103 | திருப்பாண்டிப்பதிகம் | 202 |
| திருத்தெள்ளேணம் | 108 | பிடித்தபத்து | 206 |
| திருச்சாழல் | 113 | திருவேசறவு | 210 |
| திருப்பூவல்லி | 118 | திருப்புலம்பல் | 213 |
| திருவுந்தியார் | 122 | குலாப்பத்து | 214 |
| திருத்தோணோக்கம் | 125 | அற்புதப்பத்து | 217 |
| திருப்பொன்னூசல் | 128 | சென்னிப்பத்து | 221 |
| அன்னைப்பத்து | 131 | திருவார்த்தை | 225 |
| குயிற்பத்து | 134 | எண்ணப்பதிகம் | 229 |
| திருத்தசாங்கம் | 138 | யாத்திரைப்பத்து | 231 |
| திருப்பள்ளியெழுச்சி | 141 | திருப்படையெழுச்சி | 235 |
| கோயில் மூத்த திருப்பதிகம் | 145 | திருவெண்பா | 236 |
| கோயில் திருப்பதிகம் | 149 | பண்டாயநான்மறை | 238 |
| செத்திலாப்பத்து | 153 | திருப்படையாட்சி | 241 |
| அடைக்கலப்பத்து | 157 | ஆனந்தமாலை | 247 |
| ஆசைப்பத்து | 161 | அச்சோப்பதிகம் | 250 |
| அதிசயப்பத்து | 165 | | |



# பதிப்புரை

திருவாசகத்தின் பொருள் சிவம் என்பதை மாணிக்கவாசகசுவாமிகளே உணர்த்தினர். திருவாசகத்தை ஓதி உணர்ந்தவரான துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள் திருவாசகத்திற்கு வா ச் சி ய ம் ''தூசகல் அல்குல்வேய்த் தோள் இடத் தவனே'' எனக் கூறினர். திருவாசகத்திலும் ''சொல் லற் கரியானைச் சொல்லி'', ''பேச்சிறந்த மாசின்மணியின் மணிவார்த்தை பேசி'', ''வேதப் பொருள் பாடி'', ''புனை யாளன் சீர்பாடி'', ''சிவம் பாடி'' எனப் பலகாலும் பயின்று வருவனவற்றைக் குறிப்பாய்க் கொண்டு திருவாசகத்தின் பொருள் சிவமே எனத் தெளியலாம். திருவாசகத்தின் பொருள் சிவம் எனின் அதனை ஓதுவதாலாம் பயன் சிவமாதல் ஆகும். சிவமாம் தன்மை பெற்ற ஒருவரால் பாடப்பட்ட மெய்ந்நூலாதலின் இத்திருநூலைப் பொருளு ணர்ந்து பாடுவோர் சிவமேயாவர். இந் நூலின் பின் னிணைப்பாகச் சேர்க்கப்பட்டுள்ள திருவாசகப் புகழ்ப் பாக் களிலே பந்தத்தை நீக்கி முத்தியைக் கொடுக்கும் நூலே திருவாசகம் எனும் பொருள்படப் பலவிடத்தும் பாடப் பட்டிருப்பதைக் காணலாகும். எங்கள் குருபரன் யோக சுவாமிகளும் ''மணிவாசகந்தரு மந்திர மோதினல் பிணி மூப் பில்லாப் பிரம மாகுதும்'' என மொழிந்துளார்.



சிவத்திலே பயில்வதற்கும், அவ்வாறு பயிலும் பாவக முதிர்ச்சியாலே சிவமாதற்கும் வழிசெய்யும் நூலாதலால் சிவநெறிச் செல்வர்கள் இத்திருநூலைப் பெரிதும் போற்றி வந்துள்ளனர். தாயுமான சுவாமிகள் இத் தமிழ் மறையிற் செறிந்துள்ள அநுபூதி வாசகங்களைச் சிந்தித்துச் சிந்தித்துச் சீவலாபம் பெற முயன்றனர் எனத் தெரிகிறது. திருவாசகத்தின் இருதயசுலோகமெனப் பாம்பன் சுவாமிகள் போற்றும் ''இன்றெனக்கருளி'' எனும் திருப்பாட்டிலுள்ள ''நினைப்பற நினைந்தேன்'', ''சென்று சென்றணுவாய்த் தேய்ந்துதேய்ந் தொன்றாகும்'' எனும் மணிவார்த்தைகள் சுட்டும் அநுபூதியில் ஆழ்ந்துபோக அவர் ஏங்கியமையை அவர் பாடிய மேல்வரும் எந்நாட்கண்ணிகள் உணர்த்துகின்றன.

நினைப்பறவே தான்நினைந்தேன் என்றநிலை நாடி
அனைத்துமாம் அப்பொருளில் ஆழுநாள் எந்நாளோ

சென்றுசென் றேஅணுவாய்த் தேய்ந்து தேய்ந்தொன்றாகி
நின்றுவிடும் என்றநெறி நிற்குநாள் எந்நாளோ

எமது குருபரன் அரிதாய்ப் போற்றிவந்த ஞானநூற் களஞ்சியத்தில் திருவாசகமும் இடம்பெற்றிருந்தது. அவரது சந்நிதானத்திலே நாடோறும் சிவபுராணம் ஓதப்படும். தென்னாட்டினும் விட, ஈழத்திலே சிவபுராணத்தின் சோதி பரந்திருப்பதன் காரணம் சிவயோக சுவாமிகளின் திருக் குறிப்பே என்பதை அறிவார் அறிவர்.

வேதமுடிபாகும் உபநிடதங்களை யோதின் விழுமிய முத்தி சித்திக்கும் என்பது நூற்றுணிபு ஆதலின், உபநிடதங்கள் முற்றுமுணர்ந்து தெளிதற்கேற்ற ஆயுள்நீட்சியும் உணர்வுவலியும் அக்காலத்தோர்க் குண்டாயது போல இக் காலத்தோர்க்கின்மையின், எவரும் ஓர்ந்து எளிதிற் கதி பெறுமாறு முத்தி பெறுதற்குரிய உபநிடதங்களின் சாரமாகவே 'திருவாசகம்' மொழிந்து வைத்தருளினரென்பதனாலேயே இதனை 'வேத பாராயணப் பனுவல்' எனத் தாயுமான

சுவாமிகள் ('சச்சிதானந்தசிவம்' - 3ஆம் பாடல்) கூறியுள்ளார்.

இன்று ஈழத்திலே ஆலயங்களிலும் இல்லங்களிலும் திருவாசக முற்றோதல் நிகழ்கின்றது. இது ஒரு நல்ல தருணமெனக் கருதி நூற்பழக்கம் குறைந்தோரும் படித்துப் பயனடைதற்கு வாய்ப்பான அரும்பத உரையுடன் இத்திருநூலை வெளியிடுகின்றோம்.

அரும்பதவுரையைச் சிறப்புற அமைப்பதிலும் மூலபாடச் செம்மையைக் கவனமாய்ப் பேணுவதிலும் அச்சுப்பிரதியைச் சரவை பார்ப்பதிலும் உதவி புரிந்த வட்டூர் பண்டிதர் க. மயில்வாகனம் அவர்கட்கும், மட்டூர் ஆசிரியர் செ. வினாசித்தம்பி அவர்கட்கும், இச்சிவதொண்டிற்கெனத் தாமாகவே மனமுவந்து நிதி வழங்கி, ஏறக்குறைய நூற்செலவின் நாலிலொரு பங்கைப் பொறுப்பேற்றுக்கொண்ட தொண்டர்கட்கும், ஒரு திருப்பணியைச் செய்யும் உணர்வுடன் திருத்தமாக அச்சிட்டுதவிய கு. வி. அச்சக அதிபருக்கும் அலுவலர்களுக்கும் நன்றியுடையேன்.

அ. செல்லத்துரை

சிவதொண்டன் நிலையம்
செங்கலடி.
23-8-1987

ஓம் சிவ ஓம்

# நுழைவாயில்

திருவாசகத்திலே ஆன்மீகப் பயணி ஒருவரின் அடிச்சுவடுகள் தெளிவாகத் தெரிகின்றன. அவற்றை அறிந்து கொள்வது வீட்டு நெறியில் நாட்டம் உடையோருக்குப் பெரிதும் உதவியாயிருக்கும். அவ்வடிச்சுவடுகளுட் சிலவற்றை இங்கு காண்போம்.

ஆளுடை அடிகளின் ஆன்மீக மலர்ச்சி திருப்பெருந்துறையிலே தோன்றிய சற்குரு தரிசனத்துடனேயே தொடங்குகிறது. சற்குரு தரிசனத்தைப் பெறுவதற்கு முந்திய அவருடைய வாழ்க்கைபற்றி அறிதற்குரிய குறிப்புகள் சிலவும் திருவாசகத்தில் உள்ளன. அக்குறிப்புகளைத் துணைக்கொண்டு அவர் ஆன்மீக மலர்ச்சியடைதற்குரிய பக்குவராய்ப் பரிணமித்தமை பற்றி ஒருவாறு கூறமுடியும். அவர் நிரம்பிய நூலறிவாளராகத் திகழ்ந்தனர். வேதாகமங்களை முறைப்படி ஓதி அறிந்திருந்தார். இறைவனைக் காண முயல்வோர் பின்பற்றும் நெறிமுறைகள் பலவற்றை ஓரிடத்தில் (திருவண்டப் பகுதி 127 - 145) குறிப்பிடுகிறார். அந்நெறிமுறைகளின் சிறப்பியல்புகளை உணர்த்தும் திட்பநுட்பமான சொற்களிலிருந்து அவைபற்றிய விளக்கமான அறிவு அவருக்கிருந்ததென்பது தெளிவு. அறுவகைச் சமயங்களையும், புத்தம் முதலாய சமயங்களையும் வாதித்து நிர்ணயஞ் செய்யக்கூடிய சமயவாதியராகவும் விளங்கினார். ''மிண்டிய மாயா வாதம் என்னும் சண்டமாருதம்'' ''உலோகாயதன் எனும் ஒண்திறற் பாம்பின் கலாபேதக்கடுவிடம்'' என்றும் வருந் தொடர்கள் அவ்விரு தத்துவங்களும் பற்றிய திண்ணிய விமரிசனவுரைகளாகும். கலைஞானியாகத் திகழ்ந்த அவர் ஞானநாட்டமுடையவராயும் விளங்கினர். ''நான்ஆர்? என் உள்ளம் ஆர்? ஞானங்கள் ஆர்?'' என்பனவாக அவர் விசாரம் அமைந்தது. இவ்விசாரத்தினாலே மாய வாழ்க்கையை மெய்யென்று மதித்திடாத நல்லறிவு வாய்த்தது.

தெய்வம் என்பதோர் சித்தம் பொருந்தியது; தேடும் பொருளும் சிவன் கழலே எனுந் தெளிவு பிறந்தது. இவற்றால் பார்ப்பதற்கு உலகத்தவர் போலக் காணப்பட்டாலும் கூத்தினர், கொள்கை வேறு கோலம் வேறாதல் போல அக முகமாகிய கடவுள் மனிதராக அமைந்தனர். கொள்கை முதிரமுதிரக் கோலம் கலைந்ததுபோலும். அவரது கடவுட்பித்தைக் கண்ணுற்ற நண்பர்களும், அயலவர்களும் கையிலுள்ள பறவையை விட்டு மரக்கிளையிலுள்ள பறவைக்கு ஏங்குகிறாயே என்பதுபோல நாத்தழும்பேற நாத்திகம் பேசினர். சுற்றத்தவர்கள் பற்றி அழைத்துப் பதறினர். இவற்றாலெல்லாம் சிறிதும் சலிப்படையாது தாம் கொண்ட கொள்கையில் உறுதியாய் நின்றனர். இவ்வாறு கலை ஞானம், மெய்ப்பொருள் விவேகம், உலக வைராக்கியம், வெறுப்பு (போக உவர்ப்பு), தெய்வ சிந்தை, கடவுட்பத்தி என்பவற்றால் முதிர்ந்து குருதரிசனத்தைப் பெறக்கூடிய பக்குவநிலை அடைந்தனர்.

பக்குவரான பெருந்துறைப் பிள்ளையை ஆட்கொள்ளப் பரமானந்தப் பழங்கடலான சிவபெருமான் மானிடக் கோலம் பூண்டு மண்மேல் மலரடி வைத்தனர். பழவடியார் சூழ்ந்து நிற்க, நிறைமலர்க் குருந்தின் கீழ் நிரம்ப அழகிய தேசிகராய் வீற்றிருந்தனர். அவரது வண்ணத்தையும், வடிவையும் கண்ணாரக் கண்டு நின்றார் அடிகள். அடிகளை நோக்கி "என்னை நீ அறிந்திலையோ? நான்தான் வினைக் கேடன்" என்பதுபோல் தன்னை அறிவித்து "வருக" என என்புருகு குரலால் அழைத்தனர். எளியோனாய்த் தன்முன் எழுந்தருளியிருக்கும் குருமணி சிவனே எனத் தேறித் தெளிந்த அடியவர் உடல் பொருள் ஆவி எல்லாம் உன்னதே இறைவா என ஒப்புக்கொடுத்துக் குருமணியின் திருவடிகளில் வீழ்ந்து வணங்கிக் கிடந்தனர். தன்னைச் சரணென அடைந்த அன்பனைத் தீக்கை வைத்தாளத் திருவுளம் பற்றினர் பரமாசாரியர். அவர் திருநீறு அருளினர். அறிவினையும், அறிவினை அறியும் நெறியினையும் அருளினர். ஒப்பற்ற ஒரு மொழியான மங்கல மந்திரம் ஈந்தனர். திருவடி சூட்டினர். 'என் அடியான்' என அடிமை கொண்டனர். அடியவரும் குருமணியைப் பிரிவறியா நிழல்போல் தொடர்ந்து தொழும்புகள் செய்து கலந்தினிது வாழ்ந்தனர்.



முத்திக் கரையேற்றும் பக்தி நெறியை அறிவுறுத்தி முடிந்ததும் சிவபிரான் தமது அருட்கோலத்தை மறைத்துக் கொண்டு பழவடியாரோடு சிவபுரம் சென்றனர். பெருந்துறைப்பிள்ளையோ கைலைச்சிகரத்திலிருந்து ஆழ்கடலில் வீழ்ந்தவர்போலானார். தினையளவு போதிலே சிவமாக்க வல்லவரான சிவபிரான் தன் அடியவரைத் தனியனாய்ப் புலம்ப விட்டுச் சென்றமை பற்றி நாம் எதுவும் பேசாது அமைவோமாக. அந்த ஞான நாடகத்திலே குருசீட முறைமை பற்றிக் கற்கக்கூடிய ஒரு பாடத்தினை மாத்திரம் கருத்துட்கொள்வோம். அது என்னவெனில் திருப்பெருந்துறையில் தோன்றிய ஞானகுரவன் பெருந்துறை மலையில் ஏறி அருள் மழை சொரியும் மேகனாவான். அம்மேகன் சொரிந்த அருள் நீரைப் பாய்ச்சி சிவப்பயிர் வளர்க்கும் தொண்ட உழவரே ஆளுடையடிகள். திருவண்டப் பகுதியிலே கூறப்பட்டுள்ள இக்கருத்தினைப் புரிந்துகொண்டால் முத்திக் கரைசேர்க்கும் மாயவித்தைக் காரணாகக் குருமணியை எண்ணுதற்கு இடமிராது.

சற்குருவின் அருளாலே நிரந்தரமாய் நின்ற சிவம் ஒன்றே மெய்ப்பொருள் என்பது உள்ளங்கையில் நெல்லிக்கனி போல் தெளிவாயிற்று. அப்பொருள் "மெய்ஞ்ஞானமாகி மிளிர்கின்ற மெய்ச்சுடர்" என்பதும் பகல்போல் வெளியாயிற்று. அதுவே பரமானந்த சுகம் என்பதும் அனுபவமாயிற்று. மெய்ப்பொருள் போலவே பொய்யாயினவற்றின் மயக்கமும் புரிந்தது. நில்லாத உலகம் பொய்யானது. துன்பமயமான பொய்யுலகின் இருப்பிற்கு ஆதாரம் அறியாமையேயாகும். ஆகவே அன்பர் பொய்யுலகினின்றும் நீங்கி மெய்ப்பொருளில் நிலைத்து நிற்கும் தாகம் கொண்டவராயினார். ஆனால் மாயவிருள், பாசவினை, வஞ்சப்புலன்,

விலங்கு மனம் ஆகியவற்றால் யாக்கப்பட்ட யாக்கைவலையோ பொய்யிருளில் மடக்கிவைக்கவே முயன்றது. பரமானந்த வெள்ளத்தில் நீந்திக்குளிக்கும் இன்பத்தில் சுகித்தவர் மண்ணிலே வாழ்ந்து மண்ணுவதற்கு இணங்குவரோ? உலகில் உழல்வது 'பெருநீரறச் சிறுமீன் துவழ்வது' போன்ற துயராய் இருந்தது. ஆகவே உலகினை வெறுத்துக் கடவுளிடத்துப் பத்தி பூண்டனர். இவ்வித உலக வைராக்கியமும் கடவுட் பத்தியுமே அவரது ஆன்மீக நெறியின் ஆரம்பக் கட்டத்தின் இயல்புகளாயின. இவ்விரு பண்புகளினதும் நூதனமான இயல்புகளெல்லாம் நூறு பாடல்களைக் கொண்ட திருச்சதகத்திலே நன்கு விவரிக்கப்பட்டுள்ளன. இவ்விவரங்களை நுணுகி ஆராய்ந்த முன்னோர் திருச்சதகத்திற்குப் 'பத்தி வைராக்கிய விசித்திரம்' எனும் குறிப்பினைப் பொறித்தனர். ஐம்பது பாடல்களைக் கொண்ட மற்றொரு அழகிய பிரபந்தமான நீத்தல் விண்ணப்பத்திற்குப் 'பிரபஞ்ச வைராக்கியம்' எனும் குறிப்புரை வரையப்பட்டுள்ளது. இறைவனது கருணைக் கடலில் கலந்தினித்திருக்கும் அன்பரை நெய்க்குடத்தைப் பற்றி ஏறும் எறும்பென ஐம்புலன்கள் மொய்த்துக்கொள்வதும், அன்பர் எறும்பிடை நாங்கூழென அரிப்புண்டு அவற்றினின்றும் விடுபடத் துடிக்கும் வைராக்கியமும் உன்னதமான ஞானக்கவிகளுக்கு மாத்திரம் கைவரக்கூடிய உயர்ந்த கலைவண்ணத்துடன் அதில் கூறப்பட்டுள்ளன. ஐம்புல வேடரினால் அலைக்கப்படும் ஆன்மீக வழி, வழிமுழுவதிலும் சுவைமிக்க சருக்கரை தீற்றும் இனிமையான வழியாக இருப்பதற்கில்லை. அது 'அடித்தடித்து அக்காரம் தீற்றும் அற்புத வழி'யேயாகும். இவ்வற்புத வழியிலே பரமானந்த சுகத்தை நினைந்த கீதமினிய மணிவாசகக் குயில் கண்டம் கனையக் கதறிக் கொண்டே வழிநடந்தது. திருவாசகப் பாக்களிலே நன்கு திளைத்த பரஞ்சோதி முனிவர், அடிகளை 'அழுதடியடைந்த அன்பர்' என மிகப் பொருத்தமாகவே குறிப்பிட்டிருக்கிறார்.

படமுடியாத துயரம் நிரம்பிய வழி ஆயினும், அவ்வழியிலே தீரத்துடன் செல்லக் கூடிய நம்பிக்கையுடையவ



ராக அன்பர் விளங்கினர். இறைவன் தன்னை உடையான். தான் அவன் அடியான். இந்த உறவு ஒழிக்க ஒழியாது எனும் உறுதி அவரிடம் வாய்த்திருந்தது. இறைவன் தன்னை ஒற்றி வைக்கலாம். விற்றுக்கொள்ளலாம்; கூவி அழைத்துத் திருவடி மலரைச் சூட்டலாம் அல்லது 'கும்பி' எனும் கொடுநரகில் தள்ளலாம். யாது செய்யினும் தனது தனித்துணை அவரே. துன்பப் புயல் வெள்ளத்துட் சிக்குண்டு 'இனியென்னே உய்யுமாறு' என இரங்கிக் கிடக்கும் வேளையிலும் குருமணி ஈந்த அஞ்செழுத்துப் புணையை இறுகப் பற்றியபடி கிடப்பாரேயன்றிப் பிறரைத் துணை என நினையமாட்டார். வழுக்கி வீழினும் திருவடி பிழைக்கமாட்டார். 'வினைப் பிறவி என்கின்ற வேதனை'யிலகப்பட்டுத் தீமைகள் செய்ய நேரிடினும் இறைவனுக்குச் செய்யும் விழுத்தொழும்பில் தவறமாட்டார். 'கொண்டானையல்லால் அறியாக் குலக்கொடி' போன்ற மானிடக் கற்புறுதிப்படி தன் தலைவனை நினைந்த சிந்தையராகவே இருப்பார். அவர் சித்தம் எனும் திண்கயிற்றால் சிவனுடைய திருப்பாதத்தில் கட்டுண்டு கிடந்தார்.

அன்பரைத் 'தொண்ட உழவர்' எனக் கொண்டால் அவர் சிவப்பயிர் விளைவிக்கும் நன்செய்நிலம் 'அர்ச்சனை வயல்' ஆகும். அவர் குருமணியின் ஆணைப்படி 'படிமப் பாதம்' நிறுவித் திருவடி வழிபாட்டில் ஈடுபட்டனரெனத் தெரிகிறது. சிவனை நினைந்த சிந்தையராய்ப் புலருமுன் எழுந்து சீதப் புனலாடி, அலகிட்டு, மெழுகிட்டு, நல்ல மலர் தூவிக், கரமலர் மொட்டித்து, இருதயம் மலர, கண்களிகூர், நுண்துளி அரும்ப வழிபட்டனர். ஆகமங்களை முறைப்படி ஓதி அறிந்தவரான அவர் ஆகமநெறிமுறை அணுவும் பிசகாத வகையில் பூசனை புரிந்தனர். இப்பூசனை முட்டுப்பாடெதுவும் இல்லாது நிறைவாயிருத்தல் வேண்டும் என்பதில் அவர் மிகுந்த கருத்துடனிருந்தனர். ஆயிரம் மலர் கொண்டு செய்யும் வழிபாட்டிலே ஒரு மலர் குறையத் தன் கண்மலரை இடந்து நிறைவு செய்த திருமாலின் பூசை அவருக்கு இலக்கியமாயிருந்தது. பூசைக்கு நேரும் இடை

யூறுகளை அகற்றுவதில் பால் முழுக்கிற்குத் தடையாக வந்த தந்தையின் தாளை வெட்டிய சண்டேசுரரின் உறுதி அவருக்கு இலக்காயிருந்தது.

அவரது அர்ச்சனை வயல் நன்கு பண்பட்டதாய் இருந்தது. அதில் அவர் அன்பு வித்து ஊன்றி வளர்த்தார். யாவரினும் மேலான ஈசன், எளிமையான மானிடச்சட்டை சாத்தி 'அருமையில் எளிய அழக'னாய் எழுந்தருளிப் பரிவோடு சொரிந்த பரமானந்தத்தேன் அன்பரின் சிந்தனையை நின்றுருக்கியது. இந்தப் 'பெருந்துறைப் பெருவெள்ளமே' அவரது அன்பின் ஊற்று ஆகும். ஆதலால் அன்பெனும் ஆறு கரை புரண்டோடி அவரது ஐம்புலன்களையும் மலர்வித்தது. ஓரோவொரு சமயத்தில் புலன்கள் உலக விடயங்களின்பால் ஈர்க்கப்பட்டன. அவ்வேளையில் கண்ணிலே சிறு தூசு வீழ்ந்தாலும் பெரும் எரிவு உண்டாதல் போலத் துயரினால் வெதும்பித் தம்மை ஓர் இரும்பின் பாவை எனவும், மனத்தைக் கல் எனவும், கண்ணை மரம் எனவும், இழித்துரைத்தனர். ''பொறுப்பரன்றே பெரியோர் சிறுநாய்கள் தம் பொய்யினையே'' என்பது போல இறைவனிடம் குறையிரந்தனர். நாளாக ஆக கருவிகரணங்கள் நல்வழிப்பட்டன. சிந்தனை சிவனுக்கென்றேயாயிற்று. வந்தனையும் சிவனது திருவடிக்கேயாயிற்று. தலை, வணங்குதற்கும் வாய், வாழ்த்துதற்காகவுமே அமைந்தன. கண்கள் சிவனையன்றி மற்றொன்றும் காணாவாயின. கைகள் அவனுக்கல்லாது எப்பணியும் செய்யாவாயின. நிற்கும்போதும் நடக்கும்போதும் கிடக்கும் போதும், எழும்போதும், எப்போதும் தொழுபவராயும், அழுபவராயும் ஆயினர். உன்மத்தராய்த் திரிந்த அவரை அவர்கால உலகம் 'பேய், என்று சிரித்தது. அவரோ பித்த உலகினரின் பழிப்புரையையே நல்ல அணிகலனாய்ப் பூண்டு, பெருந்துறைப் பித்தனையன்றி பிறிதொன்றும் அறியாதவராய்த் திரிந்தனர். அவரது உருவம் உருகும் உளத்தாற் செய்ததோ எனும்படியாய் நீராய் உருகியது. இவ்வாறு



''அவனுடைய வடிவெல்லாம் நம்பக்கல் அன்பு
அவனுடைய அறிவெல்லாம் நமையறியும் அறிவு''

என்றாங்கு அன்புப் பிழம்பாய்த் திரிந்தார்.

ஆனால் அது (மெய்ப்பொருள்) எவ்வுபாயத்தாலும் அடைய முடியாததெனவே பெரியோர் கூறுகின்றனர். அது ''இத்தந்திரத்திற் காண்டும் என்றிருப்போருக்கு அத்தந்திரத்திலேயே மறைந்து நிற்பது''. பற்றினால் பற்ற முனைந்த அன்பருக்கு அப்பற்றிலேயே மறைந்து நின்றது. ஐம்புலன்களாற் காணமுடியாததொன்றை உடம்பெல்லாம் கண்ணாய் வெள்ளம் பொழிந்தாலும் காணமுடியுமோ? மனங்கடந்ததொன்றை உள்ளந்தாள் நின்று உச்சி அளவும் நெஞ்சாய் உருகுவதால் அறிய முடியுமோ? அன்பரும் ''சுற்றுமின், சூழ்மின், தொடர்மின், விடேன்மின், பற்றுமின்'' என்றாங்கு முயன்றும் அவ்வொளிக்கும் சோரனைப் பற்ற முடியாதவராய் செய்வதொன்றறியாது செயலற்றுக் கிடந்தனர். இவ்வாறு தன்செயலற்றுக் கிடந்த வேளையில் எல்லாம் ஈசன் செயலே எனும் உண்மையைக் கண்டு தெளிந்தனர். அறியாமையால் தனக்கேற்பட்ட திகைப்பும், அத்திகைப்பைப் போக்கும் ஞானத் தெளிவும் அத்தெளிவை அடையும் வழியும், நன்மை தீமை அனைத்தும் இறைவன் செயலே என்பது அன்பருக்கு அனுபவமாயிற்று. தன்னை இந்த ஊனுடலில் பந்தித்து வைத்ததும் இப்பந்தத்தினின்றும் விடுவித்துத் திருவடித் துறையிற் சேர்ப்பதும் அவனது அருள் ஆடலே என்பதும் தெளிவாயிற்று. இவ்வருளாடலை இறைவன் உருத்தெரியாக் காலத்திலிருந்தே உயிரில் அத்துவிதமாய்க் கலந்து நின்று நிகழ்த்துகின்றான் என்பதும் வெளியாயிற்று. அனைத்தையும் அத்துரையே நடத்துகையில் எதனைக் கொள்ளுவது? எதனைத் தள்ளுவது? முன்னரெல்லாம் ''காயமாயத்தைக் கழித்தருள் செய்வாய்'' எனவுங் ''கழலடிக்கே இடுவாய்'' எனவும் பலதரமும் அரற்றிய வாசகங்கள் இப்போது நகைப்புக்குரியனவாயின. அவற்றைக் கூறமுடியாமல் வாயடங்கிப்போனதுடன் அவ்வாறு எண்ணுவதும் தனது அடிமைத்திறத்திற்கு அழகல்ல

எனும் தெளிவு உண்டாயிற்று. இவ்வாருய் எண்ணம், சொல், செயல் யாவுமற்று திருவடிப்புணையிலே தன்னைக் கையடையாக அர்ப்பணித்துக்கிடக்கும் பூரண அடிமைத் திறத்தைப் பொருந்தினர். இவ்வனுபவத்தைக் கூறும் குழைத்தபத்திற்கு, 'ஆத்தும நிவேதனம்' எனும் குறிப்பினை முன்னோர் சூட்டியிருக்கின்றனர். தித்திக்கும் சிவபதத்தை அருட்பிரசாதமாகப் பெறநாடும் அன்பர் தம் ஆத்மாவையே நிவேதிக்க வேண்டும் போலும். வைத்தநிதி, பெண்டிர், மக்கள், குலம், கல்வி ஆகிய உலக சுகங்கள் அனைத்தையும் துறந்து ஓடும், கவந்தியுமே உறவெனத் திரியும் வைராக்கியமும், சிந்தனை வந்தனை முதலியனவும் சிவனடிக் கீடாகாது எனவே தெரிகிறது. நான் எனும் பிறவிக் கருவேரை ஞான வாளால் அறுத்தெறியும் தீரனே திருவடிப் பேற்றிற்குரிய பாக்கியவானுவான்.

நான் எனும் மாயையையும் அதிற் கிளைக்கும் கருவி கரணங்கள் அனைத்தையும் சுட்டெரிக்கும் அன்பனகமே சிவபிரான் ஆடலியற்றுதற்குரிய நல்ல மயானம் போலும். ஆவி, யாக்கை, யான், எனது ஆதிய யாவு மற்று வெளியஞய் நிற்கும் அன்பனகமே தில்லைக் கூத்தன் உகக்கும் பொன்னம்பலம் போலும். பொய்யாயினவெல்லாம் போயகன்ற அக்கணத்திலேயே - இடைக்கணம் ஒன்றின்றித் தான் சிவமாயிருப்பதை அன்பர் உணர்ந்தனர். அவரது இதயமாமலரில் ஈசன் பிரியாதுறைந்தனர். உயிருட் கலந்தனர். மணிவார்த்தையிடை ஒளிர்ந்தனர். கண்ணகத்திருந்தனர். என்புத்துளை தொறும் அமுததாரைகள் பாய்ச்சி எங்கும் ஒளியாவண்ணம் நிறைந்தனர். இப்பொழுது அன்பரின் உடலும் அழுக்கொடு திரியும் சிறுகுடிலன்று. அது பராவமுது ஆகும். பலபடக் கூறுவானேன்! தான் சிவமான தன்மையை மணிவாசக சுவாமிகளே கூறுகிருர். "........... என் நெஞ்சினுள் மன்னி யானுகி நின்றனே." இவ்வாருய் இனிய வாசனையாற் கவரப்பட்டுக் கால்விசைத் தோடிய கஸ்தூரி மான், தேடித்தேடித் திரிந்தலைந்து இளைத்துச் சோர்ந்து கிடந்தபோது தன்னிடமிருந்தே அவ்வினிய வாசனை எழுவதைக் கண்டறிந்தது போல, நான் கெட்டு நின்ற அக்கணத்திலேயே தான் சிவமாயிருப்பதை மணிவாசக சுவாமிகள் தெளிந்தனர்.



சிவத்தை சிவத்தாற்றான் காணலாம். இதனைக் கடவுளைக் "கடவுளாற்றான் காணலாம்" எனச் சிவயோக சுவாமிகள் குறிப்பிடுவர். சிவமான மணிவாசக சுவாமிகளால் சிவப்பரம்பொருளைத் தரிசிக்க முடிந்தது, முதலில் திருப்பெருந்துறையிலே பரமாசாரியக் கோலத்தையும் பின்னர் திருவுத்தர கோசமங்கை, திருவிடை மருதூர், திருக்கழுக் குன்றம் ஆகிய இடங்களில் அப்போதைக்கப்போது வித்தகவேடம் முதலிய அருள்வடிவங்களையும் காட்டி வளர்த்த ஈசன் ஈற்றில் தில்லை மூதூரிலே வடிவமில்லாததும், வடிவமுள்ளதும், குணங்கள்கடந்ததும், குணத்திற் கிடந்ததுமான தமது உண்மையைக் காட்டியருளினர். பெருந்துறையிலே மேகமாய் அருள் மழை சொரிந்த ஈசன் வெட்டவெளி ஆருேடும் நாட்டிலே (சிதம்பரம் - ஞானப் பெருவெளி) பரமானந்தப் பழங்கடலாய், "பேரா, ஒழியா, பிரிவில்லா, மறவா, நினையா, அளவில்லா, மாளா" இன்ப வெள்ளத்தில் திளைக்கச் செய்தனர். அவர்கண்ட கடவுட் காட்சி சொற்களால் அகப்படுத்தக் கூடிய அளவிற்குக் கோயிற் திருப்பதிகத்திலே கூறப்பட்டுள்ளது. கோயிற்றிருப்பதிகம் கூறமுயல்வது உள்ளவாறேயான கடவுட்காட்சியாகும். அது திணிந்ததோர் இருளில் தெளிந்த தூவெளியாய் நாம் காணும் பொருள்கள் எல்லாவற்றையும் விட மிகவும் தெள்ளத்தெளிவாய்த் தெரிவது. அன்பரின் உள்ளத்திலே உதயஞாயிறு போன்று எழுந்து பார்பதம் அண்டம் அனைத்துமாய்ப் பரந்து படரொளிப் பரப்பாய்த் தோன்றுவது. எங்கும் குறைவிலா நிறைவாய் செறிந்திருப்பதால் (ஒழிவற) திரையற்ற அமுதக் கடலாய் (சலிப்பற)த் தித்திப்பது. யாவையுமாய் ஒளிர்வதுடன் ஒன்றுமல்லாத மறையுமாய் ஒளிப்பது. அன்பருக்கு அனுபவமாம்படி சிறைபெருநீர்போல் சிந்தைவாய்ப் பாய்வது. அது உணர்ந்த மாமுனிவராலும் உணரவொண்ணுதது. உரையுணர்விறந்து

நின்று உணர்வது. நினைப்பற நினைவது. தன்னைக் கொடுத்து இறைவனைக் கொண்டு அத்துவிதமாய்க் கலந்து அநுபூதி யிலறிவது.

இந்த அத்துவித ஆனந்தத்தில் நிலைத்த பின்னர் மணிவாசக சுவாமிகள் பெயரும் குணமுமுள்ள ஒன்பது வாயிற் குடிலினுள் மடங்கிக் கிடக்கும் சிறியரல்லர். அவர் 'முன்புமாய்ப் பின்புமாய் முழுதுமாய்ப் பரந்த முத்தர்'. பிறப்பு இறப்பு எனும் சித்தவிகாரக் கலக்கம் தெளிந்த நித்தியர். சீவர்கள்மேல் கொண்ட இரக்கம் காரணமாகச் சிறிதுகாலம் சீவன் முத்தராய் வாழ்ந்தனர். சீவன் முத்தராய்த் திரிந்த காலத்திலே தன்னையண்டி வந்த உலக சுகத்தைநாடும் அன்பர்களிடம் கருணை வள்ளலான சிவபிரான் மூலபண்டாரம் வழங்குகின்றான் எனவும் அவன் முழுதுலகையுமே கொடை தருவான் எனவும் கூறி முந்துமின் என வழிப்படுத்தினராதல் வேண்டும். திருவடியை நாடிச் சென்றவர்களிடம் திருவடியிலே புத்தியை வைத்து மற்றுப்பற்று எல்லாவற்றையும் விட்டுத் திருக்கதவம் திறக்கும் வேளையை எதிர்பார்த்துக் கிடக்குமாறு அருளுரை கூறினராதல் வேண்டும். எல்லாவற்றுக்கும் மேலாகத் தென்னாட்டவருடன் எந்நாட்டவரும், சைவருடன் அசைவரும் உய்யும் வண்ணம் பண்சுமந்த பாடல்களைப் பாடிக்கொண்டிருந்தனர். அப்பாடல்களைத் திருவாசகம் எனும் தமிழாகமவடிவாகச் செய்து, அவ்வாகம வடிவிலே தமது அருட்கோலத்தை வெளிப்படுத்திய பின்னர் எங்கும் எப்போதும், இங்கும் இப்போதும் உள்ள தமது நிசசொரூபத்தில் நிலைத்தனர்.

''திவ்விய மாணிக்கர்க்கு மங்களம்''

— நற்சிந்தனை



# திருவாசகம்

## 1. சிவபுராணம்

[ சிவனது அநாதி முறைமையான பழமை ]

திருப்பெருந்துறையில் அருளியது

[ கலிவெண்பா ]

திருச்சிற்றம்பலம்

நமச்சிவாய வாஅழ்க! நாதன்தாள் வாழ்க!
இமைப்பொழுதும் என்னெஞ்சில் நீங்காதான் தாள்
கோகழி யாண்ட குருமணிதன் தாள்வாழ்க [ வாழ்க
ஆகம மாகிநின் றண்ணிப்பான் தாள்வாழ்க
ஏகன் அநேகன் இறைவ னடிவாழ்க

வேகங் கெடுத்தாண்ட வேந்தனடி வெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க
புறத்தார்க்குச் சேயோன்றன் பூங்கழல்கள் வெல்க
கரங்குவிவார் உண்மகிழுங் கோன்கழல்கள் வெல்க
சிரங்குவிவார் ஓங்குவிக்குஞ் சீரோன் கழல்வெல்க

ஈச னடிபோற்றி எந்தை யடிபோற்றி
தேச னடிபோற்றி சிவன்சே வடிபோற்றி
நேயத்தே நின்ற நிமல னடிபோற்றி
மாயப் பிறப்பறுக்கும் மன்ன னடிபோற்றி
சீரார் பெருந்துறைநந் தேவ னடிபோற்றி

---

3. கோகழி - திருப்பெருந்துறை. 4. அண்ணிப்பான் - அணுகி அருள் வழங்கி நிற்பவன். 6. வேகம் - யான் எனது எனும் முனைப்பு 7. பிஞ்ஞகன் - தலைக்கோலமுடையான். 8. புறத்தார்- அன்பரல்லாதார். 8. சேயோன் - தொலைவிலுள்ளவன், 9. கரங்குவிவார் - கை கூப்பித் தொழும் அன்பர். 10. சிரங்குவிவார் - தலையாரக் கும்பிடும் அன்பர்,

ஆராத இன்பம் அருளுமலை போற்றி
சிவனவனென் சிந்தையுள் நின்ற அதனால்
அவனரு ளாலே அவன்றாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுரா ணந்தன்னை
முந்தை வினைமுழுது மோய உரைப்பனியான்

கண்ணுதலான் தன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற் கெட்டா எழிலார் கழலிறைஞ்சி
விண்ணிறைந்துமண்ணிறைந்து மிக்காய் விளங்கொளி
எண்ணிறந் தெல்லை இலாதானே நின்பெருஞ்சீர் [ யாய்
பொல்லா வினையேன் புகழுமா றொன்றறியேன்

புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்றவித் தாவர சங்கமத்துள்

எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்
மெய்யேயுன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
உய்யவென் னுள்ளத்துள் ஓங்கார மாய்நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா எனவோங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனே

வெய்யாய் தணியாய் இயமானன் ஆம்விமலா
பொய்யா யினவெல்லாம் போயகல வந்தருளி
மெய்ஞ்ஞான மாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞான மில்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானந் தன்னை அகல்விக்கும் நல்லறிவே

---

16. ஆராத - தெவிட்டாத. 20. ஓய - நுணுக. (குறுக) மோய எனப் பகுக்குமிடத்து நீங்க எனப் பொருள்கொள்க. 24. எண்ணிறந்து - எண்ணிக்கையைக் கடந்து. 27. விருகம் - மிருகமென் பதன் திரிபு. 30. சங்கமம் - இயங்கு திணைப் பொருள். 32. மெய்யே - மெய்ப்பொருளே. 36. வெய்யாய் - வெம்மை மிகுந் தவனே. ( சூரியன் ) 36. தணியாய் - தண்மை மிகுந்தவனே. (சந்திரன்) தணியாய் இடைகுறை 36. இயமானன் - உயிருக்கு உயிராய் நின்று இயக்குபவன்.



ஆக்கம் அளவிறுதி யில்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள்தருவாய்
போக்குவாய் என்னைப் புகுவிப்பாய் நின்றொழும்பின்
நாற்றத்தின் நேரியாய் சேயாய் நணியானே
மாற்றம் மனங்கழிய நின்ற மறையோனே

கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்களோ ரைந்துடையாய் விண்ணோர்க ளேத்த
மறைந்திருந்தாய் எம்பெருமான் வல்வினையேன் தன்னை

மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவ மென்னும் அருங்கயிற்றாற் கட்டிப்
புறந்தோல்போர்த் தெங்கும் புழுவழுக்கு மூடி
மலஞ்சோரும் ஒன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய

விலங்கு மனத்தால் விமலா உனக்குக்
கலந்தவன் பாகிக் கசிந்துள் உருகும்
நலந்தான் இலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன்மேல் வந்தருளி நீள்கழல்கள் காஅட்டி
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்

தாயிற் சிறந்த தயாவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேனா ரமுதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள்புரிந்து நெஞ்சில்வஞ் சங்கெடப்

---

44. நாற்றத்தின் நேரியாய் - பூவில் மணம்போல் பொருந்தி இருப்பவனே. 45. மாற்றம் மனம் கழிய - உரையுணர்வு கழிய 46. கன்னல் - கருப்பஞ்சாறு 49. நிறங்களோரைந்து - ஐம்பூதங் களுக்குமுரிய ஐந்து நிறங்கள். அவை பொன்மை, வெண்மை, செம்மை, கருமை, புகைமை 55. மலங்க - கலங்க 56. விலங்கு - பிரபஞ்ச வாசனையில் இருந்து விலகிய. 61. தயா - அருள் 64. பாரிக்கும் - வளர்க்கும்.

பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆரா அமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதார் உள்ளத் தொளிக்கும் ஒளியானே
நீராய் உருக்கியென் ஆருயிராய் நின்றானே
இன்பமுந் துன்பமும் இல்லானே உள்ளானே

அன்பருக் கன்பனே யாவையுமாய் அல்லையுமாம்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே
ஈர்த்தென்னை யாட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்தமெய்ஞ் ஞானத்தாற் கொண்டுணர்வார் தங்கருத்தின்

நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும் புணர்வுமிலாப் புண்ணியனே
காக்குமெங் காவலனே காண்பரிய பேரொளியே
ஆற்றின்ப வெள்ளமே அத்தாமிக் காய்நின்ற
தோற்றச் சுடரொளியாய்ச் சொல்லாத நுண்ணுணர்வாய்

மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாம்
தேற்றனே தேற்றத் தெளிவேயென் சிந்தனையுள்
ஊற்றான உண்ணா ரமுதே உடையானே
வேற்று விகார விடக்குடம்பி னுட்கிடப்ப
ஆற்றேனெம் ஐயா அரனேயோ என்றென்று

---

66. பேராது - சலிப்பற்று. 68. ஓராதார் - ஆராயாதவர். 72. துன்னிருள் - செறிந்த இருள். (ஆணவ இருளின் உள்ளே தான்மறைக்கப்படாது அதனுள்ளும் நிறைந்திருக்கும் தன்மை) கூர்த்த - கூரிய 81. மாற்றம் ஆம் வையகத்தில் - மாற்றம் (பரிணாமம்) அடையும் உலகில். 82 தேற்றன் - தெள்ளியன். 84. விடக்கு உடம்பு - ஊனுடல். 85. ஓ என்பது இரக்க குறிப்பு (இடைச்சொல்) 86. பொய் - பொய்யான சொல்லும் செயலும்.



போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்யானார்
மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பைக் கட்டழிக்க வல்லானே
நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே
தில்லையுட் கூத்தனே தென்பாண்டி நாட்டானே

அல்லற் பிறவி அறுப்பானே ஓவென்று
சொல்லற் கரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்
சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தி னுள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோரும் ஏத்தப் பணிந்து.

திருச்சிற்றம்பலம்

## 2. கீர்த்தித் திருவகவல்

(சிவனது திருவருட்புகழ்ச்சி முறைமை)

### திருத்தில்லையில் அருளியது

(நிலைமண்டில ஆசிரியப்பா)

திருச்சிற்றம்பலம்

தில்லை மூதூர் ஆடிய திருவடி
பல்லுயி ரெல்லாம் பயின்றன னாகி
எண்ணில் பல்குணம் எழில்பெற விளங்கி
மண்ணும் விண்ணும் வானோ ருலகும்
துன்னிய கல்வி தோற்றியும் அழித்தும்

என்னுடை இருளை யேறத் துரந்தும்
அடியா ருள்ளத் தன்புமீ தூரக்
குடியாக் கொண்ட கொள்கையுஞ் சிறப்பும்
மன்னு மாமலை மகேந்திர மதனிற்
சொன்ன ஆகமம் தோற்றுவித் தருளியும்

---

88. கள்ளப் புலக்குரம்பை - ஐம்புலக் கள்வர் வாழும் உடல். 1. எண்ணில் பல்குணம் - கணக்கற்ற குணங்கள், தன்வயத் தனாதல் முதலியன. 5. கல்வி - கலை நூல். 6. ஏறத்துரந்தும் - முற்றும் போக்கி 7. கொள்கை - இயல்பு. 8. சிறப்பு - கீர்த்தி.

கல்லா டத்துக் கலந்தினி தருளி
நல்லா ளோடு நயப்புற வெய்தியும்
பஞ்சப் பள்ளியிற் பான்மொழி தன்னொடும்
எஞ்சா தீண்டும் இன்னருள் விளைத்தும்
கிராத வேடமொடு கிஞ்சுக வாயவள்

விராவு கொங்கை நற்றடம் படிந்தும்
கேவேட ராகிக் கெளிறது படுத்தும்
மாவேட் டாகிய ஆகமம் வாங்கியும்
மற்றவை தம்மை மகேந்தி ரத்திருந்
துற்றவைம் முகங்க ளாற்பணித் தருளியும்

நந்தம் பாடியில் நான்மறை யோனாய்
அந்தமில் ஆரிய னாயமர்ந் தருளியும்
வேறுவே றுருவும் வேறுவே றியற்கையும்
நூறுநூ றாயிரம் இயல்பின தாகி
ஏறுடை ஈசனிப் புவனியை உய்யக்

கூறுடை மங்கையும் தானும்வந் தருளிக்
குதிரையைக் கொண்டு குடநா டதன்மிசைச்
சதுர்படச் சாத்தாய்த் தானெழுந் தருளியும்
வேலம் புத்தூர் விட்டே றருளிக்
கோலம் பொலிவு காட்டிய கொள்கையும்

---

**12.** நல்லாள் - உமையம்மை. **13.** பஞ்சப்பள்ளி - ஓர் ஊர் **14.** எஞ்சாது ஈண்டும் - குறையாது நிறையும். **15.** கிராத வேடம் - வேட்டுவக் கோலம். **15.** கிஞ்சுகம் - முருக்கம் பூ. **17.** கேவேடர் - வலைஞர் **18.** மாவேட்டு - பெரிய சுவடி, மிகவும் விரும்பப்படுவதாகிய எனினுமாம். **22.** ஆரியன் - உயர்ந்தோன், ஆசான் **28.** சதுர் - திறமை **28.** சாத்து - வணிகர் கூட்டம். **29.** விட்டேறு - வேல்



தர்ப்பணம் அதனிற் சாந்தம் புத்தூர்
விற்பொரு வேடற் கீந்த விளைவும்
மொக்கணி யருளிய முழுத்தழல் மேனி
சொக்க தாகக் காட்டிய தொன்மையும்
அரியொடு பிரமற் களவறி யொண்ணான்

நரியைக் குதிரை யாக்கிய நன்மையும்
ஆண்டுகொண் டருள அழகுறு திருவடி
பாண்டி யன்றனக் குப்பரி மாவிற்
றீண்டு கனக மிசையப் பெறாஅ
தாண்டான் எங்கோன் அருள்வழி யிருப்பத்

தூண்டு சோதி தோற்றிய தொன்மையும்
அந்தண னாகி ஆண்டுகொண் டருளி
இந்திர ஞாலங் காட்டிய இயல்பும்
மதுரைப் பெருநன் மாநக ரிருந்து
குதிரைச் சேவக னாகிய கொள்கையும்

ஆங்கது தன்னில் அடியவட் காகப்
பாங்காய் மண்சுமந் தருளிய பரிசும்
உத்தர கோச மங்கையு ளிருந்து
வித்தக வேடங் காட்டிய இயல்பும்
பூவண மதனிற் பொலிந்தினி தருளித்

தூவண மேனி காட்டிய தொன்மையும்
வாத வூரினில் வந்தினி தருளிப்
பாதச் சிலம்பொலி காட்டிய பண்பும்
திருவார் பெருந்துறைச் செல்வ னாகிக்
கருவார் சோதியிற் கரந்த கள்ளமும்

---

**31.** தர்ப்பணம் - கண்ணாடி. **33.** மொக்கணி - குதிரை வாயில் கொள்ளுக்கட்டும் பை. **34.** சொக்கு - பேரழகு. **43.** இந்திர ஞாலம் - இந்திர சாலம், மாயவித்தை. **49.** வித்தக வேடம் - ஞானாசிரிய வடிவம் **51.** தூவண மேனி - தூய சுந்தர வடிவம் **54.** செல்வன் - ஞான வள்ளல்

பூவல மதனிற் பொலிந்தினி தருளிப்
பாவ நாசம் ஆக்கிய பரிசும்
தண்ணீர்ப் பந்தர் சயம்பெற வைத்து
நன்னீர்ச் சேவகன் ஆகிய நன்மையும்
விருந்தின னாகி வெண்கா டதனிற்

குருந்தின் கீழன் றிருந்த கொள்கையும்
பட்ட மங்கையிற் பாங்கா யிருந்தங்
கட்டமா சித்தி அருளிய அதுவும்
வேடுவ னாகி வேண்டுருக் கொண்டு
காடது தன்னிற் கரந்த கள்ளமும்

மெய்க்காட் டிட்டு வேண்டுருக் கொண்டு
தக்கா னொருவன் ஆகிய தன்மையும்
ஓரி யூரின் உகந்தினி தருளிப்
பாரிரும் பாலகன் ஆகிய பரிசும்
பாண்டூர் தன்னில் ஈண்ட இருந்தும்

தேவூர் தென்பாற் றிகழ்தரு தீவிற்
கோவார் கோலங் கொண்ட கொள்கையும்
தேனமர் சோலைத் திருவா ரூரில்
ஞானந் தன்னை நல்கிய நன்மையும்
இடைமரு ததனில் ஈண்ட விருந்து

படிமப் பாதம் வைத்தவப் பரிசும்
ஏகம் பத்தி னியல்பா யிருந்து
பாகம் பெண்ணோ டாயின பரிசும்
திருவாஞ் சியத்திற் சீர்பெற இருந்து
மருவார் குழலியொடு மகிழ்ந்த வண்ணமும்

---

60. விருந்தினன் - புதியோன் 63. அட்டமாசித்தி - எண் வகைப்பேறுகள். அவை :- அணுவாதல், பருத்தல், எளிதாதல், பளுவாதல், எங்கு மியங்குதல், விரும்பிய இன்பம் பெறுதல். முதன்மை, தன்வயப்படுத்துதல் 76. படிமப் பாதம் - திருவடித் திருவுரு. (திருவடிப்படிமம்)



சேவக னாகித் திண்சிலை யேந்திப்
பாவகம் பலபல காட்டிய பரிசும்
கடம்பூர் தன்னில் இடம்பெற இருந்தும்
ஈங்கோய் மலையில் எழிலது காட்டியும்
ஐயா றதனிற் சைவ னாகியும்

துருத்தி தன்னில் அருத்தியோ டிருந்தும்
திருப்பனை யூரில் விருப்ப னாகியும்
கழுமல மதனிற் காட்சி கொடுத்தும்
கழுக்குன் றதனில் வழுக்கா திருந்தும்
புறம்பய மதனில் அறம்பல அருளியும்

குற்றா லத்துக் குறியா யிருந்தும்
அந்தமில் பெருமை அழலுருக் கரந்து
சுந்தர வேடத் தொருமுத லுருவுகொண்
டிந்திர ஞாலம் போலவந் தருளி
எவ்வெவர் தன்மையுந் தன்வயிற் படுத்துத்

தானே யாகிய தயாபர னெம்மிறை
சந்திர தீபத்துச் சாத்திர னாகி
அந்தரத் திழிந்துவந் தழகமர் பாலையுட்
சுந்தரத் தன்மையொடு துதைந்திருந் தருளியும்
மந்திர மாமலை மகேந்திர வெற்பன்

அந்தமில் பெருமை யருளுடை அண்ணல்
எந்தமை யாண்ட பரிசது பகரின்
ஆற்ற லதுவுடை அழகமர் திருவுரு
நீற்றுக் கோடி நிமிர்ந்து காட்டியும்
ஊனந் தன்னை ஒருங்குட னறுக்கும்

---

81. சேவகன் - போர்வீரன் 82. பாவகம் - பாவனை
86. அருத்தி - விருப்பம் 89. வழுக்காது - நீங்காது
97. சாத்திரன்-கலை வல்லோன் - அறிவன்
104. நீற்றுக்கோடி - திருநீற்றுவரி

ஆனந் தம்மே ஆறு அருளியும்
மாதிற் கூறுடை மாப்பெருங் கருணையன்
நாதப் பெரும்பறை நவின்று கறங்கவும்
அழுக்கடை யாமல் ஆண்டுகொண் டருள்பவன்
கழுக்கடை தன்னைக் கைக்கொண் டருளியும்

மூல மாகிய மும்மல மறுக்கும்
தூய மேனிச் சுடர்விடு சோதி
காதல னாகிக் கழுநீர் மாலை
ஏலுடைத் தாக எழில்பெற அணிந்தும்
அரியொடு பிரமற் களவறி யாதவன்

பரிமா வின்மிசைப் பயின்ற வண்ணமும்
மீண்டு வாரா வழியருள் புரிபவன்
பாண்டி நாடே பழம்பதி யாகவும்
பத்திசெய் அடியரைப் பரம்பரத் துய்ப்பவன்
உத்தர கோச மங்கையூ ராகவும்

ஆதி மூர்த்திகட் கருள்புரிந் தருளிய
தேவ தேவன் திருப்பெய ராகவும்
இருள்கடிந் தருளிய இன்ப வூர்தி
அருளிய பெருமை யருண்மலை யாகவும்
எப்பெருந் தன்மையும் எவ்வெவர் திறமும்

அப்பரி சதனால் ஆண்டுகொண் டருளி
நாயி னேனை நலமலி தில்லையுட்
கோல மார்தரு பொதுவினில் வருகென
ஏல என்னை ஈங்கொழித் தருளி
அன்றுடன் சென்ற அருள்பெறு மடியவர்

110. கழுக்கடை - மூவிலைச்சூலம்
117. மீண்டு வாராவழி - வீட்டுநெறி
119. பரம்பரம் - பரமுத்தி 'அப்பாலைக்கு அப்பாலை'
121. ஆதி மூர்த்திகள் - மும்மூர்த்திகள்



ஒன்ற வொன்ற உடன்கலந் தருளியும்
எய்தவந் திலாதார் எரியிற் பாயவும்
மாலது வாகி மயக்க மெய்தியும்
பூதல மதனிற் புரண்டுவீழ்ந் தலறியும்
கால்விசைத் தோடிக் கடல்புக மண்டி

நாத நாத என்றழு தரற்றிப்
பாதம் எய்தினர் பாத மெய்தவும்
பதஞ்சலிக் கருளிய பரமநா டகவென்
றிதஞ்சலிப் பெய்தநின் றேங்கின ரேங்கவும்
எழில்பெறும் இமயத் தியல்புடை யம்பொற்

பொலிதரு புலியூர்ப் பொதுவினில் நடநவில்
கனிதரு செவ்வா யுமையொடு காளிக்
கருளிய திருமுகத் தழகுறு சிறுநகை
இறைவன் ஈண்டிய அடியவ ரோடும்
பொலிதரு புலியூர்ப் புக்கினி தருளினன்

ஒலிதரு கைலை யுயர்கிழ வோனே.

திருச்சிற்றம்பலம்

138. பரம நாடக - மேலான கூத்தனே.
139. இதம் -உலக இன்பம், சலிப்பெய்த - நெஞ்சம் அயர்வடைய

## 3. திருவண்டப் பகுதி

[ சிவனது தூலசூக்குமத்தை வியந்தது ]

### திருத்தில்லையில் அருளியது

( இணைக்குறளாசிரியப்பா )

திருச்சிற்றம்பலம்

அண்டப் பகுதியின் உண்டைப் பிறக்கம்
அளப்பருந் தன்மை வளப்பெருங் காட்சி
ஒன்றனுக் கொன்று நின்றெழில் பகரின்
நூற்றொரு கோடியின் மேற்பட விரிந்தன
இல்நுழை கதிரின் துன்னணுப் புரையச்

சிறிய வாகப் பெரியோன் தெரியின்
வேதியன் தொகையொடு மாலவன் மிகுதியும்
தோற்றமுஞ் சிறப்பும் ஈற்றொடு புணரிய
மாப்பே ரூழியும் நீக்கமு நிலையும்
சூக்கமொடு தூலத்துச் சூறை மாருதத்

தெறியது வளியிற்
கொட்கப் பெயர்க்குங் குழகன் முழுவதும்
படைப்போன் படைக்கும் பழையோன் படைத்தவை
காப்போன் காக்குங் கடவுள் காப்பவை
கரப்போன் கரப்பவை கருதாக்

---

1. பிறக்கம் - பெருக்கம். 3. எழில் - எழுச்சி 5. இல் நுழை - வீட்டினுள் புகும். 1 - 6 கோள்களின் பெருக்கமும் அளவிடற்கரிய பெருமையும், வளப்பமிக்க காட்சியுமுடைய நூற்றொரு கோடியின் மேற்பட விரிந்த அண்டப்பகுதிகளை இறைவனின் பெருமையுடன்சீர்தூக்கிப் பார்ப்பின் அண்டப்பகுதிகள் வீட்டினுள் நுழையும் சூரியக் கதிரில் தோன்றும் அணுத்துகளை ஒப்ப சிறியனவாகத்தோன்றுமாறு இறைவன் பெரியோனாய் விளங்குவான். 7. வேதியன் - பிரமன் 9. மாப்பேர் ஊழி - கால முடிவு
10. சூறைமாருதம் - சூறைக்காற்று 12. கொட்க - சுழல
12. குழகன் - என்றும் ஒரு பெற்றியனாய் நிற்பவன் ( இளையன் )
15. கரத்தல் - மறைத்தல்



கருத்துடைக் கடவுள் திருத்தகும்
அறுவகைச் சமயத் தறுவகை யோர்க்கும்
வீடுபே றாய்நின்ற விண்ணோர் பகுதி
கீடம் புரையுங் கிழவோன் நாடொறும்
அருக்கனிற் சோதி அமைத்தோன் திருத்தகு

மதியிற் றண்மை வைத்தோன் திண்டிறல்
தீயின் வெம்மை செய்தோன் பொய்தீர்
வானிற் கலப்பு வைத்தோன் மேதகு
காலின் ஊக்கங் கண்டோன் நிழல்திகழ்
நீரில் இன்சுவை நிகழ்ந்தோன் வெளிப்பட

மண்ணிற் றிண்மை வைத்தோ னென்றென்
றெனைப்பல கோடி யெனைப்பல பிறவும்
அனைத்தனைத் தவ்வயின் அடைத்தோன் அஃதான்று
முன்னோன் காண்க முழுதோன் காண்க
தன்னே ரில்லோன் தானே காண்க

ஏனத் தொல்லெயி றணிந்தோன் காண்க
கானப் புலியுரி அரையோன் காண்க
நீற்றோன் காண்க நினைதொறும் நினைதொறும்
ஆற்றேன் காண்க அந்தோ கெடுவேன்
இன்னிசை வீணையில் இசைந்தோன் காண்க

அன்னதொன் றவ்வயின் அறிந்தோன் காண்க
பரமன் காண்க பழையோன் காண்க
பிரமன்மால் காணாப் பெரியோன் காண்க
அற்புதன் காண்க அநேகன் காண்க
சொற்பதங் கடந்த தொல்லோன் காண்க

---

17. அறுவகைச் சமயம் - உலகாயதம், பௌத்தம் சாங்கியம், நையாயிகம் வைசேடிகம் மீமாம்சம்.
19. கீடம் - புழு
31. ஏனம் - பன்றி (ஆதிவராக மூர்த்தி) எயிறு - பல்லு

சித்தமுஞ் செல்லாச் சேட்சியன் காண்க
பத்தி வலையிற் படுவோன் காண்க
ஒருவ னென்னும் ஒருவன் காண்க
விரிபொழின் முழுதாய் விரிந்தோன் காண்க
அணுத்தருந் தன்மையி லையோன் காண்க

இணைப்பரும் பெருமையில் ஈசன் காண்க
அரியதில் அரிய அரியோன் காண்க
மருவியெப் பொருளும் வளர்ப்போன் காண்க
நூலுணர் வுணரா நுண்ணியோன் காண்க
மேலொடு கீழாய் விரிந்தோன் காண்க

அந்தமும் ஆதியும் அகன்றோன் காண்க
பந்தமும் வீடும் படைப்போன் காண்க
நிற்பதுஞ் செல்வதும் ஆனோன் காண்க
கற்பமும் இறுதியுங் கண்டோன் காண்க
யாவரும் பெறவுறும் ஈசன் காண்க

தேவரு மறியாச் சிவனே காண்க
பெண்ணாண் அலியெனும் பெற்றியன் காண்க
கண்ணா லியானுங் கண்டேன் காண்க
அருணனி சுரக்கு மமுதே காண்க
கருணையின் பெருமை கண்டேன் காண்க

புவனியிற் சேவடி தீண்டினன் காண்க
சிவனென யானுந் தேறினன் காண்க
அவனெனை யாட்கொண் டருளினன் காண்க
குவளைக் கண்ணி கூறன் காண்க
அவளுந் தானும் உடனே காண்க

---

41. சேட்சியன் - தொலைவிலுள்ளவன்
43. ஒருவன் - முழுமுதலான ஒருவன்
ஒருவன் - இணையில்லாதவன்
44. விரிபொழில் - பரந்த உலகம்.
45. ஐயோன் - வியத்தகு நுண்ணியன்,



பரமா னந்தப் பழங்கட லதுவே
கருமா முகிலிற் றோன்றித்
திருவார் பெருந்துறை வரையி லேறித்
திருத்தகு மின்னொளி திசை திசை விரிய
ஐம்புலப் பந்தனை வாளர விரிய

வெந்துயர்க் கோடை மாத்தலை கரப்ப
நீடெழிற் றோன்றி வாளொளி மிளிர
எந்தம் பிறவியிற் கோப மிகுத்து
முரசெறிந்து மாப்பெருங் கருணையின் முழங்கிப்
பூப்புரை அஞ்சலி காந்தள் காட்ட

---

**66-95** பரந்த கடலானது கருமேகமாய் மலையிலே தோன்றியதுபோல, பரமானந்தப் பழங்கடலான சிவபெருமான் பரமாசாரிய வேடம் பூண்டு திருப்பெருந்துறையில் எழுந்தருளினார். அக்குருமணியின் தரிசனத்தால் மேகத்திற்றோன்றும் மின்னலிற் பாம்பு அழிந்தொழிவது போல, ஐம்புல ஆசைகள் அற்றொழிந்தன. பரமாசாரியர் எம்மைப் பிணித்துள்ள பிறவிப்பிணி மீது இடிஇடிப்பதுபோற் கோபங்கொண்டு முழங்கி அன்பினால் அறைகூவி அழைத்தார். கொடுங்கோடையாகிய துன்பவாழ்வு மறைந்து செங்காந்தள் மலரும் கார்காலமாகிய சிவம்பூக்கும் வளவாழ்வு அமையுமாறு குறையாத அருள்மழை பொழிந்தார், செவ்வொளிப் புதுப்புனல் திக்கெட்டும் பரந்ததுபோல் அருள் வெள்ளம் எங்கும் நிறைந்தது. நீர் விடாய் கொண்ட மான் கூட்டம் கானல்நீரை நறும்புனல் என நினைத்து ஓடிச்சென்று தாகம் நீங்காது தளர்ச்சியடைந்து மீள்வதுபோல அருள்தாகம் கொண்டோர் அறுவகைச் சமய நெறியிற் சென்று தளர்வுற்றிருந்த வேளையில் புதுப்புனல் வெள்ளம் ஆனந்தப் பேராறாய் இன்பச்சுழி சுழித்து பந்தக் கரையை மோதி இடித்து, இருவினை மரத்தை வேரறப்பிடுங்கிப் பாய்ந்து வந்தது. அழகிய அவ்வருள் நீரை வைராக்கியம் எனும் மலைச்சந்தில் உயர்ந்த அணைகட்டி உள்ளம் எனும் குளம் நிறையச்செய்து வழிபாடு எனும் வயலில், அன்பு எனும் விதையை விதைத்து தொண்டராகிய உழவர்கள் சிவபோகமாகிய விளைவை அனுபவிக்க மண்மிசை வந்த மேகனே வாழ்க.

எஞ்சா இன்னருள் நுண்டுளி கொள்ளச்
செஞ்சுடர் வெள்ளந் திசை திசை தெவிட்ட, வரையுறக்
கேதக் குட்டங் கையற ஓங்கி
இருமுச் சமயத் தொருபேய்த் தேரினை
நீர்நசை தரவரு நெடுங்கண் மான்கணம்

தவப்பெரு வாயிடைப் பருகித் தளர்வொடும்
அவப்பெருந் தாபம் நீங்கா தசைந்தன
ஆயிடை வானப் பேரியாற் றகவயின்
பாய்ந்தெழுந் தின்பப் பெருஞ்சுழி கொழித்துச்
சுழித்தெம் பந்தமாக் கரைபொரு தலைத்திடித்

தாழூ ழோங்கிய நங்கள்
இருவினை மாமரம் வேர்ப றித்தெழுந்
துருவ அருணீர் ஓட்டா அருவரைச்
சந்தின் வான்சிறை கட்டி மட்டவிழ்
வெறிமலர்க் குளவாய் கோலி நிறையகில்

மாப்புகைக் கரைசேர் வண்டுடைக் குளத்தின்
மீக்கொள மேன்மேன் மகிழ்தலின் நோக்கி
அருச்சனை வயலுள் அன்புவித் திட்டுத்
தொண்ட உழவர் ஆரத் தந்த
அண்டத் தரும்பெறன் மேகன் வாழ்க

கரும்பணக் கச்சைக் கடவுள் வாழ்க
அருந்தவர்க் கருளும் ஆதி வாழ்க
அச்சந் தவிர்த்த சேவகன் வாழ்க
நிச்சலும் ஈர்த்தாட் கொள்வோன் வாழ்க
சூழிருந் துன்பந் துடைப்போன் வாழ்க

96. கரும்பணம் - கரிய படத்தினையுடைய பாம்பு
99. நிச்சல் - நித்தம் என்பதன் திரிபு



எய்தினர்க் காரமு தளிப்போன் வாழ்க
கூரிருட் கூத்தொடு குனிப்போன் வாழ்க
பேரமைத் தோளி காதலன் வாழ்க
ஏதிலர்க் கேதிலெம் இறைவன் வாழ்க
காதலர்க் கெய்ப்பினில் வைப்பு வாழ்க

நச்சர வாட்டிய நம்பன் போற்றி
பிச்செமை ஏற்றிய பெரியோன் போற்றி
நீற்றொடு தோற்ற வல்லோன் போற்றி, நாற்றிசை
நடப்பன நடாஅய்க் கிடப்பன கிடாஅய்
நிற்பன நிறீஇச்

சொற்பதங் கடந்த தொல்லோன்
உள்ளத் துணர்ச்சியிற் கொள்ளவும் படாஅன்
கண்முதற் புலனாற் காட்சியு மில்லோன்
விண்முதற் பூதம் வெளிப்பட வகுத்தோன்
பூவில் நாற்றம் போன்றுயர்ந் தெங்கும்

ஒழிவற நிறைந்து மேவிய பெருமை
இன்றெனக் கெளிவந் தருளி
அழிதரும் ஆக்கை ஒழியச்செய்த, ஒண்பொருள்
இன்றெனக் கெளிவந் திருந்தனன் போற்றி
அளிதரும் ஆக்கை செய்தோன் போற்றி

103. பேரமைத் தோளி - பெரிய மூங்கிலையொத்த தோளையுடைய உமையம்மை
104. ஏதிலர் - இயைபில்லாதவர் ( பிறர் )
105. எய்ப்பினில் வைப்பு - சேமநிதி ( இளைப்புக்காலத்தே பயன்படுத்துவதற்கென்று வைத்த நிதி. )
109. நடாஅய் - நடாத்தி
113. அழிதரும் ஆக்கை - மாயும் உடல்
120. அளிதரும் ஆக்கை - அன்பினால் உருகும் உடல்.

ஊற்றிருந் துள்ளங் களிப்போன் போற்றி
ஆற்றா இன்பம் அலர்ந்தலை செய்யப்
போற்றா ஆக்கையைப் பொறுத்தல் புகலேன்
மரகதக் குவாஅல் மாமணிப் பிறக்கம்
மின்னொளி கொண்ட பொன்னொளி திகழத்

திசைமுகன் சென்று தேடினர்க் கொளித்தும்
முறையுளி யொற்றி முயன்றவர்க் கொளித்தும்
ஒற்றுமை கொண்டு நோக்கும் உள்ளத்
துற்றவர் வருந்த உறைப்பவர்க் கொளித்தும்
மறைத்திறம் நோக்கி வருந்தினர்க் கொளித்தும்

இத்தந் திரத்திற் காண்டுமென் றிருந்தோர்க்
கத்தந் திரத்தின் அவ்வயி னொளித்தும்
முனிவற நோக்கி நனிவரக் கௌவி
ஆணெனத் தோன்றி அலியெனப் பெயர்ந்து
வாணுதற் பெண்ணென ஒளித்துஞ் சேண்வயின்

---

121. ஊற்று இருந்து - இன்ப ஊற்றாய் உள்ளிருந்து.
122. அலர்ந்து அலைசெய்ய - பேரின்ப வெள்ளம் எங்கும் பரந்து அலையெறிய.
123. புகலேன் - விரும்பேன்.
124. மரகதக் குவாஅல் - மரகதமணிக் குவியல். பிறக்கம் - குவியல். அம்மையப்பர் திருக்கோலம் நீலவொளியும் செவ்வொளியும் கலந்து தோன்று மாற்றைக் குறிப்பிட்டார்.
127. முறையுளி...முயன்றவர் - ஒழுக்கநெறியினர்.
127 - 29. ஒற்றுமை...உறைப்பவர் - துறவறநெறியினர்.
130. மறைத்...வருந்தினர் - வேதநெறியினர்.
131. இத்தந்திரத்தில்...... இருந்தோர் - தந்திரநெறியினர்.
133. முனிவற - வெறுப்பு நீங்க
135 - 138. சேண்வயின்... அருந்தவர் - தவநெறியினர்.



ஐம்புலன் செலவிடுத் தருவரை தொறும்போய்த்
துற்றவை துறந்த வெற்றுயி ராக்கை
அருந்தவர் காட்சியுள் திருந்த வொளித்தும்
ஒன்றுண் டில்லை யென்றறி வொளித்தும்
பண்டே பயில்தொறும் இன்றே பயில்தொறும்

ஒளிக்குஞ் சோரனைக் கண்டனம்
ஆர்மின் ஆர்மின் நாண்மலர்ப் பிணையலின்
தாள்தளை யிடுமின்
சுற்றுமின் சூழ்மின் தொடர்மின் விடேன்மின்
பற்றுமி னென்றவர் பற்றுமுற் றொளித்தும்

தன்னே ரில்லோன் றானேயான தன்மை
என்னே ரனையோர் கேட்கவந் தியம்பி
அறைகூவி ஆட்கொண் டருளி
மறையோர் கோலங் காட்டி யருளலும்
உளையா அன்பென் புருக வோலமிட்

டலைகடற் றிரையி னார்த்தார்த் தோங்கித்
தலைதடு மாறா வீழ்ந்துபுரண் டலறிப்
பித்தரின் மயங்கி மத்தரின் மதித்து
நாட்டவர் மருளவுங் கேட்டவர் வியப்பவும்
கடக்களி றேற்றாத் தடப்பெரு மதத்தின்

ஆற்றே னாக அவயவஞ் சுவைதரு
கோற்றேன் கொண்டு செய்தனன்
ஏற்றார் மூதூர் எழில்நகை யெரியின்
வீழ்வித் தாங்கன்
றருட்பெருந் தீயின் அடியோம் அடிக்குடில்

---

139. ஒன்று... அறிவு - அறிவு நெறி.
145. பற்றுமின் என்றவர் - அன்பு நெறியினர்.
148. அறைகூவி - வலிந்தழைத்து.
150. உளையா அன்பு - இயல்பாய்ப் பெருகும் அன்பு.
157. கோற்றேன் - கொம்புத்தேன்.
158. ஏற்றார் - பகைவர்.
160. அடிக்குடில் - அடிமைச் சிறு வீடு. (உடம்பு)

ஒருத்தரும் வழாமை யொடுக்கினன்
தடக்கையி னெல்லிக் கனியெனக் காயினன்
சொல்லுவ தறியேன் வாழி முறையோ
தரியேன் நாயேன் தானெனைச் செய்தது
தெரியேன் ஆவா செத்தேன் அடியேற்

கருளிய தறியேன் பருகியு மாரேன்
விழுங்கியும் ஒல்ல கில்லேன்
செழுந்தண் பாற்கடற் றிரைபுரைவித்
துவாக்கடல் நள்ளுநீ ருள்ளகந் ததும்ப
வாக்கிறந் தமுத மயிர்க்கால் தோறும்

தேக்கிடச் செய்தனன் கொடியேன் ஊன்றழை
குரம்பை தோறும் நாயுட லகத்தே
குரம்பைகொண் டின்றேன் பாய்த்தி நிரம்பிய
அற்புத மான அமுத தாரைகள்
எற்புத் துளைதொறும் ஏற்றின னுருகுவ

துள்ளங் கொண்டோ ருருச்செய் தாங்கெனக்
கள்ளூ றாக்கை யமைத்தனன் ஒள்ளிய
கன்னற் கனிதேர் களிறெனக் கடைமுறை
என்னையும் இருப்ப தாக்கினன் என்னிற்
கருணை வான்தேன் கலக்க

அருளொடு பராவமு தாக்கினன்
பிரமன்மா லறியாப் பெற்றி யோனே

திருச்சிற்றம்பலம்

---

162. தடக்கை - உள்ளங்கை.
169. உவாக்கடல் - முழுநிலாக்காலத்துக் கடல்.
178 - 179. கடைமுறை என்னை - கடையவனாகிய என்னை கன்னலும் கனியும் தேர் களிறு எனவிரித்துக் கரும்பும் விளாங்கனியும் விரும்பும் யானை என்று பொருள் கொள்க.



## 4. போற்றித் திருவகவல்

### ( தில்லையில் அருளியது )

சகத்தின் உற்பத்தி

( நிலைமண்டில ஆசிரியப்பா )

திருச்சிற்றம்பலம்

நான்முகன் முதலா வானவர் தொழுதெழ
ஈரடி யாலே மூவுல களந்து
நாற்றிசை முனிவரும் ஐம்புலன் மலரப்
போற்றிசெய் கதிர்முடித் திருநெடு மாலன்
றடிமுடி அறியும் ஆதர வதனிற்

கடுமுரண் ஏனம் ஆகி முன்கலந்
தேழ்தலம் உருவ இடந்து பின்எய்த்
தூழி முதல்வ சயசய என்று
வழுத்தியுங் காணா மலரடி இணைகள்
வழுத்துதற் கெளிதாய் வார்கடல் உலகினில்

யானை முதலா எறும்பீ றாய
ஊனமில் யோனியின் உள்வினை பிழைத்தும்
மானுடப் பிறப்பினுள் மாதா உதரத்
தீனமில் கிருமிச் செருவினிற் பிழைத்தும்
ஒருமதித் தான்றியின் இருமையிற் பிழைத்தும்

---

6. ஏனம் - பன்றி 7. ஏழ்தலம் - கீழ் ஏழுலகம்.
8. எய்த்து - இளைப்புற்று. 12. ஊனமில்யோனி - குறைவில்லாத. பலவாகிய பிறப்புக்கள் 13. உதரம் - கருப்பை.
14. இருமிச்செரு - " வெண்பாலிலுள்ள இருமிகள் தாய்க் கருவினோடு ஒன்று கூடுவதற்காக ஒன்றையொன்று தள்ளி முன்னேறும் போர். 15. தான்றி - தான்றிக்காய்.
15. இருமை - வெண்பாலிலுள்ள கிருமி தாய்க்கருவிற் பதிந்து ஒன்றாகாமல் வேறாய் நிற்றல்.

இருமதி விளைவின் ஒருமையிற் பிழைத்தும்
மும்மதி தன்னுள் அம்மதம் பிழைத்தும்
ஈரிரு திங்களிற் பேரிருள் பிழைத்தும்
அஞ்சு திங்களின் முஞ்சுதல் பிழைத்தும்
ஆறு திங்களின் ஊறலர் பிழைத்தும்

ஏழு திங்களிற் றாழ்புவி பிழைத்தும்
எட்டுத் திங்களிற் கட்டமும் பிழைத்தும்
ஒன்பதில் வருதரு துன்பமும் பிழைத்தும்
தக்க தசமதி தாயொடு தான்படும்
துக்க சாகரத் துயரிடைப் பிழைத்தும்

ஆண்டுகள் தோறும் அடைந்தவக் காலை
ஈண்டியு மிருத்தியும் எனைப்பல பிழைத்துங்
காலை மலமொடு கடும்பகற் பசிநிசி
வேலை நித்திரை யாத்திரை பிழைத்துங்
கருங்குழற் செவ்வாய் வெண்ணகைக் கார்மயில்

---

16. விளைவு - கருத்தோற்றம்.
16. ஒருமை - ஒன்றுபட்ட தன்மை.
17. மதம் - மயற்கை, இதனை மசக்கை என்பர். கருவுற்ற மகளிர்க்கு மயக்கம் முதலியவற்றை உண்டாக்கும் நோய். புறத்தே கழிந்த மதநீர் கருப்பையில் நிறைதல்.
18. பேரிருள் - கரிய மதநீர் நிறைதலால் ஏற்படும் பேரிருள்
19. முஞ்சுதல் - சாதல்.
20. ஊறலர் - கொலைக்குக் காரணமான பழிச்சொல்.
21. தாழ்புவி - மண்ணிற் பிறத்தல்.
22. கட்டம் - துன்பம்.
27. ஈண்டியும் இருத்தியும் - குழந்தையை அணைத்தும் இருக்கவைத்தும்.
28 - 29. நிசிவேலை - நள்ளிரவு வேளை.



ஒருங்கிய சாயல் நெருங்கியுண் மதர்த்துக்
கச்சற நிமிர்ந்து கதிர்த்து முன்பணைத்
தெய்த்திடை வருந்த எழுந்து புடைபரந்
தீர்க்கிடை போகா இளமுலை மாதர்தங்
கூர்த்த நயனக் கொள்ளையிற் பிழைத்தும்

பித்த உலகர் பெருந்துறைப் பரப்பினுள்
மத்தக் களிறெனும் அவாவிடைப் பிழைத்தும்
கல்வி யென்னும் பல்கடற் பிழைத்துஞ்
செல்வ மென்னும் அல்லலிற் பிழைத்தும்
நல்குர வென்னுந் தொல்விடம் பிழைத்தும்

புல்வரம் பாய பலதுறை பிழைத்துந்
தெய்வ மென்பதோர் சித்தமுண் டாகி
முனிவி லாததோர் பொருளது கருதலும்
ஆறு கோடி மாயா சக்திகள்
வேறு வேறுதம் மாயைகள் தொடங்கின

ஆத்த மானார் அயலவர் கூடி
நாத்திகம் பேசி நாத்தழும் பேறினர்
சுற்ற மென்னுந் தொல்பசுக் குழாங்கள்
பற்றி அழைத்துப் பதறினர் பெருகவும்
விரத மேபர மாகவே தியருஞ்

---

40. நல்குரவு - வறுமை.
41. புல்வரம்பாய பலதுறை - இழிந்த நிலையவாய பல தொழில்கள்.
43. முனிவு இலாததோர் பொருள் - யாதொன்றின் மீதும் வெறுப்பில்லாத பொருள்
46. ஆத்தமானார் - உறுதி உரைக்கும் நண்பர். (ஆத்தம் - மெய்மை, அன்பு)
48. தொல்பசுக் குழாங்கள் - தொன்று தொட்டு உறவெனும் கயிற்றால் பிணிக்கப்பட்டு வரும் உறவினர் கூட்டங்கள்.
50. பெருகவும் விரதமே பரம் - மிகுதியாகவிரதமாற்றுதலே (வேள்வியே) கடவுள்.

சரத மாகவே சாத்திரங் காட்டினர்
சமய வாதிகள் தத்தம் மதங்களே
அமைவ தாக அரற்றி மலைந்தனர்
மிண்டிய மாயா வாத மென்னுஞ்
சண்ட மாருதஞ் சுழித்தடித் தாஅர்த்

துலோகா யதனெனும் ஒண்டிறற் பாம்பின்
கலாபே தத்த கடுவிட மெய்தி
அதிற்பெரு மாயை எனைப்பல சூழவும்
தப்பா மேதாம் பிடித்தது சலியாத்
தழலது கண்ட மெழுகது போலத்

தொழுதுளம் உருகி அழுதுடல் கம்பித்
தாடியும் அலறியும் பாடியும் பரவியுங்
கொடிறும் பேதையுங் கொண்டது விடாதெனும்
படியே யாகிநல் விடையறா அன்பிற்
பசுமரத் தாணி அறைந்தாற் போலக்

கசிவது பெருகிக் கடலென மறுகி
அகங்குழைந் தனுகுல மாய்மெய் விதிர்த்துச்
சகம்பேய் என்று தம்மைச் சிரிப்ப
நாணது வொழிந்து நாடவர் பழித்துரை
பூணது வாகக் கோணுத லின்றிச்

51. சரதம் - மெய்மை.
54. மிண்டியமாயாவாதம் - சொற்றிண்மையுடைய மாயா வாதம்; சமயவிசேடம்.
55. சண்டமாருதம் - சூறுவளி.
56. உலோகாயதன் - உலகம் ஒன்றே உள்பொருள் எனும் மதத்தினன்.
57. கலாபேதத்த கடுவிடம் - பல்துறைப்பட்ட நூலறிவு எனும் கொடிய விடம்.
58. சலியா - நிலைபெயராது.
63. கொடிறு - குறடு எனும் கருவி. 68. சகம் - உலகோர்.



சதுரிழந் தறிமால் கொண்டு சாரும்
கதியது பரமா அதிசய மாகக்
கற்றா மனமெனக் கதறியும் பதறியும்
மற்றோர் தெய்வங் கனவிலும் நினையா
தருபரத் தொருவன் அவனியில் வந்து

குருபர னாகி அருளிய பெருமையைச்
சிறுமையென் றிகழாதே திருவடி யிணையைப்
பிறிவினை அறியா நிழலது போல
முன்பின் ஆகி முனியா தத்திசை
என்புநைந் துருகி நெக்குநெக் கேங்கி

அன்பெனும் ஆறு கரையது புரள
நன்புல னொன்றி நாதவென் றரற்றி
உரைதடு மாறி உரோமஞ் சிலிர்ப்பக்
கரமலர் மொட்டித் திருதய மலரக்
கண்களி கூர நுண்துளி யரும்பச்

சாயா அன்பினை நாடொறுந் தழைப்பவர்
தாயே யாகி வளர்த்தனை போற்றி
மெய்தரு வேதியன் ஆகி வினைகெடக்
கைதர வல்ல கடவுள் போற்றி
ஆடக மதுரை அரசே போற்றி

71. சதுர் - வல்லமை.
71. அறிமால் - ஞானப்பித்து.
72. பரம அதிசயம் - மேலான வியப்பு.
78. பிறிவினை - பிறிதுபடுதல்.
88. மெய்தரு வேதியன் - மெய்ப்பொருளறிவைத் தரும் மறையவன்.
90. ஆடகம் - பொன்.

கூட விலங்கு குருமணி போற்றி
தென்றில்லை மன்றினுள் ஆடி போற்றி
இன்றெனக் காரமு தானாய் போற்றி
மூவா நான்மறை முதல்வா போற்றி
சேவார் வெல்கொடிச் சிவனே போற்றி

மின்னா ருருவ விகிர்தா போற்றி
கன்னா ருரித்த கனியே போற்றி
காவாய் கனகக் குன்றே போற்றி
ஆவா என்றனக் கருளாய் போற்றி
படைப்பாய் காப்பாய் துடைப்பாய் போற்றி

இடரைக் களையும் எந்தாய் போற்றி
ஈச போற்றி இறைவ போற்றி
தேசப் பளிங்கின் திரளே போற்றி
அரசே போற்றி அமுதே போற்றி
விரைசேர் சரண விகிர்தா போற்றி

வேதி போற்றி விமலா போற்றி
ஆதி போற்றி அறிவே போற்றி
கதியே போற்றி கனியே போற்றி
நதிசேர் செஞ்சடை நம்பா போற்றி
உடையாய் போற்றி உணர்வே போற்றி

---

91. குருமணி - மேலான ஆசிரியன்.
94. மூவா - மூப்படையாத - என்றும் ஒருதன்மைத்தான.
95. சே - எருது.
96. விகிர்தன் - பல்பல வேடம் கொள்வோன் (அலகிலா விளையாட்டுடையான்.)
106. வேதி - அறிவன்.



கடையேன் அடிமை கண்டாய் போற்றி
ஐயா போற்றி அணுவே போற்றி
சைவா போற்றி தலைவா போற்றி
குறியே போற்றி குணமே போற்றி
நெறியே போற்றி நினைவே போற்றி

வானோர்க் கரிய மருந்தே போற்றி
ஏனோர்க் கெளிய இறைவா போற்றி
மூவேழ் சுற்றம் முரணுறு நரகிடை
ஆழா மேயரு ளரசே போற்றி
தோழா போற்றி துணைவா போற்றி

வாழ்வே போற்றியென் வைப்பே போற்றி
முத்தா போற்றி முதல்வா போற்றி
அத்தா போற்றி அரனே போற்றி
உரையுணர் விறந்த ஒருவ போற்றி
விரிகட லுலகின் விளைவே போற்றி

அருமையி லெளிய அழகே போற்றி
கருமுகி லாகிய கண்ணே போற்றி
மன்னிய திருவருள் மலையே போற்றி
என்னையும் ஒருவ னாக்கி இருங்கழல்
சென்னியில் வைத்த சேவக போற்றி

தொழுதகை துன்பந் துடைப்பாய் போற்றி
அழிவிலா ஆனந்த வாரி போற்றி
அழிவதும் ஆவதுங் கடந்தாய் போற்றி
முழுவதும் இறந்த முதல்வா போற்றி
மானேர் நோக்கி மணாளா போற்றி

வான்கத் தமரர் தாயே போற்றி
பாரிடை ஐந்தாய்ப் பரந்தாய் போற்றி
நீரிடை நான்காய் நிகழ்ந்தாய் போற்றி
தீயிடை மூன்றாய்த் திகழ்ந்தாய் போற்றி
வளியிடை யிரண்டாய் மகிழ்ந்தாய் போற்றி

வெளியிடை ஒன்றாய் விளைந்தாய் போற்றி
அளிபவர் உள்ளத் தமுதே போற்றி
கனவிலுந் தேவர்க் கரியாய் போற்றி
நனவிலும் நாயேற் கருளினை போற்றி
இடைமரு துறையு மெந்தாய் போற்றி

சடையிடைக் கங்கை தரித்தாய் போற்றி
ஆரூர் அமர்ந்த அரசே போற்றி
சீரார் திருவை யாறா போற்றி
அண்ணா மலையெம் அண்ணா போற்றி
கண்ணா ரமுதக் கடலே போற்றி

ஏகம் பத்துறை எந்தாய் போற்றி
பாகம் பெண்ணுரு வானாய் போற்றி
பராய்த்துறை மேவிய பரனே போற்றி
சிராப்பள்ளி மேவிய சிவனே போற்றி
மற்றோர் பற்றிங் கறியேன் போற்றி

குற்றா லத்தெங் கூத்தா போற்றி
கோகழி மேவிய கோவே போற்றி
ஈங்கோய் மலையெம் எந்தாய் போற்றி
பாங்கார் பழனத் தழகா போற்றி
கடம்பூர் மேவிய விடங்கா போற்றி

137. பாரிடை ஐந்து - நிலத்தியல்புகள்ஐந்து. அவை, சுவை ஒளி, ஊறு, ஓசை, நாற்றம்.
138. நீரிடை நான்கு - நீரியல்புகள்நான்கு. அவை நாற்றம் தவிர்ந்தவை.
142. அளிபவர் - அன்பால் உருகுபவர்.
160. விடங்கன் - வீரன். சுயம்புமூர்த்தியுமாம்



அடைந்தவர்க் கருளும் அப்பா போற்றி
இத்தி தன்னின் கீழிரு மூவர்க்
கத்திக் கருளிய அரசே போற்றி
தென்னா டுடைய சிவனே போற்றி
எந்நாட் டவர்க்கும் இறைவா போற்றி

ஏனக் குருளைக் கருளினை போற்றி
மானக் கயிலை மலையாய் போற்றி
அருளிட வேண்டும் அம்மான் போற்றி
இருள்கெட அருளும் இறைவா போற்றி
தளர்ந்தேன் அடியேன் தமியேன் போற்றி

களங்கொளக் கருத அருளாய் போற்றி
அஞ்சே லென்றிங் கருளாய் போற்றி
நஞ்சே அமுதா நயந்தாய் போற்றி
அத்தா போற்றி ஐயா போற்றி
நித்தா போற்றி நிமலா போற்றி

பத்தா போற்றி பவனே போற்றி
பெரியாய் போற்றி பிரானே போற்றி
அரியாய் போற்றி அமலா போற்றி
மறையோர் கோல நெறியே போற்றி
முறையோ தரியேன் முதல்வா போற்றி

உறவே போற்றி உயிரே போற்றி
சிறவே போற்றி சிவமே போற்றி
மஞ்சா போற்றி மணாளா போற்றி
பஞ்சே ரடியாள் பங்கா போற்றி
அலந்தேன் நாயேன் அடியேன் போற்றி

162. இருமூவா - இயக்கியர் அறுவர். 163. அத்தி - யானை
165. ஏனக்குருளை - பன்றிக்குட்டி
171. களம்கொள - நெஞ்சம் இடமாகக்கொள்ள.
176. பத்தா - தலைவனே.
பவனே - அனைத்திற்கும் பிறப்பிடமானவனே.
182. சிறவு - சிறப்பு. 183. மஞ்சா - மேகனே.

இலங்கு சுடரெம் ஈசா போற்றி
கவைத்தலை மேவிய கண்ணே போற்றி
குவைப்பதி மலிந்த கோவே போற்றி
மலைநா டுடைய மன்னே போற்றி
கலையார் அரிகே சரியாய் போற்றி

திருக்கழுக் குன்றிற் செல்வா போற்றி
பொருப்பமர் பூவணத் தரனே போற்றி
அருவமும் உருவமும் ஆனாய் போற்றி
மருவிய கருணை மலையே போற்றி
துரியமும் இறந்த சுடரே போற்றி

தெரிவரி தாகிய தெளிவே போற்றி
தோளா முத்தச் சுடரே போற்றி
ஆளா னவர்கட் கன்பா போற்றி
ஆரா அமுதே அருளே போற்றி
பேரா யிரமுடைப் பெம்மான் போற்றி

தாளி அறுகின் தாராய் போற்றி
நீளொளி ஆகிய நிருத்தா போற்றி
சந்தனச் சாந்தின் சுந்தர போற்றி
சிந்தனைக் கரிய சிவமே போற்றி
மந்திர மாமலை மேயாய் போற்றி

எந்தமை உய்யக் கொள்வாய் போற்றி
புலிமுலை புல்வாய்க் கருளினை போற்றி
அலைகடல் மீமிசை நடந்தாய் போற்றி
கருங்குரு விக்கன் றருளினை போற்றி
இரும்புலன் புலர இசைந்தனை போற்றி

---

195. துரியமும் இறந்தசுடரே - துரியாதீதத்தில் சோதியாய்த் தோன்றுபவனே.

203. சாந்து - திருநீறு. சந்தனக் கலவையுமாம்

207. புல்வாய் - மான்கன்று.



படியுறப் பயின்ற பாவக போற்றி
அடியொடு நடுவீ றானாய் போற்றி
நரகொடு சுவர்க்கம் நானிலம் புகாமற்
பரகதி பாண்டியற் கருளினை போற்றி
ஒழிவற நிறைந்த ஒருவ போற்றி

செழுமலர்ச் சிவபுரத் தரசே போற்றி
கழுநீர் மாலைக் கடவுள் போற்றி
தொழுவார் மையல் துணிப்பாய் போற்றி
பிழைப்பு வாய்ப்பொன் றறியா நாயேன்
குழைத்தசொன் மாலை கொண்டருள் போற்றி

புரம்பல எரித்த புராண போற்றி
பரம்பரஞ் சோதிப் பரனே போற்றி
போற்றி போற்றி புயங்கப் பெருமான்
போற்றி போற்றி புராண காரண
போற்றி போற்றி சயசய போற்றி.

திருச்சிற்றம்பலம்

---

211. படியுறப்பயின்ற பாவக - மண்மிசை மலரடி வைத்துப் பலநாள் எம்முடன் பழகிய வேடத்தையுடையவனே.

219. வாய்ப்பு - பிழையாமை.

223. புயங்கப்பெருமான் - அரவணிந்த பெம்மான்.

## 5. திருச்சதகம்

### [ பத்தி வைராக்கிய விசித்திரம் ]

### க. மெய்யுணர்தல்

திருப்பெருந்துறையில் அருளியது

[ கட்டளைக்கலித்துறை ]

திருச்சிற்றம்பலம்

5. மெய்தான் அரும்பி விதிர்விதிர்த் துன்விரை
யார்கழற்கென்
கைதான் தலைவைத்துக் கண்ணீர் ததும்பி
வெதும்பியுள்ளம்
பொய்தான் தவிர்ந்துன்னைப் போற்றி சயசய
போற்றியென்னும்
கைதான் நெகிழ விடேன்உடை யாய்என்னைக்
கண்டுகொள்ளே. 1

6. கொள்ளேன் புரந்தரன் மாலயன் வாழ்வு
குடிகெடினும்
நள்ளேன் நினதடி யாரொடல் லால்நர
கம்புகினும்
எள்ளேன் திருவரு ளாலே இருக்கப்
பெறின்இறைவா
உள்ளேன் பிறதெய்வம் உன்னையல் லாதெங்கள்
உத்தமனே. 2

---

1. அரும்பி - மயிர்சிலிர்த்து. விதிர்விதிர்ந்து - நடுநடுங்கி. கைதான் நெகிழவிடேன் - ஒழுக்கத்தில் நின்றும் தளர மாட்டேன். கை - ஒழுக்கம். தான் - அசை.
2. நள்ளேன் - நட்புக் கொள்ளேன். எள்ளேன் - இகழேன். உள்ளேன் - நினையேன். உத்தமன் - மேலானவன். (தலைவன்)



7. உத்தமன் அத்தன் உடையான் அடியே
நினைந்துருகி
மத்த மனத்தொடு மால்இவன் என்ன
மனநினைவில்
ஒத்தன ஒத்தன சொல்லிட ஊரூர்
திரிந்தெவருந்
தத்தம் மனத்தன பேசஎஞ் ஞான்றுகொல்
சாவதுவே. 3

8. சாவமுன் னாள்தக்கன் வேள்வித் தகர்தின்று
நஞ்சமஞ்சி
ஆவஎந் தாய்என் றவிதா விடும்நம்
மவரவரே
மூவரென் றேஎம்பி ரானொடும் எண்ணிவிண்
ணாண்டுமண்மேல்
தேவரென் றேயிறு மாந்தென்ன பாவந்
திரிதவரே. 4

9. தவமே புரிந்திலன் தண்மலர் இட்டுமுட்
டாதிறைஞ்சேன்,
அவமே பிறந்த அருவினை யேன்உனக்
கன்பருள்ளாஞ்
சிவமே பெறுந்திரு வெய்திற்றி லேன்நின்
திருவடிக்காம்
பவமே யருளுகண் டாயடி யேற்கெம்
பரம்பரனே. 5

---

3. மத்தம் - பெருங்களிப்பு, மால் - பித்து
4. தகர் - ஆடு, ஆவ - 'ஆ, ஆ' எனும் இரக்கக் குறிப்பு
அவிதா - துன்ப முறையீடு
திரிதவரே - திரித(ரு) வரே - தொகுத்தல்விகாரம். திரிகின்றுர் என்றவாறு.
5. முட்டாது - குறைவுபடாது., பவம் - பிறப்பு.
பரம்பரன் - மேலவர்க்கு மேலானவன்

10. பரந்துபல் ஆய்மலர் இட்டுமுட் டாதடி
யேஇறைஞ்சி
இரந்தஎல் லாம்எமக் கேபெற லாம்என்னும்
அன்பருள்ளம்
கரந்துநில் லாக்கள்வ னேநின்றன் வார்கழற்
கன்பெனக்கு
நிரந்தர மாய்அரு ளாய்நின்னை ஏத்த
முழுவதுமே. 6

11. முழுவதுங் கண்டவ னைப்படைத் தான்முடி
சாய்த்துமுன்னாள்
செழுமலர் கொண்டெங்குந் தேடவப் பாலனிப்
பால்எம்பிரான்
கழுதொடு காட்டிடை நாடக மாடிக்
கதியிலியாய்
உழுவையின் தோலுடுத் துன்மத்தம் மேல்கொண்
டுழிதருமே. 7

12. உழிதரு காலும் கனலும் புனலொடு
மண்ணும்விண்ணும்
இழிதரு காலமெக் காலம் வருவது
வந்ததற்பின்
உழிதரு காலத்த உன்னடி யேன்செய்த
வல்வினையைக்
கழிதரு காலமு மாயவை காத்தெம்மைக்
காப்பவனே. 8

---

7. முழுவதும் கண்டவன் - உலகம் முழுதும் படைத்த பிரமன்.
கழுது - பேய், உழுவை - புலி
உழிதரும் - அலைந்து திரிவன்

8. உழிதருகால் - உலவுகின்ற காற்று.
இழிதருகாலம் - ஒடுங்குகின்ற காலம்.
உழிதரு கால் - நடமிடுந் திருவடி.
காத்து - வாராமல் தடுத்து.



13. பவனெம் பிரான்பனி மாமதிக் கண்ணிவிண்
ணோர்பெருமான்
சிவனெம் பிரான்என்னை ஆண்டுகொண் டானென்
சிறுமைகண்டும்
அவனெம் பிரானென்ன நானடி
யேனென்ன இப்பரிசே
புவனெம் பிரான்தெரி யும்பரி சாவ
தியம்புகவே. 9

14. புகவே தகேன்உனக் கன்பருள் யானென்பொல்
லாமணியே
தகவே எனையுனக் காட்கொண்ட தன்மைஎப்
புன்மையரை
மிகவே உயர்த்திவிண் ணோரைப் பணித்தியண்
ணாஅமுதே
நகவே தகும்எம் பிரானென்னை நீசெய்த
நாடகமே. 10

திருச்சிற்றம்பலம்

---

9. பவன் - உலகத்தோற்றத்துக்குக் காரணனான சிவன்.
பனிமாமதிக் கண்ணி - குளிர்ச்சியும் பெருமையும் பொருந்திய இளம்பிறை முடிமாலை.
பரிசு - இயல்பு
புவன் - புவனம் (கடைகுறைந்து நின்றது) உலகம்.

10. தகவே ? - தகுதியோ ?
பொல்லாமணி - பொள்ளாமணி; துளையிடப்படாத மணி என்றவாறும்.

## (உ) அறிவுறுத்தல்

[ நாலடித் தரவு கொச்சகக் கலிப்பா ]

திருச்சிற்றம்பலம்

15. நாடகத்தால் உன்னடியார் போல்நடித்து நான்நடுவே
வீடகத்தே புகுந்திடுவான் மிகப்பெரிதும் விரைகின்றேன்
ஆடகச்சீர் மணிக்குன்றே இடையறா அன்புனக்கென்
ஊடகத்தே நின்றுருகத் தந்தருள்எம் உடையானே. 11

16. யானேதும் பிறப்பஞ்சேன்; இறப்பதனுக் கென்கடவேன்
வானேயும் பெறில்வேண்டேன் மண்ணாள்வான் மதித்துமிரேன்
தேனேயும் மலர்க்கொன்றைச் சிவனேஎம் பெருமான்எம்
மானேயுன் அருள்பெறுநாள் என்றென்றே வருந்துவனே. 12

17. வருந்துவன்நின் மலர்ப்பாத மவைகாண்பான் நாயடியேன்
இருந்துநல மலர்புனையேன் ஏத்தேன்நாத் தழும்பேறப்
பொருந்தியபொற் சிலைகுனித்தாய் அருளமுதம் புரியாயேல்
வருந்துவனத் தமியேன்மற் றென்னேநான் ஆமாறே. 13

---

11. ஆடகம் - பொன்
ஊடு அகத்தே - அகத்தூடே - உள்ளத்துள்ளே.
13. என்னே நான் ஆம் ஆறு - நான் உய்யுமாறு எங்ஙனம்?



18. ஆமாறுன் திருவடிக்கே அகங்குழையேன் அன்புருகேன்
பூமாலை புனைந்தேத்தேன் புகழ்ந்துரையேன் புத்தேளிர்
கோமான்நின் திருக்கோயில் தூகேன் மெழுகேன் கூத்தாடேன்
சாமாறே விரைகின்றேன் சதுராலே சார்வானே. 14

19. வானாகி மண்ணாகி வளியாகி ஒளியாகி
ஊனாகி உயிராகி உண்மையுமாய் இன்மையுமாய்க்
கோனாகி யானெனதென் றவரவரைக் கூத்தாட்டு
வானாகி நின்றாயை என்சொல்லி வாழ்த்துவனே. 15

20. வாழ்த்துவதும் வானவர்கள் தாம்வாழ்வான் மனம்நின்பால்
தாழ்த்துவதும் தாம்உயர்ந்து தம்மையெல்லாந் தொழவேண்டிச்
சூழ்த்துமது கரமுரலுந் தாரோயை நாயடியேன்
பாழ்த்தபிறப் பறுத்திடுவான் யானுமுன்னைப் பரவுவனே. 16

---

14. புத்தேளிர் - தேவர்
சதுர் - திறமை

16. மதுகரம் - வண்டு.
பாழ்த்த பிறப்பு - பயனற்ற பிறப்பு.

21. பரவுவார் இமையோர்கள் பாடுவன
நால்வேதம்
குரவுவார் குழல்மடவாள் கூறுடையாள்
ஒருபாகம்
விரவுவார் மெய்யன்பின் அடியார்கள்
மேன்மேலுன்
அரவுவார் கழலிணைகள் காண்பாரோ
அரியானே. 17

22. அரியானே யாவர்க்கும் அம்பரவா
அம்பலத்தெம்
பெரியானே சிறியேனை ஆட்கொண்ட
பெய்கழற்கீழ்
விரையார்ந்த மலர்தூவேன் வியந்தலறேன்
நயந்துருகேன்
தரியேனா னாமாறென் சாவேன்நான்
சாவேனே 18

23. வேனில்வேள் மலர்க்கணைக்கும் வெண்ணகைச்
செவ்வாய்க்கரிய
பானலார் கண்ணியர்க்கும் பதைத்துருகும்
பாழ்நெஞ்சே
ஊனெலாம் நின்றுருகப் புகுந்தாண்டான்
இன்றுபோய்
வானுளான் காணாய்நீ மாளாவாழ்
கின்றாயே. 19

---

17. குரவு - குராமலர். விரவுவார் - கலப்பார்.
மேன்மேல் - மேன்மேலும்.

18. அம்பரவா - நுண்ணிய ஞானப்பெருவெளியில் விளங்குபவனே.

19. வேனில்வேள் - மன்மதன்.
பானல் - குவளை, வான் - சிவலோகம்.



24. வாழ்கின்றாய் வாழாத நெஞ்சமே
வல்வினைப்பட்
டாழ்கின்றாய் ஆழாமற் காப்பானை
ஏத்தாதே
சூழ்கின்றாய் கேடுனக்குச் சொல்கின்றேன்
பல்காலும்
வீழ்கின்றாய் நீஅவலக் கடலாய
வெள்ளத்தே. 20

திருச்சிற்றம்பலம்

## (ரு) சுட்டறுத்தல்

[ எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம் ]

திருச்சிற்றம்பலம்

25. வெள்ளந்தாழ் விரிசடையாய் விடையாய் விண்ணோர்
பெருமானே எனக்கேட்டு வேட்ட நெஞ்சாய்ப்
பள்ளந்தாழ் உறுபுனலிற் கீழ்மே லாகப்
பதைத்துருகும் அவர்நிற்க என்னை யாண்டாய்க்
குள்ளந்தாள் நின்றுச்சி யளவும் நெஞ்சாய்
உருகாதால் உடம்பெல்லாங் கண்ணாய் அண்ணா
வெள்ளந்தான் பாயாதால் நெஞ்சங் கல்லாம்
கண்ணிணையும் மரமாம் தீவினையி னேற்கே. 21

---

21. வேட்டநெஞ்சு - வேட்கை மிக்க மனம்.

26. வினையிலே கிடந்தேனைப் புகுந்து நின்று
போதுநான் வினைக்கேடன் என்பாய்போல
இனையன்நான் என்றுன்னை அறிவித் தென்னை
ஆட்கொண்டெம் பிரானானாய்க் கிரும்பின் பாவை
அனையநான் பாடேன்நின் றாடேன் அந்தோ
அலறிடேன் உலறிடேன் ஆவி சோரேன்
முனைவனே முறையோநான் ஆன வாறு
முடிவறியேன் முதலந்தம் ஆயி னானே 22

27. ஆயநான் மறையவனும் நீயே யாதல்
அறிந்தியான் யாவரினுங் கடைய னாய
நாயினேன் ஆதலையும் நோக்கிக் கண்டு
நாதனே நானுனக்கோர் அன்பன் என்பேன்
ஆயினேன் ஆதலால் ஆண்டு கொண்டாய்
அடியார்தாம் இல்லையே அன்றி மற்றோர்
பேயனேன் இதுதான்நின் பெருமை யன்றே
எம்பெருமான் என்சொல்லிப் பேசு கேனே 23

28. பேசிற்றாம் ஈசனே எந்தாய் எந்தை
பெருமானே என்றென்றே பேசிப் பேசிப்
பூசிற்றாம் திருநீறே நிறையப் பூசிப்
போற்றியெம் பெருமானே என்று பின்றா
நேசத்தாற் பிறப்பிறப்பைக் கடந்தார் தம்மை
ஆண்டானே அவாவெள்ளக் கள்வ னேனை
மாசற்ற மணிக்குன்றே எந்தாய் அந்தோ
என்னைநீ ஆட்கொண்ட வண்ணந் தானே. 24

22. போது - வருக.

24. பின்றா நேசம் - மாறா அன்பு.



29. வண்ணந்தான் சேயதன்று வெளிதே யன்ற
நேகன்ஏகன் அணுவணுவில் இறந்தாய் என்றங்
கெண்ணந்தான் தடுமாறி இமையோர் கூட்டம்
எய்துமா றறியாத எந்தாய் உன்றன்
வண்ணந்தா னதுகாட்டி வடிவு காட்டி
மலர்க்கழல்க ளவைகாட்டி வழியற் றேனைத்
திண்ணந்தான் பிறவாமற் காத்தாட் கொண்டாய்
எம்பெருமான் என்சொல்லிச் சிந்திக் கேனே 25

30. சிந்தனைநின் றனக்காக்கி நாயி னேன்றன்
கண்ணிணைநின் திருப்பாதப் போதுக் காக்கி
வந்தனையும் அம்மலர்க்கே யாக்கி வாக்குன்
மணிவார்த்தைக் காக்கியைம் புலன்கள் ஆர
வந்தனைஆட் கொண்டுள்ளே புகுந்த விச்சை
மாலமுதப் பெருங்கடலே மலையே உன்னைத்
தந்தனைசெந் தாமரைக்கா டனைய மேனித்
தனிச்சுடரே இரண்டுமிலித் தனிய னேற்கே. 26

31. தனியனேன் பெரும்பிறவிப் பௌவத் தெவ்வத்
தடந்திரையால் எற்றுண்டு பற்றொன் றின்றிக்
கனியைநேர் துவர்வாயார் என்னுங் காலாற்
கலக்குண்டு காமவான் சுறவின் வாய்ப்பட்
டினியென்னே உய்யுமா றென்றென் றெண்ணி
அஞ்செழுத்தின் புணைபிடித்துக் கிடக்கின் றேனை
முனைவனே முதலந்தம் இல்லா மல்லற்
கரைகாட்டி ஆட்கொண்டாய் மூர்க்க னேற்கே 27

26. இரண்டும் இல் - இகம் பரம் இரண்டும் இல்லாத.

27. பௌவம் - கடல் எவ்வம் - துன்பம்.
என்று என்று எண்ணி - பாம்பின் வாய்த்தேரை போலப் பல பல நினைந்து
புணை - தெப்பம்.
மல்லல் கரை - வளப்பம் மிக்க முத்திக்கரை.

32. கேட்டாரும் அறியாதான் கேடொன் றில்லான்
கிளையிலான் கேளாதே எல்லாங் கேட்டான்
நாட்டார்கள் விழித்திருப்ப ஞாலத் துள்ளே
நாயினுக்குத் தவிசிட்டு நாயி னேற்கே
காட்டா தனவெல்லாங் காட்டிப் பின்னுங்
கேளா தனவெல்லாங் கேட்பித் தென்னை
மீட்டேயும் பிறவாமற் காத்தாட் கொண்டான்
எம்பெருமான் செய்திட்ட விச்சை தானே. 28

33. விச்சைதான் இதுவொப்ப துண்டோ கேட்கின்,
மிகுகாதல் அடியார்தம் அடிய னாக்கி
அச்சந்தீர்த் தாட்கொண்டான் அமுதம் ஊறி
அகம்நெகவே புகுந்தாண்டான் அன்பு கூர
அச்சன் ஆண் பெண்ணலி ஆகாச மாகி
ஆரழலாய் அந்தமாய் அப்பால் நின்ற
செச்சைமா மலர்புரையும் மேனி எங்கள்
சிவபெருமான் எம்பெருமான் தேவர் கோவே. 29

34. தேவர்கோ அறியாத தேவ தேவன்,
செழும்பொழில்கள் பயந்துகாத் தழிக்கும் மற்றை
மூவர்கோ னாய்நின்ற முதல்வன் மூர்த்தி
மூதாதை மாதாளும் பாகத் தெந்தை
யாவர்கோன் என்னையும்வந் தாண்டு கொண்டான்
யாமார்க்குங் குடியல்லோம் யாதும் அஞ்சோம்
மேவினோம் அவனடியார் அடியா ரோடும்
மேன்மேலுங் குடைந்தாடி யாடு வோமே. 30

திருச்சிற்றம்பலம்

---

28. தவிசு - (சீரிய) இருக்கை.

29. விச்சை - வித்தை.
அச்சன் - தந்தை.
செச்சை - வெட்சி.



## (ச) ஆத்துமசுத்தி

[ அறுசீர்க்கழி நெடிலடி ஆசிரிய விருத்தம் ]

திருச்சிற்றம்பலம்

35. ஆடு கின்றிலை கூத்துடை யான்கழற்
கன்பிலை என்புருகிப்
பாடு கின்றிலை பதைப்பதும் செய்கிலை
பணிகிலை பாதமலர்
சூடுகின்றிலை சூட்டுகின் றதுமிலை
துணையிலி பிணநெஞ்சே
தேடு கின்றிலை தெருவுதோ றலறிலை
செய்வ தொன்றறியேனே. 31

36. அறிவி லாத எனைப்புகுந் தாண்டுகொண்
டறிவதை யருளிமேல்
நெறியெ லாம்புல மாக்கிய எந்தையைப்
பந்தனை யறுப்பானைப்
பிறிவி லாதவின் னருள்கள்பெற் றிருந்துமா
றாடுதி பிணநெஞ்சே
கிறியெ லாம்மிகக் கீழ்ப்படுத் தாய்கெடுத்
தாயென்னைக் கெடுமாறே. 33

37. மாறி நின்றெனைக் கெடக்கிடந் தனையையெம்
மதியிலி மடநெஞ்சே
தேறு கின்றிலம் இனியுனைச் சிக்கெனச்
சிவனவன் திரள்தோள்மேல்
நீறு நின்றது கண்டனை யாயினும்
நெக்கிலை இக்காயம்
கீறு கின்றிலை கெடுவதுன் பரிசிது
கேட்கவுங் கில்லேனே.

---

32. அறிவு அதை - ஞானத்தை.
மாறு ஆடுதி - மாறுபட்டு நிற்கிறாய்.
கிறி - பொய்.

38. கிற்ற வாமன மேகெடு வாயுடை
யான்அடி நாயேனை
விற்றெ லாம்மிக ஆள்வதற் குரியவன்
விரைமலர்த் திருப்பாதம்
முற்றி லாஇளந் தளிர்பிரிந் திருந்துநீ
உண்டன எல்லாம்முன்
அற்ற வாறும்நின் னறிவும்நின் பெருமையும்
அளவறுக் கில்லேனே. 34

39. அளவ றுப்பதற் கரியவன் இமையவர்க்
கடியவர்க் கெளியான்நங்
களவ றுத்துநின் றுண்டமை கருத்தினுட்
கசிந்துணர்ந் திருந்தேயும்
உளக றுத்துனை நினைந்துளம் பெருங்களன்
செய்தது மிலைநெஞ்சே
பளக றுத்துடை யான்கழல் பணிந்திலை
பரகதி புகுவானே 35

40. புகுவ தாவதும் போதர வில்லதும்
பொன்னகர் புகப்போதற்
குகுவ தாவதும் எந்தையெம் பிரானென்னை
ஆண்டவன் கழற்கன்பு
நெகுவ தாவதும் நித்தலும் அமுதொடு
தேனொடு பால்கட்டி
மிகுவ தாவதும் இன்றெனின் மற்றிதற்
கென்செய்கேன் வினையேனே 36

---

34. கிற்றவா - (இதுதான் உன்) திறமையோ ?
35. உள கறுத்து - (உலகில்) உள்ள (சுகங்களை) வெறுத்து. உலகு என்பது உளகு என எதுகை நோக்கித் திரிந்தது என்பாரும் உளர்.
பெருங்களன் - பெரிய இடம் (பெருங்கோயில்)
பளகு - குற்றம்.
36. போதரவு - திரும்புதல்
உகுதல் - தேய்ந்து ஒழிதல். (உலகப்பற்றுக்கள்)



41. வினையென் போலுடை யார்பிறர்
ஆர்உடை யான்அடி நாயேனைத்
தினையின் பாகமும் பிறிவது திருக்குறிப்
பன்றுமற் றதனாலே
முனைவன் பாதநன் மலர்பிரிந் திருந்துநான்
முட்டிலேன் தலைகீறேன்
இனையன் பாவனை இரும்புகல் மனம்செவி
இன்னதென் றறியேனே 37

42. ஏனை யாவரும் எய்திட லுற்றுமற்
றின்னதென் றறியாத
தேனை ஆனெயைக் கரும்பினின் தேறலைச்
சிவனையென் சிவலோகக்
கோனை மானன நோக்கிதன் கூறனைக்
குறுகிலேன் நெடுங்காலம்
ஊனை யான்இருந் தோம்புகின் றேன்கெடு
வேன்உயிர் ஓயாதே. 38

43. ஒய்வி லாதன உவமனில் இறந்தன
ஒண்மலர்த் தாள்தந்து
நாயி லாகிய குலத்தினுங் கடைப்படும்
என்னைநன் னெறிகாட்டித்
தாயி லாகிய இன்னருள் புரிந்தஎன்
தலைவனை நனிகாணேன்
தீயில் வீழ்கிலேன் திண்வரை உருள்கிலேன்,
செழுங்கடல் புகுவேனே. 39

44. வேனில் வேள்கணை கிழித்திட மதிகெடும்
அதுதனை நினையாதே
மானி லாவிய நோக்கியர் படிறிடை
மத்திடு தயிராகித்
தேனி லாவிய திருவருள் புரிந்தஎன்
சிவனகர் புகப்போகேன்;
ஊனில் ஆவியை ஓம்புதற் பொருட்டினும்
உண்டுடுத் திருந்தேனே. 40

திருச்சிற்றம்பலம்

## (ரு) கைம்மாறு கொடுத்தல்

### கலிவிருத்தம்

திருச்சிற்றம்பலம்

45. இருகை யானையை ஒத்திருந் தென்னுளக்
கருவை யான்கண்டி லேன்கண்ட தெய்வமே
வருக வென்று பணித்தனை வானுளோர்க்
கொருவ னேகிற்றி லேன்கிற்பன் உண்ணவே. 41

46. உண்டொர் ஒண்பொரு ளென்றுணர் வார்க்கெலாம்
பெண்டிர் ஆண்அலி யென்றறி யொண்கிலை
தொண்ட னேற்குள்ள வாவந்து தோன்றினாய்
கண்டுங் கண்டிலேன் என்னகண் மாயமே. 42

47. மேலை வானவ ரும்மறி யாததோர்
கோல மேயெனை ஆட்கொண்ட கூத்தனே!
ஞால மேவிசும் பேஇவை வந்துபோம்
கால மேஉனை யென்றுகொல் காண்பதே. 43

48. காண லாம்பர மேகட் கிறந்ததோர்
வாணி லாம்பொருளே இங்கொர் பார்ப்பெனப்
பாண னேன்படிற் றாக்கையை விட்டுனைப்
பூணு மாறறி யேன்புலன் போற்றியே. 44

---

41, இருகை யானை - இரண்டு கைகளையுடைய யானை (உணவினை வாரி விழுங்கி ஊனினைப் பெருக்குவதை உணர்த்தி நின்றது).
உள்ளக் கரு - (நினைப்பவர்) மனத்துக்கோர் வித்துமான இறைவன்.
கிற்றிலேன் - (பணிப்பின்படி நடக்க) வல்லேன் அல்லேன்
கிற்பன் - (உண்டு உடுத்து இருக்க) வல்லேன்
44. பார்ப்பு - பறவைக்குஞ்சு.
பாணன் - (பாழ் + நன்) வீணன். படிறு - வஞ்சகம்,



49. போற்றி யென்றும் புரண்டும் புகழ்ந்தும்நின்
றாற்றன் மிக்கஅன் பாலழைக் கின்றிலேன்
ஏற்று வந்தெதிர் தாமரைத் தாளுறுங்
கூற்றம் அன்னதொர் கொள்கையென் கொள்கையே 45

50. கொள்ளுங் கில்லெனை அன்பரிற் கூய்ப்பணி
கள்ளும் வண்டும் அறாமலர்க் கொன்றையான்
நள்ளுங் கீழுளும் மேலுளும் யாவுளும்
எள்ளும் எண்ணெயும் போல்நின்ற எந்தையே. 46

51. எந்தை யாயெம் பிரான்மற்று மியாவர்க்கும்
தந்தை தாய்தம் பிரான்றனக் கஃதிலான்
முந்தி என்னுள் புகுந்தனன் யாவருஞ்
சிந்தை யாலும் அறிவருஞ் செல்வனே. 47

52. செல்வம் நல்குர வின்றிவிண் ணோர்புழுப்
புல்வ ரம்பின்றி யார்க்கும் அரும்பொருள்
எல்லை யில்கழல் கண்டும் பிரிந்தனன்
கல்வ கைமனத் தேன்பட்ட கட்டமே. 48

53. கட்ட றுத்தெனை யாண்டுகண் ணாரநீ
றிட்ட அன்பரொ டியாவருங் காணவே
பட்டி மண்டபம் ஏற்றினை ஏற்றினை
எட்டி னோடிரண் டும்மறி யேனையே. 49

54. அறிவ னேஅமு தேஅடி நாயினேன்
அறிவ னாகக்கொண் டோஎனை ஆண்டது?
அறிவி லாமையன் றேகண்ட தாண்டநாள்
அறிவ னோஅல்ல னோஅரு ளீசனே. 50

திருச்சிற்றம்பலம்

---

45. ஏற்று வந்து எதிர் - எதிர் ஏற்று வந்து, எதிராகப் பொரவந்து.
46. நள் - நடு. 47. யாய் - எனது தாய்.
48. நல்குரவு - வறுமை. கட்டம் - துன்பம்.
49. பட்டிமண்டபம் - கலைஞானியர் அவை
எட்டினோடு இரண்டும் அறியேனை - யாதும் அறியாதவனை.
பஞ்சாக்கரத்தை அறியாத என்னை என்று கூறினுமாம்

## ( சா ) அநுபோக சுத்தி

### அறுசீர் ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

55. ஈச னேஎன் எம்மானே
    எந்தை பெருமான் என்பிறவி
நாச னேநான் யாதுமொன்
    றல்லாப் பொல்லா நாயான
நீச னேனை ஆண்டாய்க்கு
    நினைக்க மாட்டேன் கண்டாயே
தேச னேஅம் பலவனே!
    செய்வ தொன்றும் அறியேனே. 51

56. செய்வ தறியாச் சிறுநாயேன்
    செம்பொற் பாத மலர்காணப்
பொய்யர் பெறும்பே றத்தனையும்
    பெறுதற் குரியேன் பொய்யிலா
மெய்யர் வெறியார் மலர்ப்பாதம்
    மேவக் கண்டுங் கேட்டிருந்தும்
பொய்ய னேன்நான் உண்டுடுத்திங்
    கிருப்ப தானேன் போரேறே. 52

57. போரே றேநின் பொன்னகர்வாய்
    நீபோந் தருளி யிருணீக்கி
வாரே றிளமென் முலையாளோ
    டுடன்வந் தருள அருள்பெற்ற
சீரே றடியார் நின்பாதஞ்
    சேரக் கண்டுங் கண்கெட்ட
ஊரே றாய்இங் குழல்வேனோ
    கொடியேன் உயிர்தான் உலவாதே. 53

---

53. போந்து அருளி - புறப்பட்டு எழுந்தருளி.
கண்கெட்ட ஊர் ஏறு - (மேய்ச்சல் தரையினின்றும் ஊர் திரும்புவதற்கு வழியறியாத) குருட்டு எருது.
உலவாக் காலம் - அளவற்ற காலம்.



58. உலவாக் காலந் தவமெய்தி
    உறுப்பும் வெறுத்திங் குனைக்காண்பான்
பலமா முனிவர் நனிவாடப்
    பாவி யேனைப் பணிகொண்டாய்
மலமாக் குரம்பை இதுமாய்க்க
    மாட்டேன் மணியே உனைக்காண்பான்
அலவா நிற்கும் அன்பிலேன்
    என்கொண் டெழுகேன் எம்மானே. 54

59. மானேர் நோக்கி உமையாள்
    பங்கா வந்திங் காட்கொண்ட
தேனே அமுதே கரும்பின்
    தெளிவே சிவனே தென்தில்லைக்
கோனே உன்றன் திருக்குறிப்புக்
    கூடு வார்நின் கழல்கூட
ஊனார் புழுக்கூ டிதுகாத்திங்
    கிருப்ப தானேன் உடையானே. 55

60. உடையா னேநின் றனைஉள்கி
    உள்ளம் உருகும் பெருங்காதல்
உடையார் உடையாய் நின்பாதஞ்
    சேரக் கண்டிங் கூர்நாயிற்
கடையா னேன்நெஞ் சுருகாதேன்
    கல்லா மனத்தேன் கசியாதேன்
முடையார் புழுக்கூ டிதுகாத்திங்
    கிருப்ப தாக முடித்தாயே. 56

---

54. அலவா நிற்கும் அன்பு - அலைந்து அவதியுறும் அன்பு
55. திருக்குறிப்பு - (அன்பரை வலிய ஆட்கொள்ளும்) அருள் நோக்கம்.

61. முடித்த வாறும் என்றனக்கே
தக்க தேமுன் னடியாரைப்
பிடித்த வாறும் சோராமற்
சோர னேன்இங் கொருத்திவாய்
துடித்த வாறும் துகிலிறையே
சோர்ந்த வாறும் முகங்குறுவேர்
பொடித்த வாறும் இவையுணர்ந்து
கேடென் றனக்கே சூழ்ந்தேனே. 57

62. தேனைப் பாலைக் கன்னலின்
தெளிவை ஒளியைத் தெளிந்தார்தம்
ஊனை உருக்கும் உடையானை
உம்ப ரானை வம்பனேன்
நானின் னடியேன் நீஎன்னை
ஆண்டாய் என்றால் அடியேற்குத்
தானுஞ் சிரித்தே யருளலாந்
தன்மை யாமென் றன்மையே. 58

63. தன்மை பிறரால் அறியாத
தலைவா பொல்லா நாயான
புன்மை யேனை ஆண்டையா
புறமே போக விடுவாயோ
என்னை நோக்கு வார்யாரே
என்னான் செய்கேன் எம்பெருமான்
பொன்னே திகழுந் திருமேனி
எந்தாய் எங்குப் புகுவேனே. 59

58. உம்பரான் - மேலிடத்தில் (விண்ணகத்தில்) உறைவோன்



64. புகுவேன் எனதே நின்பாதம்
போற்றும் அடியா ருள்நின்று
நகுவேன் பண்டு தோள்நோக்கி
நாண மில்லா நாயினேன்
நெகுமன் பில்லை நினைக்காண
நீஆண் டருள அடியேனுந்
தகுவ னேஎன் தன்மையே
எந்தாய் அந்தோ தரியேனே. 60

திருச்சிற்றம்பலம்

## (எ) காருணியத்திரங்கல்

### அறுசீர் ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

65. தரிக்கிலேன் காய வாழ்க்கை
சங்கரா போற்றி வான
விருத்தனே போற்றி எங்கள்
விடலையே போற்றி ஒப்பில்
ஒருத்தனே போற்றி உம்பர்
தம்பிரான் போற்றி தில்லை
நிருத்தனே போற்றி எங்கள்
நின்மலா போற்றி போற்றி 61

66. போற்றிஓம் நமச்சி வாய
புயங்கனே மயங்கு கின்றேன்
போற்றிஓம் நமச்சி வாய
புகலிடம் பிறிதொன் றில்லை
போற்றிஓம் நமச்சி வாய
புறமெனைப் போக்கல் கண்டாய்
போற்றிஓம் நமச்சி வாய
சயசய போற்றி போற்றி 62

61. விருத்தன் - முதியோன். விடலை - திண்ணியன்.

67. போற்றிஎன் போலும் பொய்யர்
தம்மையாட் கொள்ளும் வள்ளல்
போற்றிநின் பாதம் போற்றி
நாதனே போற்றி போற்றி
போற்றிநின் கருணை வெள்ளப்
புதுமதுப் புவனம் நீர்தீக்
காற்றிய மானன் வானம்
இருசுடர்க் கடவு ளானே 63

68. கடவுளே போற்றி என்னைக்
கண்டுகொண் டருளு போற்றி
விடவுளே உருக்கி என்னை
ஆண்டிட வேண்டும் போற்றி
உடலிது களைந்திட் டொல்லை
உம்பர்தந் தருளு போற்றி
சடையுளே கங்கை வைத்த
சங்கரா போற்றி போற்றி 64

69. சங்கரா போற்றி மற்றோர்
சரணிலேன் போற்றி கோலப்
பொங்கரா அல்குற் செவ்வாய்
வெண்ணகைக் கரிய வாட்கண்
மங்கையோர் பங்க போற்றி
மால்விடை யூர்தி போற்றி
இங்கிவாழ் வாற்ற கில்லேன்
எம்பிரான் இழித்திட் டேனே. 65

64. விட உளே உருக்கி - (உலகப்பற்றுகளை) விட உள்ளுருக்கி
ஒல்லை - விரைவாக,



70. இழித்தனன் என்னை யானே
எம்பிரான் போற்றி போற்றி
பழித்திலேன் உன்னை என்னை
ஆளுடைப் பாதம் போற்றி
பிழைத்தவை பொறுக்கை எல்லாம்
பெரியவர் கடமை போற்றி
ஒழித்திடிவ் வாழ்வு போற்றி
உம்பர்நாட் டெம்பி ரானே. 66

71. எம்பிரான் போற்றி வானத்
தவரவர் ஏறு போற்றி
கொம்பரார் மருங்குல் மங்கை
கூறவெண் ணீற போற்றி
செம்பிரான் போற்றி தில்லைத்
திருச்சிற்றம் பலவ போற்றி
உம்பரா போற்றி என்னை
ஆளுடை ஒருவ போற்றி 67

72. ஒருவனே போற்றி ஒப்பில்
அப்பனே போற்றி வானோர்
குருவனே போற்றி எங்கள்
கோமளக் கொழுந்து போற்றி
வருகஎன் றென்னை நின்பால்
வாங்கிட வேண்டும் போற்றி
தருகநின் பாதம் போற்றி
தமியனேன் தனிமை தீர்த்தே 68

67. செம்பிரான் - செம்மேனி எம்மான்,

73. தீர்ந்தஅன் பாய அன்பர்க்
கவரினும் அன்ப போற்றி
பேர்ந்தும்என் பொய்ம்மை யாட்கொண்
டருளிடும் பெருமை போற்றி
வார்ந்தநஞ் சயின்று வானோர்க்
கமுதமீ வள்ளல் போற்றி
ஆர்ந்தநின் பாதம் நாயேற்
கருளிட வேண்டும் போற்றி 69

74. போற்றியிப் புவனம் நீர்தீக்
காலொடு வான மானாய்
போற்றியெவ் வுயிர்க்குந் தோற்றம்
ஆகிநீ தோற்ற மில்லாய்
போற்றியெல் லாவு யிர்க்கும்
ஈறாயீ றின்மை யானாய்
போற்றியைம் புலன்கள் நின்னைப்
புணர்கிலாப் புணர்க்கை யானே. 70

திருச்சிற்றம்பலம்

## (அ) ஆனந்தத் தழுந்தல்

எழுசீர் ஆசிரியவிருத்தம்

திருச்சிற்றம்பலம்

75. புணர்ப்ப தொக்க எந்தை என்னை
யாண்டு பூண நோக்கினாய்
புணர்ப்ப தன்றி தென்ற போது
நின்னொ டென்னொ டென்னிதாம்
புணர்ப்ப தாக அன்றி தாக
அன்பு நின்க ழற்கணே
புணர்ப்ப தாக அங்க ணாள
புங்க மான போகமே. 71

69. வார்ந்த - பெருகிய.



76. போகம் வேண்டி வேண்டி வேன்பு
ரந்த ராதி இன்பமும்
ஏக நின்க ழல்லி ணைய
லாதி லேனென் எம்பிரான்
ஆகம் விண்டு கம்பம் வந்து
குஞ்சி அஞ்ச லிக்கணே
ஆக என்கை கண்கள் தாரை
ஆற தாக ஐயனே 72

77. ஐய நின்ன தல்ல தில்லை
மற்றோர் பற்று வஞ்சனேன்
பொய்க லந்த தல்ல தில்லை
பொய்மை யேன்என் எம்பிரான்
மைக லந்த கண்ணி பங்க
வந்து நின்க ழற்கணே
மெய்க லந்த அன்ப ரன்பெ
னக்கு மாக வேண்டுமே 73

78. வேண்டும் நின்க ழற்க ணன்பு
பொய்ம்மை தீர்த்து மெய்ம்மையே
ஆண்டு கொண்டு நாயி னேனை
ஆவ என்ற ருளுநீ
பூண்டு கொண்ட டிய னேனும்
போற்றி போற்றி யென்றுமென்றும்
மாண்டு மாண்டு வந்து வந்து
மன்ன நின்வ ணங்கவே 74

72. ஆகம் விண்டு - மெய் சிலிர்த்து
கம்பம் - நடுக்கம்
குஞ்சி - தலை.

74. பூண்டுகொண்டு - திருவடி மலரைச் சிரசிற் பூண்டு.

79. வணங்கும் நின்னை மண்ணும் விண்ணும்
வேதம் நான்கும் ஓலமிட்
டுணங்கு நின்னை எய்த லுற்று
மற்றொ ருண்மை இன்மையின்
வணங்கி யாம்வி டேங்க ளென்ன
வந்து நின்ற ருளுதற்
கிணங்கு கொங்கை மங்கை பங்க
என்கொ லோநினைப்பதே 75

80. நினைப்ப தாக சிந்தை செல்லு
மெல்லை யேய வாக்கினால்
தினைத்த னையு மாவ தில்லை
சொல்ல லாவ கேட்பவே
அனைத்து லகு மாய நின்னை
ஐம்பு லன்கள் காண்கிலா
எனைத்தெ னைத்த தெப்பு றத்த
தெந்தை பாத மெய்தவே. 76

81. எய்த லாவ தென்று நின்னை
எம்பி ரான்இவ் வஞ்சனேற்
குய்த லாவ துன்க ணன்றி
மற்றொ ருண்மை யின்மையின்
பைத லாவ தென்று பாது
காத்தி ரங்கு பாவியேற்
கீத லாது நின்க ணொன்றும்
வண்ண மில்லை யீசனே 77

---

75. உணங்கும் - இளைத்து நிற்கும்.
விடேங்கள் - விடமாட்டோம்.

76. எனைத்தது - எவ்வளவினது !
எப்புறத்தது - எவ்விடத்தது ?

77. பைதல் - துன்பம்



82. ஈச னேநீ அல்ல தில்லை
இங்கும் அங்கும் என்பதும்
பேசி னேனொர் பேத மின்மை
பேதை யேனென் எம்பிரான்
நீச னேனை ஆண்டு கொண்ட
நின்ம லாஓர் நின்னலால்
தேச னேஓர் தேவ ருண்மை
சிந்தி யாது சிந்தையே 78

83. சிந்தை செய்கை கேள்வி வாக்குச்
சீரில் ஐம்பு லன்களான்
முந்தை யான காலம் நின்னை
எய்தி டாத மூர்க்கனேன்
வெந்தை யாவி ழுந்தி லேனென்
உள்ளம் வெள்கி விண்டிலேன்
எந்தை யாய நின்னை இன்னம்
எய்த லுற்றி ருப்பனே. 79

84. இருப்பு நெஞ்ச வஞ்ச னேனை
ஆண்டு கொண்ட நின்னதாட்
கருப்பு மட்டு வாய்ம டுத்தெ
னைக்க லந்து போகவும்
நெருப்பு முண்டி யானு முண்டி
ருந்த துண்ட தாயினும்
விருப்பு முண்டு நின்கண் என்கண்
என்ப தென்ன விச்சையே. 80

திருச்சிற்றம்பலம்

---

79. முந்தை - முன்னை.

80. நின்னதாள் - உனது திருவடி.
விச்சை - வித்தை.

## ( க ) ஆனந்த பரவசம்

கலிநிலைத்துறை

திருச்சிற்றம்பலம்

85. விச்சுக் கேடுபொய்க் காகா
தென்றிங் கெனைவைத்தாய்
இச்சைக் கானா ரெல்லாரும்
வந்துன் தாள்சேர்ந்தார்
அச்சத் தாலே ஆழ்ந்திடு
கின்றேன் ஆரூர்எம்
பிச்சைத் தேவா என்னான்
செய்கேன் பேசாயே. 81

86. பேசப் பட்டேன் நின்னடி
யாரில் திருநீறே
பூசப் பட்டேன் பூதல
ரால்உன் அடியானென்
றேசப் பட்டேன் இனிப்படு
கின்ற தமையாதால்
ஆசைப் பட்டேன் ஆட்பட்
டேன்உன் அடியேனே. 82

87. அடியேன் அல்லேன் கொல்லோ தானெனை
ஆட்கொண்டிலை கொல்லோ
அடியா ரானா ரெல்லாரும்
வந்துன் தாள்சேர்ந்தார்
செடிசேர் உடலம் இதுநீக்க மாட்டேன்
எங்கள் சிவலோகா
கடியேன் உன்னைக் கண்ணாரக்
காணுமாறு காணேனே 83

81. விச்சுக்கேடு பொய்க்கு ஆகாது - பொய்மைக்கு விதைக் கேடு உண்டாதல் கூடாது.
பிச்சைத்தேவா - பிச்சாடன மூர்த்தி



88. காணு மாறு காணேன் உன்னை
அந்நாட் கண்டேனும்
பாணே பேசி என்றன்னைப்
படுத்த தென்ன பரஞ்சோதி
ஆணே பெண்ணே ஆரமுதே
அத்தா செத்தே போயினேன்
ஏணா ணில்லா நாயினேன்
என்கொண் டெழுகேன் எம்மானே 84

89. மானேர் நோக்கி யுமையாள் பங்கா
மறையீ றறியா மறையோனே
தேனே அமுதே சிந்தைக் கரியாய்
சிறியேன் பிழைபொறுக்குங்
கோனே சிறிதே கொடுமை பறைந்தேன்
சிவமா நகர்குறுகப்
போனா ரடியார் யானும் பொய்யும்
புறமே போந்தோமே. 85

90. புறமே போந்தோம் பொய்யும்
யானும் மெய்யன்பு
பெறவே வல்லேன் அல்லா
வண்ணம் பெற்றேன்யான்
அறவே நின்னைச் சேர்ந்த அடியார்
மற்றொன் றறியாதார்
சிறவே செய்து வழிவந்து சிவனே
நின்தாள் சேர்ந்தாரே. 86

84. பாணே பேசி - இன்சொல் அருளி.
ஏண் - ஆற்றல்.
நாண் - நாணம்.

85. கொடுமை பறைந்தேன் - கடுஞ்சொற் கூறினேன்.

86. சிறவே - சிறந்த செயல்கள்.

91. தாராய் உடையாய் அடியேற்
குன்தா ளிணையன்பு
பேரா உலகம் புக்கா ரடியார்
புறமே போந்தேன்யான்
ஊரா மிலைக்கக் குருட்டா மிலைத்திங்
குன்தா ளிணையன்புக்
காரா அடியேன் அயலே
மயல்கொண் டழுகேனே. 87

92. அழுகேன் நின்பால் அன்பாம்
மனமாய் அழல்சேர்ந்த
மெழுகே அன்னார் மின்னார்
பொன்னார் கழல்கண்டு
தொழுதே உன்னைத் தொடர்ந்தா
ரோடுந் தொடராதே
பழுதே பிறந்தேன் என்கொண்
டுன்னைப் பணிகேனே. 88

93. பணிவார் பிணிதீர்த் தருளிப்
பழைய அடியார்க்குன்
அணியார் பாதங் கொடுத்தி
அதுவும் அரிதென்றால்
திணியார் மூங்கி லனையேன்
வினையைப் பொடியாக்கித்
தணியார் பாதம் வந்தொல்லை
தாராய் பொய்தீர் மெய்யானே. 89

---

87. பேரா உலகம் - நீங்காச் சிவகதி.

89. திணியார் மூங்கில் - புறத்தே திண்மையும் அகத்தே வெறுமையு முடைய மூங்கில்.
தணியார் பாதம் - தண்ணளியுடைய திருவடி.



94. யானே பொய்என் நெஞ்சும்
பொய்என் அன்பும்பொய்
ஆனால் வினையேன் அழுதால்
உன்னைப் பெறலாமே
தேனே அமுதே கரும்பின்
தெளிவே தித்திக்கும்
மானே அருளாய் அடியேன்
உனைவந் துறுமாறே. 90

திருச்சிற்றம்பலம்

## (௧௦) ஆனந்தா தீதம்

எண்சீர் ஆசிரியவிருத்தம்

திருச்சிற்றம்பலம்

95. மாறி லாதமாக் கருணை வெள்ளமே
வந்து முந்திநின் மலர்கொள் தாளிணை
வேறி லாப்பதப் பரிசு பெற்றநின்
மெய்ம்மை அன்பர்உன் மெய்ம்மை மேவினார்
ஈறி லாதநீ எளியை யாகிவந்
தொளிசெய் மானுட மாக நோக்கியுங்
கீறி லாதநெஞ் சுடைய நாயினேன்
கடையன் ஆயினேன் பட்ட கீழ்மையே. 91

96. மையி லங்குநற் கண்ணி பங்கனே
வந்தெ னைப்பணி கொண்ட பின்மழக்
கையி லங்குபொற் கிண்ணம் என்றலால்
அரியை யென்றுனைக் கருது கின்றிலேன்
மெய்யி லங்குவெண் ணீற்று மேனியாய்
மெய்ம்மை அன்பர்உன் மெய்ம்மை மேவினார்
பொய்யி லங்கெனைப் புகுத விட்டுநீ
போவ தோசொலாய் பொருத்த மாவதே. 92

---

91. வேறுஇலாப் பதப் பரிசு - பிறிவற நிற்கும் சிவபதப்பேறு.

92. மழக்கை - குழந்தையின் கை, மழவு - குழந்தை.

97. பொருத்த மின்மையேன் பொய்ம்மை யுண்மையேன்
போத என்றெனைப் புரிந்து நோக்கவும்
வருத்த மின்மையேன் வஞ்ச முண்மையேன்
மாண்டி லேன்மலர்க் கமல பாதனே
அரத்த மேனியாய் அருள்செய் அன்பரும்
நீயும் அங்கெழுந் தருளி இங்கெனை
இருத்தி னாய்முறை யோவெ னெம்பிரான்
வம்ப னேன்வினைக் கிறுதி யில்லையே. 93

98. இல்லை நின்கழற் கன்ப தென்கணே
ஏலம் ஏலுநற் குழலி பங்கனே
கல்லை மென்கனி யாக்கும் விச்சைகொண்
டென்னை நின்கழற் கன்ப னாக்கினாய்
எல்லை யில்லைநின் கருணை யெம்பிரான்
ஏது கொண்டுநான் ஏது செய்யினும்
வல்லை யேயெனக் கின்னும் உன்கழல்
காட்டி மீட்கவும் மறுவில் வானனே. 94

99. வான நாடரும் அறியொ ணாதநீ
மறையின் ஈறுமுன் தொடரொ ணாதநீ
ஏனை நாடருந் தெரியொ ணாதநீ
என்னை இன்னிதாய் ஆண்டு கொண்டவா
ஊனை நாடகம் ஆடு வித்தவா
உருகி நானுனைப் பருக வைத்தவா
ஞான நாடகம் ஆடு வித்தவா
நைய வையகத் துடைய விச்சையே. 95

93. போத - வருக.
அரத்த மேனியாய் - செம்மேனியனே
94' ஏலம் - நறுமணம், மயிர்ச்சாந்து என்பர்.



100. விச்ச தின்றியே விளைவு செய்குவாய்
விண்ணும் மண்ணகம் முழுதும் யாவையும்
வைச்சு வாங்குவாய் வஞ்ச கப்பெரும்
புலைய னேனைஉன் கோயில் வாயிலிற்
பிச்ச னாக்கினாய் பெரிய அன்பருக்
குரிய னாக்கினாய் தாம்வ ளர்த்ததோர்
நச்சு மாமர மாயி னுங்கொலார்
நானும் அங்ஙனே உடைய நாதனே. 96

101. உடைய நாதனே போற்றி நின்னலால்
பற்று மற்றெனக் காவ தொன்றினி
உடைய னோபணி போற்றி உம்பரார்
தம்ப ராபரா போற்றி யாரினுங்
கடைய னாயினேன் போற்றி என்பெருங்
கருணை யாளனே போற்றி என்னைநின்
அடிய னாக்கினாய் போற்றி ஆதியும்
அந்த மாயினாய் போற்றி அப்பனே. 97

102. அப்ப னேயெனக் கமுத னேயா
னந்த னேஅகம் நெகஅள் ளூறுதேன்
ஒப்ப னேஉனக் குரிய அன்பரில்
உரிய னாய்உனைப் பருக நின்றதோர்
துப்ப னேசுடர் முடிய னேதுணை
யாள னேதொழும் பாள ரெய்ப்பினில்
வைப்ப னேஎனை வைப்ப தோசொலாய்
நைய வையகத் தெங்கள் மன்னனே. 98

96. விச்சு - வித்து
வைச்சு வாங்குவாய் - ஆக்கி அழிப்பாய்.
98. துப்பன் - போகநாயகன்.
எய்ப்பினில் வைப்பன் - சேமநந்நிதி போன்றவன்.

103. மன்ன எம்பிரான் வருக வென்னெனை
    மாலும் நான்முகத் தொருவன் யாரினும்
முன்ன எம்பிரான் வருக என்னெனை
    முழுதும் யாவையும் இறுதி யுற்றநாள்
பின்ன எம்பிரான் வருக என்னெனைப்
    பெய்க ழற்கணன் பாயென் நாவினுற்
பன்ன எம்பிரான் வருக என்னெனைப்
    பாவ நாசநின் சீர்கள் பாடவே. 99

104. பாட வேண்டும்நான் போற்றி நின்னையே
    பாடி நைந்துநைந் துருகி நெக்குநெக்
காட வேண்டும்நான் போற்றி அம்பலத்
    தாடு நின்கழற் போது நாயினேன்
கூட வேண்டும்நான் போற்றி இப்புழுக்
    கூடு நீக்கெனைப் போற்றி பொய்யெலாம்
வீட வேண்டும்நான் போற்றி வீடுதந்
    தருளு போற்றிநின் மெய்யர் மெய்யனே. 100

திருச்சிற்றம்பலம்

99. வருக என் எனை - என்னை வருக என்று அருளுவாய்.
பன்ன - பலகாலும் சொல்ல.



# 6. நீத்தல் விண்ணப்பம்

## பிரபஞ்ச வைராக்கியம்
## கட்டளைக் கலித்துறை

உத்தரகோச மங்கையில் அருளியது

திருச்சிற்றம்பலம்

105. கடையவ னேனைக் கருணையி னாற்கலந்
    தாண்டுகொண்ட
விடையவ னேவிட் டிடுதிகண் டாய்விறல்
    வேங்கையின்தோல்
உடையவ னேமன்னும் உத்தர கோசமங்
    கைக்கரசே
சடையவ னேதளர்ந் தேன்எம்பிரான் என்னைத்
    தாங்கிக்கொள்ளே. 1

106. கொள்ளேர் பிளவக லாத்தடங் கொங்கையர்
    கொவ்வைச் செவ்வாய்
விள்ளேன் எனினும் விடுதிகண் டாய்நின்
    விழுத்தொழும்பின்
உள்ளேன் புறமல்லேன் உத்தர கோசமங்
    கைக்கரசே
கள்ளேன் ஒழியவுங் கண்டுகொண் டாண்டதெக்
    காரணமே. 2

1. விட்டிடுதி கண்டாய் - விட்டுவிடாதே.
2. கொள் ஏர் (ஏர்கொள்) - அழகு வாய்ந்த.
விள்ளேன் - நீங்கேன்.
விழுத்தொழும்பு - திருத்தொண்டு.
கள்ளேன் - (மாதராசை ஒளிந்திருக்கும்) கள்ளச் சிந்தையேன்.

107. காருறு கண்ணியர் ஐம்புலன் ஆற்றங்
கரைமரமாய்
வேருறு வேனை விடுதிகண் டாய்விளங்
குந்திருவா
ரூருறை வாய்மன்னும் உத்தர கோசமங்
கைக்கரசே
வாருறு பூண்முலை யாள்பங்க என்னை
வளர்ப்பவனே. 3

108. வளர்கின்ற நின்கரு ணைக்கையில் வாங்கவும்
நீங்கியிப்பால்
மிளிர்கின்ற என்னை விடுதிகண் டாய்வெண்
மதிக்கொழுந்தொன்
றொளிர்கின்ற நீண்முடி உத்தர கோசமங்
கைக்கரசே
தெளிகின்ற பொன்னுமின் னும்மன்ன தோற்றச்
செழுஞ்சுடரே. 4

109. செழிகின்ற தீப்புகு விட்டிலிற் சின்மொழி
யாரிற்பன்னாள்
விழுகின்ற என்னை விடுதிகண் டாய்வெறி
வாயறுகால்
உழுகின்ற பூமுடி உத்தர கோசமங்
கைக்கரசே
வழிநின்று நின்னரு ளாரமு தூட்ட
மறுத்தனனே. 5

5. விட்டில் - விட்டிற்பூச்சி, அறுகால் - வண்டு.



110. மறுத்தனன் யான்உன் அருளறி யாமையின்
என்மணியே
வெறுத்தெனை நீவிட் டிடுதிகண் டாய்வினை
யின்தொகுதி
ஒறுத்தெனை ஆண்டுகொள் உத்தர கோசமங்
கைக்கரசே
பொறுப்ப ரன்றேபெரி யோர்சிறு நாய்கள்தம்
பொய்யினையே. 6

111. பொய்யவ னேனைப் பொருளென ஆண்டொன்று
பொத்திக்கொண்ட
மெய்யவ னேவிட் டிடுதிகண் டாய்விட
முண்மிடற்று
மையவ னேமன்னும் உத்தர கோசமங்
கைக்கரசே
செய்யவ னேசிவ னேசிறி யேன்பவந்
தீர்ப்பவனே. 7

112. தீர்க்கின்ற வாறென் பிழையைநின் சீரருள்
என்கொலென்று
வேர்க்கின்ற என்னை விடுதி கண்டாய்விர
வார்வெருவ
ஆர்க்கின்ற தார்விடை உத்தர கோசமங்
கைக்கரசே
ஈர்க்கின்ற அஞ்சொடச் சம்வினை யேனை
இருதலையே. 8

6. ஒறுத்து - கடிந்து ஒதுக்கி.
7. பொத்திக்கொண்ட - மறைத்துக் கொண்ட, பவம் - பிறவி
8. விரவார் - பகைவர், அஞ்சு - ஐம்புலன்

113. இருதலைக் கொள்ளியி னுள்ளெறும் பொத்து நினைப்பிரிந்த
விரிதலை யேனை விடுதிகண் டாய்வியன் மூவுலகுக்
கொருதலைவா மன்னும் உத்தர கோசமங் கைக்கரசே
பொருதலை மூவிலை வேல்வலன் ஏந்திப் பொலிபவனே. 9

114. பொலிகின்ற நின்தாள் புகுதப்பெற் றாக்கையைப் போக்கப்பெற்று
மெலிகின்ற என்னை விடுதிகண் டாயளி தேர்விளரி
ஒலிநின்ற பூம்பொழில் உத்தர கோசமங் கைக்கரசே
வலிநின்ற திண்சிலை யாலெரித் தாய்புரம் மாறுபட்டே 10

115. மாறுபட் டஞ்சென்னை வஞ்சிப்ப யான்உன் மணிமலர்த்தாள்
வேறுபட் டேனை விடுதிகண் டாய்வினை யேன்மனத்தே
ஊறுமட் டேமன்னும் உத்தர கோசமங் கைக்கரசே
நீறுபட் டேஒளி காட்டும்பொன் மேனி நெடுந்தகையே. 11

---

9. விரிதலை - விரிந்த தலைமயிர் (எங்கும் ஓடி இளைத்தலைக் குறித்தது.)

10. அளிதேர் விளரி - தேனை ஆராயும் வண்டின் விளரி இசை.

11. மட்டு - தேன்.



116. நெடுந்தகை நீயென்னை ஆட்கொள்ள யான்ஐம் புலன்கள்கொண்டு
விடுந்தகை யேனை விடுதிகண் டாய்விர வார்வெருவ
அடுந்தகை வேல்வல்ல உத்தர கோசமங் கைக்கரசே
கடுந்தகை யேன்உண்ணுந் தெண்ணீர் அமுதப் பெருங்கடலே. 12

117. கடலினுள் நாய்நக்கி யாங்குன் கருணைக் கடலினுள்ளம்
விடலரி யேனை விடுதிகண் டாய்விட லில்லடியார்
உடலில மேமன்னும் உத்தர கோசமங் கைக்கரசே
மடலின்மட் டேமணி யேஅமு தேயென் மதுவெள்ளமே 13

118. வெள்ளத்துள் நாவற் றியாங்குன் அருள்பெற்றுத் துன்பத்தினின்றும்
விள்ளக்கி லேனை விடுதிகண் டாய்விரும் பும்அடியார்
உள்ளத்துள் ளாய்மன்னும் உத்தர கோசமங் கைக்கரசே
கள்ளத்து ளேற்கரு ளாய் களியாத களியெனக்கே 14

---

12. அடும் - கொல்லும்

13. உடல் இலமே - உடலை இல்லமாகக் கொண்டவனே.

14. விள்ளக்கிலேனை - விட்டு விலகி நிற்கும் வலியற்ற என்னை, களியாத களி - இதுவரை களித்திராத ஆனந்தக் களிப்பு.

119. களிவந்த சிந்தையொ டுன்கழல் கண்டுங்
கலந்தருள
வெளிவந்தி லேனை விடுதிகண் டாய்மெய்ச்
சுடருக்கெல்லாம்
ஒளிவந்த பூங்கழல் உத்தர கோசமங்
கைக்கரசே
எளிவந்த எந்தைபி ரானென்னை ஆளுடை
என்னப்பனே 15

120. என்னைஅப் பாஅஞ்சல் என்பவர் இன்றிநின்
றெய்த்தலைந்தேன்
மின்னையொப் பாய்விட் டிடுதிகண் டாய்உவ
மிக்கின்மெய்யே
உன்னையொப் பாய்மன்னும் உத்தர கோசமங்
கைக்கரசே
அன்னையொப் பாய்எனக் கத்தன்ஒப் பாய்என்
அரும்பொருளே. 16

121. பொருளே தமியேன் புகலிட மேநின்
புகழ்இகழ்வார்
வெருளே எனைவிட் டிடுதிகண்டாய் மெய்ம்மை
யார்விழுங்கும்
அருளே அணிபொழில் உத்தர கோசமங்
கைக்கரசே
இருளே வெளியே இகபர மாகி
யிருந்தவனே. 17



122. இருந்தென்னை ஆண்டுகொள் விற்றுக்கொள் ஒற்றிவை
என்னினல்லால்
விருந்தின னேனை விடுதிகண் டாய்மிக்க
நஞ்சமுதா
அருந்தின னேமன்னும் உத்தர கோசமங்
கைக்கரசே
மருந்தின னேபிற விப்பிணிப் பட்டு
மடங்கினர்க்கே. 18

123. மடங்களன் வல்வினைக் காட்டைநின் மன்னருள்
தீக்கொளுவும்
விடங்க என்றன்னை விடுதிகண் டாயென்
பிறவியைவே
ரொடுங்களைந் தாண்டுகொள் உத்தர கோசமங்
கைக்கரசே
கொடுங்கரிக் குன்றுரித் தஞ்சுவித் தாய்வஞ்சிக்
கொம்பினையே. 19

124. கொம்பரில் லாக்கொடி போலல மந்தனன்
கோமளமே
வெம்புகின் றேனை விடுதிகண் டாய்விண்ணர்
நண்ணுகில்லா
உம்பருள் ளாய்மன்னும் உத்தர கோசமங்
கைக்கரசே
அம்பர மேநில னேஅனல் காலொடப்
பானவனே. 20

---

18. மடங்கினர் - (விண்போல் விரிவினை மறந்து) குறுகிப் போனவர்.

19. விடங்க - ஆண்மையனே! அழகனுமாம்.

20. அலமந்தனன் - சுழன்றேன். அம்பரம் - விண். அப்பு - நீர்

125. ஆனைவெம் போரிற் குறுந்தூ றெனப்புல
னால்அலைப்புண்
டேனையெந் தாய்விட் டிடுதிகண் டாய்வினை
யேன்மனத்துத்
தேனையும் பாலையுங் கன்னலை யும்அமு
தத்தையும்ஒத்
தூனையும் என்பினை யும்உருக் காநின்ற
ஒண்மையனே. 21

126. ஒண்மைய னேதிரு நீற்றைஉத் தூளித்
தொளிமிளிரும்
வெண்மைய னேவிட் டிடுதிகண் டாய்மெய்
யடியவர்கட்
கண்மைய னேஎன்றுஞ் சேயாய் பிறர்க்கறி
தற்கரிதாம்
பெண்மைய னேதொன்மை ஆண்மைய னேஅலிப்
பெற்றியனே. 22

127. பெற்றது கொண்டு பிழையே பெருக்கிச்
சுருக்குமன்பின்
வெற்றடி யேனை விடுதிகண் டாய்விடி
லோகெடுவேன்
மற்றடி யேன்றன்னைத் தாங்குநர் இல்லைஎன்
வாழ்முதலே
உற்றடி யேன்மிகத் தேறிநின் றேன்எனக்
குள்ளவனே. 23

21. குறுந்தூறு - சிறுபுதர். ஒண்மையன் - ஒளிவண்ணன்.



128. உள்ளன வேநிற்க இல்லன செய்யும்மை
யற்றுழனி
வெள்ளன லேனை விடுதிகண் டாய்வியன்
மாத்தடக்கைப்
பொள்ளனல் வேழத் துரியாய் புலன்நின்கட்
போதலொட்டா
மெள்ளென வேமொய்க்கும் நெய்க்குடந் தன்னை
எறும்பெனவே. 24

129. எறும்பிடை நாங்கூ ழெனப்புல னால்அரிப்
புண்டலந்த
வெறுந்தமி யேனை விடுதிகண் டாய்வெய்ய
கூற்றொடுங்க
உறுங்கடிப் போதவை யேஉணர் வுற்றவர்
உம்பரும்பர்
பெறும்பத மேஅடி யார்பெய ராத
பெருமையனே. 25

130. பெருநீ ரறச்சிறு மீன்துவண் டாங்கு
நினைப்பிரிந்து
வெருநீர்மை யேனை விடுதிகண் டாய்வியன்
கங்கைபொங்கி
வருநீர் மடுவுள் மலைச்சிறு தோணி
வடிவின்வெள்ளைக்
குருநீர் மதிபொதி யுஞ்சடை வானக்
கொழுமணியே. 26

24. துழனி - ஆரவாரம்.
வெள்ளன் அலேன் - கள்வன். அல்லேன் என்பது இடை குறைந்து அலேன் என நின்றது. பொள்ளல் தடக்கைவேழம் என்று கூட்டுக.

25. நாங்கூழ் - நாகப்பூச்சி. மண்புழுவுமாம். கடிப்போது - காக்கும் திருவடிமலர்.

26. வெருநீர்மை - அஞ்சும் இயல்பு.
வெள்ளைக்குருநீர்மதி - வெண்ணிறமுடைய பிறைச் சந்திரன். நீர் - நீர்மை (தன்மை)

131. கொழுமணி யேர்நகை யார்கொங்கைக் குன்றிடைச்
சென்றுகுன்றி
விழுமடி யேனை விடுதிகண் டாய்மெய்ம்
முழுதுங்கம்பித்
தழுமடி யாரிடை ஆர்த்துவைத் தாட்கொண்
டருளிஎன்னைக்
கழுமணியே இன்னுங் காட்டுகண் டாய்நின்
புலன்கழலே. 27

132. புலன்கள் திகைப்பிக்க யானுந் திகைத்திங்கொர்
பொய்ந்நெறிக்கே
விலங்குகின் றேனை விடுதிகண் டாய்விண்ணும்
மண்ணுமெல்லாங்
கலங்கமுந் நீர்நஞ் சமுதுசெய் தாய்கரு
ணாகரனே
துலங்குகின் றேன்அடி யேன்உடை யாய்என்
தொழுகுலமே. 28

133. குலங்களைந் தாய்களைந் தாய்என்னைக் குற்றங்கொற்
றச்சிலையாம்
விலங்கல்எந் தாய்விட் டிடுதிகண் டாய்பொன்னின்
மின்னுகொன்றை
அலங்கலந் தாமரை மேனிஅப் பாஒப்
பிலாதவனே
மலங்களைந் தாற்சுழல் வன்தயி ரிற்பொரு
மத்துறவே. 29

---

27. கழுமணியே - பாசத்தைக் கழுவும் மணியே.
புலன்கழல் - ஞானத்திருவுருவான திருவடி,
புலம் - அறிவு. புலன் புலம் என்பதன் போலி.

28. விலங்குகின்றேனை - விலகிச் செல்கின்ற என்னை.
துலங்குகின்றேன் - நடுங்குகின்றேன். அன்றி அறிவு
விளங்கப்பெறுகின்றேன் என்று பொருள் கொள்வதும்
உண்டு.

29. அலங்கல் - மாலை, விலங்கல் - மலை, மலங்கள் ஐந்து -
ஆணவம், கன்மம், மாயை, (மாயேயம்) வைந்தவம்,
திரோதாயி.



134. மத்துறு தண்தயி ரிற்புலன் தீக்கது
வக்கலங்கி
வித்துறு வேனை விடுதிகண் டாய்வெண்
டலைமிலைச்சிக்
கொத்துறு போது மிலைந்து குடர்நெடு
மாலைசுற்றித்
தத்துறு நீறுடன் ஆரச்செஞ் சாந்தணி
சச்சையனே. 30

135. சச்சைய னேமிக்க தண்புனல் விண்கால்
நிலம்நெருப்பாம்
விச்சைய னேவிட் டிடுதிகண் டாய்வெளி
யாய்கரியாய்
பச்சைய னேசெய்ய மேனிய னேயொண்
படஅரவக்
கச்சைய னேகடந் தாய்தடந் தாள
அடற்கரியே. 31

136. அடற்கரி போல்ஐம் புலன்களுக் கஞ்சி
அழிந்தஎன்னை
விடற்கரி யாய்விட் டிடுதிகண் டாய்விழுத்
தொண்டர்க்கல்லால்
தொடற்கரி யாய்சுடர் மாமணி யேசுடு
தீச்சுழலக்
கடற்கரி தாயஎழு நஞ்சமு தாக்குங்
கறைக்கண்டனே. 32

---

30. வித்து - (விதுப்பு) நடுக்கம். மிலைச்சி - அணிந்து.
தத்துறு - பரந்திருக்கின்ற. சச்சையன் - செச்சயன்
என்பதன் திரிபு. செச்சை - வெட்சிப்பூ. சச்சம் என்
பதற்கு உண்மை மெய் என்னும் பொருள்களும் உண்டு.

137. கண்டது செய்து கருணைமட் டுப்பரு
கிக்களித்து
மிண்டுகின் றேனை விடுதிகண் டாய்நின்
விரைமலர்த்தாள்
பண்டுதந் தாற்போற் பணித்துப் பணிசெயக்
கூவித்தென்னைக்
கொண்டென்எந் தாய்களை யாய்களை யாய
குதுகுதுப்பே. 33

138. குதுகுதுப் பின்றிநின் றென்குறிப் பேசெய்து
நின்குறிப்பில்
விதுவிதுப் பேனை விடுதிகண் டாய்விரை
யார்ந்தினிய
மதுமதுப் போன்றென்னை வாழைப் பழத்தின்
மனங்கனிவித்
தெதிர்வதெப் போது பயில்விக் கயிலைப
பரம்பரனே. 34

139. பரம்பர னேநின் பழஅடி யாரொடும்
என்படிறு
விரும்பர னேவிட் டிடுதிகண் டாய்மென்
முயற்கறையின்
அரும்பர நேர்வைத் தணிந்தாய் பிறவி
ஐவாயரவம்
பொரும்பெ ருமான்வினை யேன்மனம் அஞ்சிப்
பொதும்புறவே. 35

33. மிண்டுகின்றேனை - (கல்நெஞ்சினனாய்த்) திண்மையுறு வேனை. குதுகுதுப்பு - பரபரப்பு.
34. விதுவிதுப்பு - நடுக்கம். பயில்வி - மிக்க தூய்மை பயில்
35. படிறு - வஞ்சனை.
மென் முயற்கறையின் அரும்பு - மெல்லிய முயல் போலும் களங்கத்தையுடைய இளம்பிறை.
அர - அரவு - பாம்பு.
பொதும்பு - காடு, மரங்கள் அடர்ந்து வளர்ந்த இடம்.



140. பொதும்புறு தீப்போற் புகைந்தெரி யப்புலன்
தீக்கதுவ
வெதும்புறு வேனை விடுதிகண் டாய்விரை
யார்நறவந்
ததும்புமந் தாரத்தில் தாரம் பயின்றுமந்
தம்முரல்வண்
டதும்புங் கொழுந்தேன் அவிர்சடை வானத்
தடலரைசே. 36

141. அரைசே அறியாச்சிறுவன் பிழைக்கஞ்ச
லென்னினல்லால்
விரைசேர் முடியாய் விடுதிகண் டாய்வெண்
நகைக்கருங்கண்
திரைசேர் மடந்தை மணந்த திருப்பொற்
பதப்புயங்கா
வரைசேர்ந் தடர்ந்தென்ன வல்வினை தான்வந்
தடர்வனவே. 37

145. அடர்புல னால்நிற் பிரிந்தஞ்சி அஞ்சொல்நல்
லாரவர்தம்
விடர்விட லேனை விடுதிகண் டாய்விரிந்
தேயெரியுஞ்
சுடரனை யாய்சுடு காட்டர சேதொழும்
பர்க்கமுதே
தொடர்வரி யாய்தமி யேன்தனி நீக்குந்
தனித்துணையே. 38

36. தாரம் - வல்லோசை. மந்தம் - மெல்லோசை.
அதும்பும் - அழுந்தும்.
38. விடர் - காடு, பிளவு - இங்கு மாதராசை ஆகும்.

143. தனித்துணை நீநிற்க யான்தருக் கித்தலை
யால்நடந்த
வினைத்துணை யேனை விடுதிகண் டாய்வினை
யேனுடைய
மனத்துணை யேஎன் றன்வாழ்முத லேஎனக்
கெய்ப்பில்வைப்பே
தினைத்துணை யேனும் பொறேன்துய ராக்கையின்
திண்வலையே 39

144. வலைத்தலை மானன்ன நோக்கியர் நோக்கின்
வலையிற்பட்டு
மிலைத்தலைந் தேனை விடுதிகண் டாய்வெண்
மதியின்ஒற்றைக்
கலைத்தலை யாய்கரு ணாகர னேகயி
லாயமென்னும்
மலைத்தலை வாமலை யாள்மண வாளஎன்
வாழ்முதலே. 40

145. முதலைச்செவ் வாய்ச்சியர் வேட்கைவெந் நீரிற்
கடிப்பமூழ்கி
விதலைச்செய் வேனை விடுதிகண் டாய்விடக்
கூன்மிடைந்த
சிதலைச்செய் காயம் பொறேன்சிவ னேமுறை
யோமுறையோ
திதலைச்செய் பூண்முலை மங்கைபங் காஎன்
சிவகதியே. 41

---

39. எய்ப்பில் வைப்பு - சேமநந்நிதி.

40. மிலைத்து - மயங்கி.

41. கடிப்ப - கௌவ. விதலை - துன்பம். விடக்குஊன் - புலால் நாற்றமுடைய தசை. சிதலை, நோய். திதலை - தேமல்.



146. கதியடி யேற்குன் கழல்தந் தருளவும்
ஊன்கழியா
விதியடி யேனை விடுதிகண் டாய்வெண்
டலைமுழையிற்
பதியுடை வாளரப் பார்த்திறை பைத்துச்
சுருங்கஅஞ்சி
மதிநெடு நீரிற் குளித்தொளிக் குஞ்சடை
மன்னவனே, 42

147. மன்னவ னேஒன்று மாறறி யாச்சிறி
யேன்மகிழ்ச்சி
மின்னவ னேவிட் டிடுதிகண் டாய்மிக்க
வேதமெய்ந்நூல்
சொன்னவ னேசொற் கழிந்தவ னேகழி
யாத்தொழும்பர்
முன்னவ னேபின்னும் ஆனவ னேஇம்
முழுதையுமே. 43

148. முழுதயில் வேற்கண் ணியரெனும் மூரித்
தழல்முழுகும்
விழுதனை யேனை விடுதிகண் டாய்நின்
வெறிமலர்த்தாள்
தொழுதுசெல் வான்நற் றொழும்பரிற் கூட்டிடு
சோத்தெம்பிரான்
பழுதுசெய் வேனை விடேல்உடை யாய்உன்னைப்
பாடுவனே. 44

---

42- வெண்தலை முழையிற் பதியுடை வாள் அரவு - வெண் தலையாகிய குகையினை இருப்பிடமாகவுடைய ஒளி பொருந் தியபாம்பு.

44. மூரித்தழல் - கொடிய நெருப்பு. விழுது - வெண்ணெய் சோத்தம் - தாழ்ந்தோர் செய்யும் வணக்கம்

149: பாடிற்றி லேன்பணி யேன்மணி நீஒளித்
தாய்க்குப்பச்சூன்
வீடிற்றி லேனை விடுதிகண் டாய்வியந்
தாங்கலறித்
தேடிற்றி லேன்சிவன் எவ்விடத் தான்எவர்
கண்டனர்என்
றோடிற்றி லேன்கிடந் துள்ளுரு கேன்நின்
றுழைத்தனனே. 45

150. உழைதரு நோக்கியர் கொங்கைப் பலாப்பழத்
தீயினொப்பாய்
விழைதரு வேனைவிடுதிகண் டாய்விடின்
வேலைநஞ்சுண்
மழைதரு கண்டன் குணமிலி மானிடன்
தேய்மதியன்
பழைதரு மாபரன் என்றென் றறைவன்
பழிப்பினையே 46

151. பழிப்பில்நின் பாதப் பழந்தொழும் பெய்தி
விழப்பழித்து
விழித்திருந் தேனை விடுதிகண் டாய்வெண்
மணிப்பணிலங்
கொழித்துமந் தாரம்மந் தாகினி நுந்தும்பந்
தப்பெருமை
தழிச்சிறை நீரிற் பிறைக்கலஞ் சேர்தரு
தாரவனே. 47

---

45. பச்சூன் - பசிய ஊனுடல்.
உழைத்தனன் - வருந்தினன்.
46. பழைதரு மாபரன் - பழம் பெரும் ஆண்டி.
வேலைநஞ்சுண்......... மாபரன் எனுந்தொடர்கள் பழிப்பதும் புகழ்வதும் ஆகிய இருபொருள்கள் கொள்ளவும் அமைந்துள்ளன,
47. வெண்மணி - முத்து. பணிலம் - சங்கு.
மந்தாகினி - கங்கை.



152. தாரகை போலுந் தலைத்தலை மாலைத்
தழலரப்பூண்
வீரஎன் றன்னை விடுதிகண் டாய்விடில்
என்னைமிக்கார்
ஆரடி யான்என்னின் உத்தர கோசமங்
கைக்கரசின்
சீரடி யாரடி யான்என்று நின்னைச்
சிரிப்பிப்பனே. 48

153. சிரிப்பிப்பன் சீறும் பிழைப்பைத் தொழும்பையும்
ஈசற்கென்று
விரிப்பிப்பன் என்னை விடுதிகண் டாய்விடின்
வெங்கரியின்
உரிப்பிச்சன் தோலுடைப் பிச்சன்நஞ் சூண்பிச்சன்
ஊர்ச்சுடுகாட்
டெரிப்பிச்சன் என்னையும் ஆளுடைப்பிச் சன்என்
றேசுவனே.

154. ஏசினும் யான்உன்னை ஏத்தினும் என்பிழைக்
கேகுழைந்து
வேசறு வேனை விடுதிகண் டாய்செம்
பவளவெற்பின்
தேசுடை யாய்என்னை ஆளுடை யாய்சிற்
றுயிர்க்கிரங்கிக்
காய்சின ஆலமுண் டாய்அமு துண்ணக்
கடையவனே.

திருச்சிற்றம்பலம்

---

50. வேசறுதல் - துயருறல்.

# திருவெம்பாவை

(சத்தியை வியந்தது)

## திருவண்ணாமலையில் அருளியது

### வெண்டளையான் வந்த எட்டடித்தரவுக் கொச்சகக் கலிப்பா

திருச்சிற்றம்பலம்

**155.**

ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ்
சோதியை யாம்பாடக் கேட்டேயும் வாட்டடங்கண்
மாதே வளருதியோ வன்செவியோ நின்செவிதான்
மாதேவன் வார்கழல்கள் வாழ்த்தியவாழ்த் தொலிபோய்
வீதிவாய்க் கேட்டலுமே விம்மிவிம்மி மெய்ம்மறந்து
போதா ரமளியின்மேல் நின்றும் புரண்டிங்ஙன்
ஏதேனு மாகாள் கிடந்தாளென் னேயென்னே
ஈதே எந்தோழி பரிசேலோ ரெம்பாவாய். 1

**156.**

பாசம் பரஞ்சோதிக் கென்பாய் இராப்பகல்நாம்
பேசும்போ தெப்போதிப் போதா ரமளிக்கே
நேசமும் வைத்தனையோ நேரிழையாய் நேரிழையீர்
சீசி யிவையுஞ் சிலவோ விளையாடி
ஏசு மிடமீதோ விண்ணோர்க ளேத்துதற்குக்
கூசு மலர்ப்பாதந் தந்தருள வந்தருளுந்
தேசன் சிவலோகன் தில்லைச்சிற் றம்பலத்துள்
ஈசனார்க் கன்பார்யாம் ஆரேலோ ரெம்பாவாய். 2

1. போதுஆர் அமளி - மலர்கள் நிறைந்த படுக்கை. ஏல் ஓர் - அசைநிலைகள். எம்பாவாய் - எமது அம்மையே! (பாவை நோன்புக்குரிய திருவுருவை விளித்தது)
2. கூசும் - நாணும்.



**157.**

முத்தன்ன வெண்ணகையாய் முன்வந் தெதிரெழுந்தென்
அத்தனா னந்தன் அமுதனென் றள்ளூறித்
தித்திக்கப் பேசுவாய் வந்துன் கடைதிறவாய்
பத்துடையீர் ஈசன்பழ வடியீர் பாங்குடையீர்
புத்தடியோம் புன்மைதீர்த் தாட்கொண்டாற் பொல்லாதோ
எத்தோநின் அன்புடைமை எல்லோம் அறியோமோ
சித்தம் அழகியார் பாடாரோ நஞ்சிவனை
இத்தனையும் வேண்டும் எமக்கேலோ ரெம்பாவாய். 3

**158.**

ஒண்ணித் திலநகையாய் இன்னம் புலர்ந்தின்றோ
வண்ணக் கிளிமொழியார் எல்லாரும் வந்தாரோ
எண்ணிக்கொ டுள்ளவா சொல்லுகோம் அவ்வளவும்
கண்ணைத் துயின்றவமே காலத்தைப் போக்காதே
விண்ணுக் கொருமருந்தை வேத விழுப்பொருளைக்
கண்ணுக் கினியானைப் பாடிக் கசிந்துள்ளம்
உண்ணெக்கு நின்றுருக யாம்மாட்டோம் நீயேவந்
தெண்ணிக் குறையில் துயிலேலோ ரெம்பாவாய். 4

**159.**

மாலறியா நான்முகனுங் காணா மலையினைநாம்
போலறிவோம் என்றுள்ள பொக்கங்க ளேபேசும்
பாலூறு தேன்வாய்ப் படிறீ கடைதிறவாய்
ஞாலமே விண்ணே பிறவே அறிவரியான்
கோலமும் நம்மைஆட் கொண்டருளிக் கோதாட்டுஞ்
சீலமும் பாடிச் சிவனே சிவனேயென்
றோலம் இடினும் உணராய் உணராய்காண்
ஏலக் குழலி பரிசேலோ ரெம்பாவாய் 5

3. அள்ளூறி - வாயூறி. பத்து - பத்தி, அடியவர்க்குரிய பத்துச் செய்கைகள். எத்தோ? - வஞ்சனையோ?
4. விண்ணுக்கு ஒரு மருந்து - தேவர்களுக்கு ஒப்பற்ற அமுதம்
5. மலையினை - சோதி வடிவாய் நின்ற அண்ணாமலையானை பொக்கங்கள் - பொய்கள். படிறீ - வஞ்சகி கோதாட்டும் - சீராட்டும்' ஏலக்குழலி - மயிர்ச்சாந்து அணிந்த கூந்தலையுடையாய்.

**160.**

மானேநீ நென்னலை நாளைவந் துங்களை
நானே யெழுப்புவன் என்றலும் நாணாமே
போன திசைபகராய் இன்னம் புலர்ந்தின்றோ
வானே நிலனே பிறவே அறிவரியான்
தானேவந் தெம்மைத் தலையளித்தாட் கொண்டருளும்
வான்வார் கழல்பாடி வந்தோர்க்குன் வாய்திறவாய்
ஊனே உருகாய் உனக்கே உறுமெமக்கும்
ஏனோர்க்குந் தங்கோனைப் பாடேலோ ரெம்பாவாய் 6

**161.**

அன்னே இவையுஞ் சிலவோ பலவமரர்
உன்னற்கரியான் ஒருவன் இருஞ்சீரான்
சின்னங்கள் கேட்பச் சிவனென்றே வாய்திறப்பாய்
தென்னாவென் னாமுன்னம் தீசேர் மெழுகொப்பாய்
என்னானை என்னரையன் இன்னமுதென் றெல்லோமும்
சொன்னோங்கேள் வெவ்வேறாய் இன்னந் துயிலுதியோ
வன்னெஞ்சப் பேதையர்போல் வாளா கிடத்தியால்
என்னே துயிலின் பரிசேலோ ரெம்பாவாய் 7

---

6. நென்னல் - நேற்று. தலையளித்து - மேலான கருணை செய்து. வான் - பெருமை.

7. அன்னே - இளமகளிரை அழைக்கும் அன்பு மொழி. உன்னற்கரியான் - சிந்தனைக்கரிய சிவன் தென்னா - சிவனே! என்னானை - என்+ஆன்+ஐ என்னுயிர்த் தலைவன். வாளா - வீணாக.



**162.**

கோழி சிலம்பச் சிலம்புங் குருகெங்கும்
ஏழில் இயம்ப இயம்பும்வெண் சங்கெங்கும்
கேழில் பரஞ்சோதி கேழில் பரங்கருணை
கேழில் விழுப்பொருள்கள் பாடினோம் கேட்டிலையோ
வாழியீ தென்ன உறக்கமோ வாய்திறவாய்
ஆழியான் அன்புடைமை ஆமாறும் இவ்வாறோ
ஊழி முதல்வனாய் நின்ற ஒருவனை
ஏழைபங் காளனையே பாடேலோ ரெம்பாவாய். 8

**163.**

முன்னைப் பழம்பொருட்கும் முன்னைப் பழம்பொருளே
பின்னைப் புதுமைக்கும் பேர்த்துமப் பெற்றியனே
உன்னைப் பிரானாகப் பெற்றவுன் சீரடியோம்
உன்னடியார் தாள்பணிவோம் ஆங்கவர்க்கே பாங்காவோம்
அன்னவரே எங்கணவ ராவார் அவருகந்து
சொன்ன பரிசே தொழும்பாய்ப் பணிசெய்வோம்
இன்ன வகையே எமக்கெங்கோன் நல்குதியேல்
என்ன குறையும் இலோமேலோ ரெம்பாவாய். 9

**164.**

பாதாளம் ஏழினுங்கீழ் சொற்கழிவு பாதமலர்
போதார் புனைமுடியும் எல்லாப் பொருள்முடிவே
பேதை ஒருபால் திருமேனி ஒன்றல்லன்
வேதமுதல் விண்ணோரும் மண்ணும் துதித்தாலும்
ஓத உலவா ஒருதோழன் தொண்டருளன்
கோதில் குலத்தரன்றன் கோயிற் பிணாப்பிள்ளைகாள்
ஏதவன்ஊர் ஏதவன்பேர் ஆருற்றார் ஆரயலார்
ஏதவனைப் பாடும் பரிசேலோ ரெம்பாவாய். 10

---

8. குருகு - பறவை. ஏழில் - ஓர் இசைக்கருவி கேழில் - ஒப்பற்ற. ஆழியான் - அருட்கடலாகிய சிவன்.

9. பாங்கு - உரிமை. கணவர் - தலைவர்.

10. சொற்கழிவு - சொல்லிறந்தது. பிணாப்பிள்ளை - பெண் பிள்ளை.

**165.**

மொய்யார் தடம்பொய்கை புக்கு முகேரென்னக்
கையாற் குடைந்து குடைந்துன் கழல்பாடி
ஐயா வழியடியோம் வாழ்ந்தோங்காண் ஆரழல்போற்
செய்யாவெண் ணீறாடி செல்வா சிறுமருங்குல்
மையார் தடங்கண் மடந்தை மணவாளா
ஐயாநீ ஆட்கொண் டருளும் விளையாட்டின்
உய்வார்கள் உய்யும் வகையெல்லாம் உய்ந்தொழிந்தோம்
எய்யாமற் காப்பாய் எமையேலோ ரெம்பாவாய். 11

**166.**

ஆர்த்த பிறவித் துயர்கெடநாம் ஆர்த்தாடுந்
தீர்த்தனற் றில்லைச்சிற் றம்பலத்தே தீயாடும்
கூத்தனிவ் வானும் குவலயமும் எல்லோமும்
காத்தும் படைத்தும் கரந்தும் விளையாடி
வார்த்தையும் பேசி வளைசிலம்ப வார்கலைகள்
ஆர்ப்பரவஞ் செய்ய அணிகுழல்மேல் வண்டார்ப்பப்
பூத்திகழும் பொய்கை குடைந்துடையான் பொற்பாதம்
ஏத்தி இருஞ்சுனைநீ ராடேலோ ரெம்பாவாய். 12

**167.**

பைங்குவளைக் கார்மலரால் செங்கமலப் பைம்போதால்
அங்கங் குருகினத்தால் பின்னும் அரவத்தால்
தங்கள் மலங்கழுவு வார்வந்து சார்தலினால்
எங்கள் பிராட்டியும் எங்கோனும் போன்றிசைந்த
பொங்கு மடுவிற் புகப்பாய்ந்து பாய்ந்துநம்
சங்கஞ் சிலம்பச் சிலம்பு கலந்தார்ப்பக்
கொங்கைகள் பொங்கக் குடையும் புனல்பொங்கப்
பங்கயப் பூம்புனல்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய். 13

---

11. மொய் - பூக்கள் செறிந்த. முகேர் - முகேர் எனும் ஒலி எய்யாமல் - தளர்ந்துபோகாமல்.
12. ஆர்த்த - பந்தித்துள்ள. ஆர்த்து - ஆரவாரித்து. தீர்த்தன் - ஏதும் ஒன்றற நிற்பவன், பரிசுத்தன். வார்த்தை - திருவருட்செயல்கள்.
13. சங்கம் - சங்குவளையல்.



**168.**

காதார் குழையாடப் பைம்பூண் கலனாடக்
கோதை குழலாட வண்டின் குழாமாடச்
சீதப் புனலாடிச் சிற்றம் பலம்பாடி
வேதப் பொருள்பாடி அப்பொருளா மாபாடிச்
சோதி திறம்பாடிச் சூழ்கொன்றைத் தார்பாடி
ஆதி திறம்பாடி அந்தமா மாபாடிப்
பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளைதன்
பாதத் திறம்பாடி ஆடேலோ ரெம்பாவாய். 14

**169.**

ஓரொருகால் எம்பெருமான் என்றென்றே நம்பெருமான்
சீரொருகால் வாயோவாள் சித்தங் களிகூர
நீரொருகால் ஓவா நெடுந்தாரை கண்பனிப்பப்
பாரொருகால் வந்தனையாள் விண்ணோரைத் தான்பணியாள்
பேரரையற் கிங்ஙனே பித்தொருவர் ஆமாறும்
ஆரொருவர் இவ்வண்ணம் ஆட்கொள்ளும் வித்தகர்தாள்
வாருருவப் பூண்முலையீர் வாயார நாம்பாடி
ஏருருவப் பூம்புனல்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய். 15

**170.**

முன்னிக் கடலைச் சுருக்கி யெழுந்துடையாள்
என்னத் திகழ்ந்தெம்மை ஆளுடையாள் இட்டிடையின்
மின்னிப் பொலிந்தெம் பிராட்டி திருவடிமேற்
பொன்னஞ் சிலம்பிற் சிலம்பித் திருப்புருவம்
என்னச் சிலைகுலவி நந்தம்மை ஆளுடையாள்
தன்னிற் பிரிவிலா எங்கோமான் அன்பர்க்கு
முன்னி அவணமக்கு முன்சுரக்கும் இன்னருளே
என்னப் பொழியாய் மழையேலோ ரெம்பாவாய். 16

---

14. பேதித்து - (பித்த உலகினின்றும்) வேறாக்கி.
15. ஓர்ஒருகால் - அடிக்கடி. ஒருகால் வாய் ஓவாள் - (சிறுபொழுதேனும்) ஒருபோதும் வாயோயாது பரவுவாள். பார் ஒருகால் வந்தனையாள் - ஒருபொழுது நிலத்தில் வீழ்ந்து வந்தனை செய்வாள். ஏர் - அழகு.
16. முன்னிக்கடலைச் சுருக்கி ; முன்+இ + கடலை + சுருக்கி என்று பிரிக்குக. முன் - முதற்கண் இ - இந்த

**171.**

செங்க ணவன்பால் திசைமுகன்பால் தேவர்கள்பால்
எங்கும் இலாததோர் இன்பம்நம் பாலதாக்
கொங்குண் கருங்குழலி நந்தம்மைக் கோதாட்டி
இங்குநம் இல்லங்கள் தோறும் எழுந்தருளிச்
செங்கமலப் பொற்பாதந் தந்தருளுஞ் சேவகனை
அங்கண் அரசை அடியோங்கட் காரமுதை
நங்கள் பெருமானைப் பாடி நலந்திகழப்
பங்கயப் பூம்புனல்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய். 17

**172.**

அண்ணா மலையான் அடிக்கமலஞ் சென்றிறைஞ்சும்
விண்ணோர் முடியின் மணித்தொகைவீ றற்றாற்போல்
கண்ணார் இரவி கதிர்வந்து கார்கரப்பத்
தண்ணார் ஒளிமழுங்கித் தாரகைகள் தாமகலப்
பெண்ணாகி ஆணாய் அலியாய்ப் பிறங்கொளிசேர்
விண்ணாகி மண்ணாகி இத்தனையும் வேறாகிக்
கண்ணா ரமுதமுமாய் நின்றான் கழல்பாடிப்
பெண்ணேயிப் பூம்புனல்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய். 18

**173.**

உங்கையிற் பிள்ளை உனக்கே அடைக்கலமென்
றங்கப் பழஞ்சொற் புதுக்குமெம் அச்சத்தால்
எங்கள் பெருமான் உனக்கொன் றுரைப்போங்கேள்
எங்கொங்கை நின்னன்ப ரல்லார்தோள் சேரற்க
எங்கை உனக்கல்லா தெப்பணியுஞ் செய்யற்க
கங்குல் பகலெங்கண் மற்றொன்றுங் காணற்க
இங்கிப் பரிசே எமக்கெங்கோன் நல்குதியேல்
எங்கெழிலென் ஞாயி றெமக்கேலோ ரெம்பாவாய். 19

---

17. கொங்கு - வாசனை. இல்லம் - இதய கமலமாகிய இல்லம்
18. கண் ஆர் இரவி - கண்ணுக்குத் துணையான சூரியன். கரப்ப - மறைக்க.
19. பழஞ்சொல் - பழமொழி.



**174.**

போற்றி அருளாகநின் ஆதியாம் பாதமலர்
போற்றி அருளாகநின் அந்தமாஞ் செந்தளிர்கள்
போற்றியெல் லாவுயிர்க்குந் தோற்றமாம் பொற்பாதம்
போற்றியெல் லாவுயிர்க்கும் போகமாம் பூங்கழல்கள்
போற்றியெல் லாவுயிர்க்கும் ஈறாம் இணையடிகள்
போற்றிமால் நான்முகனுங் காணாத புண்டரிகம்
போற்றியாம் உய்யவாட் கொண்டருளும் பொன்மலர்கள்
போற்றியாம் மார்கழிநீ ராடேலோ ரெம்பாவாய். 20

திருச்சிற்றம்பலம்

## திருவம்மானை

ஆனந்தக் களிப்பு

திருவண்ணாமலையில் அருளியது

**வெண்டளையான்வந்த ஆறடித்தரவுக்**
**கொச்சகக் கலிப்பா**

திருச்சிற்றம்பலம்

**175.**

செங்கண் நெடுமாலுஞ் சென்றிடந்துங் காண்பரிய
பொங்கு மலர்ப்பாதம் பூதலத்தே போந்தருளி
எங்கள் பிறப்பறுத்திட் டெந்தரமும் ஆட்கொண்டு
தெங்கு திரள்சோலைத் தென்னன் பெருந்துறையான்
அங்கணன் அந்தணனாய் அறைகூவி வீடருளும்
அங்கருணை வார்கழலே பாடுதுங்காண் அம்மானாய். 1

---

20. தோற்றமாம் பொற்பாதம் முதலாக திருவைந்தொழில்களைக் கூறியருளினார்.
1. பொங்குமலர்ப்பாதம் - சிவஞானம் பெருகும் மலர்போன்ற திருவடி. தென்னன் - இனியனான சிவன், தென்பாண்டிநாடன். அறைகூவி - வலிந்தழைத்து. அம்மானாய் - அம்மனை ஆடும் பெண்ணே!

176.

பாரார் விசும்புள்ளார் பாதாளத் தார்புறத்தார்
ஆராலும் காண்டற் கரியான் எமக்கெளிய
பேராளன் தென்னன் பெருந்துறையான் பிச்சேற்றி
வாரா வழியருளி வந்தென் உளம்புகுந்த
ஆரா அமுதாய் அலைகடல்வாய் மீன்விசிறும்
பேராசை வாரியனைப் பாடுதுங்காண் அம்மானாய். 2

177.

இந்திரனும் மாலயனும் ஏனோரும் வானோரும்
அந்தரமே நிற்கச் சிவனவனி வந்தருளி
எந்தரமும் ஆட்கொண்டு தோட்கொண்ட நீற்றனாய்ச்
சிந்தனையை வந்துருக்குஞ் சீரார் பெருந்துறையான்
பந்தம் பறியப் பரிமேற்கொண் டான்தந்த
அந்தமிலா ஆனந்தம் பாடுதுங்காண் அம்மானாய். 3

178.

வான்வந்த தேவர்களும் மாலயனோ டிந்திரனுங்
கானின்று வற்றியும் புற்றெழுந்துங் காண்பரிய
தான்வந்து நாயேனைத் தாய்போல் தலையளித்திட்
டூன்வந் துரோமங்கள் உள்ளே உயிர்ப்பெய்து
தேன்வந் தமுதின் தெளிவி னொளிவந்த
வான்வந்த வார்கழலே பாடுதுங்காண் அம்மானாய் 4

---

2. பேராளன் - பேரருளாளன். புகழுடையவன். வாராவழி - மீண்டு வாராவழி. பேராசை வாரியன் - கொள்ளையின்பக்கடலான்.
3. அந்தரமேநிற்க - அந்தரித்துநிற்க. பறிய - அற்றுப்போக
4. தலையளித்திட்டு - மேலான கருணையைச் சொரிந்து.



179.

கல்லா மனத்துக் கடைப்பட்ட நாயேனை
வல்லாளன் தென்னன் பெருந்துறையான் பிச்சேற்றிக்
கல்லைப் பிசைந்து கனியாக்கித் தன்கருணை
வெள்ளத் தழுத்தி வினைகடிந்த வேதியனைத்
தில்லை நகர்புக்குச் சிற்றம் பலம்மன்னும்
ஒல்லை விடையானைப் பாடுதுங்காண் அம்மானாய். 5

180.

கேட்டாயோ தோழி கிறிசெய்த வாறொருவன்
தீட்டார் மதில்புடைசூழ் தென்னன் பெருந்துறையான்
காட்டா தனவெல்லாங் காட்டிச் சிவங்காட்டித்
தாட்டா மரைகாட்டித் தன்கருணைத் தேன்காட்டி
நாட்டார் நகைசெய்ய நாம்மேலை வீடெய்த
ஆட்டான்கொண் டாண்டவா பாடுதுங்காண்
அம்மானாய். 6

181.

ஓயாதே உள்குவார் உள்ளிருக்கும் உள்ளானைச்
சேயானைச் சேவகனைத் தென்னன் பெருந்துறையின்
மேயானை வேதியனை மாதிருக்கும் பாதியனை
நாயான நந்தம்மை ஆட்கொண்ட நாயகனைத்
தாயான தத்துவனைத் தானே உலகேழும்
ஆயானை ஆள்வானைப் பாடுதுங்காண் அம்மானாய். 7

---

5. ஒல்லைவிடை - விரைந்துசெல்லும் எருது. பழைமையான விடையுமாம்.
6. இறி - சொல்லாத வார்த்தை. (மாயம்) தீட்டார் மதில் - சுதை தீட்டிய மதில்.
7. உள்குவார் - நினைப்பவர்.

182.
பண்சுமந்த பாடற் பரிசு படைத்தருளும்
பெண்சுமந்த பாகத்தன் பெம்மான் பெருந்துறையான்
விண்சுமந்த கீர்த்தி வியன்மண்ட லத்தீசன்
கண்சுமந்த நெற்றிக் கடவுள் கலிமதுரை
மண்சுமந்து கூலிகொண் டக்கோவால் மொத்துண்டு
புண்சுமந்த பொன்மேனி பாடுதுங்காண் அம்மானாய் 8

183.
துண்டப் பிறையான் மறையான் பெருந்துறையான்
கொண்ட புரிநூலான் கோலமா ஊர்தியான்
கண்டங் கரியான்செம் மேனியான் வெண்ணீற்றான்
அண்டமுத லாயினான் அந்தமிலா ஆனந்தம்
பண்டைப் பரிசே பழவடியார்க் கீந்தருளும்
அண்டம் வியப்புறுமா பாடுதுங்காண் அம்மானாய் 9

184.
விண்ணாளுந் தேவர்க்கு மேலாய வேதியனை
மண்ணாளும் மன்னவர்க்கு மாண்பாகி நின்றானைத்
தண்ணார் தமிழளிக்குந் தண்பாண்டி நாட்டானைப்
பெண்ணாளும் பாகனைப் பேணு பெருந்துறையிற்
கண்ணார் கழல்காட்டி நாயேனை ஆட்கொண்ட
அண்ணா மலையானைப் பாடுதுங்காண் அம்மானாய். 10

185.
செப்பார் முலைபங்கன் தென்னன் பெருந்துறையான்
தப்பாமே தாளடைந்தார் நெஞ்சுருக்குந் தன்மையினான்
அப்பாண்டி நாட்டைச் சிவலோகம் ஆக்குவித்த
அப்பார் சடையப்பன் ஆனந்த வார்கழலே
ஒப்பாக ஒப்புவித்த உள்ளத்தா ருள்ளிருக்கும்
அப்பாலைக் கப்பாலைப் பாடுதுங்காண் அம்மானாய். 11

8, பண்சுமந்த பாடற்பரிசு படைத்தருளும் - (பாணபத்திரரின்) இசைப்பாடலுக்குப் பரிசு அருளும்.

11. அப்பு - கங்கை. ஒப்பு - அடைக்கலம்.



186.
மைப்பொலியுங் கண்ணிகேள் மாலயனோ டிந்திரனும்
எப்பிறவி யுந்தேட என்னையுந்தன் இன்னருளால்
இப்பிறவி ஆட்கொண் டினிப்பிறவா மேகாத்து
மெய்ப்பொருட்கண் தோற்றமாய் மெய்யே நிலைபேறாய்
எப்பொருட்குந் தானேயாய் யாவைக்கும் வீடாகும்
அப்பொருளாம் நம்சிவனைப் பாடுதுங்காண் அம்மானாய். 12

187.
கையார் வளைசிலம்பக் காதார் குழையாட
மையார் குழல்புரளத் தேன்பாய வண்டொலிப்பச்
செய்யானை வெண்ணீ றணிந்தானைச் சேர்ந்தறியாக்
கையானை எங்குஞ் செறிந்தானை அன்பர்க்கு
மெய்யானை அல்லாதார்க் கல்லாத வேதியனை
ஐயா றமர்ந்தானைப் பாடுதுங்காண் அம்மானாய். 13

188.
ஆனையாய்க் கீடமாய் மானுடராய்த் தேவராய்
ஏனைப் பிறவாய்ப் பிறந்திறந் தெய்த்தேனை
ஊனையும் நின்றுருக்கி என்வினையை ஓட்டுகந்து
தேனையும் பாலையுங் கன்னலையும் ஒத்தினிய
கோனவன்போல் வந்தென்னைத் தன்தொழும்பிற் கொண்டருளும்
வானவன் பூங்கழலே பாடுதுங்காண் அம்மானாய். 14

13. சேர்ந்து அறியாக்கையான் - எவற்றுடனும் சேராது தனியாய் நிற்போன். கை - ஒழுக்கத்தினன்.

14. கீடம் - புழு.

**189.**

சந்திரனைத் தேய்த்தருளித் தக்கன்றன் வேள்வியினில்
இந்திரனைத் தோள்நெரித்திட் டெச்சன் தலையரிந்
தந்தரமே செல்லும் அலர்கதிரோன் பல்தகர்த்துச்
சிந்தித் திசைதிசையே தேவர்களை ஓட்டுகந்த
செந்தார்ப் பொழில்புடைசூழ் தென்னன் பெருத்துறையான்
மந்தார மாலையே பாடுதுங்காண் அம்மானாய். 15

**190.**

ஊனாய் உயிராய் உணர்வாயென் னுட்கலந்து
தேனாய் அமுதமுமாய்த் தீங்கரும்பின் கட்டியுமாய்
வானோ ரறியா வழியெமக்குத் தந்தருளுந்
தேனார் மலர்கொன்றைச் சேவகனார் சீரொளிசேர்
ஆனா அறிவாய் அளவிறந்த பல்லுயிர்க்கும்
கோனாகி நின்றவா கூறுதுங்காண் அம்மானாய். 16

**191.**

சூடுவேன் பூங்கொன்றை சூடிச் சிவன்திரள்தோள்
கூடுவேன் கூடி முயங்கி மயங்கிநின்
றூடுவேன் செவ்வாய்க் குருகுவேன் உள்ளுருகித்
தேடுவேன் தேடிச் சிவன்கழலே சிந்திப்பேன்
வாடுவேன் பேர்த்து மலர்வேன் அனலேந்தி
ஆடுவான் சேவடியே பாடுதுங்காண் அம்மானாய். 17

**192.**

கிளிவந்த மென்மொழியாள் கேழ்கிளரும் பாதியனை
வெளிவந்த மாலயனுங் காண்பரிய வித்தகனைத்
தெளிவந்த தேறலைச் சீரார் பெருந்துறையில்
எளிவந் திருந்திரங்கி எண்ணரிய இன்னருளால்
ஒளிவந்தென் உள்ளத்தின் உள்ளே ஒளிதிகழ
அளிவந்த அந்தணனைப் பாடுதுங்காண் அம்மானாய். 18

---

15. ஒட்டு உகந்து - ஓட்ட விரும்பிய.
16. ஆனா அறிவு - அழியா அறிவு.
17. முயங்கி - கலந்து. அலர்வேன் - மகிழ்வேன்.
17. கேழ் கிளரும் - மரகத நிறம் விளங்கும். கேழ் - ஒளி



**193.**

முன்னானை மூவர்க்கும் முற்றுமாய் முற்றுக்கும்
பின்னானைப் பிஞ்ஞகனைப் பேணு பெருந்துறையின்
மன்னானை வானவனை மாதியலும் பாதியனைத்
தென்னானைக் காவானைத் தென்பாண்டி நாட்டானை
என்னானை என்னப்பன் என்பார்கட் கின்னமுதை
அன்னானை அம்மானைப் பாடுதுங்காண் அம்மானாய். 19

**194.**

பெற்றி பிறர்க்கரிய பெம்மான் பெருந்துறையான்
கொற்றக் குதிரையின்மேல் வந்தருளித் தன்னடியார்
குற்றங்கள் நீக்கிக் குணங்கொண்டு கோதாட்டிச்
சுற்றிய சுற்றத் தொடர்வறுப்பான் தொல்புகழே
பற்றியிப் பாசத்தைப் பற்றறநாம் பற்றுவான்
பற்றியபே ரானந்தம் பாடுதுங்காண் அம்மானாய் 20

திருச்சிற்றம்பலம்

---

20. பெற்றிபிறர்க்கரிய பெம்மான் - இன்னதன்மையன் எனப் பிறரால் உணர்தற்கரிய பெருமான்.
சுற்றத் தொடர்வறுப்பான் - சுற்றத்தினர் மீது உள்ள பற்றினைத் துறக்கச் செய்வோன்.

# திருப்பொற்சுண்ணம்

ஆனந்த மனோலயம்

(தில்லையில் அருளியது)

(எண்சீர் ஆசிரியவிருத்தம்)

திருச்சிற்றம்பலம்

195. முத்துநல் தாமம்பூ மாலை தூக்கி
முளைக்குடம் தூபம்நல் தீபம் வைம்மின்
சத்தியும் சோமி யும்பார் மகளும்
நாமக ளோடுபல் லாண்டி சைமின்
சித்தியுங் கௌரி யும்பார்ப் பதியும்
கங்கையும் வந்து கவரி கொண்மின்
அத்தனை யாறனம் மானைப் பாடி
ஆடப்பொற் சுண்ணம் இடித்தும் நாமே 1

196. பூவியல் வார்சடை எம்பி ராற்குப்
பொற்றிருச் சுண்ணம் இடிக்க வேண்டும்
மாவின் வடுவகி ரன்ன கண்ணீர்
வம்மின்கள் வந்துடன் பாடு மின்கள்
கூவுமின் தொண்டர் புறம்நி லாமே
குனிமின் தொழுமினெங் கோனெங் கூத்தன்
தேவியுந் தானும்வந் தெம்மை யாளச்
செம்பொன்செய் சுண்ணம் இடித்தும் நாமே 2

1. முத்துநல்தாமம் - சிறந்தமுத்துமாலை. சோமி - திருமகள்
2. மாவின் வடுவகிர் - மாம்பிஞ்சின் பிளவை. குனிமின் - மெய்கோட்டி (வளைந்து) நில்லுங்கள்.



197. சுந்தர நீறணிந் தும்மெழுகித்
தூயபொன் சிந்தி நிதிப ரப்பி
இந்திரன் கற்பகம் நாட்டி எங்கும்
எழிற்சுடர் வைத்துக் கொடியெடுமின்
அந்தரர் கோன்அயன் றன்பெருமான்
ஆழியான் நாதன்நல் வேலன் தாதை
எந்தரம் ஆளுமை யாள்கொழுநற்
கேய்ந்த பொற்சுண்ணம் இடித்தும் நாமே. 3

198. காசணி மின்கள் உலக்கை யெல்லாங்
காம்பணி மின்கள் கறையுரலை
நேச முடைய அடியவர்கள்
நின்று நிலாவுக என்று வாழ்த்தித்
தேசமெல் லாம்புகழ்ந் தாடுங் கச்சித்
திருவேகம் பன்செம்பொற் கோயில் பாடிப்
பாச வினையைப் பறித்து நின்று
பாடிப் பொற்சுண்ணம் இடித்தும் நாமே. 4

199. அறுகெடுப் பாரய னும்மரியும்
அன்றிமற் றிந்திர னோடமரர்
நறுமுறு தேவர் கணங்க ளெல்லாம்
நம்மிற்பின் பல்லதெடுக்க வொட்டோம்
செறிவுடை மும்மதில் எய்த வில்லி
திருவேகம் பன்செம்பொற் கோயில் பாடி
முறுவற்செவ் வாயினீர் முக்க ணப்பற்
காடப்பொற் சுண்ணம் இடித்தும் நாமே. 5

3. சுந்தரநீறணிந்து - பொடியினாற் கோலமிட்டு. நிதி - நவநிதி. இந்திரன் கற்பகம் - இந்திரலோகத்துக் கற்பகதரு. எழிற்சுடர் - அலங்காரதீபம்.
4. காசு - பொற்சீலை. காம்பு - பட்டுச்சீலை.
5. அறுகு - பொற்சுண்ணத்தோடு சேர்க்கப்பட்ட அறுகம் புல். நறுமுறு - (முண்டியடித்து முற்படும்போது) இடுகின்ற நறுமுறு ஓசை ஒலி. நலக்க - நலம்பெற.

200. உலக்கை பலவோச்சு வார்பெரியர்
　　உலகமெ லாமுரல் போதாதென்றே
கலக்க அடியவர் வந்து நின்றார்
　　காண உலகங்கள் போதா தென்றே
நலக்க அடியோமை ஆண்டு கொண்டு
　　நாண்மலர்ப் பாதங்கள் சூடத் தந்த
மலைக்கு மருகனைப் பாடிப் பாடி
　　மகிழ்ந்து பொற்சுண்ணம் இடித்தும் நாமே　　6

201. சூடகந் தோள்வளை ஆர்ப்ப ஆர்ப்பத்
　　தொண்டர் குழாமெழுந் தார்ப்ப ஆர்ப்ப
நாடவர் நந்தம்மை ஆர்ப்ப ஆர்ப்ப
　　நாமும் அவர்தம்மை ஆர்ப்ப ஆர்ப்பப்
பாடகம் மெல்லடி ஆர்க்கும் மங்கை
　　பங்கினன் எங்கள் பராபரனுக்
காடக மாமலை அன்ன கோவுக்
　　காடப் பொற்சுண்ணம் இடித்தும் நாமே.　　7

202. வாட்டடங் கண்மட மங்கை நல்லீர்
　　வரிவளை ஆர்ப்பவண் கொங்கை பொங்கத்
தோட்டிரு முண்டந் துதைந்தி லங்கச்
　　சோத்தெம்பி ரானென்று சொல்லிச் சொல்லி
நாட்கொண்ட நாண்மலர்ப் பாதங் காட்டி
　　நாயிற் கடைப்பட்ட நம்மை இம்மை
ஆட்கொண்ட வண்ணங்கள் பாடிப் பாடி
　　ஆடப் பொற்சுண்ணம் இடித்தும் நாமே.　　8

6. பெரியர் - அடியார். ஓச்சுவார் - உயர்த்துவார். நாண் மலர் - அன்றலர்ந்த பூ
7. சூடகம் - கைவளை, ஆர்ப்ப - சிரிப்ப ஆடகம் - பொன். பாடகம் - காலணி விசேடம்.
8. வாள்தடம் கண் - ஒளி பொருந்திய அகன்ற கண். வரிவளை - வரிகளுடன் கூடிய வளையல். கொங்கை - தனம் சோத்து - வணக்கம் [ஸ்தோத்திரம் தோத்திரம் எனவரும்,



203. வையகம் எல்லாம் உரல தாக
　　மாமேரு என்னும் உலக்கை நாட்டி
மெய்யெனும் மஞ்சள் நிறைய அட்டி
　　மேதகு தென்னன் பெருந்து றையான்
செய்ய திருவடி பாடிப் பாடிச்
　　செம்பொன் உலக்கை வலக்கை பற்றி
ஐயன் அணிதில்லை வாண னுக்கே
　　ஆடப்பொற் சுண்ணம் இடித்தும் நாமே.　　9

204. முத்தணி கொங்கைகள் ஆட ஆட
　　மொய்குழல் வண்டினம் ஆட ஆடச்
சித்தஞ் சிவனொடும் ஆட ஆடச்
　　செங்கயற் கண்பனி ஆட ஆடப்
பித்தெம் பிரானொடும் ஆட ஆடப்
　　பிறவி பிறரொடும் ஆட ஆட
அத்தன் கருணையோ டாட ஆட
　　ஆடப்பொற் சுண்ணம் இடித்தும் நாமே.　　10

205. மாடு நகைவாள் நிலாவெ றிப்ப
　　வாய்திறந் தம்பவ ளந்து டிப்பப்
பாடுமின் நந்தம்மை ஆண்ட வாறும்
　　பணிகொண்ட வண்ணமும் பாடிப் பாடித்
தேடுமின் எம்பெரு மானைத் தேடிச்
　　சித்தங் களிப்பத் திகைத்துத் தேறி
ஆடுமின் அம்பலத் தாடி னுக்
　　காடப்பொற் சுண்ணம் இடித்தும் நாமே.　　11

9. வையகம் - உலகம், அட்டி - பூசி. மேதகு - மேன்மை வாய்ந்த, தில்லைவாணன் - கூத்தப்பிரான்.
10. பித்து - பேரன்பு.
11. மாடு - பக்கம்.

206. மையமர் கண்டனை வான நாடர்
மருந்தினை மாணிக்கக் கூத்தன் றன்னை
ஐயனை ஐயர்பி ரானை நம்மை
அகப்படுத் தாட்கொண் டருமை காட்டும்
பொய்யர்தம் பொய்யனை மெய்யர் மெய்யைப்
போதரிக் கண்ணிணைப் பொற்றொ டித்தோள்
பையர வல்குல் மடந்தை நல்லீர்
பாடிப்பொற் சுண்ணம் இடித்தும் நாமே. 12

207. மின்னிடைச் செந்துவர் வாய்க்க ருங்கண்
வெண்ணகைப் பண்ணமர் மென்மொழியீர்
என்னுடை யாரமு தெங்க ளப்பன்
எம்பெரு மானிம வான்ம கட்குத்
தன்னுடைக் கேள்வன் மகன்ற கப்பன்
தமையன்எம் ஐயன் தாள்கள் பாடிப்
பொன்னுடைப் பூண்முலை மங்கை நல்லீர்
பொற்றிருச் சுண்ணம் இடித்தும் நாமே. 13

12. மையமர் கண்டன் - திருநீலகண்டர். மை - கருமை. ஐயர் பிரான் - தேவர் பிரான். பொய்யன் - வெளிப் படாது பொய்ப்பவன். மெய்யன் - வெளிப்பட்டருள்பவன் பையரவுஅல்குல்: - (அரவின் பை அல்குல்) - பாம்பின் படம் போன்ற நிதம்பம்.

13. இமவான் - மலையரையன். கேள்வன் - நாயகன். தன் உடை கேள்வன் - மலையரையனது உடைமைப்பொருளாகிய பார்வதியின் நாயகன். இறைவன், சிவமும் சத்தியும் ஆம் நிலையில் கணவன்; சத்தி தத்துவத்தில் நின்றும் சதாசிவதத்துவம் தோன்றும் நிலையில் மகன்; சிவத்தில் நின்றும் சத்தி பிறத்தலாகும் நிலையில் தகப்பன்; சுத்த மாயையில் நின்று தோன்றும் நிலையில் தமையன்.



208. சங்கம் அரற்றச் சிலம்பொ லிப்பத்
தாழ்குழல் சூழ்தரு மாலை யாடச்
செங்கனி வாயித ழுந்து டிப்பச்
சேயிழை யீர்சிவ லோகம் பாடிக்
கங்கை இரைப்ப அராவி ரைக்குங்
கற்றைச் சடைமுடி யான்க ழற்கே
பொங்கிய காதலிற் கொங்கை பொங்கப்
பொற்றிருச் சுண்ணம் இடித்தும் நாமே. 14

209. ஞானக் கரும்பின் தெளிவைப் பாகை
நாடற் கரிய நலத்தை நந்தாத்
தேனைப் பழச்சுவை ஆயி னானைச்
சித்தம் புகுந்துதித் திக்க வல்ல
கோனைப் பிறப்பறுத் தாண்டு கொண்ட
கூத்தனை நாத்தழும் பேற வாழ்த்திப்
பானற் றடங்கண் மடந்தை நல்லீர்
பாடிப்பொற் சுண்ணம் இடித்தும் நாமே 15

210. ஆவகை நாமும்வந் தன்பர் தம்மோ
டாட்செயும் வண்ணங்கள் பாடி விண்மேல்
தேவர் கனவிலுங் கண்டறியாச்
செம்மலர்ப் பாதங்கள் காட்டுஞ் செல்வச்
சேவகம் ஏந்தியவெல் கொடியான்
சிவபெரு மான்புரஞ் செற்ற கொற்றச்
சேவகன் நாமங்கள் பாடிப் பாடிச்
செம்பொன் செய்சுண்ணம் இடித்தும் நாமே 16

14, இரைப்ப - ஒலிக்க.

15. நாடற்கு அரிய நலம் - சென்றெய்தலாகாத்திரு. பானல் - குவளை

16. ஆவகை - உய்யுமாறு. சேவகம் - சே + அகம் - இடபத்தைத்தன்னகத்தே கொண்ட கொடி. சேவகன் - வீரன்.

211. தேனக மாமலர்க் கொன்றை பாடிச்
சிவபுரம் பாடித் திருச்ச டைமேல்
வானக மாமதிப் பிள்ளை பாடி
மால்விடை பாடி வலக்கை யேந்தும்
ஊனக மாமழுச் சூலம் பாடி
உம்பரும் இம்பரும் உய்ய வன்று
போனக மாகநஞ் சுண்டல் பாடிப்
பொற்றிருச் சுண்ணம் இடித்தும் நாமே. 17

212. அயன்தலை கொண்டுசெண் டாடல் பாடி
அருக்கன் எயிறு பறித்தல் பாடிக்
கயந்தனைக் கொன்றுரி போர்த்தல் பாடிக்
காலனைக் காலால் உதைத்தல் பாடி
இயைந்தன முப்புரம் எய்தல் பாடி
ஏழை அடியோமை ஆண்டு கொண்ட
நயந்தனைப் பாடிநின் றாடி யாடி
நாதற்குச் சுண்ணம் இடித்தும் நாமே. 18

213. வட்ட மலர்க்கொன்றை மாலை பாடி
மத்தமும் பாடி மதியும் பாடிச்
சிட்டர்கள் வாழுந்தென் றில்லை பாடிச்
சிற்றம் பலத்தெங்கள் செல்வம் பாடிக்
கட்டிய மாசுணக் கச்சை பாடிக்
கங்கணம் பாடிக் கவித்த கைம்மேல்
இட்டுநின் றாடும் அரவம் பாடி
ஈசற்குச் சுண்ணம் இடித்தும் நாமே 19

17. மால்விடை - பெரிய இடபம். போனகம் - உணவு

18. செண்டு - பூம்பந்து, எயிறு - பல்லு, கயம் - யானை அருக்கன் - பகன் என்னும் சூரியன்.

19. சிட்டர் - மேலோர், மாசுணம் - பாம்பு, கச்சை - அரைக் கச்சை. கங்கணம் - காப்பு.



214. வேதமும் வேள்வியும் ஆயி னார்க்கு
மெய்ம்மையும் பொய்ம்மையும் ஆயி னார்க்குச்
சோதியு மாயிருள் ஆயி னார்க்குத்
துன்பமு மாய்இன்பம் ஆயி னார்க்குப்
பாதியு மாய்முற்றும் ஆயி னார்க்குப்
பந்தமு மாய்வீடும் ஆயி னாருக்
காதியும் அந்தமும் ஆயி னாருக்
காடப்பொற் சுண்ணம் இடித்தும் நாமே. 20

திருச்சிற்றம்பலம்

## 10. திருக்கோத்தும்பி

### சிவனோடைக்கியம்

திருத்தில்லையில் அருளியது

(நாலடித்தரவு கொச்சகக் கலிப்பா)

திருச்சிற்றம்பலம்

215.
பூவேறு கோனும் புரந்தரனும் பொற்பமைந்த
நாவேறு செல்வியும் நாரணனும் நான்மறையும்
மாவேறு சோதியும் வானவரும் தாமறியாச்
சேவேறு சேவடிக்கே சென்றூதாய் கோத்தும்பீ 1

216.
நானார்என் உள்ளமார் ஞானங்க ளாரென்னை யாரறிவார்
வானோர் பிரானென்னை ஆண்டிலனேல் மதிமயங்கி
ஊனா ருடைதலையில் உண்பலிதேர் அம்பலவன்
தேனார் கமலமே சென்றூதாய் கோத்தும்பீ! 2

20. பந்தம் - பிறப்பினுள் பந்தித்தல்.

1. பொற்பு - அழகு. மா ஏறுசோதி - உருத்திர மூர்த்தி ஏற்றுச்சோதி ஏறு சோதிஎன நின்றது. சே - இடபம் கோ தும்பி - அரசவண்டு.

**217.**

தினைத்தனை உள்ளதோர் பூவினில்தேன் உண்ணாதே
நினைத்தொறுங் காண்தொறும் பேசுந்தொறும் எப்போதும்
அனைத்தெலும் புள்நெக ஆனந்தத் தேன்சொரியுங்
குனிப்புடை யானுக்கே சென்றூதாய் கோத்தும்பீ 3

**218.**

கண்ணப்ப னொப்பதோர் அன்பின்மை கண்டபின்
என்னப்பன் என்னொப்பில் என்னையுமாட் கொண்டருளி
வண்ணப் பணித்தென்னை வாவென்ற வான்கருணைச்
சுண்ணப்பொன் நீற்றற்கே சென்றூதாய் கோத்தும்பீ 4

**219.**

அத்தேவர் தேவர் அவர்தேவ ரென்றிங்ஙன்
பொய்த்தேவு பேசிப் புலம்புகின்ற பூதலத்தே
பத்தேது மில்லாதென் பற்றறநான் பற்றிநின்ற
மெய்த்தேவர் தேவர்க்கே சென்றூதாய் கோத்தும்பீ 5

**220.**

வைத்த நிதிபெண்டிர் மக்கள்குலம் கல்வியென்னும்
பித்த உலகிற் பிறப்போ டிறப்பென்னும்
சித்த விகாரக் கலக்கந் தெளிவித்த
வித்தகத் தேவற்கே சென்றூதாய் கோத்தும்பீ 6

---

3. குனிப்பு - கூத்து.
4. என் ஒப்பில் என்னையும் - குற்றம் இயற்றுதலில் எனக்கு நிகர் வேறொருவரும் இல்லா என்னையும் வண்ணப்பணித்து - உய்யும் வகையருளி.
5. பத்து - பற்று என்பது பத்தென நின்றது.
6. சித்த விகாரம் - மனப்பிராந்தி.



**221.**

சட்டோ நினைக்க மனத்தமுதாஞ் சங்கரனைக்
கெட்டேன் மறப்பேனோ கேடுபடாத் திருவடியை
ஒட்டாத பாவித் தொழும்பரைநாம் உருவறியோம்
சிட்டாய சிட்டற்கே சென்றூதாய் கோத்தும்பீ 7

**222.**

ஒன்றாய் முளைத்தெழுந் தெத்தனையோ கவடுவிட்டு
நன்றாக வைத்தென்னை நாய்சிவிகை ஏற்றுவித்த
என்றாதை தாதைக்கும் எம்மனைக்கும் தம்பெருமான்
குன்றாத செல்வற்கே சென்றூதாய் கோத்தும்பீ 8

**223.**

கரணங்கள் எல்லாங் கடந்துநின்ற கறைமிடற்றன்
சரணங்க ளேசென்று சார்தலுமே தானெனக்கு
மரணம் பிறப்பென் றிவையிரண்டின் மயக்கறுத்த
கருணைக் கடலுக்கே சென்றூதாய் கோத்தும்பீ 9

**224.**

நோயுற்று மூத்துநான் நுந்துகன்றாய் இங்கிருந்து
நாயுற்ற செல்வம் நயந்தறியா வண்ணமெல்லாம்
தாயுற்று வந்தென்னை ஆண்டுகொண்ட தன்கருணைத்
தேயுற்ற செல்வற்கே சென்றூதாய் கோத்தும்பீ 10

---

7. சட்டோ - செவ்விதாய். சிட்டாய சிட்டர் - மேலவர்க்கு மேலோன்.
8. ஒன்றாய் - ஏகனாய். முளைத்தெழுந்து எத்தனையோ கவடுவிட்டு - பார்பதும் அண்டம் அனைத்துமாய் முளைத்தும் பரந்து.
9. கரணங்கள் - மெய்வாய் முதலிய புறக்கரணங்களும், மனம், வாக்கு முதலிய அகக்கரணங்களும். சரணங்கள் - திருவடி. சார்தல் - இடைவிடாது தியானித்தல்.
10. நுந்துகன்று - தாய்ப்பசுவால் உதைத்து தள்ளப்பட்ட கன்று. நாய் உற்ற செல்வம் - செல்வம் உற்ற நாய் (அதன் சிறப்பறியாது எச்சிலையே நாடும்.) தேயு - ஒளி (தேயு ஈற்று உகரம் தொக்கது)

**225**

வன்னெஞ்சக் கள்வன் மனவலியன என்னாதே
கன்னனெஞ் சுருக்கிக் கருணையினால் ஆண்டுகொண்ட
அன்னந் திளைக்கும் அணிதில்லை அம்பலவன்
பொன்னங் கழலுக்கே சென்றூதாய் கோத்தும்பீ 11

**226.**

நாயேனைத் தன்னடிகள் பாடுவித்த நாயகனைப்
பேயேன துள்ளப் பிழைபொறுக்கும் பெருமையனைச்
சீயேதும் இல்லாதென் செய்பணிகள் கொண்டருளுந்
தாயான ஈசற்கே சென்றூதாய் கோத்தும்பீ 12

**227.**

நான்தனக் கன்பின்மை நானும்தா னும்அறிவோம்
தானென்னை ஆட்கொண்ட தெல்லாருந் தாமறிவார்
ஆன கருணையும் அங்குற்றே தானவனே
கோனென்னைக் கூடக் குளிர்ந்தூதாய் கோத்தும்பீ 13

**228.**

கருவாய் உலகினுக் கப்புறமாய் இப்புறத்தே
மருவார் மலர்க்குழல் மாதினொடும் வந்தருளி
அருவாய் மறைபயில் அந்தணனாய் ஆண்டுகொண்ட
திருவான தேவற்கே சென்றூதாய் கோத்தும்பீ 14

**229.**

நானும்என் சிந்தையும் நாயகனுக் கெவ்விடத்தோம்
தானுந்தன் தையலும் தாழ்சடையோன் ஆண்டிலனேல்
வானுந் திசைகளும் மாகடலும் ஆயபிரான்
தேனுந்து சேவடிக்கே சென்றூதாய் கோத்தும்பீ 15

---

12. சீ - இகழ்ச்சிக் குறிப்பு.
13. ஆன கருணையும் அங்குற்றே - அவ்வாறான (அன்பிலா தவரையும் ஆட்கொள்ளும்) கருணையும் அவனிடம் உள்ளது.
14. அருவாய் மறை - அரு + ஆய் + மறை - அரிய பொருளை ஆராயும் வேதம்.



**230.**

உள்ளப்படாத திருவுருவை உள்ளுதலும்
கள்ளப் படாத களிவந்த வான்கருணை
வெள்ளப் பிரான்எம் பிரான்என்னை வேறேஆட்
கொள்ளப் பிரானுக்கே சென்றூதாய் கோத்தும்பீ 16

**231.**

பொய்யாய செல்வத்தே புக்கழுந்தி நாள்தோறும்
மெய்யாக் கருதிக் கிடந்தேனை ஆட்கொண்ட
ஐயாஎன் ஆருயிரே அம்பலவா என்றவன்றன்
செய்யார் மலரடிக்கே சென்றூதாய் கோத்தும்பீ 17

**232.**

தோலும் துகிலுங் குழையும் சுருள்தோடும்
பால்வெள்ளை நீறும் பசுஞ்சாந்தும் பைங்கிளியும்
சூலமும் தொக்க வளையு முடைத்தொன்மைக்
கோலமே நோக்கிக் குளிர்ந்தூதாய் கோத்தும்பீ 18

**233.**

கள்வன் கடியன் கலதியிவன் என்னாதே
வள்ளல் வரவர வந்தொழிந்தான் என்மனத்தே
உள்ளத் துறுதுயர் ஒன்றொழியா வண்ணமெல்லாம்
தெள்ளுங் கழலுக்கே சென்றூதாய் கோத்தும்பீ 19

---

16. உள்ளப்படாத திருவுரு - சிந்தனைக்கரிய சிவம்
கள்ளப்படாத - மறைவின்றி (வெட்டவெளியாயுள்ள)
கொள் அப்பிரான் - ஆண்டுகொள்ளும் அந்தத் தலைவன்
18. தொன்மைக்கோலம்-பழைமையான அம்மையப்பர் வடிவம்
19. கலதி - சீதேவியல்லாதவள் (மூதேவி) தெள்ளும் - தெள்ளி ஒதுக்கும்.

234.
பூமேல் அயனோடு மாலும் புகலரிதென்
றேமாறி நிற்க அடியேன் இறுமாக்க
நாய்மேல் தவிசிட்டு நன்றாப் பொருட்படுத்த
தீமேனி யானுக்கே சென்றூதாய் கோத்தும்பீ 20

திருச்சிற்றம்பலம்

## 11. திருத்தெள்ளேணம்

### (சிவனோடடைவு)

திருத்தில்லையில் அருளியது

தரவுக் கொச்சகக் கலிப்பா

திருச்சிற்றம்பலம்

235.
திருமாலும் பன்றியாய்ச் சென்றுணராத் திருவடியை
உருநாம் அறியஓர் அந்தணனாய் ஆண்டு கொண்டான்
ஒருநாமம் ஓருருவம் ஒன்றுமில்லாற் காயிரம்
திருநாமம் பாடிநாம் தெள்ளேணங் கொட்டாமோ. 1

236.
திருவார் பெருந்துறை மேயபிரான் என்பிறவிக்
கருவேர் அறுத்தபின் யாவரையுங் கண்டதில்லை
அருவாய் உருவமும் ஆயபிரான் அவன்மருவுந்
திருவாரூர் பாடிநாம் தெள்ளேணங் கொட்டாமோ. 2

---

20. தவிசு - மேலான இருக்கை.

1. உருஅறிய - சிறப்பியல்பை நன்கு உணர. தெள்ளேணம்-மகளிர் விளையாட்டு விசேடம்.

2. பிறவிக் கருவேர் - பிறவியாகிய மரத்தின் மூலவேர்.



237.
அரிக்கும் பிரமற்கும் அல்லாத தேவர்கட்குந்
தெரிக்கும் படித்தன்றி நின்றசிவம் வந்துநம்மை
உருக்கும் பணிகொள்ளும் என்பதுகேட் டுலகமெல்லாஞ்
சிரிக்குந் திறம்பாடித் தெள்ளேணங் கொட்டாமோ. 3

238.
அவமாய தேவர் அவகதியில் அழுந்தாமே
பவமாயங் காத்தென்னை ஆண்டுகொண்ட பரஞ்சோதி
நவமாய செஞ்சுடர் நல்குதலும் நாம்ஒழிந்து
சிவமான வாபாடித் தெள்ளேணங் கொட்டாமோ. 4

239.
அருமந்த தேவர் அயன்திருமாற் கரியசிவம்
உருவந்து பூதலத்தோர் உகப்பெய்தக் கொண்டருளிக்
கருவெந்து வீழக் கடைக்கணித்தென் உளம்புகுந்த
திருவந்த வாபாடித் தெள்ளேணங் கொட்டாமோ. 5

240.
அரையாடு நாகம் அசைத்தபிரான் அவனியின்மேல்
வரையாடு மங்கைதன் பங்கொடும்வந் தாண்டதிறம்
உரையாட உள்ளொளியாட ஒண்மாமலர்க் கண்களில்நீர்த்
திரையாடு மாபாடித் தெள்ளேணங் கொட்டாமோ. 6

---

3. தெரிக்கும் படித்து அன்றி - அறிந்துகொள்ளும் தன்மைத்தன்றி.

4. பவம் மாயம் - மாயப் பிறப்பு. நவமாய செஞ்சுடர் - (கண்டறியாத) புதிய செவ்விய ஒளி (சிவஞானம்)

5. கடைக்கணித்து - அருட்பார்வை நல்கி. திரு - சிவமாம்தன்மை. வந்தவாபாடி - இடைத்த தன்மையைப் புகழ்ந்து.

241.
ஆவா அரிஅயன்இந் திரன்வானோர்க் கரியசிவன்
வாவாஎன் றென்னையும்பூ தலத்தேவலித் தாண்டு
கொண்டான்
பூவார் அடிச்சுவ டென்தலைமேற் பொறித்தலுமே
தேவான வாபாடித் தெள்ளேணங் கொட்டாமோ. 7

242.
கறங்கோலை போல்வதோர் காயப் பிறப்போ
டிறப்பென்னும்
அறம்பாவம் என்றிரண் டச்சந் தவிர்த்தென்னை ஆண்டு
கொண்டான்
மறந்தேயுந் தன்கழல்நான் மறவா வண்ணம் நல்கியஅத்
திறம்பாடல் பாடிநாம் தெள்ளேணங் கொட்டாமோ. 8

243.
கன்னா ருரித்தென்ன என்னையுந்தன் கருணையினாற்
பொன்னார் கழல்பணித் தாண்டபிரான் புகழ்பாடி
மின்னேர் நுடங்கிடைச் செந்துவர்வாய் வெண்ணகையீர்
தென்னாதென் னாஎன்று தெள்ளேணங் கொட்டாமோ. 9

244.
கனவேயும் தேவர்கள் காண்பரிய கனைகழலோன்
புனவே யனவளைத் தோளியொடும் புகுந்தருளி
நனவே எனைப்பிடித்தாட் கொண்டவா நயந்துநெஞ்சம்
சினவேற்கண் நீர்மல்கத் தெள்ளேணங் கொட்டாமோ. 10

---

8. கறங்கு ஓலை - காற்றாடி ஓலை.
10. புனவேய் அன - காட்டு மூங்கிலை ஒத்த



245.
கயல்மாண்ட கண்ணிதன் பங்கன் எனைக்கலந்
தாண்டலுமே
அயல்மாண் டருவினைச் சுற்றமும்மாண் டவனியின்மேல்
மயல்மாண்டு மற்றுள்ள வாசகம்மாண் டென்னுடைய
செயல்மாண்ட வாபாடித் தெள்ளேணங் கொட்டாமோ 11

246.
முத்திக் குழன்று முனிவர்குழாம் நனிவாட
அத்திக் கருளி அடியேனை ஆண்டு கொண்டு
பத்திக் கடலுட் பதித்த பரஞ்சோதி
தித்திக்கு மாபாடித் தெள்ளேணங் கொட்டாமோ 12

247.
பார்பாடும் பாதாளர் பாடும்விண்ணோர் தம்பாடும்
ஆர்பாடுஞ் சாரா வகையருளி ஆண்டுகொண்ட
நேர்பாடல் பாடி நினைப்பரிய தனிப்பெரியோன்
சீர்பாடல் பாடிநாம் தெள்ளேணங் கொட்டாமோ. 13

248.
மாலே பிரமனே மற்றொழிந்த தேவர்களே
நூலே நுழைவரியான் நுண்ணியனாய் வந்தடியேன்
பாலே புகுந்து பரிந்துருக்கும் பாவகத்தாற்
சேலேர்கண் நீர்மல்கத் தெள்ளேணங் கொட்டாமோ 14

249.
உருகிப் பெருகி உளங்குளிர முகந்து கொண்டு
பருகற் கினிய பரங்கருணைத் தடங்கடலை
மருவித் திகழ்தென்னன் வார்கழலே நினைந்தடியோம்
திருவைப் பரவிநாம் தெள்ளேணங் கொட்டாமோ 15

---

12. அத்தி - யானை.
13. பாடு - பக்கம், நேர்பு ஆடல் - நேர்த்தியான திருவிளையாட்டு.
14. நூல் - சாத்திரபேதங்கள். நுழைவு - அணுகுதல். பாவகம் - நினைவு - பாவனை.

**250.**

புத்தன் புரந்தராதியர் அயன்மால் போற்றிசெயும்
பித்தன் பெருந்துறை மேயபிரான் பிறப்பறுத்த
அத்தன் அணிதில்லை அம்பலவன் அருட்கழல்கள்
சித்தம் புகுந்தவா தெள்ளேணங் கொட்டாமோ 16

**251.**

உவலைச் சமயங்கள் ஒவ்வாத சாத்திரமாம்
சவலைக் கடல்உ ளனாய்க் கிடந்து தடுமாறுஞ்
கவலைக் கெடுத்துக் கழலிணைகள் தந்தருளுஞ்
செயலைப் பரவிநாம் தெள்ளேணங் கொட்டாமோ 17

**252.**

வான்கெட்டு மாருதம் மாய்ந்தழல்நீர் மண்கெடினுந்
தான்கெட்ட லின்றிச் சலிப்பறியாத் தன்மையனுக்
கூன்கெட் டுயிர்கெட் டுணர்வு கெட்டென் உள்ளமும்போய்
நான்கெட்ட வாபாடித் தெள்ளேணங் கொட்டாமோ 18

**253.**

விண்ணோர் முழுமுதல் பாதாளத் தார்வித்து
மண்ணோர் மருந்தயன் மாலுடைய வைப்படியோம்
கண்ணார வந்துநின்றான் கருணைக் கழல்பாடித்
தென்னாதென் னாஎன்று தெள்ளேணங் கொட்டாமோ 19

**254.**

குலம் பாடிக் கொக்கிற கும்பாடிக் கோல்வளையாள்
நலம்பாடி நஞ்சுண்ட வாபாடி நாள்தோறும்
அலம்பார் புனல்தில்லை அம்பலத்தே ஆடுகின்ற
சிலம்பாடல் பாடிநாம் தெள்ளேணங் கொட்டாமோ 20

திருச்சிற்றம்பலம்

---

16. புத்தன் - அறிவுருவானவன்.
17. உவலை - பொய். சவலை - துன்பம்.
20. குலம் - கோயில் கொக்கிறகு - சடையிற் சூடியுள்ள கொக்கினது இறகு.



## 12. திருச்சாழல்

### (சிவனுடைய காருணியம்)

திருத்தில்லையில் அருளியது

நாலடித்தரவுக் கொச்சகக் கலிப்பா

திருச்சிற்றம்பலம்

**255.**

பூசுவதும் வெண்ணீறு பூண்பதுவும் பொங்கரவம்
பேசுவதும் திருவாயால் மறைபோலுங் காணேடீ
பூசுவதும் பேசுவதும் பூண்பதுவுங் கொண்டென்னை
ஈசனவன் எவ்வுயிர்க்கும் இயல்பானான் சாழலோ 1

**256.**

என்னப்பன் எம்பிரான் எல்லார்க்குந் தான்ஈசன்
துன்னம்பெய் கோவணமாக் கொள்ளுமது என்னேடீ
மன்னுகலை துன்னுபொருள் மறைநான்கே வான்சரடாத்
தன்னையே கோவணமாச் சாத்தினன்காண் சாழலோ 2

**257.**

கோயில் சுடுகாடு கொல்புலித்தோல் நல்லாடை
தாயுமிலி தந்தையிலி தான்தனியன் காணேடீ
தாயுமிலி தந்தையிலி தான்தனியன் ஆயிடினுங்
காயில் உலகனைத்துங் கற்பொடிகாண் சாழலோ 3

---

1. ஏடி - தோழி. அவன் எவ்வுயிர்க்கும் இயல்பாய் ஈசன் ஆனான் எனக் கூட்டுக.
   துன்னம் பெய் கோவணம் - தைக்கப்பெற்ற கந்தைக் கோவணம் சரடு - அரைஞாண்.
3. காயில் - கோபிக்கின்.

**258.**

அயனை அனங்கனை அந்தகனைச் சந்திரனை
வயனங்கள் மாயா வடுச்செய்தான் காணேடீ
நயனங்கள் மூன்றுடைய நாயகனே தண்டித்தால்
சயமன்றோ வானவர்க்குத் தாழ்குழலாய் சாழலோ 4

**259.**

தக்கனையும் எச்சனையுந் தலையறுத்துத் தேவர்கணம்
தொக்கனவந் தவர்தம்மைத் தொலைத்ததுதான் என்னேடீ
தொக்கனவந் தவர்தம்மைத் தொலைத்தருளி அருள்கொடுத்தங்
கெச்சனுக்கு மிகைத்தலைமற் றருளினன்காண் சாழலோ 5

**260.**

அலரவனும் மாலவனும் அறியாமே அழலுருவாய்
நிலமுதற்கீழ் அண்டமுற நின்றதுதான் என்னேடீ
நிலமுதற்கீழ் அண்டமுற நின்றிலனேல் இருவருந்தம்
சலமுகத்தால் ஆங்காரந் தவிரார்காண் சாழலோ 6

**261.**

மலைமகளை யொருபாகம் வைத்தலுமே மற்றொருத்தி
சலமுகத்தால் அவன்சடையிற் பாயுமது என்னேடீ
சலமுகத்தால் அவன்சடையிற் பாய்ந்திலளேல் தரணியெல்லாம்
பிலமுகத்தே புகப்பாய்ந்து பெருங்கேடாஞ் சாழலோ. 7

---

4. வயனம் - பழிமொழி.
5. எச்சன் - யாகபுருடன். (பிந்திய) எச்சன் - தக்கன்
தொக்கன - தொகுதியாக.
6. சலமுகத்தால் - கோபம் காரணமாக. சலம் - கோபம்
7. சலமுகத்தால் - நீர் உருவாய். சலம் - நீர்.
பிலம் - பாதாளம்.



**262.**

கோலால மாகிக் குரைகடல்வாய் அன்றெழுந்த
ஆலாலம் உண்டான் அவன்சதுர்தான் என்னேடீ
ஆலாலம் உண்டிலனேல் அன்றயன்மால் உள்ளிட்ட
மேலாய தேவரெல்லாம் வீடுவர்காண் சாழலோ 8

**263.**

தென்பா லுகந்தாடுந் தில்லைச்சிற் றம்பலவன்
பெண்பா லுகந்தான் பெரும்பித்தன் காணேடீ
பெண்பா லுகந்திலனேற் பேதாய் இருநிலத்தோர்
விண்பா லியோகெய்தி வீடுவர்காண் சாழலோ 9

**264.**

தானந்தம் இல்லான் தனையடைந்த நாயேனை
ஆனந்த வெள்ளத் தழுத்துவித்தான் காணேடீ
ஆனந்த வெள்ளத் தழுத்துவித்த திருவடிகள்
வானுந்து தேவர்கட்கோர் வான்பொருள்காண் சாழலோ. 10

**265.**

நங்காய் இதென்னதவம் நரம்போ டெலும்பணிந்து
கங்காளம் தோள்மேலே காதலித்தான் காணேடீ
கங்காளம் ஆமாகேள் காலாந்த ரத்திருவர்
தங்காலஞ் செய்யத் தரித்தனன்காண் சாழலோ 11

**266.**

கானார் புலித்தோல் உடைதலைஊண் காடுபதி
ஆனால் அவனுக்கிங் காட்படுவார் ஆரேடீ
ஆனாலுங் கேளாய் அயனுந் திருமாலும்
வானாடர் கோவும் வழியடியார் சாழலோ. 12

---

8. கோலாலம் - பேரொலி. ஆலாலம் - நஞ்சு. சதுர் - திறமை.
9. வீடுவர் - இறந்தொழிவர். யோகு - யோகம்,
11. கங்காளம் - எலும்புக்கூடு. காலாந்தரம் - காலமுடிவு
12. ஊண் - உண்கலம்.

**267.**

மலையரையன் பொற்பாவை வாள்நுதலாள் பெண்திருவை
உலகறியத் தீவேட்டான் என்னுமது என்னேடீ
உலகறியத் தீவேளா தொழிந்தனனேல் உலகனைத்துங்
கலைநவின்ற பொருள்களெல்லாங் கலங்கிடுங்காண் சாழலோ 13

**268.**

தேன்புக்க தண்பணைசூழ் தில்லைச்சிற் றம்பலவன்
தான்புக்கு நட்டம் பயிலுமது என்னேடீ
தான்புக்கு நட்டம் பயின்றிலனேல் தரணியெல்லாம்
ஊன்புக்க வேற்காளிக் கூட்டாங்காண் சாழலோ. 14

**269.**

கடகரியும் பரிமாவும் தேரும்உகந் தேறாதே
இடபம்உகந் தேறியவா றெனக்கறிய இயம்பேடீ
தடமதில்கள் அவைமூன்றுந் தழலெரித்த அந்நாளில்
இடபமதாய்த் தாங்கினான் திருமால்காண் சாழலோ 15

**270.**

நன்றாக நால்வர்க்கு நான்மறையின் உட்பொருளை
அன்றாலின் கீழிருந்தங் கறமுரைத்தான் காணேடீ
அன்றாலின் கீழிருந்தங் கறமுரைத்தான் ஆயிடினுங்
கொன்றான்காண் புரமூன்றுங் கூட்டோடே சாழலோ. 16

---

13. தீவேட்டான் - எரிவலம் வந்து திருமணம் செய்தான்.

14. தண்பணை - வளவயல். தாரகன் உதிரங்குடித்த செருக்கினால் காளி உலகினைத் துன்புறுத்தினாளாக செம்மேனி எம்மான் அவளுடன் நடனப்போர் புரிந்து செருக்கினை அகற்றியருளினார்.



**271.**

அம்பலத்தே கூத்தாடி அமுதுசெயப் பலிதிரியும்
நம்பனையுந் தேவனென்று நண்ணுமது என்னேடீ
நம்பனையும் ஆமாகேள் நான்மறைகள் தாமறியா
எம்பெருமான் ஈசாவென் றேத்தினகாண் சாழலோ. 17

**272.**

சலமுடைய சலந்தரன்றன் உடல்தடிந்த நல்லாழி
நலமுடைய நாரணற்கன் றருளியவா றென்னேடீ
நலமுடைய நாரணன்தன் நயனம்இடந் தரனடிக்கீழ்
அலராக இடஆழி அருளினன்காண் சாழலோ. 18

**273.**

அம்பரமாம் புள்ளித்தோல் ஆலாலம் ஆரமுதம்
எம்பெருமான் உண்டசதுர் எனக்கறிய இயம்பேடீ
எம்பெருமான் ஏதுடுத்தங் கேதமுது செய்திடினும்
தம்பெருமை தானறியாத் தன்மையன்காண் சாழலோ. 19

**274.**

அருந்தவருக் காலின்கீழ் அறமுதலா நான்கினையும்
இருந்தவருக் கருளுமது எனக்கறிய இயம்பேடீ
அருந்தவருக் கறமுதல்நான் கன்றருளிச் செய்திலனேல்
திருந்தவருக் குலகியற்கை தெரியாகாண் சாழலோ 20

திருச்சிற்றம்பலம்

---

17. பலிதிரியும் - பிச்சையேற்றுத் திரியும்.

18. சலந்தரன் - ஓர் அரக்கன் நயனம் - கண்

19. அம்பரம் - ஆடை. புள்ளித்தோல் - புள்ளிகளையுடைய புலித்தோல்.

20. அருந்தவர் - சனகர் முதலிய நால்வர்

# 13. திருப்பூவல்லி

## (மாயாவிசய நீக்குதல்)

திருத்தில்லையில் அருளியது

நாலடித் தரவுக் கொச்சகக் கலிப்பா

திருச்சிற்றம்பலம்

275.

இணையார் திருவடிஎன் தலைமேல் வைத்தலுமே
துணையான சுற்றங்கள் அத்தனையுந் துறந்தொழிந்தேன்
அணையார் புனற்றில்லை அம்பலத்தே ஆடுகின்ற
புணையாளன் சீர்பாடிப் பூவல்லி கொய்யாமோ 1

276.

எந்தைஎந் தாய்சுற்றம் மற்றுமெல்லாம் என்னுடைய
பந்தம் அறுத்தென்னை ஆண்டுகொண்ட பாண்டிப்பிரான்
அந்த இடைமருதில் ஆனந்தத் தேனிருந்த
பொந்தைப் பரவிநாம் பூவல்லி கொய்யாமோ 2

277.

நாயிற் கடைப்பட்ட நம்மையுமோர் பொருட்படுத்துத்
தாயிற் பெரிதுந் தயாவுடைய தம்பெருமான்
மாயப் பிறப்பறுத் தாண்டானென் வல்வினையின்
வாயிற் பொடியட்டிப் பூவல்லி கொய்யாமோ 3

278.

பண்பட்ட தில்லைப் பதிக்கரசைப் பரவாதே
எண்பட்ட தக்கன் அருக்கனெச்சன் இந்துஅனல்
விண்பட்ட பூதப் படைவீர பத்திரரால்
புண்பட்ட வாபாடிப் பூவல்லி கொய்யாமோ 4

---

1. புணையாளன் - திருவடித்துறைக்கு இட்டுச்செல்லும் புணை போன்றவன். பூவல்லி - மகளிர் விளையாடும் ஒருவகை விளையாட்டு.
3, பொடியட்டி - மண்இட்டு - அழித்து.
4. எச்சன் - யாகத்தலைவன். இயமானன்



279.

தேனாடு கொன்றை சடைக்கணிந்த சிவபெருமான்
ஊனாடி நாடிவந் துள்புகுந்தான் உலகர்முன்னே
நானாடி ஆடிநின் றோலமிட நடம்பயிலும்
வானாடர் கோவுக்கே பூவல்லி கொய்யாமோ 5

280.

எரிமூன்று தேவர்க் கிரங்கியருள் செய்தருளிச்
சிரமூன் றறத்தன் திருப்புருவம் நெரித்தருளி
உருமூன்று மாகி உணர்வரிதாம் ஒருவனுமே
புரமூன் றெரித்தவா பூவல்லி கொய்யாமோ 6

281.

வணங்கத் தலைவைத்து வார்கழல்வாய் வாழ்த்தவைத்
திணங்கத்தன் சீரடியார் கூட்டமும்வைத் தெம்பெருமான்
அணங்கொ டணிதில்லை அம்பலத்தே ஆடுகின்ற
குணங்கூரப் பாடிநாம் பூவல்லி கொய்யாமோ 7

282.

நெறிசெய் தருளித்தன் சீரடியார் பொன்னடிக்கே
குறிசெய்து கொண்டென்னை ஆண்டபிரான் குணம்பரவி
முறிசெய்து நம்மை முழுதுடற்றும் பழவினையைக்
கிறிசெய்த வாபாடிப் பூவல்லி கொய்யாமோ 8

283.

பன்னாட் பரவிப் பணிசெய்யப் பாதமலர்
என்னாகம் துன்னவைத்த பெரியோன் எழிற்சுடராய்க்
கன்னா ருரித்தென்னை யாண்டுகொண்டான் கழலிணைகள்
பொன்னான வாபாடிப் பூவல்லி கொய்யாமோ 9

---

6. எரிமூன்று : முத்தீ வேள்வி. சிரம் மூன்று அற - தக்கன், எச்சன், பிரமன் எனும் மூவர்களதும் தலைகள் துணிபட,
7. அணங்கு - அழகுடைய உமையம்மை.
8. முறி - அடிமையோலை. கிறி செய்தவா - (இல்லை எனும்படி) பொய்யாக்கி.

**284.**

பேராசை யாமிந்தப் பிண்டமறப் பெருந்துறையான்
சீரார் திருவடி என்தலைமேல் வைத்தபிரான்
காரார் கடல்நஞ்சை உண்டுகந்த காபாலி
போரார் புரம்பாடிப் பூவல்லி கொய்யாமோ 10

**285.**

பாலும் அமுதமுந் தேனுடனும் பராபரமாய்க்
கோலங் குளிர்ந்துள்ளங் கொண்டபிரான் குரைகழல்கள்
ஞாலம் பரவுவார் நன்னெறியாம் அந்நெறியே
போலும் புகழ்பாடிப் பூவல்லி கொய்யாமோ 11

**286.**

வானவன் மாலயன் மற்றுமுள்ள தேவர்கட்கும்
கோனவ னாய்நின்று கூடலிலாக் குணக்குறியோன்
ஆன நெடுங்கடல் ஆலாலம் அமுது செய்யப்
போனகம் ஆனவா பூவல்லி கொய்யாமோ 12

**287.**

அன்றால நீழற்கீழ் அருமறைகள் தானருளி
நன்றாக வானவர் மாமுனிவர் நாள்தோறும்
நின்றார ஏத்தும் நிறைகழலோன் புனைகொன்றைப்
பொன்றாது பாடிநாம் பூவல்லி கொய்யாமோ 13

**288.**

படமாக என்னுள்ளே தன்னிணைப்போ தவையளித்திங்
கிடமாகக் கொண்டிருந் தேகம்பம் மேயபிரான்
தடமார் மதில்தில்லை அம்பலமே தானிடமா
நடமாடு மாபாடிப் பூவல்லி கொய்யாமோ 14

**289.**

அங்கி அருக்கன் இராவணனந் தகன்கூற்றன்
செங்கண் அரிஅயன் இந்திரனுஞ் சந்திரனும்
பங்கமில் தக்கனும் எச்சனுந்தம் பரிசழியப்
பொங்கியசீர் பாடிநாம் பூவல்லி கொய்யாமோ 15



**290.**

திண்போர் விடையான் சிவபுரத்தார் போரேறு
மண்பால் மதுரையிற் பிட்டமுது செய்தருளி
தண்டாலே பாண்டியன் தன்னைப் பணிகொண்ட
புண்பாடல் பாடிநாம் பூவல்லி கொய்யாமோ 16

**291.**

முன்னாய மாலயனும் வானவருந் தானவரும்
பொன்னார் திருவடி தாமறியார் போற்றுவதே
என்னாகம் உள்புகுந் தாண்டுகொண்டான் இலங்கணியாம்
பன்னாகம் பாடிநாம் பூவல்லி கொய்யாமோ 17

**292.**

சீரார் திருவடித் திண்சிலம்பு சிலம்பொலிக்கே
ஆராத ஆசையதாய் அடியேன் அகமகிழத்
தேரார்ந்த வீதிப் பெருந்துறையான் திருநடஞ்செய்
பேரானந் தம்பாடிப் பூவல்லி கொய்யாமோ 18

**293.**

அத்தியுரித்தது போர்த்தருளும் பெருந்துறையான்
பித்த வடிவுகொண் டிவ்வுலகிற் பிள்ளையுமாம்
முத்தி முழுமுதலுத் தரகோச மங்கைவள்ளல்
புத்தி புகுந்தவா பூவல்லி கொய்யாமோ 19

**294.**

மாவார ஏறி மதுரைநகர் புகுந்தருளித்
தேவார்ந்த கோலந் திகழப் பெருந்துறையான்
கோவாகி வந்தெம்மைக் குற்றேவல் கொண்டருளும்
பூவார் கழல்பரவிப் பூவல்லி கொய்யாமோ 20

திருச்சிற்றம்பலம்

---

17. இலங்கணியாம் (இலங்கு + அணியாம் - விளங்குகின்ற ஆபரணமாம். பல்நாகம் - பலபாம்புகள்.

## 14. திருவுந்தியார்

### (ஞான வெற்றி)

திருத்தில்லையில் அருளியது

கலித்தாழிசை

திருச்சிற்றம்பலம்

295. வளைந்தது வில்லு விளைந்தது பூசல்
உளைந்தன முப்புரம் உந்தீபற
ஒருங்குடன் வெந்தவா றுந்தீபற 1

296. ஈரம்பு கண்டிலம் ஏகம்பர் தங்கையில்
ஓரம்பே முப்புரம் உந்தீபற
ஒன்றும் பெருமிகை உந்தீபற 2

297. தச்சு விடுத்தலும் தாமடி யிட்டலும்
அச்சு முறிந்ததென் றுந்தீபற
அழிந்தன முப்புரம் உந்தீபற 3

298. உய்யவல் லாரொரு மூவரைக் காவல்கொண்
டெய்யவல் லானுக்கே உந்தீபற
இளமுலை பங்கனென் றுந்தீபற 4

299. சாடிய வேள்வி சரிந்திடத் தேவர்கள்
ஓடிய வாபாடி உந்தீபற
உருத்திர நாதனுக் குந்தீபற 5

300. ஆவா திருமால் அவிப்பாகங் கொண்டன்று
சாவா திருந்தானென் றுந்தீபற
சதுர்முகன் தாதையென் றுந்தீபற 6

---

1. உளைந்தன - வருந்தின.
3, தச்சு - தேர்.
5. மூவரைக் காவல் கொண்டு - திரிபுரத்தலைவர் மூவருக்கும் காப்பளித்து (அருள்செய்து)



301. வெய்யவன் அங்கி விழுங்கத் திரட்டிய
கையைத் தறித்தானென் றுந்தீபற
கலங்கிற்று வேள்வியென் றுந்தீபற 7

302. பார்ப்பதி யைப்பகை சாற்றிய தக்கனைப்
பார்ப்பதென் னேஏடி யுந்தீபற
பணைமுலை பாகனுக் குந்தீபற 8

303. புரந்தர னாரொரு பூங்குயி லாகி
மரந்தனி லேறினார் உந்தீபற
வானவர் கோனென்றே உந்தீபற 9

304. வெஞ்சின வேள்வி வியாத்திர னார்தலை
துஞ்சின வாபாடி உந்தீபற
தொடர்ந்த பிறப்பற உந்தீபற 10

305. ஆட்டின் தலையை விதிக்குத் தலையாகக்
கூட்டிய வாபாடி உந்தீபற
கொங்கை குலுங்கநின் றுந்தீபற 11

306. உண்ணப் புகுந்த பகனொளித் தோடாமே
கண்ணைப் பறித்தவா றுந்தீபற
கருக்கெட நாமெலாம் உந்தீபற 12

307. நாமகள் நாசி சிரம்பிர மன்படச்
சோமன் முகன்னெரித் துந்தீபற
தொல்லை வினைகெட உந்தீபற. 13

---

7. வெய்யவன் - (அவியுணவில்) விருப்பமுடையவன்
10. வியாத்திரன் - திண்ணியனான எச்சன் (தக்கன்)
தலைதுஞ்சினவா - தலைவெட்டுண்டு இறந்தமையை.
11. விதி - சிறுவிதியாகிய தக்கன்.
12. பகன் - பன்னிரு சூரியருள் ஒருவர்.
கருக்கெட - பிறவிக்கரு ஒழிய
13. சோமன் - சந்திரன்

308. நான்மறை யோனு மகத்திய மான்படப்
போம்வழி தேடுமா றுந்தீபற
புரந்தரன் வேள்வியில் உந்தீபற 14

309. சூரிய னார்தொண்டை வாயினிற் பற்களை
வாரி நெரித்தவா றுந்தீபற
மயங்கிற்று வேள்வியென் றுந்தீபற 15

310. தக்கனார் அன்றே தலையிழந் தார்தக்கன்
மக்களைச் சூழநின் றுந்தீபற
மடிந்தது வேள்வியென் றுந்தீபற 16

311. பாலக னார்க்கன்று பாற்கடல் ஈந்திட்ட
கோலச் சடையற்கே யுந்தீபற
குமரன்தன் தாதைக்கே உந்தீபற 17

312. நல்ல மலரின்மேல் நான்முக னார்தலை
ஒல்லை யரிந்ததென் றுந்தீபற
உகிரால் அரிந்ததென் றுந்தீபற 18

313. தேரை நிறுத்தி மலையெடுத் தான்சிரம்
ஈரைந்தும் இற்றவா றுந்தீபற
இருபதும் இற்றதென் றுந்தீபற 19

314. ஏகாச மிட்ட இருடிகள் போகாமல்
ஆகாசங் காவலென் றுந்தீபற
அதற் கப்பா லுங்காவலென் றுந்தீபற 20

திருச்சிற்றம்பலம்

---

14. மகத்துஇ யமான் - வேள்வித்தலைவன்.

18. ஒல்லை - விரைவு, உகிர் - நகம்

20. ஏகாசம் - மேலாடை. ஆகாசம் - காவல்
20 ஆம் பாடல் சில பிரதிகளில் இல்லை.



# 15. திருத்தோணோக்கம்

## (பிரபஞ்ச சுத்தி)

திருத்தில்லையில் அருளியது

தரவு கொச்சகக் கலிப்பா

திருச்சிற்றம்பலம்

315.
பூத்தாரும் பொய்கைப் புனலிதுவே எனக்கருதிப்
பேய்த்தேர் முகக்குறும் பேதைகுண மாகாமே
தீர்த்தாய் திகழ்தில்லை அம்பலத்தே திருநடஞ்செய்
கூத்தா உன்சேவடி கூடும்வண்ணம் தோணோக்கம் 1

316.
என்றும் பிறந்திறந் தாழாமே ஆண்டுகொண்டான்
கன்றால் விளவெறிந் தான்பிரமன் காண்பரிய
குன்றாத சீர்த்தில்லை அம்பலவன் குணம்பரவித்
துன்றார் குழலினீர் தோணோக்க மாடாமோ 2

317.
பொருட்பற்றிச் செய்கின்ற பூசனைகள் போல்விளங்கச்
செருப்புற்ற சீரடி வாய்க்கலசம் ஊனமுதம்
விருப்புற்று வேடனார் சேடறிய மெய்குளிர்த்தங்
கருட்பெற்று நின்றவா தோணோக்க மாடாமோ 3

---

1. பேய்த்தேர் - கானல் நீர்.

2. கன்றால்விளவு எறிந்தான் - திருமால், கண்ணன்.
துன்றார்குழல் - நெருங்கிய கற்றைக் கூந்தல்

3. பொருள் - ஆகமங்களிற் சொல்லப்பட்ட விதிமுறைகள்.
சேடு - பெருமை.

**318.**

கற்போலும் நெஞ்சங் கசிந்துருகக் கருணையினல்
நிற்பானைப் போலஎன் நெஞ்சினுள்ளே புகுந்தருளி
நற்பாற் படுத்தென்னை நாடறியத் தான்இங்ஙன்
சொற்பால தானவா தோணோக்க மாடாமோ 4

**319.**

நிலம்நீர் நெருப்புயிர் நீள்விசும்பு நிலாப்பகலோன்
புலனய மைந்தனே டெண்வகையாய்ப் புணர்ந்து நின்ருன்
உலகே ழெனத்திசை பத்தெனத்தான் ஒருவனுமே
பலவாகி நின்றவா தோணோக்க மாடாமோ 5

**320.**

புத்தன் முதலாய புல்லறிவிற் பல்சமயம்
தத்தம் மதங்களில் தட்டுளுப்புப் பட்டுநிற்கச்
சித்தஞ் சிவமாக்கிச் செய்தனவே தவமாக்கும்
அத்தன் கருணையினல் தோணோக்க மாடாமோ 6

**321.**

தீதில்லை மாணி சிவகருமஞ் சிதைத்தானைச்
சாதியும் வேதியன் தாதைதனைத் தாளிரண்டுஞ்
சேதிப்ப ஈசன் திருவருளால் தேவர்தொழப்
பாதக மேசோறு பற்றினவா தோணோக்கம் 7

---

4. சொற்பாலதானவா - புகழ்ந்து பேசும் தன்மையில் ஆன விதத்தை.
5. புலனய மைந்தன் - அறிவுடைய புருடன் (இயமானன்)
6. தட்டுளுப்பு - தடுமாற்றம்.
7. மாணி - பிரமசாரி. சேதிப்ப - வெட்டி வீழ்த்த. சோறு பற்றினவா - பிரசாதம் வழங்கும் பேறினைப் பெற் றமை.



**322.**

மானம் அழிந்தோம் மதிமறந்தோம் மங்கைநல்லீர்
வானந் தொழுந்தென்னன் வார்கழலே நினைந்தடியோம்
ஆனந்தக் கூத்தன் அருள்பெறில்நாம் அவ்வணமே
ஆனந்த மாகிநின் ருடாமோ தோணோக்கம் 8

**323.**

எண்ணுடை மூவர் இராக்கதர்கள் எரிபிழைத்துக்
கண்ணுதல் எந்தை கடைத்தலைமுன் நின்றதற்பின்
எண்ணிலி இந்திரர் எத்தனையோ பிரமர்களும்
மண்மிசை மால்பலர் மாண்டனர்காண் தோணோக்கம் 9

**324.**

பங்கயம் ஆயிரம் பூவினிலோர் பூக்குறையத்
தங்கண் இடந்தரன் சேவடிமேல் சாத்தலுமே
சங்கரன் எம்பிரான் சக்கரம்மாற் கருளியவா
றெங்கும் பரவிநாம் தோணோக்க மாடாமோ 10

**325.**

காமன் உடலுயிர் காலன்பல் காய்கதிரோன்
நாமகள் நாசிசிரம் பிரமன் கரம்எரியைச்
சோமன் கலைதலை தக்கனையும் எச்சனையும்
தூய்மைகள் செய்தவா தோணோக்க மாடாமோ 11

**326.**

பிரமன் அரியென் றிருவருந்தம் பேதைமையால்
பரமம் யாம்பரம் என்றவர்கள் பதைப்பொடுங்க
அரனர் அழலுருவாய் அங்கே அளவிறந்து
பரமாகி நின்றவா தோணோக்க மாடாமோ 12

---

8. மானம் அழிந்தோம் - மானபிமானத்தை விட்டொழிந் தோம். மதிமறந்தோம் - சுயபுத்தியற்றேம்.
9. எண்-மதிப்பு. எரிபிழைத்து - தீயினின்றும் தப்பி. கடைத் தலைமுன் நின்றதற்பின் - கோபுரவாயிலில் காவலராக நின்றபின்

**327.**
ஏழைத் தொழும்பனேன் எத்தனையோ காலமெல்லாம்
பாழுக் கிறைத்தேன் பரம்பரனைப் பணியாதே
ஊழிமுதற் சிந்தாத நன்மணிவந் தென்பிறவித்
தாழைப் பறித்தவா தோணோக்க மாடாமோ 13

**328.**
உரைமாண்ட உள்ளொளி உத்தமன்வந் துளம்புகலும்
கரைமாண்ட காமப் பெருங்கடலைக் கடத்தலுமே
இரைமாண்ட இந்திரியப் பறவை இரிந்தோடத்
துரைமாண்ட வாபாடித் தோணோக்க மாடாமோ 14

திருச்சிற்றம்பலம்

## 16. திருப்பொன்னூசல்

### (அருட்சுத்தி)

திருத்தில்லையில் அருளியது

தரவுகொச்சகக் கலிப்பா

திருச்சிற்றம்பலம்

**329.**
சீரார் பவளங்கால் முத்தங் கயிறாக
ஏராரும் பொற்பலகை ஏறி இனிதமர்ந்து
நாராயணன் அறியா நாண்மலர்த்தாள் நாயடியேற்
கூராகத் தந்தருளும் உத்தர கோசமங்கை
ஆரா அமுதின் அருட்டா ளிணைபாடிப்
போரார்வேற் கண்மடவீர் பொன்னூச லாடாமோ 1

---

13. பிறவித்தாழ் - பிறவிவேர்.
14. உரைமாண்ட - வாக்கிறந்த. துரை - மிகுதிப்பாடு (தன் முனைப்பு).



330. மூன்றங் கிலங்கு நயனத்தன் மூவாத
வான்றங்கு தேவர்களுங் காணா மலரடிகள்
தேன்றங்கித் தித்தித் தமுதூறித் தான்தெளிந்தங்
கூன்றங்கி நின்றுருக்கும் உத்தர கோசமங்கைக்
கோன்றங் கிடைமருது பாடிக் குலமஞ்ஞை
போன்றங் கனநடையீர் பொன்னூச லாடாமோ 2

331. முன்னீறும் ஆதியும் இல்லான் முனிவர்குழாம்
பன்னூறு கோடி இமையோர்கள் தாம்நிற்பத்
தன்னீ றெனக்கருளித் தன்கருணை வெள்ளத்து
மன்னூற மன்னுமணி உத்தர கோசமங்கை
மின்னேறு மாட வியன்மா ளிகைபாடிப்
பொன்னேறு பூண்முலையீர் பொன்னூச லாடாமோ 3

332. நஞ்சமர் கண்டத்தன் அண்டத் தவர்நாதன்
மஞ்சுதோய் மாடமணி உத்தர கோசமங்கை
அஞ்சொலாள் தன்னோடுங் கூடி அடியவர்கள்
நெஞ்சுளே நின்றமுதம் ஊறிக் கருணைசெய்து
துஞ்சல் பிறப்பறுப்பான் தூய புகழ்பாடிப்
புஞ்சமார் வெள்வளையீர் பொன்னூச லாடாமோ 4

333. ஆணோ அலியோ அரிவையோ என்றிருவர்
காணாக் கடவுள் கருணையினால் தேவர்குழாம்
நாணாமே உய்யஆட் கொண்டருளி நஞ்சுதனை
ஊணாக உண்டருளும் உத்தர கோசமங்கைக்
கோணார் பிறைச்சென்னிக் கூத்தன் குணம்பரவிப்
பூணார் வனமுலையீர் பொன்னூச லாடாமோ 5

---

2. ஊன்தங்கி - காயமே கோயிலாகக் கொண்டு.
குலமஞ்ஞை - அழகியமயில்
3. முன் - நினைக்கப்படுகின்ற. மன்னூறமன்னும் - யான் பெரிதும் ஊறிக்கிடக்குமாறு நிலைபெற்று நிற்கும்.
4. துஞ்சல் - இறப்பு புஞ்சம் - தொகுதி.
5. கோணார்பிறை - கூனற்பிறை. (கோணுதல் - வளைதல்)

334.
மாதாடு பாகத்தன் உத்தர கோசமங்கைத்
தாதாடு கொன்றைச் சடையான் அடியாருள்
கோதாட்டி நாயேனை ஆட்கொண்டென் தொல்பிறவித்
தீதோடா வண்ணந் திகழப் பிறப்பறுப்பான்
காதாடு குண்டலங்கள் பாடிக் கசிந்தன்பால்
போதாடு பூண்முலையீர் பொன்னூச லாடாமோ 6

335.
உன்னற் கரியதிரு உத்தர கோசமங்கை
மன்னிப் பொலிந்திருந்த மாமறையோன் தன்புகழே
பன்னிப் பணிந்திறைஞ்சப் பாவங்கள் பற்றறுப்பான்
அன்னத்தின் மேலேறி ஆடும்அணி மயில்போல்
என்னத்தன் என்னையும் ஆட்கொண்டான் எழில்பாடிப்
பொன்னொத்த பூண்முலையீர் பொன்னூச லாடாமோ 7

336. கோல வரைக்குடுமி வந்து குவலயத்துச்
சால அமுதுண்டு தாழ்கடலின் மீதெழுந்து
ஞால மிகப்பரிமேற் கொண்டு நமையாண்டான்
சீலந் திகழுந் திருவுத்தர கோசமங்கை
மாலுக் கரியானை வாயார நாம்பாடிப்
பூலித் தகங்குழைந்து பொன்னூச லாடாமோ 8

---

6, கோதாட்டி - சீராட்டி. பிறவித்தீது - பிறவிக்கு ஏதுவாய தீமை. ஆகாமியம். ஓடாவண்ணம் - பல்கிப் பெருகா வண்ணம். (இந்நிலை திருவருள் உணர்வால் கூடுவதாம்)

7. உன்னற்கரிய - சிந்தனைக்கு இனிய. பன்னி - பலகாலுஞ் சொல்லி. அன்னத்தின் மேல் ஆடும் மயில்; ஊஞ்சற்பொற்பலகையில் இருந்து ஆடும் மயில் போலும் மகளிர் என்க.

8. கோலவரை குடுமிவந்து - அழகிய கைலைமலையினின்றும் காளத்திமலைக்கு எழுந்தருளி சாலமுது - (சால - நல்ல, மிகுதி) ஊனமுது. பூலித்து - பூரித்து என்பது எதுகை நோக்கிப் பூலித்து எனத் திரிந்து நின்றது. பூரித்து - மகிழ்ந்து



337.
தெங்குலவு சோலைத் திருஉத்தர கோசமங்கை
தங்குலவு சோதித் தனியுருவம் வந்தருளி
எங்கள் பிறப்பறுத்திட் டெந்தரமும் ஆட்கொள்வான்
பங்குலவு கோதையுந் தானும் பணிகொண்ட
கொங்குலவு கொன்றைச் சடையான் குணம்பரவிப்
பொங்குலவு பூண்முலையீர் பொன்னூச லாடாமோ 9

திருச்சிற்றம்பலம்

## 17. அன்னைப்பத்து

### ( ஆத்தும பூரணம் )

திருத்தில்லையில் அருளியது

கலிவிருத்தம்

திருச்சிற்றம்பலம்

338. வேத மொழியர்வெண் ணீற்றர்செம் மேனியர்
நாதப் பறையினர் அன்னே என்னும்
நாதப் பறையினர் நான்முகன் மாலுக்கும்
நாதர்இந் நாதனார் அன்னே என்னும் 1

339. கண்ணஞ் சனத்தர் கருணைக் கடலினர்
உண்ணின் றுருக்குவர் அன்னே என்னும்
உண்ணின் றுருக்கி உலப்பிலா ஆனந்தக்
கண்ணீர் தருவரால் அன்னே என்னும் 2

---

1. நாதப் பறையினர் - நாதத்துவமாய் விளங்கும் ஓங்காரத்தைப் பறைஆகக் கொண்டவர்.

2. உலப்பிலா - கெடுதலில்லாத (பெருஞ்செல்வமான)

340. நித்த மணாளர் நிரம்ப அழகியர்
சித்தத் திருப்பரால் அன்னே என்னும்
சித்தத் திருப்பவர் தென்னன் பெருந்துறை
அத்தர்ஆ னந்தரால் அன்னே என்னும் 3

341. ஆடரப் பூணுடைத் தோல்பொடிப் பூசிற்றோர்
வேடம் இருந்தவா றன்னே என்னும்
வேடம் இருந்தவா கண்டுகண் டென்னுள்ளம்
வாடும் இதுஎன்னே அன்னே என்னும் 4

342. நீண்ட கரத்தர் நெறிதரு குஞ்சியர்
பாண்டிநன் னாடரால் அன்னே என்னும்
பாண்டிநன் னாடர் பரந்தெழு சிந்தையை
ஆண்டன்பு செய்வரால் அன்னே என்னும் 5

343. உன்னற் கரியசீர் உத்தர மங்கையர்
மன்னுவ தென்நெஞ்சில் அன்னே என்னும்
மன்னுவ தென்நெஞ்சில் மாலயன் காண்கிலார்
என்ன அதிசயம் அன்னே என்னும் 6

344. வெள்ளைக் கலிங்கத்தர் வெண்டிரு முண்டத்தர்
பள்ளிக்குப் பாயத்தர் அன்னே என்னும்
பள்ளிக்குப் பாயத்தர் பாய்பரி மேற்கொண்டென்
உள்ளங் கவர்வரால் அன்னே என்னும் 7

---

3. நித்தமணாளர் - என்றும் மணவாளக் கோலமுடையவர்.
4. ஆடு அரபூண் - ஆடுகின்ற பாம்பு ஆபரணம். அரா, அர என நின்றது.
5. நெறிதரு குஞ்சியர் - (அலைபோல்) நெளியும் சடையினர் பரந்தெழுசிந்தை - பல வழிகளாலும் ஓடுகின்ற உள்ளம்.
7. வெள்ளைக்கலிங்கம் - வெண்ணிற ஆடை. வெண்திரு முண்டம் - முக்குறியாகத் தரிக்கப்பட்ட நீறு அணிந்த நெற்றி (முண்டம் - நெற்றி) பள்ளிக்குப்பாயம் - படுக்கைவிரிப்பும் ஆதற்குரிய போர்வை, சட்டையுமாம்.



345. தாளி அறுகினர் சந்தனச் சாந்தினர்
ஆளெம்மை ஆள்வரால் அன்னே என்னும்
ஆளெம்மை ஆளும் அடிகளார் தங்கையில்
தாள மிருந்தவா றன்னே என்னும் 8

346. தையலோர் பங்கினர் தாபத வேடத்தர்
ஐயம் புகுவரால் அன்னே என்னும்
ஐயம் புகுந்தவர் போதலும் என்னுள்ளம்
நையும்இது என்னே அன்னே என்னும் 9

347. கொன்றை மதியமுங் கூவிள மத்தமும்
துன்றிய சென்னியர் அன்னே என்னும்
துன்றிய சென்னியின் மத்தம்உன் மத்தமே
இன்றெனக் கானவா றன்னே என்னும் 10

திருச்சிற்றம்பலம்

---

8. தாளி அறுகினர் - தழைத்துப் படர்ந்த அறுகம் புல்லாலான மாலையை அணிந்தவர், தாளிக் கொடியாலும் அறுகம் புல்லாலும் ஆகிய மாலை எனினுமாம்.
9. தாபத வேடம் - தவக்கோலம். ஐயம் - பிச்சை
10. கூவிளம் - வில்வம். மத்தம் - பொன்னூமத்தமலர்.

# 18. குயிற் பத்து

## ஆத்தும விரக்கம்

திருத்தில்லையில் அருளியது

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

348. கீதம் இனிய குயிலே
கேட்டியேல் எங்கள் பெருமான்
பாத மிரண்டும் வினவில்
பாதாள மேழினுக் கப்பால்
சோதி மணிமுடி சொல்லிற்
சொல்லிறந் துநின்ற தொன்மை
ஆதி குணமொன்று மில்லான்
அந்தமி லான்வரக் கூவாய்

349. ஏர்தரும் ஏழுல கேத்த
எவ்வுரு வுந்தன் னுருவாம்
ஆர்கலி சூழ்தென் னிலங்கை
அழகமர் வண்டோ தரிக்குப்
பேரரு ளின்ப மளித்த
பெருந்துறை மேய பிரானைச்
சீரிய வாயாற் குயிலே
தென்பாண்டி நாடனைக் கூவாய் 2

1. பாதாளம் ஏழு - ஏழாவதாகிய பாதாளஉலகு.



350. நீல உருவிற் குயிலே
நீள்மணி மாடம் நிலாவும்
கோல அழகிற் றிகழுங்
கொடிமங்கை உள்ளுறை கோயிற்
சீலம் பெரிதும் இனிய
திருவுத் தரகோச மங்கை
ஞாலம் விளங்க இருந்த
நாயக னைவரக் கூவாய் 3

351. தேன்பழச் சோலை பயிலுஞ்
சிறுகுயி லேஇது கேள்நீ
வான்பழித் திம்மண் புகுந்து
மனிதரை ஆட்கொண்ட வள்ளல்
ஊன்பழித் துள்ளம் புகுந்தென்
உணர்வது வாய ஒருத்தன்
மான்பழித் தாண்டமென் னோக்கி
மணாளனை நீவரக் கூவாய் 4

352. சுந்தரத் தின்பக் குயிலே
சூழ்சுடர் ஞாயிறு போல
அந்தரத் தேநின் றிழிந்திங்
கடியவர் ஆசை அறுப்பான்
முந்தும் நடுவும் முடிவு
மாகிய மூவ ரறியாச்
சிந்துரச் சேவடி யானைச்
சேவக னைவரக் கூவாய் 5

3. கொடி மங்கை - பூங்கொடி போன்ற உமையம்மை

4. ஊன்பழித்து - ஊனுடலை வெறுக்கும் வண்ணம்

5. அந்தரத்தே நின்று இழிந்து - சிவலோகத்தினின்றும் மண்ணுலகிற்கு எழுந்தருளி

353. இன்பந் தருவன் குயிலே
ஏழுல கும்முழு தாளி
அன்பன் அமுதளித் தூறும்
ஆனந்தன் வான்வந்த தேவன்
நன்பொன் மணிச்சுவ டொத்த
நற்பரி மேல்வரு வானைக்
கொம்பின் மிழற்றுங் குயிலே
கோகழி நாதனைக் கூவாய் 6

354. உன்னை உகப்பன் குயிலே
உன்துணைத் தோழியும் ஆவன்
பொன்னை அழித்தநன் மேனிப்
புகழில் திகழும் அழகன்
மன்னன் பரிமிசை வந்த
வள்ளல் பெருந்துறை மேய
தென்னவன் சேரலன் சோழன்
சீர்ப்புயங் கன்வரக் கூவாய் 7

355. வாவிங்கே நீகுயிற் பிள்ளாய்
மாலொடு நான்முகன் தேடி
ஓவியவர் உன்னி நிற்ப
ஒண்டழல் விண்பிளந் தோங்கி
மேவிஅன் றண்டங் கடந்து
விரிசுடா ராய்நின்ற மெய்யன்
தாவி வரும்பரிப் பாகன்
தாழ்சடை யோன்வரக் கூவாய் 8

---

6. நன்பொன்மணிச் சுவடு ஒத்தநற்பரி - நல்ல பொன்னில் மணிகளைப் பதித்தாற் போன்ற அடையாளங்களையுடைய வண்ணக் குதிரை.

7. உகப்பன் - விரும்புவேன். புயங்கன் - கூத்தப்பிரான். (புயங்கம் - பாம்பு; பாம்பு நடம் ஈண்டு கூத்தை உணர்த்தி நின்றது.)
ஓவி - (வலி) ஒழிந்து.



356. காருடைப் பொன்திகழ் மேனிக்
கடிபொழில் வாழுங் குயிலே
சீருடைச் செங்கம லத்திற்
றிகழுரு வாகிய செல்வன்
பாரிடைப் பாதங்கள் காட்டிப்
பாசம் அறுத்தெனை யாண்ட
ஆருடை அம்பொனின் மேனி
அமுதினை நீவரக் கூவாய் 9

357. கொந்தண வும்பொழிற் சோலைக்
கூங்குயி லேயிது கேள்நீ
அந்தண னாகிவந் திங்கே
அழகிய சேவடி காட்டி
எந்தம ராம்இவன் என்றிங்
கென்னையும் ஆட்கொண் டருளும்
செந்தழல் போல்திரு மேனித்
தேவர் பிரான்வரக் கூவாய் 10

திருச்சிற்றம்பலம்

---

9. கார்உடைப் பொன்திகழ் - கருநிற மேனியிலே செந்நிறக் கண் திகழும். ஆர் உடை - திருவாத்திமாலையையுடைய

10. கொந்து அணவும் - பூங்கொத்துக்கள் நெருங்கியுள்ள. (கொத்து கொந்து என மெலிந்து நின்றது.) எம் தமராம் இவன் - இவன் எமது உறவினன். (தமர் - உறவினர்.)

## 19. திருத்தசாங்கம்

### (அடிமை கொண்ட முறைமை)

திருத்தில்லையில் அருளியது

நேரிசை வெண்பா

திருச்சிற்றம்பலம்

**358.**

ஏரார் இளங்கிளியே எங்கள் பெருந்துறைக்கோன்
சீரார் திருநாமம் தேர்ந்துரையாய் — ஆரூரன்
செம்பெருமான் வெண்மலரான் பாற்கடலான் செப்புவபோல்
எம்பெருமான் தேவர்பிரான் என்று. 1

**359.**

ஏதமிலா இன்சொல் மரகதமே ஏழ்பொழிற்கும்
நாதன்நமை ஆளுடையான் நாடுரையாய் — காதலவர்க்
கன்பாண்டு மீளா அருள்புரிவான் நாடென்றும்
தென்பாண்டி நாடே தெளி 2

**360.**

தாதாடு பூஞ்சோலைத் தத்தாய் நமையாளும்
மாதாடும் பாகத்தன் வாழ்பதிஎன் — கோதாட்டிப்
பத்தரெல்லாம் பார்மேற் சிவபுரம்போற் கொண்டாடும்
உத்தர கோசமங்கை யூர் 3

---

1. ஆரூரன் - திருவாரூரில் எழுந்தருளி இருப்பவன். செம்பெருமான் - செம்மேனி எம்மான்.
2. ஏதம் - குற்றம். பொழில் - உலகம்; ஏழுவகையான சோலைகளால் ஆய பெயரென்பர். அவை, நாவல் (சம்பு) குசை முதலியன, ஏழுடையான்பொழில்...(கோவை)
3. தத்தை - கிளி. கோதாட்டி - சீராட்டி



**361.**

செய்யவாய்ப் பைஞ்சிறகிற் செல்வீநம் சிந்தைசேர்
ஐயன் பெருந்துறையான் ஆறுரையாய் — தையலாய்
வான்வந்த சிந்தை மலங்கழுவ வந்திழியும்
ஆனந்தங் காண்உடையான் ஆறு 4

**362.**

கிஞ்சுகவாய் அஞ்சுகமே கேடில் பெருந்துறைக்கோன்
மஞ்சன் மருவும் மலைபகராய் — நெஞ்சத்
திருளகல வாள்வீசி இன்பமரு முத்தி
அருளுமலை என்பதுகாண் ஆய்ந்து 5

**363.**

இப்பாடே வந்தியம்பு கூடுபுகல் என்கிளியே
ஒப்பாடாச் சீருடையான் ஊர்வதென்னே — எப்போதும்
தேன்புரையுஞ் சிந்தையராய்த் தெய்வப்பெண் ணேத்திசைப்ப
வான்புரவி யூரும் மகிழ்ந்து 6

**364.**

கோற்றேன் மொழிக்கிள்ளாய் கோதில் பெருந்துறைக்கோன்
மாற்றாரை வெல்லும் படைபகராய் — ஏற்றார்
அழுக்கடையா நெஞ்சுருக மும்மலங்கள் பாயுங்
கழுக்கடைகாண் கைக்கொள் படை 7

---

4. வான்வந்த சிந்தை - (தூய்மையால்) உயர்ந்த உள்ளம்.
5. கிஞ்சுகவாய் அஞ்சுகம் - முருக்கம்பூவினைப் போன்ற சிவந்த அலகினையுடைய கிளி. மஞ்சன் - அழகன், மைந்தன் என்பதன் போலியுமாம். வலியோன் என்பது அதற்குப் பொருள். வாள் - ஒளி (ஞான ஒளி)
6. இப்பாடு - இப்பக்கம் ஒப்பாடா - ஒப்பில்லாத. வான் புரவி - (புரவியை வானத்து ஊரும் என விரித்து) விண்மிசைச் செல்லும் குதிரை எனப் பொருள் கொள்க.
7. கோற்றேன் - (கோல்+தேன்) கொம்புத்தேன். மாற்றார் - பகைவர். ஏற்றார் - அன்பராக ஏற்றுக்கொண்டவர்கள்.

365.
இன்பால் மொழிக்கிள்ளாய் எங்கள் பெருந்துறைக்கோன்
முன்பால் முழங்கும் முரசியம்பாய் — அன்பாற்
பிறவிப் பகைகலங்கப் பேரின்பத் தோங்கும்
பருமிக்க நாதப் பறை 8

366.
ஆய மொழிக்கிள்ளாய் அள்ளூறும் அன்பர்பால்
மேய பெருந்துறையான் மெய்த்தார்என் — தீயவினை
நாளுமணு காவண்ணம் நாயேனை ஆளுடையான்
தாளிஅறு காம்உவந்த தார் 9

367.
சோலைப் பசுங்கிளியே தூநீர்ப் பெருந்துறைக்கோன்
கோலம் பொலியுங் கொடிகூறாய் — சாலவும்
ஏதிலார் துண்ணென்ன மேல்விளங்கி ஏர்காட்டுங்
கோதிலா ஏறும் கொடி 10

திருச்சிற்றம்பலம்

8. முன்பால் - திருமுன்னிலையில்.

9. ஆயமொழி - (இனிமை) ஆயமொழி. அள்ளூறும் - வாயூறும். மெய்த்தார் - திருமார்பில் அணியும் மாலை



## 20. திருப்பள்ளியெழுச்சி

### (திரோதான சத்தி)

திருப்பெருந்துறையில் அருளியது

எண்சீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

368. போற்றிஎன் வாழ்முத லாகிய பொருளே
புலர்ந்தது பூங்கழற் கிணைதுணை மலர்கொண்
டேற்றிநின் திருமுகத் தெமக்கருள் மலரும்
எழில்நகை கொண்டுநின் திருவடி தொழுகோம்
சேற்றிதழ்க் கமலங்கள் மலருந்தண் வயல்சூழ்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே
ஏற்றுயர் கொடியுடை யாய்எனை யுடையாய்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே

369. அருணன்இந் திரன்திசை அணுகினன் இருள்போய்
அகன்றது உதயநின் மலர்த்திரு முகத்தின்
கருணையின் சூரியன் எழஎழ நயனக்
கடிமலர் மலரமற் றண்ணல்அங் கண்ணும்
திரள்நிரை அறுபதம் முரல்வன இவையோர்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே
அருள்நிதி தரவரும் ஆனந்த மலையே
அலைகட லேபள்ளி எழுந்தரு ளாயே. 2

1. இணை துணைமலர் கொண்டு ஏற்றி - பொருத்தமான பல வகை மலர்கள் தூவிப் போற்றி. அருள் மலரும் எழில் நகை கொண்டு - அருள் சொரியும் முறுவல் நகையைப் பெற்று. ஏறு - எருது.

2. இந்திரன் திசை - கிழக்குத் திசை. அகன்றது உதயம் - உதய ஒளி பரவியது. நயனக்கடிமலர் - கண் போன்ற விளக்கமுடைய தாமரை மலர். அறுபதம் - வண்டு.

370. கூவின பூங்குயில் கூவினகோழி
குருகுகள் இயம்பின இயம்பின சங்கம்
ஓவின தாரகை யொளிஒளி உதயத்
தொருப்படு கின்றது விருப்பொடு நமக்குத்
தேவநற் செறிகழல் தாளிணை காட்டாய்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே
யாவரும் அறிவரி யாய்எமக் கெளியாய்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே. 3

371 இன்னிசை வீணையர் யாழினர் ஒரு பால்
இருக்கொடு தோத்திரம் இயம்பினர் ஒருபால்
துன்னிய பிணைமலர்க் கையினர் ஒருபால்
தொழுகையர் அழுகையர் துவள்கையர் ஒருபால்
சென்னியில் அஞ்சலி கூப்பினர் ஒருபால்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே
என்னையும் ஆண்டுகொண் டின்னருள் புரியும்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே. 5

372. பூதங்கள் தோறும்நின் றாயெனின் அல்லால்
போக்கிலன் வரவிலன் எனநினைப் புலவோர்
கீதங்கள் பாடுதல் ஆடுதல் அல்லால்
கேட்டறி யோம்உனைக் கண்டறி வாரைச்
சீதங்கொள் வயல்திருப் பெருந்துறை மன்னா
சிந்தனைக் கும்அரி யாய்எங்கள் முன்வந்
தேதங்கள் அறுத்தெம்மை ஆண்டருள் புரியும்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே 5

3. குருகு - பறவை. சங்கம் - சங்கு. ஓவின - மறைந்தன. ஒருப்படுகின்றது - தோன்றுகின்றது.

4. இருக்கு - வேதம் தோத்திரம் - துதிப்பாடல்கள் துன்னிய பிணைமலர் - நெருங்கிப் பிணைக்கப்பட்ட மலர் மாலை. துவள்கையர் - கைகூப்பி மெய்கோட்டி நிற்பவர். திருவருள் பெருமையால் மெலிந்து என்றுமாம்.

5. ஏதங்கள் - குற்றங்கள் சீதங்கொள்வயல் - சீதளமான வயல். (குளிர்ச்சியான வயல்)



373. பப்பற வீட்டிருந் துணரும்நின் அடியார்
பந்தனை வந்தறுத் தாரவர் பலரும்
மைப்புறு கண்ணியர் மானுடத் தியல்பின்
வணங்குகின் றார்அணங் கின்மண வாளா
செப்புறு கமலங்கள் மலருந்தண் வயல்சூழ்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே
இப்பிறப் பறுத்தெமை ஆண்டருள் புரியும்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே 6

374. அதுபழச் சுவையென அமுதென அறிதற்
கரிதென எளிதென அமரரும் அறியார்
இதுஅவன் திருவுரு இவன்அவன் எனவே
எங்களை ஆண்டுகொண் டிங்கெழுந் தருளும்
மதுவளர் பொழில்திரு வுத்தர கோச
மங்கையுள் ளாய்திருப் பெருந்துறை மன்னா
எதுஎமைப் பணிகொளு மாறது கேட்போம்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே 7

6. பப்புஅற (பரப்பு அற) - பரந்தெழு சிந்தை செயலற. பரப்பு இடை குறைந்து பப்பு என்றாயது. வீட்டிருந்து - எண்ணமும் பார்வையும் விட்டு அமைதியாய் இருந்து. பந்தனை - பாசக்கட்டு. மானுடத்தியல்பு - கொண்டானை அல்லால் அறியாக் குலமகளிரின் மானுடக் கற்பு முறையில்.

375. முந்திய முதல்நடு இறுதியு மானாய்
மூவரும் அறிகிலர் யாவர்மற் றறிவார்
பந்தணை விரலியும் நீயும்நின் அடியார்
பழங்குடில் தொறும்எழுந் தருளிய பரனே
செந்தழல் புரைதிரு மேனியுங் காட்டித்
திருப்பெருந் துறையுறை கோயிலும் காட்டி
அந்தண னாவதுங் காட்டிவந் தாண்டாய்
ஆரமு தேபள்ளி எழுந்தரு ளாயே 8

376. விண்ணகத் தேவரும் நண்ணவும் மாட்டா
விழுப்பொரு ளேயுன தொழுப்படி யோங்கள்
மண்ணகத் தேவந்து வாழச்செய் தானே
வண்திருப் பெருந்துறை யாய்வழி யடியோம்
கண்ணகத் தேநின்று களிதரு தேனே
கடலமு தேகரும் பேவிரும் படியார்
எண்ணகத் தாய்உல குக்குயி ரானாய்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே 9

377. புவனியிற் போய்ப்பிற வாமையில் நாள்நாம்
போக்குகின் றோம்அவ மேஇந்தப் பூமி
சிவனுய்யக் கொள்கின்ற வாறென்று நோக்கித்
திருப்பெருந் துறையுறை வாய்திரு மாலாம்
அவன்விருப் பெய்தவும் மலரவன் ஆசைப்
படவும்நின் அலர்ந்தமெய்க் கருணையும் நீயும்
அவனியிற் புகுந்தெமை ஆட்கொள்ள வல்லாய்
ஆரமு தேபள்ளி எழுந்தரு ளாயே 10

திருச்சிற்றம்பலம்

---

8. முந்திய முதல் - முற்பட்ட தோற்றமும். நடு இறுதி-நிலையும் ஈறும். இறைவன் ஒருவனே முத்தொழில் புரிகையால் மூவராம் தன்மை கூறியருளினார். பந்தணை விரலி - பந்து பொருந்தும் கையையுடைய உமையம்மை. பழங் குடில் - அன்பரின் நெஞ்சகமாகிய பழைமையுடைய இல்லம்.



# 21. கோயில்மூத்ததிருப்பதிகம்

## (அநாதியாகிய சற்காரியம்)

திருத்தில்லையில் அருளியது

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

278. உடையாள் உன்றன் நடுவிருக்கும்
உடையாள் நடுவுள் நீயிருத்தி
அடியேன் நடுவுள் இருவீரும்
இருப்பதானால் அடியேன்உன்
அடியார் நடுவு ளிருக்கும்
அருளைப் புரியாய்பொன் னம்பலத்தெம்
முடியா முதலே என்கருத்து
முடியும் வண்ணம் முன்னின்றே. 1

379. முன்னின் றாண்டாய் எனைமுன்னம்
யானும் அதுவே முயல்வுற்றுப்
பின்னின் றேவல் செய்கின்றேன்
பிற்பட் டொழிந்தேன் பெம்மானே
என்னின் றருளி வரநின்று
போந்தி டென்னா விடில்அடியார்
உன்னின் றிவனார் என்னாரோ
பொன்னம் பலக்கூத் துகந்தானே 2

---

1. உடையாள் - இறைவி. நடுவுள் நீ இருத்தி - இறைவியின் நடுவுள் நீ இருக்கின்றாய். சிவமும் சத்தியும் எவ்வாற்றானும் வேறல்லர் என உணர்த்தியவாறும்.

2. பிற்பட்டொழிந்தேன் - பின்னடைந்துவிட்டேன். என் நின்று அருள் இவர நின்று - என்னுள் எழுந்தருளி அருட் பெருக்கமாய் நிறைந்து. (என் வர அருளி நின்று என இயைப்பதும் உண்டு.) போந்திடு - வருக.

380. உகந்தா னேஅன் புடைஅடிமைக்
குருகா உள்ளத் துணர்விலியேன்
சகந்தான் அறிய முறையிட்டால்
தக்க வாறன் றென்னுரோ
மகந்தான் செய்து வழிவந்தார்
வாழ வாழ்ந்தாய் அடியேற்குன்
முகந்தான் தாரா விடின்முடிவேன்
பொன்னம் பலத்தெம் முழுமுதலே 3

381. முழுமுத லேஐம் புலனுக்கும்
மூவர்க் கும்என் றனக்கும்
வழிமுத லேநின் பழவடி
யார்திரள் வான் குழுமிக்
கெழுமுத லேயருள் தந்திருக்க
இரங்குங் கொல்லோஎன்
றழுமது வேயன்றி மற்றென்
செய்கேன் பொன்னம் பலத்தரைசே 4

382. அரைசே பொன்னம் பலத்தாடும்
அமுதே என்றுன் அருள்நோக்கி
இரைதேர் கொக்கொத் திரவுபகல்
ஏசற் றிருந்தே வேசற்றேன்
கரைசேர் அடியார் களிசிறப்பக்
காட்சி கொடுத்துன் னடியேன்பால்
பிரைசேர் பாலின் நெய்போலப்
பேசா திருந்தால் ஏசாரோ 5

3. சகம் - உலகத்தவர். மகம் - வேள்வி. முகம் - காட்சி,

5. ஏசறுதல் - ஆசைப்படுதல், வேசறுதல் - இளைத்தல் பிரைசேர் பாலின் நெய்போல - உறையிட்ட பாலிலே வெண்ணெய் மேலுறைந்து பிறிந்து நிற்றல் போல



383. ஏசா நிற்பர் என்னைஉனக்
கடியான் என்று பிறரெல்லாம்
பேசா நிற்பர் யான்தானும்
பேணு நிற்பேன் நின்னருளே
தேசா நேசர் சூழ்ந்திருக்குந்
திருவோ லக்கம் சேவிக்க
ஈசா பொன்னம் பலத்தாடும்
எந்தாய் இனித்தான் இரங்காயே 6

384. இரங்கும் நமக்கம் பலக்கூத்தன்
என்றென் றேமாந் திருப்பேனை
அருங்கற் பனைகற் பித்தாண்டாய்
ஆள்வா ரிலிமா டாவேனோ
நெருங்கும் அடியார் களும்நீயும்
நின்று நிலாவி விளையாடும்
மருங்கே சார்ந்து வரஎங்கள்
வாழ்வே வாவென் றருளாயே 7

385. அருளா தொழிந்தால் அடியேனை
அஞ்சேல் என்பார் ஆர்இங்குப்
பொருளா என்னைப் புகுந்தாண்ட
பொன்னே பொன்னம் பலக்கூத்தா
மருளார் மனத்தோ டுனைப்பிரிந்து
வருந்து வேனை வாவென்றுன்
தெருளார் கூட்டங் காட்டாயேல்
செத்தே போனுற் சிரியாரோ 8

6. நேசர் - அன்பர். திருவோலக்கம் - பேரவை (கொலு) சேவிக்க - தரிசிக்க,

7. கற்பனைகள் - உறுதியுரைகள்.

8. மருள் - மயக்கம் தெருளார் - தெளிந்த மனதினர்.

386. சிரிப்பார் களிப்பார் தேனிப்பார்
திரண்டு திரண்டுன் திருவார்த்தை
விரிப்பார் கேட்பார் மெச்சுவார்
வெவ்வே றிருந்துன் திருநாமந்
தரிப்பார் பொன்னம் பலத்தாடுந்
தலைவா என்பார் அவர்முன்னே
நரிப்பாய் நாயேன் இருப்பேனோ
நம்பி இனித்தான் நல்காயே 9

387. நல்கா தொழியான் நமக்கென்றுன்
நாமம் பிதற்றி நயனநீர்
மல்கா வாழ்த்தா வாய்குழறா
வணங்கா மனத்தால் நினைந்துருகிப்
பல்கால் உன்னைப் பாவித்துப்
பரவிப் பொன்னம் பலமென்றே
ஒல்கா நிற்கும் உயிர்க்கிரங்கி
யருளாய் என்னை உடையானே 10

திருச்சிற்றம்பலம்

9. தேனிப்பார் - மதுவுண்ட வண்டுபோல் மயங்குவார். நரிப்பு - இகழ்ச்சி.

10. பாவித்து - நினைத்து. ஒல்கா நிற்கும் - தளர்ந்துநிற்கும்



## 22. கோயில் திருப்பதிகம்

### (அநுபோக இலக்கணம்)

திருத்தில்லையில் அருளியது

எழுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

388. மாறிநின் றென்னை மயக்கிடும் வஞ்சப்
புலனைந்தின் வழியடைத் தமுதே
ஊறிநின் றென்னுள் எழுபரஞ்சோதி
உள்ளவா காணவந் தருளாய்
தேறலின் தெளிவே சிவபெரு மானே
திருப்பெருந் துறையுறை சிவனே
ஈறிலாப் பதங்கள் யாவையுங் கடந்த
இன்பமே என்னுடை அன்பே 1

389. அன்பினால் அடியேன் ஆவியோ டாக்கை
ஆனந்த மாய்க்கசிந் துருக
என்பரம் அல்லா இன்னருள் தந்தாய்
யான்இதற் கிலன்ஓர் கைம்மாறு
முன்புமாய்ப் பின்பும் முழுதுமாய்ப் பரந்த
முத்தனே முடிவிலா முதலே
தென்பெருந் துறையாய் சிவபெருமானே
சீருடைச் சிவபுரத் தரைசே 2

1. உள்ளவா காண - நிசசொரூபத்தைத் தரிசிக்க. ஈறு இலாப் பதங்கள் - அளவற்ற உலகங்கள்.

2. என்பரம் அல்லா - எனது தரத்திற்கு விஞ்சிய.

390. அரைசனே அன்பர்க் கடியனே னுடைய
அப்பனே ஆவியோ டாக்கை
புரைபுரை கனியப் புகுந்துநின் றுருக்கிப்
பொய்யிருள் கடிந்தமெய்ச் சுடரே
திரைபொரா மன்னும் அமுதத்தெண் கடலே
திருப்பெருந் துறையுறை சிவனே
உரையுணர் விறந்துநின் றுணர்வதோர் உணர்வே
யானுன்னை உரைக்குமா றுணர்த்தே 3

391. உணர்ந்தமா முனிவர் உம்பரோ டொழிந்தார்
உணர்வுக்கும் தெரிவரும் பொருளே
இணங்கிலி எல்லா உயிர்கட்கும் உயிரே
எனைப்பிறப் பறுக்கும்எம் மருந்தே
திணிந்ததோர் இருளில் தெளிந்ததூ வெளியே
திருப்பெருந் துறையுறை சிவனே
குணங்கள்தா மில்லா இன்பமே உன்னைக்
குறுகினேற் கினியென்ன குறையே 4

392. குறைவிலா நிறைவே கோதிலா அமுதே
ஈறிலாக் கொழுஞ் சுடர்க் குன்றே
மறையுமாய் மறையின் பொருளுமாய் வந்தென்
மனத்திடை மன்னிய மன்னே
சிறைபெறா நீர்போல் சிந்தைவாய்ப் பாயுந்
திருப்பெருந் துறையுறை சிவனே
இறைவனே நீயென் உடலிடங் கொண்டாய்
இனியுன்னை யென்னிரக் கேனே 5

3. புரை புரை கனிய - மயிர்க்கால் என்புத்துளை எங்கும் நெக்குருக. திரைபொரா மன்னும் - பெயராது நிலை பெற்று நிற்கும். ஒழிந்தார் - பிரமன் மால் முதலியோர்.
4. இணங்கிலி - இணையில்லாதவனே.
5. குறைவிலா நிறைவு - பரிபூரணப் பொருள். கோது - குற்றம். சிறை - அணை.



393. இரந்திரந் துருக என்மனத் துள்ளே
எழுகின்ற சோதியே இமையோர்
சிரந்தனிற் பொலியுங் கமலச்சே வடிவாய்
திருப்பெருந் துறையுறை சிவனே
நிரந்தஆ காயம் நீர்நிலம் தீகால்
ஆய்அவை அல்லையாய் ஆங்கே
கரந்ததோர் உருவே களித்தனன் உன்னைக்
கண்ணுறக் கண்டுகொண் டின்றே 6

394. இன்றெனக் கருளி இருள்கடிந் துள்ளத்
தெழுகின்ற ஞாயிறே போன்று
நின்றநின் தன்மை நினைப்பற நினைந்தேன்
நீயலால் பிறிதுமற் றின்மை
சென்றுசென் றணுவாய்த் தேய்ந்துதேய்ந் தொன்றும்
திருப்பெருந் துறையுறை சிவனே
ஒன்றும்நீ யல்லை அன்றியொன் றில்லை
யாருன்னை அறியகிற் பாரே 7

திருச்சிற்றம்பலம்

6 இரந்து இரந்து - தன்முனைப்பின்றி பலகாலும் வேண்டி வேண்டி. கால் - காற்று.

7. நினைப்பு அற - கருவிகளானும் தற்போதத்தினும் உணருந் தன்மை இல்லையாக. சென்று சென்று பந்தங்களின் நின்றும் நீங்கி.

395. பார்பதம் அண்டம் அனைத்துமாய் முளைத்துப்
பரந்ததோர் படரொளிப் பரப்பே
நீருறு தீயே நினைவதேல் அரிய
நின்மலா நின்னருள் வெள்ளச்
சீருறு சிந்தை எழுந்ததோர் தேனே
திருப்பெருந் துறையுறை சிவனே
யாருற வெனக்கிங் கார்அய லுள்ளார்
ஆனந்த மாக்குமென் சோதீ 8

396. சோதியாய்த் தோன்றும் உருவமே அருவாம்
ஒருவனே சொல்லுதற் கரிய
ஆதியே நடுவே அந்தமே பந்தம்
அறுக்கும் ஆனந்தமா கடலே
தீதிலா நன்மைத் திருவருட் குன்றே
திருப்பெருந் துறையுறை சிவனே
யாதுநீ போவதோர் வகையெனக் கருளாய்
வந்துநின் இணையடி தந்தே 9

397. தந்ததுன் றன்னைக் கொண்டதென் றன்னைச்
சங்கரா ஆர்கொலோ சதுரர்
அந்தமொன் றில்லா ஆனந்தம் பெற்றேன்
யாதுநீ பெற்றதொன் றென்பால்
சிந்தையே கோயில் கொண்டஎம் பெருமான்
திருப்பெருந் துறையுறை சிவனே
எந்தையே ஈசா உடலிடங் கொண்டாய்
யான்இதற் கிலன்ஓர் கைம்மாறே 10

திருச்சிற்றம்பலம்

---

8. நீருறு தீ - சூடு பொருந்திய நீர். "எரியுறு நீர்" இனி கடல் நீரில் பொருந்திய வடவைத் தீ போன்றவன் எனினுமாம்.

10. சதுரர் - திறல் படைத்தவர் (சிந்தையினும் உடலினும் இடங்கொண்டவர் என்று கூட்டுக.)



## 23. செத்திலாப் பத்து

### (சிவானந்தம் அளவறுக் கொணாமை)

திருப்பெருந்துறையில் அருளியது

எண்சீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

398. பொய்யனேன் அகம்நெகப் புகுந்தமு தூறும்
புதுமலர்க்கழ லிணையடி பிரிந்துங்
கையனேன் இன்னுஞ் செத்திலேன் அந்தோ
விழித்திருந் துள்ளக் கருத்தினை இழந்தேன்
ஐயனே அரசே அருட்பெருங் கடலே
அத்த னேஅயன் மாற்கறி யொண்ணாச்
செய்யமே னியனே செய்வகை அறியேன்
திருப்பெ ருந்துறை மேவிய சிவனே 1

399. புற்று மாய்மர மாய்ப்புனல் காலே
உண்டி யாய்அண்ட வாணரும் பிறரும்
வற்றி யாருநின் மலரடி காணா
மன்ன என்னையோர் வார்த்தையுட் படுத்துப்
பற்றினாய் பதையேன் மனம்மிக உருகேன்
பரிகி லேன்பரி யாவுடல் தன்னைச்
செற்றி லேன்இன்னுந் திரிதரு கின்றேன்
திருப்பெ ருந்துறை மேவிய சிவனே 2

---

1. கையனேன் - (துணையற்ற) தனியனேன். விழித்திருந்து உள்ளக் கருத்தினை இழந்தேன் - விழித்திருந்தும் உள்ளக் கருத்தினை இழந்துவிட்டேன்.

2. அண்டவாணர் - விண்ணகத்தேவர். ஓர் வார்த்தை- குருமணி ஈந்த மந்திர மொழி. பரிதல் - வருந்துதல் எதுகை நோக்கி செத்திலேன் என்பது செற்றிலேன் என நின்றது.

400. புலைய னேனையும் பொருளென நினைந்துன்
அருள்பு ரிந்தனை புரிதலுங் களித்துத்
தலையி னால்நடந் தேன்விடைப் பாகா
சங்க ராஎண்ணில் வானவர்க் கெல்லாம்
நிலைய னேஅலை நீர்விட முண்ட
நித்த னேஅடை யார்புர மெரித்த
சிலைய னேஎனைச் செத்திடப் பணியாய்
திருப்பெ ருந்துறை மேவிய சிவனே 3

401. அன்ப ராகிமற் றருந்தவம் முயல்வார்
அயனும் மாலுமற் றழலுறு மெழுகாம்
என்ப ராய்நினை வார்எ னைப்பலர்
நிற்க இங்கெனை எற்றினுக் காண்டாய்
வன்ப ராய்முரு டொக்குமென் சிந்தை
மரக்கண் என்செவி இரும்பினும் வலிது
தென்ப ராய்த்துறை யாய்சிவ லோகா
திருப்பெ ருந்துறை மேவிய சிவனே 4

402. ஆட்டுத் தேவர்தம் விதியொழித் தன்பால்
ஐயனே என்றுன் அருள்வழி யிருப்பேன்
நாட்டுத் தேவரும் நாடரும் பொருளே
நாத னேஉனைப் பிரிவுறு அருளைக்
காட்டித் தேவநின் கழலிணை காட்டிக்
காய மாயத்தைக் கழித்தருள் செய்யாய்
சேட்டைத் தேவர்தந் தேவர் பிரானே
திருப்பெ ருந்துறை மேவிய சிவனே 5

---

3. நிலையனே - ஆதாரமானவனே. சிலையன் - வில்லாளி
4. என்பராய் - உடம்பினராய். வன்பராய் முருடு - வலியபராய் மரக்கட்டை.
5. ஆட்டுத்தேவர் - (இன்ப துன்பங்களை ஊட்டி) ஆட்டுவிக்கும் தேவர். (கூற்றுவன் முதலியோர்)
நாட்டுத்தேவர் - வைகுந்த லோகம் முதலிய பதநாடுகளிலுள்ள திருமால் முதலிய தேவர்கள்.
சேட்டைத்தேவர் - காரணேசுரர். (உலகினைத் தொழிற்படுத்துவோர்)



403. அறுக்கி லேன்உடல் துணிபடத் தீப்புக்
கார்கி லேன்திரு வருள்வகை யறியேன்
பொறுக்கி லேன்உடல் போக்கிடங் காணேன்
போற்றி போற்றியென் போர்விடைப் பாகா
இறக்கி லேன்உனைப் பிரிந்தினி திருக்க
என்செய் கேன்இது செய்கஎன் றருளாய்
சிறைக்க ணேபுனல் நிலவிய வயல்சூழ்
திருப்பெ ருந்துறை மேவிய சிவனே 6

404. மாய னேமறி கடல்விடம் உண்ட
வான வாமணி கண்டத்தெம் அமுதே
நாயி னேன்உனை நினையவும் மாட்டேன்
நமச்சி வாயஎன் றுன்னடி பணியாப்
பேய னாகிலும் பெருநெறி காட்டாய்
பிறைகு லாஞ்சடைப் பிஞ்ஞக னேயோ
சேய னாகிநின் றலறுவ தழகோ
திருப்பெ ருந்துறை மேவிய சிவனே 7

405. போது சேரயன் பொருகடற் கிடந்தோன்
புரந்த ராதிகள் நிற்கமற் றென்னைக்
கோது மாட்டிநின் குரைகழல் காட்டிக்
குறிக்கொள் கென்றுநின் தொண்டரிற் கூட்டாய்
யாது செய்வதென் றிருந்தனன் மருந்தே
அடிய னேன்இடர்ப் படுவதும் இனிதோ
சீத வார்புனல் நிலவிய வயல்சூழ்
திருப்பெ ருந்துறை மேவிய சிவனே 8

---

7. மாயனே - (யாவையுமாய், அல்லையுமாய் நிற்கும்) மாயனே
பெருநெறி - மீண்டுவாராவழி - முத்திநெறி,
8. கோதும் ஆட்டி - குற்றம் நீக்கி. குறிக்கொள் - தொண்டருக்கு இடும் ஆணை.

406. ஞாலம் இந்திரன் நான்முகன் வானவர்
நிற்க மற்றெனை நயந்தினி தாண்டாய்
காலன் ஆர்உயிர் கொண்டபூங் கழலாய்
கங்கை யாய்அங்கி தங்கிய கையாய்
மாலும் ஓலமிட் டலறும்அம் மலர்க்கே
மரக்க ணேனையும் வந்திடப் பணியாய்
சேலும் நீலமும் நிலவிய வயல்சூழ்
திருப்பெ ருந்துறை மேவிய சிவனே 9

407. அளித்து வந்தெனக் காவஎன் றருளி
அச்சந் தீர்த்த நின் அருட்பெருங் கடலில்
திளைத்துந் தேக்கியும் பருகியும் உருகேன்
திருப்பெ ருந்துறை மேவிய சிவனே
வளைக்கை யானொடு மலரவன் அறியா
வான வாமலை மாதொரு பாகா
களிப்பெ லாம்மிகக் கலங்கிடு கின்றேன்
கயிலை மாமலை மேவிய கடலே 10

திருச்சிற்றம்பலம்

---

9. ஞாலம் - பூமி ஈண்டு பெரியோர்களை உணர்த்திற்று. மரக்கணேனையும் - மரம்போன்ற நீர் மல்காத கண்ணை யுடையேனையும் சேல் - மீன் விசேடம்; நீலம் - குவளை



## 24 அடைக்கலப்பத்து

### (பக்குவநிண்ணயம்)

திருப்பெருந்துறையில் அருளியது

கலவைப் பாட்டு

திருச்சிற்றம்பலம்

408. செழுக்கமலத் திரளனநின் சேவடிசேர்ந்
தமைந்த
பழுத்தமனத் தடியர் உடன் போயினர்யான்
பாவியேன்
புழுக்கணுடைப் புன்குரம்பைப் பொல்லாக் கல்வி
ஞானமிலா
அழுக்குமனத் தடியேன் உடையாய்உன்
அடைக்கலமே 1

409. வெறுப்பனவே செய்யும்என் சிறுமையைநின்
பெருமையினாற்
பொறுப்பவ னேஅராப் பூண்பவ னேபொங்கு
கங்கைசடைச்
செறுப்பவ னேநின் திருவரு ளால்என்
பிறவியைவேர்
அறுப்பவ னேஉடை யாய்அடி யேன்உன்
அடைக்கலமே 2

---

1. புழுக்கள் நுடை புன் குரம்பை - புழுக்கள் நெளிகின்ற இழிந்த கூடு (உடம்பு)

2. செறுப்பவனே - அடக்குபவனே.

410. பெரும்பெரு மான்என் பிறவியை வேரறுத்
துப்பெரும்பிச்சுத்
தரும்பெரு மான்சது ரப்பெரு மான்என்
மனத்தினுள்ளே
வரும்பெரு மான்மல ரோன்நெடு மாலறி
யாமல்நின்ற
அரும்பெரு மான்உடை யாய்அடி யேன்உன்
அடைக்கலமே 3

411. பொழிகின்ற துன்பப் புயல்வெள்ளத் தில்நின்
கழற்புணைகொண்
டிழிகின்ற அன்பர்கள் ஏறினர் வான்யான்
இடர்க்கடல்வாய்ச்
சுழிசென்று மாதர்த் திரைபொரக் காமச்
சுறவெறிய
அழிகின் றனன்உடை யாய்அடி யேன்உன்
அடைக்கலமே 4

412. சுருள்புரி கூழையர் சூழலிற் பட்டுன்
திறம்மறந்திங்
கிருள்புரி யாக்கையி லேகிடந் தெய்த்தனன்
மைத்தடங்கண்
வெருள்புரி மான்அன்ன நோக்கிதன் பங்கவிண்
ணோர்பெருமான்
அருள்புரி யாய்உடை யாய்அடி யேன்உன்
அடைக்கலமே 5

3. சதுரப்பெருமான் - வல்லாளன். பிச்சு - பித்து - (மால்)

4. இழிகின்ற - இறங்குகின்ற.

5. சுருள்புரி கூழையர் - சுருளாக முடித்த கூந்தலையுடைய இள மகளிர் (கூழை - கூந்தல்)



413. மாழைமைப் பாவிய கண்ணியர் வன்மத்
திடவுடைந்து
தாழியைப் பாவு தயிர்போல் தளர்ந்தேன்
தடமலர்த்தாள்
வாழியெப் போதுவந் தெந்நாள் வணங்குவன்
வல்வினையேன்
ஆழியப் பாஉடை யாய்அடி யேன்உன்
அடைக்கலமே 6

414. மின்கணினார் நுடங்கும் இடையார் வெகுளிவலையில்
அகப்பட்டுப்
புன்கண னாய்ப்புரள்வேனைப் புரளாமற்
புகுந்தருளி
என்கணிலே அமுதூறித் தித்தித்தென்
பிழைக்கிரங்கும்
அங்கணனே உடையாய் அடியேன்உன்
அடைக்கலமே 7

திருச்சிற்றம்பலம்

6. மாழைமைபாவிய கண்ணியர் - மாம்பிஞ்சின் பிளவை யொத்த மைபூசிய கண்ணையுடையவர். தாழி - தயிர் கடையும் மிடா. ஆழி அப்பா - அருட்கடலானஅப்பனே.

7. புன்கணனாய் - நொந்தவனாய். அங்கணன் , அழகிய கருணைக் கண்ணன்.

415. மாவடு வகிரன்ன கண்ணிபங் காநின்
மலரடிக்கே
கூவிடுவாய் கும்பிக் கேயிடு வாய்நின்
குறிப்பறியேன்
பாவிடை யாடு குழல்போற் கரந்து
பரந்ததுள்ளம்
ஆகெடு வேன்உடை யாய்அடி யேன்உன்
அடைக்கலமே 8

416. பிறிவறி யாஅன்பர் நின்அருட் பெய்கழல்
தாளிணைக்கீழ்
மறிவறி யாச்செல்வம் வந்துபெற் றார்உன்னை
வந்திப்பதோர்
நெறியறி யேன்நின்னை யேஅறி யேன்நின்னை
யேஅறியும்
அறிவறி யேன்உடை யாய்அடி யேன்உன்
அடைக்கலமே 9

417. வழங்குகின் றாய்க்குன் அருளா ரமுதத்தை
வாரிக்கொண்டு
விழுங்குகின்றேன் விக்கி னேன்வினை யேன்என்
விதியின்மையால்
தழங்கருந் தேனன்ன தண்ணீர் பருகத்தந்
துய்யக்கொள்ளாய்
அழுங்குகின் றேன்உடை யாய்அடி யேன்உன் 10
அடைக்கலமே

திருச்சிற்றம்பலம்

---

8. மாவடு வகிர் - மாம்பிஞ்சின் பிளவு. கும்பி - நரகம் பாவிடை ஆடுகுழல் - நெசவு நூற்பரப்பில் அங்கும் இங்கும் ஓடும் குழல்.

9. மறிவு அறியாச் செல்வம் - நீங்காச் சிவகதி.

10. தழங்கு - சலசல எனும் ஒலி.



# 25. ஆசைப் பத்து

## (ஆத்மவிலக்கணம்)

திருப்பெருந்துறையில் அருளியது

அறுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

418. கருடக் கொடியோன் காண மாட்டாக்
கழற்சே வடியென்னும்
பொருளைத் தந்திங் கென்னை யாண்ட
பொல்லா மணியேயோ
இருளைத் துரந்திட் டிங்கேவா
வென்றங் கேகூவும்
அருளைப் பெறுவான் ஆசைப்பட்டேன்
கண்டாய் அம்மானே 1

419. மொய்ப்பால் நரம்பு கயிறாக
மூளை என்பு தோல்போர்த்த
குப்பா யம்புக் கிருக்ககில்லேன்
கூவிக் கொள்ளாய் கோவேயோ
எப்பா லவர்க்கும் அப்பாலாம்
என்னா ரமுதேயோ
அப்பா காண ஆசைப் பட்டேன்
கண்டாய் அம்மானே 2

---

1. கருடக் கொடியோன் - திருமால் துரந்திட்டு - நீக்கி, அங்கு - சிவலோகத்தில்.

2. மொய் பால் நரம்பு - நெருங்கிய வெண்ணிற நரம்பு குப்பாயம் - சட்டை.

420. சீவார்ந் தீமொய்த் தழுக்கொடு திரியுஞ்
சிறுகுடி விதுசிதையக்
கூவாய் கோவே கூத்தா காத்தாட்
கொள்ளுங் குருமணியே
தேவா தேவர்க் கரியானே சிவனே
சிறிதென் முகநோக்கி
ஆவா என்ன ஆசைப் பட்டேன்
கண்டாய் அம்மானே 3

421. மிடைந்தெலும் பூத்தைமிக் கழுக்கூறல்
வீறிலி நடைக்கூடந்
தொடர்ந்தெனை நலியத் துயருறு கின்றேன்
சோத்தம்எம் பெருமானே
உடைந்துநைந் துருகி உன்னொளி நோக்கி
உன்திரு மலர்ப்பாதம்
அடைந்துநின் றிடுவான் ஆசைப்பட்டேன்
கண்டாய் அம்மானே 4

422. அளிபுண் ணகத்துப் புறந்தோல் மூடி
அடியே னுடையாக்கை
புளியம் பழமொத் திருந்தேன் இருந்தும்
விடையாய் பொடியாடீ
எளிவந் தென்னை ஆண்டு கொண்ட
என்னா ரமுதேயோ
அளியன் என்ன ஆசைப் பட்டேன்
கண்டாய் அம்மானே. 5

3. சீவார்ந்து - சீழ்வடிந்து. ஆவா - ஆ ஆ எனும் இரக்கக் குறிப்பு.

4. மிடைந்து - நெருங்கப்பெற்று. வீறிலி நடைக்கூடம்- சிறப்பில்லாத நடமாடும் வீடு. சோத்தம் - வணக்கம். ஸ்தோத்திரம் என்பதன் சிதைவு.

5. அளிபுண் - (சீழ் நிரம்பி) கனிந்தபுண். அளியன் - அருள் செய்யத் தக்கவன்; அளி இரக்கமுமாம்.



423. எய்த்தேன் நாயேன் இனியிங் கிருக்க
கில்லேன் இவ்வாழ்க்கை
வைத்தாய் வாங்காய் வானோர் அறியா
மலர்ச்சே வடியானே
முத்தா உன்தன் முகவொளி நோக்கி
முறுவல் நகைகாண
அத்தா சால ஆசைப் பட்டேன்
கண்டாய் அம்மானே. 6

424. பாரோர் விண்ணோர் பரவி யேத்தும்
பரனே பரஞ்சோதீ
வாராய் வாரா உலகந் தந்து
வந்தாட் கொள்வானே
பேரா யிரமும் பரவித் திரிந்தெம்
பெருமான் எனஏத்த
ஆரா அமுதே ஆசைப் பட்டேன்
கண்டாய் அம்மானே. 7

425. கையால் தொழுதுன் கழற்சே வடிகள்
கழுமத் தழுவிக்கொண்
டெய்யா தென்றன் தலைமேல் வைத்தெம்
பெருமான் பெருமானென்
றையா என்றன் வாயா லரற்றி
அழல்சேர் மெழுகொப்ப
ஐயாற் றரசே ஆசைப் பட்டேன்
கண்டாய் அம்மானே. 8

6. எய்த்தேன் - இளைத்தேன்.

7. வாரா உலகம் - மீண்டு வாரா உலகம்.

8. கழும - இறுக. அரற்றி - பலகாற்சொல்லி.

426. செடியா ராக்கைத் திறமற வீசிச்
சிவபுர நகர்புக்குக்
கடியார் சோதி கண்டு கொண்டென்
கண்ணிணை களிகூரப்
படிதா னில்லாப் பரம்பர னேஉன்
பழஅடி யார்கூட்டம்
அடியேன் காண ஆசைப் பட்டேன்
கண்டாய் அம்மானே. 9

427. வெஞ்சே லனைய கண்ணார் தம்
வெகுளி வலையில் அகப்பட்டு
நைஞ்சேன் நாயேன் ஞானச் சுடரே
நானோர் துணைகாணேன்
பஞ்சே ரடியாள் பாகத் தொருவா
பவளத் திருவாயால்
அஞ்சேல் என்ன ஆசைப் பட்டேன்
கண்டாய் அம்மானே. 10

திருச்சிற்றம்பலம்

9. செடி - முடைநாற்றம். கடியார் சோதி - காவலுனை பேரொளி வடிவினன். படி - ஒப்பு

10. நைஞ்சேன் - நைந்தேன் என்பதன் போலி



## 26. அதிசயப் பத்து

### (முத்தியிலக்கணம்)

திருப்பெருந்துறையில் அருளியது

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

428. வைப்பு மாடென்று ம்மாணிக்கத் தொளியென்று
மனத்திடை உருகாதே
செப்பு நேர்முலை மடவர லியர்தங்கள்
திறத்திடை நைவேனை
ஒப்பி லாதன உவமனி லிறந்தன
ஒண்மலர்த் திருப்பாதத்
தப்பன் ஆண்டுதன் அடியரிற் கூட்டிய
அதிசயங் கண்டாமே. 1

429. நீதி யாவன யாவையும் நினைக்கிலேன்
நினைப்பவ ரொடுங்கூடேன்
ஏத மேபிறந் திறந்துழல் வேன்றனை
என்னடி யானென்று
பாதி மாதொடுங் கூடிய பரம்பரன்
நிரந்தர மாய்நின்ற
ஆதி ஆண்டுதன் அடியரிற் கூட்டிய
அதிசயங் கண்டாமே. 2

1. வைப்புமாடு - வைத்தநிதி. நைவேன் - வருந்துவேன்.

2. ஏதம் - குற்றம். பாதி மாதுஒடும் கூடிய பரம்பரன் - அர்த்த நாரீசுவரர். நிரந்தரமாய் நின்ற ஆதி - முடிவிலா முதல்.

430. முன்னை என்னுடை வல்வினை போயிட
முக்கண துடையெந்தை
தன்னை யாவரும் அறிவதற் கரியவன்
எளியவன் அடியார்க்குப்
பொன்னை வென்றதோர் புரிசடை முடிதனில்
இளமதி யதுவைத்த
அன்னை ஆண்டுதன் அடியரிற் கூட்டிய
அதிசயங் கண்டாமே. 3

431. பித்த னென்றெனை உலகவர் பகர்வதோர்
காரணம் இதுகேளீர்
ஒத்துச் சென்றுதன் திருவருள் கூடிடும்
உபாயம தறியாமே
செத்துப் போய்அரு நரகிடை வீழ்வதற்
கொருப்படு கின்றேனை
அத்தன் ஆண்டுதன் அடியரிற் கூட்டிய
அதிசயங் கண்டாமே. 4

432. பரவு வாரவர் பாடுசென் றணைகிலேன்
பன்மலர் பறித்தேத்தேன்
குரவு வார்குழ லார்திறத் தேநின்று
குடிகெடு கின்றேனை
இரவு நின்றெரி யாடிய எம்மிறை
எரிசடை மிளிர்கின்ற
அரவன் ஆண்டுதன் அடியரிற் கூட்டிய
அதிசயங் கண்டாமே. 5

---

4. ஒருப்படுதல் - உடன்படுதல்

5. பாடு - பக்கம். குரவு - குராமலர். அரவன் - பாம்பணிந்த பெம்மான்.



433. எண்ணி லேன்திரு நாமஅஞ் செழுத்தும்என்
ஏழைமை யதனாலே
நண்ணி லேன்கலை ஞானிகள் தம்மொடு
நல்வினை நயவாதே
மண்ணி லேபிறந் திறந்துமண் ணாவதற்
கொருப்படு கின்றேனை
அண்ணல் ஆண்டுதன் அடியரிற் கூட்டிய
அதிசயங் கண்டாமே. 6

434. பொத்தை ஊன்சுவர் புழுப்பொதிந் துளுத்தசும்
பொழுகிய பொய்க்கூரை
இத்தை மெய்யெனக் கருதிநின் றிடர்க்கடற்
சுழித்தலைப் படுவேனை
முத்து மாமணி மாணிக்க வயிரத்த
பவளத்தின் முழுச்சோதி
அத்தன் ஆண்டுதன் அடியரிற் கூட்டிய
அதிசயங் கண்டாமே. 7

---

6. எண்ணிலேன் - மனம் பயில்கின்றேனில்லை. நண்ணிலேன்- சேர்கின்றேனில்லை.

7. பொத்தை - துவாரம் (பொள்ளல்) நவத்துவாரத்தை உடையது. அசும்பு - அழுக்குகளின் கசிவு

435. நீக்கி முன்னெனைத் தன்னொடு நிலாவகை
குரம்பையிற் புகப்பெய்து
நோக்கி நுண்ணிய நொடியன சொற்செய்து
நுகமின்றி விளாக்கைத்துத்
தூக்கி முன்செய்த பொய்யறத் துகளறுத்
தெழுதரு சுடர்ச்சோதி
ஆக்கி ஆண்டுதன் அடியரிற் கூட்டிய
அதிசயங் கண்டாமே.

436. உற்ற ஆக்கையின் உறுபொருள் நறுமலர்
எழுதரு நாற்றம்போல்
பற்ற லாவதோர் நிலையிலாப் பரம்பொருள்
அப்பொருள் பாராதே
பெற்றவா பெற்ற பயனது நுகர்ந்திடும்
பித்தர்சொல் தெளியாமே
அத்தன் ஆண்டுதன் அடியரிற் கூட்டிய
அதிசயங் கண்டாமே. 9

437. இருள்தி ணிந்தெழுந் திட்டதோர் வல்வினைச்
சிறுகுடி லிதுஇத்தைப்
பொருளெ னக்களித் தருநர கத்திடை
விழப்புகு கின்றேனைத்
தெருளும் மும்மதில் நொடிவரை இடிதரச்
சினப்பதத் தொடுசெந்தீ
அருளும் மெய்ந்நெறி பொய்ந்நெறி நீக்கிய
அதிசயங் கண்டாமே. 10

திருச்சிற்றம்பலம்

---

8. நுண்ணிய நொடியன சொல்செய்து - நுண்ணியவும் நொடியளவினதுமான ஒப்பற்ற ஒரு மொழி ஈந்து.
நுகமின்றி விளாக்கைத்து - நுகம் இல்லாது உழுதல்போல.
தூக்கி - உலகியலினின்றும் எடுத்து.
இத்திருப்பாடலுள் குடமுழநந்தீசனை வாசகனாகக்கொண்ட அருட்செயல் கூறியருளினார்.

9. பற்றல் ஆவதோர் நிலையிலா - கருவிகரணங்களாற் சென்றெய்தலாகாத் தன்மையற்ற

10. சினப்பதம் - கோபக் குறிப்பு



# 27. புணர்ச்சிப்பத்து

## (அத்துவிதவிலக்கணம்)

திருப்பெருந்துறையில் அருளியது

ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

438. சுடர்பொற் குன்றைத் தோளா முத்தை
வாளா தொழும்புகந்து
கடைபட் டேனை ஆண்டு கொண்ட
கருணா லயனைக் கருமால் பிரமன்
தடைபட் டின்னுஞ் சார மாட்டாத்
தன்னைத் தந்த என்னா ரமுதைப்
புடைபட் டிருப்ப தென்றுகொல் லோஎன்
பொல்லா மணியைப் புணர்ந்தே. 1

439. ஆற்ற கில்லேன் அடியேன் அரசே
அவனி தலத்தைம் புலனாய
சேற்றி லழுந்தாச் சிந்தை செய்து
சிவனெம் பெருமான் என்றேத்தி
ஊற்று மணல்போல் நெக்குநெக்
குள்ளே உருகி ஓலமிட்டுப்
போற்றி நிற்ப தென்றுகொல் லோஎன்
பொல்லா மணியைப் புணர்ந்தே. 2

---

1. தோளா - துளையிடப்படாத. கருணாலயன் - கருணையின் உறைவிடமானவன். புடைபட்டிருப்பது - திருமுன்னிலையில் இருப்பது.

440. நீண்ட மாலும் அயனும் வெருவ
    நீண்ட நெருப்பை விருப்பி லேனை
ஆண்டுகொண்ட என்ஆ ரமுதை
    அள்ளூ றுள்ளத் தடியார்முன்
வேண்டுந் தனையும் வாய்விட் டலறி
    விரையார் மலர்தூவிப்
பூண்டு கிடப்ப தென்றுகொல் லோஎன்
    பொல்லா மணியைப் புணர்ந்தே. 3

441. அல்லிக் கமலத் தயனும் மாலும்
    அல்லா தவரும் அமரர் கோனுஞ்
சொல்லிப் பரவும் நாமத் தானைச்
    சொல்லும் பொருளும் இறந்த சுடரை
நெல்லிக் கனியைத் தேனைப் பாலை
    நிறைஇன் அமுதை அமுதின் சுவையைப்
புல்லிப் புணர்வ தென்றுகொல் லோஎன்
    பொல்லா மணியைப் புணர்ந்தே. 4

442. திகழத் திகழும் அடியும் முடியுங்
    காண்பான் கீழ்மேல் அயனும் மாலும்
அகழப் பறந்துங் காண மாட்டா
    அம்மான் இம்மா நிலமுழுதும்
நிகழப் பணிகொண் டென்னை ஆட்கொண்
    டாவா என்ற நீர்மை யெல்லாம்
புகழப் பெறுவ தென்றுகொல் லோஎன்
    பொல்லா மணியைப் புணர்ந்தே. 5

---

3. விருப்பிலேனை - தாகமற்ற என்னை. அள்ளூறு உள்ளம்- அன்பு சுரக்கும் மனம். பூண்டு கிடப்பது - விடாது பற்றிக் கொண்டு கிடத்தல்.

4. புல்லிப்புணர்வது - ஒன்றுபடத். தழுவுவது (நீரில் உப்புப்போல் அத்துவிதமாதல்)

5. திகழத் திகழும் - (யாவும்) ஒளிமயமாகுமாறு சோதியாய்த் தோன்றும். அகழ - அகழ்ந்தும். நிகழ - (ஆட் கொண்ட) நிகழ்வினை அறியுமாறு. புகழப் பெறுவது- மணிவார்த்தை பேசுவது



443. பரிந்து வந்து பரமா னந்தம்
    பண்டே அடியேற் கருள்செய்யப்
பிரிந்து போந்து பெருமா நிலத்தில்
    அருமா லுற்றேன் என்றென்று
சொரிந்த கண்ணீர் சொரிய உள்நீர்
    உரோமஞ் சிலிர்ப்ப உகந்தன் பாய்ப்
புரிந்து நிற்ப தென்றுகொல் லோஎன்
    பொல்லா மணியைப் புணர்ந்தே. 6

444. நினையப் பிறருக் கரிய நெருப்பை
    நீரைக் காலை நிலனை விசும்பைத்
தனையொப் பாரை யில்லாத் தனியை
    நோக்கித் தழைத்துத் தழுத்த கண்டங்
கனையக் கண்ணீர் அருவி பாயக்
    கையுங் கூப்பிக் கடிமலராற்
புனையப் பெறுவ தென்றுகொல் லோஎன்
    பொல்லா மணியைப் புணர்ந்தே. 7

445. நெக்கு நெக்குள் உருகி உருகி
    நின்றும் இருந்துங் கிடந்தும் எழுந்தும்
நக்கும் அழுதுந் தொழுதும் வாழ்த்தி
    நானா விதத்தாற் கூத்தும் நவிற்றிச்
செக்கர் போலுந் திருமேனி
    திகழ நோக்கிச் சிலிர்சி லிர்த்துப்
புக்கு நிற்ப தென்றுகொல் லோஎன்
    பொல்லா மணியைப் புணர்ந்தே. 8

---

6. அருமால் - பெருமயக்கம். புரிந்து நிற்பது - தெளி வெய்தி நிற்பது.

7. தழைத்து - பூரித்து. தழுத்த கண்டம் - தழுதழுத்த மிடறு.

8. புக்கு நிற்பது - சிவனுள்ளே புகுந்து நிற்றல்

446. தாதாய் மூவே ழுலகுக்குந்
தாயே நாயேன் தனையாண்ட
பேதாய் பிறவிப் பிணிக்கோர் மருந்தே
பெருந்தேன் பில்க எப்போது
மேதா மணியே என்றென் றேத்தி
இரவும் பகலும் எழிலார் பாதப்
போதாய்ந் தணைவ தென்றுகொல் லோஎன்
பொல்லா மணியைப் புணர்ந்தே. 9

447. காப்பாய் படைப்பாய் கரப்பாய் முழுதுங்
கண்ணார் விசும்பின் விண்ணோர்க் கெல்லாம்
மூப்பாய் மூவா முதலாய் நின்ற
முதல்வா முன்னே எனையாண்ட
பார்ப்பா னேஎம் பரமா என்று
பாடிப் பாடிப் பணிந்து பாதப்
பூப்போ தணைவ தென்றுகொல் லோஎன்
பொல்லா மணியைப் புணர்ந்தே. 10

திருச்சிற்றம்பலம்

---

9. தாதாய் - தந்தையே

பேதாய் என்றது பழிப்பதுபோற் புகழ்ந்தவாறும். இங்கு பேரருளாளன் எனும் குறிப்புப் பொருள் உணர்த்திற்று. ஏதாமணியே என்பதனை ஏதும் ஆம் மணியே என விரித்து வேண்டுவார் வேண்டும் வகையில் அருளும் சிந்தாமணி எனப் பொருள் கொள்க.

ஆய்ந்து - பலகாலும் நினைந்து.



## 28. வாழாப் பத்து

### (முத்தியுபாயம்)

(திருப்பெருந்துறையில் அருளியது)

எழுசீர்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

448. பாரொடு விண்ணாய்ப் பரந்த எம்பரனே
பற்றுநான் மற்றிலேன் கண்டாய்
சீரொடு பொலிவாய் சிவபுரத் தரசே
திருப்பெருந் துறையுறை சிவனே
யாரொடு நோகேன் ஆர்க்கெடுத் துரைக்கேன்
ஆண்டநீ அருளிலை யானால்
வார்கடல் உலகில் வாழ்கிலேன் கண்டாய்
வருகஎன் றருள்புரி யாயே. 1

449. வம்பனேன் தன்னை ஆண்டமா மணியே
மற்றுநான் பற்றிலேன் கண்டாய்
உம்பரும் அறியா ஒருவனே இருவர்க்
குணர்விறந் துலகமூ டுருவுஞ்
செம்பெரு மானே சிவபுரத் தரசே
திருப்பெருந் துறையுறை சிவனே
எம்பெரு மானே என்னையாள் வானே
என்னைநீ கூவிக்கொண் டருளே. 2

---

2. வம்பனேன் - வீணன். செம்பெருமானே - தீயுருவான பெருமானே

450. பாடிமால் புகழும் பாதமே அல்லால்
பற்றுநான் மற்றிலேன் கண்டாய்
தேடிநீ ஆண்டாய் சிவபுரத் தரசே
திருப்பெருந் துறையுறை சிவனே
ஊடுவ துன்னோ டுவப்பதும் உன்னை
உணர்த்துவ துனக்கெனக் குறுதி
வாடினேன் இங்கு வாழ்கிலேன் கண்டாய்
வருகஎன் றருள்புரி யாயே. 3

451. வல்லைவா ளரக்கர் புரமெரித் தானே
மற்றுநான் பற்றிலேன் கண்டாய்
தில்லைவாழ் கூத்தா சிவபுரத் தரசே
திருப்பெருந் துறையுறை சிவனே
எல்லைமூ வுலகும் உருவியன் றிருவர்
காணும்நாள் ஆதியீ றின்மை
வல்லையாய் வளர்ந்தாய் வாழ்கிலேன் கண்டாய்
வருகஎன் றருள்புரி யாயே. 4

452. பண்ணினேர் மொழியாள் பங்கநீ யல்லால்
பற்றுநான் மற்றிலேன் கண்டாய்
திண்ணமே ஆண்டாய் சிவபுரத் தரசே
திருப்பெருந் துறையுறை சிவனே
எண்ணமே உடல்வாய் மூக்கொடு செவிகண்
என்றிவை நின்கணே வைத்து
மண்ணின்மேல் அடியேன் வாழ்கிலேன் கண்டாய்
வருகஎன் றருள்புரி யாயே. 5

---

3. ஊடுதல் - காதலால் உண்டாம் பிணக்கு



453. பஞ்சின்மெல் லடியாள் பங்கநீ யல்லால்
பற்றுநான் மற்றிலேன் கண்டாய்
செஞ்செவே ஆண்டாய் சிவபுரத் தரசே
திருப்பெருந் துறையுறை சிவனே
அஞ்சினேன் நாயேன் ஆண்டுநீ அளித்த
அருளினை மருளினால் மறந்த
வஞ்சனேன் இங்கு வாழ்கிலேன் கண்டாய்
வருகஎன் றருள்புரி யாயே. 6

454. பரிதிவாழ் ஒளியாய் பாதமே யல்லால்
பற்றுநான் மற்றிலேன் கண்டாய்
திருவுயர் கோலச் சிவபுரத் தரசே
திருப்பெருந் துறையுறை சிவனே
கருணையே நோக்கிக் கசிந்துளம் உருகிக்
கலந்துநான் வாழுமா றறியா
மருளனேன் உலகில் வாழ்கிலேன் கண்டாய்
வருகஎன் றருள்புரி யாயே. 7

455. பந்தணை விரலாள் பங்கநீ யல்லால்
பற்றுநான் மற்றிலேன் கண்டாய்
செந்தழல் போல்வாய் சிவபுரத் தரசே
திருப்பெருந் துறையுறை சிவனே
அந்தமில் அமுதே அரும்பெரும் பொருளே
ஆரமு தேஅடி யேனை
வந்துய ஆண்டாய் வாழ்கிலேன் கண்டாய்
வருகஎன் றருள்புரி யாயே. 8

---

6. செஞ்செவே - மிகச் செம்மையாக

7. பரிதிவாழ் ஒளியாய் - சூரியனை வாழ்விக்கும் மெய்ச் சோதியனே!

456. பாவநா சாஉன் பாதமே யல்லால்
பற்றுநான் மற்றிலேன் கண்டாய்
தேவர்தந் தேவே சிவபுரத் தரசே
திருப்பெருந் துறையுறை சிவனே
மூவுல குருவ இருவர்கீழ் மேலாய்
முழங்கழ லாய்நிமிர்ந் தானே
மாவுரியானே வாழ்கிலேன் கண்டாய்
வருகஎன் றருள்புரி யாயே. 9

457. பழுதில்தொல் புகழாள் பங்கநீ யல்லால்
பற்றுநான் மற்றிலேன் கண்டாய்
செழுமதி அணிந்தாய் சிவபுரத் தரசே
திருப்பெருந் துறையுறை சிவனே
தொழுவனோ பிறரைத் துதிப்பனோ எனக்கோர்
துணையென நினைவனோ சொல்லாய்
மழவிடை யானே வாழ்கிலேன் கண்டாய்
வருகஎன் றருள்புரி யாயே. 10

திருச்சிற்றம்பலம்

9. மாவுரியானே - யானைத் தோலைப் போர்த்தவனே.

10. மழவிடை - இளங்காளை



## 29. அருட்பத்து

### (மகா மாயாசுத்தி)

திருப்பெருந்துறையில் அருளியது

எழுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

458. சோதியே சுடரே சூழொளி விளக்கே
சுரிகுழற் பணைமுலை மடந்தை
பாதியே பரனே பால்கொள்வெண் ணீற்றாய்
பங்கயத் தயனும்மா லறியா
நீதியே செல்வத் திருப்பெருந் துறையில்
நிறைமலர்க் குருந்தமே வியசீர்
ஆதியே அடியேன் ஆதரித் தழைத்தால்
அதெந்துவே என்றரு ளாயே. 1

459. நிருத்தனே நிமலா நீற்றனே நெற்றிக்
கண்ணனே விண்ணுளோர் பிரானே
ஒருத்தனே உன்னை ஓலமிட் டலறி
உலகெலாந் தேடியுங் காணேன்
திருத்தமாம் பொய்கைத் திருப்பெருந் துறையில்
செழுமலர்க் குருந்தமே வியசீர்
அருத்தனே அடியேன் ஆதரித் தழைத்தால்
அதெந்துவே என்றரு ளாயே. 2

1. சோதியே - காண்பரிய பேரொளியே (பரம்). சுடரே - பரஞ்சோதியுட் பிறிவற நிற்கும் அருட்சுடரே (அம்மை). சூழ் ஒளி விளக்கே - அறிவொளி பரப்பும் ஞானவிளக்கே (குருமணி). ஆதரித்து - தாகத்துடன். அதெந்துவே - "அது என்ன ?"

2. அருத்தன் - பொருளன்.

460. எங்கணு யகனே என்னுயிர்த் தலைவா
ஏலவார் குழலிமார் இருவர்
தங்கணு யகனே தக்கநற் காமன்
தனதுடல் தழலெழ விழித்த
செங்கணு யகனே திருப்பெருந் துறையில்
செழுமலர்க் குருந்தமே வியசீர்
அங்கணு அடியேன் ஆதரித் தழைத்தால்
அதெந்துவே என்றரு ளாயே. 3

461. கமலநான் முகனும் கார்முகில் நிறத்துக்
கண்ணனும் நண்ணுதற் கரிய
விமலனே யெமக்கு வெளிப்படா யென்ன
வியன்தழல் வெளிப்பட்ட எந்தாய்
திமிலநான் மறைசேர் திருப்பெருந் துறையில்
செழுமலர்க் குருந்தமே வியசீர்
அமலனே அடியேன் ஆதரித் தழைத்தால்
அதெந்துவே என்றரு ளாயே. 4

462. துடிகொள்நே ரிடையாள் சுரிகுழல் மடந்தை
துணைமுலைக் கண்கள் தோய் சுவடு
பொடிகொள்வான் தழலிற் புள்ளிபோல் இரண்டு
பொங்கொளி தங்குமார் பினனே
செடிகொள்வான் பொழில்சூழ் திருப்பெருந் துறையில்
செழுமலர்க் குருந்தமே வியசீர்
அடிகளே அடியேன் ஆதரித் தழைத்தால்
அதெந்துவே என்றரு ளாயே. 5

---

3. செங்கண் - சிவந்த நெற்றிக் கண். அங்கணு - அருள் கனிய நோக்கும் அழகிய கண்ணனே!

4. திமிலம் - பேரொலி, அமலன் - தூயோன்

5. அடிகளே - ஞானகுரவனே!



463. துப்பனே தூயாய் தூயவெண் ணீறு
துதைந்தெழு துளங்கொளி வயிரத்
தொப்பனே உன்னை உள்குவார் மனத்தின்
உறுசுவை அளிக்கும்ஆ ரமுதே
செப்பமா மறைசேர் திருப்பெருந் துறையில்
செழுமலர்க் குருந்தமே வியசீர்
அப்பனே அடியேன் ஆதரித் தழைத்தால்
அதெந்துவே என்றரு ளாயே. 6

464. மெய்யனே விகிர்தா மேருவே வில்லா
மேவலர் புரங்கள்மூன் றெரித்த
கையனே காலாற் காலனைக் காய்ந்த
கடுந்தழற் பிழம்பன்ன மேனிச்
செய்யனே செல்வத் திருப்பெருந் துறையில்
செழுமலர்க் குருந்தமே வியசீர்
ஐயனே அடியேன் ஆதரித் தழைத்தால்
அதெந்துவே என்றரு ளாயே. 7

465. முத்தனே முதல்வா முக்கணு முனிவா
மொட்டறு மலர்பறித் திறைஞ்சிப்
பத்தியாய் நினைந்து பரவுவார் தமக்குப்
பரகதி கொடுத்தருள் செய்யுஞ்
சித்தனே செல்வத் திருப்பெருந்துறையில்
செழுமலர்க் குருந்தமே வியசீர்
அத்தனே அடியேன் ஆதரித் தழைத்தால்
அதெந்துவே என்றரு ளாயே. 8

---

6. துப்பனே - பவளம் போன்ற தீ வண்ணனே; தாளடைந் தார்க்கு வலிமை தருபவனுமாம்.
துதைந்து எழுதுளங்கு ஒளி சண்ணித்த - பூச்சினூடே எழுகின்ற செவ்வொளி.

7. விகிர்தா - பலபல வேடங் கொள்வோனே!
மேவலர் - பகைவர்.
ஐயன் - ஆசான்

8. அத்தனே - ஞானத்தந்தையே

466. மருளனேன் மனத்தை மயக்கற நோக்கி
மறுமையோ டிம்மையுங் கெடுத்த
பொருளனே புனிதா பொங்குவா ளரவங்
கங்கைநீர் தங்குசெஞ் சடையாய்
தெருளுநான் மறைசேர் திருப்பெருந் துறையில்
செழுமலர்க் குருந்தமே வியசீர்
அருளனே அடியேன் ஆதரித் தழைத்தால்
அதெந்துவே என்றரு ளாயே. 9

467. திருந்துவார் பொழில்சூழ் திருப்பெருந் துறையில்
செழுமலர்க் குருந்தமே வியசீர்
இருந்தவா றெண்ணி ஏசறு நினைந்திட்
டென்னுடை யெம்பிரான் என்றென்
றருந்தவா நினைந்தே ஆதரித் தழைத்தால்
அலைகடல் அதனுளே நின்று
பொருந்தவா கயிலை புகுநெறி இதுகாண்
போதராய் என்றரு ளாயே. 10

திருச்சிற்றம்பலம்

---

9. அருளனே - அருள்மேனி தாங்கிவந்தோனே!

10. ஏசறுநினைந்து - ஆசைப்பட்டு நினைந்து போதராய் - வருக.



## 30. திருக்கழுக் குன்றப் பதிகம்

### (சற்குருதரிசனம்)

திருக்கழுக் குன்றத்தில் அருளியது

எழுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

468. பிணக்கி லாதபெ ருந்து றைப்பெரு
மான்உன் நாமங்கள் பேசுவார்க்
கிணக்கி லாததோர் இன்ப மேவருந்
துன்ப மேதுடைத் தெம்பிரான்
உணக்கி லாததோர் வித்து மேல்விளை
யாமல் என்வினை ஒத்தபின்
கணக்கி லாத்திருக் கோலம் நீவந்து
காட்டி னாய்கழுக் குன்றிலே. 1

469. பிட்டு நேர்பட மண்சு மந்த
பெருந்து றைப்பெரும் பித்தனே
சட்ட நேர்பட வந்தி லாத
சழக்க னேன்உனைச் சார்ந்திலேன்
சிட்ட னேசிவ லோக னேசிறு
நாயி னுங்கடை யாயவெங்
கட்ட னேனையும் ஆட்கொள் வான்வந்து
காட்டி னாய்கழுக் குன்றிலே. 2

---

1. பிணக்கிலாத - மாறுபாடில்லாத
இணக்கிலாத - இணையில்லாத
உணக்கிலாததோர் வித்து - உலர்ந்து போதலில்லாத வித்து.

2. நேர்பட - இசைந்து. சட்ட நேர்பட - இயம நியமத்திற் கியைய. சழக்கன் - பொய்யன். வெம்கட்டன் - கொடிய துன்ப முடையேன்.

470. மலங்கி னேன்கண்ணின் நீரை மாற்றி
மலங்கெ டுத்த பெருந்துறை
விலங்கி னேன்வினைக் கேட னேன்இனி
மேல்வி ளைவ தறிந்திலேன்
இலங்கு கின்றநின் சேவடிகள்
இரண்டும் வைப்பிட மின்றியே
கலங்கி னேன்கலங் காமலே வந்து
காட்டி னாய்கழுக் குன்றிலே.

471. பூணொ ணாததொ ரன்பு பூண்டு
பொருந்தி நாள்தொறும் போற்றவும்
நாணொ ணாததொர் நாணம் எய்தி
நடுக்க டலுள்அ ழுந்திநான்
பேணொ ணாதபெ ருந்துறைப்பெருந்
தோணி பற்றி யுகைத்தலுங்
காணொ ணாத்திருக் கோலம் நீவந்து
காட்டி னாய்கழுக் குன்றிலே. 4

3. மலங்கினேன் – மயக்கமடைந்த எனது. விலங்கினேன் - விட்டு நீங்கினேன். வினை கேடன் - பொல்லா வினையேன். வைப்பிடம் - மீளத்தோன்றியருளும் இடம்.

4. பூணொணாதது ஓர் அன்பு - என்தரம் அல்லா அன்பு. நாணொணாதது ஓர் நாணம். - என் நிலைக்கு வேண்டாத நாணம். பேணொணாதது - பாதுகாத்துக் கொளற்கரிய பெருந்துறைத் தோணி என்றது பெருந்துறைக் கண் தமக்குக் கிடைத்த அருளாகிய தோணியை என்க. உகைத்தல் - செலுத்துதல்



472. கோல மேனிவ ராக மேகுண
மாம்பெ ருந்துறைக் கொண்டலே
சீல மேதும் அறிந்தி லாதஎன்
சிந்தை வைத்த சிகாமணி
ஞால மேகரி யாக நான்உனை
நச்சி நச்சிட வந்திடுங்
கால மேஉனை ஓதநீ வந்து
காட்டி னாய்கழுக் குன்றிலே. 5

473. பேதம் இல்லதொர் கற்ப ளித்த
பெருந்து றைப்பெரு வெள்ளமே
ஏத மேபல பேச நீஎனை
ஏதி லார்முனம் என்செய்தாய்
சாதல் சாதல்பொல் லாமை யற்ற
தனிச்ச ரண்சர ணாமெனக்
காத லால்உனை ஓத நீவந்து
காட்டி னாய்கழுக் குன்றிலே. 6

474. இயக்கி மார்அறு பத்து நால்வரை
எண்குணம் செய்த ஈசனே
மயக்க மாயதோர் மும்ம லப்பழ
வல்வி னைக்குள் அழுந்தவுந்
துயக்க றுத்தெனை ஆண்டு கொண்டுநின்
தூய்ம லர்க்கழல் தந்தெனைக்
கயக்க வைத்தடி யார்மு னேவந்து
காட்டி னாய்கழுக் குன்றிலே. 7

திருச்சிற்றம்பலம்

5. வராகம் - பன்றி. கொண்டலே - மேகமே. சிகாமணி - முடிமணி போன்றவனே. ஞாலமேகரியாக - உலகோர் சாட்சியாக.

6. பேதமில்லதொர் கற்பு - வேறுபாடின்றி ஒன்றாகக்காணும் அறிவு. ஏதம் - குற்றம். ஏதிலார் - அயலோர்.

7. துயக்கு - வினைத்துன்பம். கயக்க - கலங்க.

## 31. கண்டபத்து

### ( நிருத்ததரிசனம் )

திருத்தில்லையில் அருளியது

கொச்சகக் கலிப்பா

திருச்சிற்றம்பலம்

475.
இந்திரிய வயமயங்கி இறப்பதற்கே காரணமாய்
அந்தரமே திரிந்துபோய் அருநரகில் வீழ்வேற்குச்
சிந்தைதனைத் தெளிவித்துச் சிவமாக்கி எனையாண்ட
அந்தமிலா ஆனந்தம் அணிகொள் தில்லை கண்டேனே. 1

476.
வினைப்பிறவி என்கின்ற வேதனையில் அகப்பட்டுத்
தனைச்சிறிதும் நினையாதே தளர்வெய்திக் கிடப்பேனை
எனைப்பெரிதும் ஆட்கொண்டென் பிறப்பறுத்த இணையிலியை
அனைத்துலகுந் தொழுந்தில்லை அம்பலத்தே கண்டேனே. 2

477.
உருத்தெரியாக் காலத்தே உள்புகுந்தென் உளம்மன்னிக்
கருத்திருத்தி ஊன்புக்குக் கருணையினால் ஆண்டுகொண்ட
திருத்துருத்தி மேயானைத் தித்திக்குஞ் சிவபதத்தை
அருத்தியினால் நாயடியேன் அணிகொள்தில்லை கண்டேனே. 3

---

1. அந்தரம் - வானுலகம்.
2. வினைப்பிறவி - வினையால் வரும் பிறவி.
3. உருத் தெரியாக்காலம் - உடலின்றிக் கேவலநிலையிற் கிட ந்த காலம். உள்புகுந்து - உயிருட்கலந்து. உளம் மன்னி - உள்ளத்தில் நிலைபெற்று. கருத்திருத்தி - கருவிலேயே கழல் நினையும் செம்மைநலம் ஈந்து. அருத்தி - ஆசைப்பாடு.



478.
கல்லாத புல்லறிவிற் கடைப்பட்ட நாயேனை
வல்லாள னாய்வந்து வனப்பெய்தி யிருக்கும் வண்ணம்
பல்லோருங் காணஎன்றன் பசுபாசம் அறுத்தானை
எல்லோரும் இறைஞ்சுதில்லை அம்பலத்தே கண்டேனே. 4

479.
சாதிகுலம் பிறப்பென்னுஞ் சுழிப்பட்டுத் தடுமாறும்
ஆதமிலி நாயேனை அல்லலறுத் தாட்கொண்டு
பேதைகுணம் பிறருருவம் யானெனதென் னுரைமாய்த்துக்
கோதில்அமு தானானைக் குலாவுதில்லை கண்டேனே. 5

480.
பிறவிதனை அறமாற்றிப் பிணிமூப்பென் றிவையிரண்டும்
உறவினொடும் ஒழியச்சென் றுலகுடைய ஒருமுதலைச்
செறிபொழில்சூழ் தில்லைநகர்த் திருச்சிற்றம் பலம்மன்னி
மறையவரும் வானவரும் வணங்கிடநான் கண்டேனே 6

481.
பத்திமையும் பரிசுமிலாப் பசுபாசம் அறுத்தருளிப்
பித்தன்இவன் எனஎன்னை ஆக்குவித்துப் பேராமே
சித்தமெனுந் திண்கயிற்றால் திருப்பாதங் கட்டுவித்த
வித்தகனார் விளையாடல் விளங்குதில்லை கண்டேனே 7

---

4. வனப்பு - திரு. பசுபாசம் - பசுவாந்தன்மையை ஆக்கும் பாசம்.
5. ஆதமிலி - அன்பில்லாதவன். பேதைகுணம் - மெய்யை விட்டுப் பொய்யைப் பற்றல். பிறருருவம் - பிற தெய்வம். (மற்றோர் தெய்வம்) யான், எனது என்னுரை - வித்தாரப் பேச்சு. குலாவுதில்லை - விளங்கும் திருத்தில்லை.
6. அற மாற்றி - முற்றும் கெடுத்து. ஒருமுதல் - ஒப்பற்ற காரணனை.
7. பத்திமை - சிவநேயம். பரிசு. - நீதியைநினையும் நல்லியல்பு. பேராமே - பெயராமல், அசையாமல்

482.
அளவிலாப் பாவகத்தால் அமுக்குண்டிங் கறிவின்றி
விளைவொன்றும் அறியாதே வெறுவியனாய்க் கிடப்பேனுக்
களவிலா ஆனந்தம் அளித்தென்னை ஆண்டானைக்
களவிலா வானவருந் தொழுந்தில்லை கண்டேனே 8

483.
பாங்கினொடு பரிசொன்றும் அறியாத நாயேனை
ஓங்கியுளத் தொளிவளர உலப்பிலா அன்பருளி
வாங்கிவினை மலம் அறுத்து வான்கருணை தந்தானை
நான்குமறை பயில்தில்லை அம்பலத்தே கண்டேனே 9

484.
பூதங்கள் ஐந்தாகிப் புலனாகிப் பொருளாகிப்
பேதங்கள் அனைத்துமாய்ப் பேதமிலாப் பெருமையனைக்
கேதங்கள் கெடுத்தாண்ட கிளரொளியை மரகதத்தை
வேதங்கள் தொழுதேத்தும் விளங்குதில்லை கண்டேனே 10

திருச்சிற்றம்பலம்

---

8. பாவகம் - நினைவு. வெறுவியன் - பதடி.
களவிலாவானவர் - மயங்கிய அறிவிலா வானவர்.

9. பாங்கு - முறைமை, அறியும் நெறி. பரிசு - அந்நெறியிற் செல்லற்குரிய நல்லியல்பு. உலப்பிலா அன்பு - இறவாத இன்ப அன்பு.

10. கேதம் - துன்பம்.



## 32. பிரார்த்தனைப் பத்து

### (சதா முத்தி)

திருப்பெருந்துறையில் அருளியது

அறுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

485. கலந்து நின்னடியா ரோடன்று
வாளா களித்தி ருந்தேன்
புலர்ந்து போன காலங்கள்
புகுந்து நின்ற திடர்பின்னாள்
உலந்து போனேன் உடையானே
உலவா இன்பச் சுடர்காண்பான்
அலந்து போனேன் அருள்செய்யாய்
ஆர்வங் கூர அடியேற்கே. 1

486. அடியார் சிலர்உன் அருள்பெற்றார்
ஆர்வங் கூர யான்அவமே
முடையார் பிணத்தின் முடிவின்றி
முனிவால் அடியேன் மூக்கின்றேன்
கடியேனுடைய கடுவினையைக்
களைந்துன் கருணைக் கடல்பொங்க
உடையாய் அடியேன் உள்ளத்தே
ஓவா துருக அருளாயே 2

---

1. உலவா இன்பம் - அந்தமிலா ஆனந்தம். புலர்ந்து போன - கழிந்தன. அலந்து போனேன் - நொந்து போனேன். ஆர்வம் - அன்பு; கூர - மிக.

2. முனிவு - வெறுப்பு. மூக்கின்றேன் - வறிதே மூப்படைகின்றேன்.

487. அருளா ரமுதப் பெருங்கடல்வாய்
அடியா ரெல்லாம் புக்கழுந்த
இருளார் ஆக்கை இதுபொறுத்தே
எய்த்தேன் கண்டாய் எம்மானே
மருளார் மனத்தோர் உன்மத்தன்
வருமால் என்றிங்கெனைக்கண்டார்
வெருளா வண்ணம் மெய்யன்பை
உடையாய் பெறநான் வேண்டுமே, 3

488. வேண்டும் வேண்டும் மெய்யடியா
ருள்ளே விரும்பி எனை அருளால்
ஆண்டாய் அடியேன் இடர்களைந்த
அமுதே அருமா மணிமுத்தே
தூண்டா விளக்கின் சுடரனையாய்
தொண்ட னேற்கும் உண்டாங்கொல்
வேண்டா தொன்றும் வேண்டாது
மிக்க அன்பே மேவுதலே 4

489. மேவும் உன்றன் அடியாருள்
விரும்பி யானும் மெய்ம்மையே
காவி சேருங் கயற்கண்ணாள்
பங்கா உன்றன் கருணையினால்
பாவி யேற்கும் உண்டாமோ
பரமா னந்தப் பழங்கடல்சேர்ந்
தாவி யாக்கை யானெனதென்
றியாது மின்றி அறுதலே 5



490. அறவே பெற்றார் நின்னன்பர்
அந்த மின்றி அகநெகவும்
புறமே கிடந்து புலைநாயேன்
புலம்பு கின்றேன் உடையானே
பெறவே வேண்டும் மெய்யன்பு
பேரா ஒழியாப் பிரிவில்லா
மறவா நினையா அளவிலா
மாளா இன்ப மாகடலே 6

491. கடலே அனைய ஆனந்தம்
கண்டா ரெல்லாங் கவர்ந்துண்ண
இடரேபெருக்கி ஏசற்றிங்
கிருத்த லழகோ அடிநாயேன்
உடையாய் நீயே அருளுதியென்
றுணர்த்தா தொழிந்தே கழிந்தொழிந்தேன்
சுடரார் அருளால் இருள்நீங்கச்
சோதீ இனித்தான் துணியாயே, 7

492. துணியா உருகா அருள்பெருகத்
தோன்றுந் தொண்ட ரிடைப்புகுந்து
திணியார் மூங்கிற் சிந்தையேன்
சிவனே நின்று தேய்கின்றேன்
அணியா ரடியார் உனக்குள்ள
அன்புந் தாராய் அருளளியத்
தணியா தொல்லை வந்தருளித்
தளிர்பொற் பாதந் தாராயே 8

---

6. பேரா - பெயர்தலில்லாத. ஒழியா - நீங்கா.

7. ஏசற்று - துயருற்று. சுடர்ஆர் அருளால் - பேரருட் தீபத்தால். துணியாய் - அற்றுப் போகச் செய்வாய்

8. திணியார் மூங்கில் - (அகத்தே ஒன்றுமின்றிப் புறத்தே) திண்மையுடைய மூங்கில். அருள் அளிய - அன்பு கனிய. தணியாது - தாமதியாது.

493. தாரா அருளொன் றின்றியே
தந்தாய் என்றுன் தமரெல்லாம்
ஆரா நின்றார் அடியேனும்
அயலார் போல அயர்வேனோ
சீரார் அருளாற் சிந்தனையைத்
திருத்தி ஆண்ட சிவலோகா
பேரா னந்தம் பேராமை
வைக்க வேண்டும் பெருமானே

494. மானேர் பங்கா வந்திப்பார்
மதுரக் கனியே மனநெகா
நானேர் தோளாச் சுரையொத்தால்
நம்பி இத்தால் வாழ்ந்தாயே
ஊனே புகுந்த உனையுணர்ந்தே
உருகிப் பெருகும் உள்ளத்தைக்
கோனே அருளுங் காலந்தான்
கொடியேற் கென்றோ கூடுவதே 10

495. கூடிக் கூடி உன்னடியார்
குனிப்பார் சிரிப்பார் களிப்பாரா
வாடி வாடி வழியற்றேன்
வற்றல் மரம்போல் நிற்பேனோ
ஊடி ஊடி உடையாயொடு
கலந்துள் ளுருகிப் பெருகிநெக்
காடி ஆடி ஆனந்தம்
அதுவே யாக அருள்கலந்தே 11

திருச்சிற்றம்பலம்

9. தாரா அருள் ஒன்றின்றி - ''இதுதராத அருள்'' என ஒரு குறைவும் இல்லாது. (அருள் முழுதும் தந்து என்றபடி)

10. தோளாச் சுரை - தொளையிடாத சுரைக் குடுக்கை. (பயனற்றுக் கிடத்தல்)



## 33. குழைத்த பத்து

### (ஆத்தும நிவேதனம்)

திருப்பெருந்துறையில் அருளியது

அறுசீர்க் கழிநெடி லாசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

496. குழைத்தாற் பண்டைக் கொடுவினைநோய்
காவாய் உடையாய் கொடுவினையேன்
உழைத்தால் உறுதி யுண்டோதான்
உமையாள் கணவா எனையாள்வாய்
பிழைத்தாற் பொறுக்க வேண்டாவோ
பிறைசேர் சடையாய் முறையோஎன்
றழைத்தால் அருளா தொழிவதே
அம்மா னேஉன் னடியேற்கே 1

497. அடியேன் அல்லல் எல்லாம்முன்
அகல ஆண்டாய் என்றிருந்தேன்
கொடியே ரிடையாள் கூறாஎம்
கோவே ஆவா என்றருளிச்
செடிசேர் உடலைச் சிதையாத
தெத்துக் கெங்கள் சிவலோகா
உடையாய் கூவிப் பணிகொள்ளா
தொறுத்தால் ஒன்றும் போதுமே. 2

1. குழைத்தால் - உடலோடு சேர்த்துப் பிறவியில் வீழ்த்தினால்; இனி, உன்உள்ளம் குழையுமாறு இரந்து வேண்டினால் என்று கூறுவாருமுளர். உழைத்தால் உறுதியுண்டோ - (அடியேன்) வருந்துவதால் ஏதும் ஊதியம் உண்டோ ?

498. ஒன்றும் போதா நாயேனை
உய்யக் கொண்ட நின்கருணை
இன்றே இன்றிப் போய்த்தோதான்
ஏழை பங்கா எம்கோவே
குன்றே அனைய குற்றங்கள்
குணமாம் என்றே நீகொண்டால்
என்றான் கெட்ட திரங்கிடாய்
எண்தோள் முக்கண் எம்மானே. 3

499. மானேர் நோக்கி மணவாளா
மன்னே நின்சீர் மறப்பித்திவ்
வூனே புகஎன் றனைநூக்கி
உழலப் பண்ணு வித்திட்டாய்
ஆனால் அடியேன் அறியாமை
அறிந்து நீயே அருள்செய்து
கோனே கூவிக் கொள்ளும்நாள்
என்றென் றுன்னைக் கூறுவதே 4

500. கூறும் நாவே முதலாகக்
கூறுங் கரணம் எல்லாம்நீ
தேறும் வகைநீ திகைப்பும்நீ
தீமை நன்மை முழுதும்நீ
வேறோர் பரிசிங் கொன்றில்லை
மெய்ம்மை உன்னை விரித்துரைக்கில்
தேறும் வகைஎன் சிவலோகா
திகைத்தால் தேற்ற வேண்டாவோ 5

4. நூக்கி - வீழ்த்தி.



501. வேண்டத் தக்க தறிவோய்நீ
வேண்ட முழுதுந் தருவோய்நீ
வேண்டும் அயன்மாற் கரியோய்நீ
வேண்டி என்னைப் பணிகொண்டாய்
வேண்டி நீயா தருள்செய்தாய்
யானும் அதுவே வேண்டினல்லால்
வேண்டும் பரிசொன் றுண்டென்னில்
அதுவும் உன்றன் விருப்பன்றே 6

502. அன்றே என்றன் ஆவியும்
உடலும் உடைமை எல்லாமும்
குன்றே அனையாய் என்னைஆட்
கொண்ட போதே கொண்டிலையோ
இன்றோர் இடையூ றெனக்குண்டோ
எண்தோள் முக்கண் எம்மானே
நன்றே செய்வாய் பிழைசெய்வாய்
நானோ இதற்கு நாயகமே 7

503. நாயிற் கடையாம் நாயேனை
நயந்து நீயே ஆட்கொண்டாய்
மாயப் பிறவி உன்வசமே
வைத்திட் டிருக்கும் அதுவன்றி
ஆயக் கடவேன் நானோதான்
என்ன தோஇங் கதிகாரம்
காயத் திடுவாய் உன்னுடைய
கழற்கீழ் வைப்பாய் கண்ணுதலே 8

6. வேண்டத்தக்கது - அறியாமையான் உயிர்கள் எவற்றை வேண்டினும் அவற்றுக்குத் தகுதியானவற்றை. வேண்டும் அயன்மால் - (அடிமுடிகாண) விரும்பிய அயனும் மாலும்.

504. கண்ணார் நுதலோய் கழலிணைகள்
கண்டேன் கண்கள் களிகூர
எண்ணா திரவும் பகலும்நான்
அவையே எண்ணும் அதுவல்லால்
மண்மேல் யாக்கை விடுமாறும்
வந்துன் கழற்கே புகுமாறும்
அண்ணா எண்ணக் கடவேனோ
அடிமை சால அழகுடைத்தே 9

505. அழகே புரிந்திட் டடிநாயேன்
அரற்று கின்றேன் உடையானே
திகழா நின்ற திருமேனி
காட்டி என்னைப் பணிகொண்டாய்
புகழே பெரிய பதம்எனக்குப்
புராண நீதந் தருளாதே
குழகா கோல மறையோனே
கோனே என்னைக் குழைத்தாயே 10

திருச்சிற்றம்பலம்

---

9. எண்ணாது - (நாளைநடப்பது பற்றி எதுவும்) சிந்தியாது.

10. பெரியபதம் - பிறவா இறவாப் பெருநிலை. புராண - பழையோனே! குழகா - சுந்தரனே! கோலமறையோனே - மறையோர் கோலங்கொண்டு தோன்றியவனே.



## 34. உயிருண்ணிப் பத்து

### (சிவானந்த மேலிடுதல்)

திருப்பெருந்துறையில் அருளியது

கலிவிருத்தம்

திருச்சிற்றம்பலம்

506.
பைந்நாப்பட அரவேரல்குல் உமைபாகம தாய்என்
மெய்ந்நாள்தொறும் பிரியாவினைக் கேடாவிடைப் பாகா
செந்நாவலர் பரசும்புகழ்த் திருப்பெருந்துறை உறைவாய்
எந்நாட்களித் தெந்நாள்இறு மாக்கேன் இனியானே 1

507.
நானாரடி அணைவான்ஒரு நாய்க்குத் தவிசிட்டிங்
கூனாருடல் புகுந்தான்உயிர் கலந்தான் உளம்பிரியான்
தேனார்சடை முடியான்மன்னு திருப்பெருந்துறை உறைவான்
வானோர்களும் அறியாததோர் வளம்ஈந்தனன் எனக்கே 2

---

1. பைநா பட அரவு - பசியநாவினையுடைய படமெடுக்கும் பாம்பு. ஏர் இங்கே உவம உருபு. வினைகேடா - பாவநாசா! செந்நாவலர் - செவ்விய நாவன்மையுடைய பொய்யடிமையில்லாத புலவர்.

2. நான் ஆர் அடி அணைவான் என்பதை, அடி அணைவான் நான் ஆர் என மாற்றுக. - திருவடியடைதற்கு நான் தகுதியுடையேனோ? தவிசு - சீரிய ஆசனம். வளம் - பேரின்பச் செல்வம்.

**508.**

எனைநானென்ப தறியேன்பகல் இரவாவதும் அறியேன்
மனவாசகங் கடந்தான்எனை மத்தோன்மத்த னாக்கிச்
சினமால்விடை உடையான் மன்னு திருப்பெருந்துறை
உறையும்
பனவன்எனைச் செய்தபடி றறியேன் பரஞ்சுடரே 3

**509.**

வினைக்கேடரும் உளரோபிறர் சொல்லீர்விய னுலகில்
எனைத்தான்புகுந் தாண்டான்என தென்பின்புரை யுருக்கிப்
பினைத்தான்புகுந் தெல்லேபெருந் துறையில் உறை
பெம்மான்
மனத்தான் கண்ணின் அகத்தான்மறு மாற்றத்திடையானே
4

**510.**

பற்றாங்கவை அற்றீர்பற்றும் பற்றாங்கது பற்றி
நற்றாங்கதி அடைவோமெனிற் கெடுவீரோடி வம்மின்
தெற்றார்சடை முடியான்மன்னு திருப்பெருந்துறை இறைசீர்
கற்றாங்கவன் கழல்பேணின ரொடுங்கூடுமின் கலந்தே 5

**511.**

கடலின்திரை யதுபோல்வரு கலக்கமலம் அறுத்தென்
உடலும்என துயிரும்புகுந் தொழியாவண்ணம் நிறைந்தான்
சுடருஞ்சுடர் மதிசூடிய திருப்பெருந்துறை உறையும்
படருஞ்சடை மகுடத்தெங்கள் பரன்தான் செய்தபடிறே 6

---

3. பனவன் - அந்தணன். மத்த உன்மத்தன் - இன்பக் களிப்பு மிக்க பெரும்பித்தன்.
4. என்பின் புரை - எலும்புத்துளை. எல்லே - பகற்போதில்.
5. தெற்றார்சடை - பின்னலார்சடை.
6. படிறு - மாயம்.



**512.**

வேண்டேன்புகழ் வேண்டேன்செல்வம் வேண்டேன்
மண்ணும்விண்ணும்
வேண்டேன்பிறப் பிறப்புச்சிவம் வேண்டார் தமைநாளும்
தீண்டேன்சென்று சேர்ந்தேன்மன்னு திருப்பெருந்துறை
இறைதாள்
பூண்டேன்புறம் போகேன்இனிப் புறம்போகலொட் டேனே
7

**513.**

கோற்றேன்எனக் கென்கோகுரை கடல்வாய்அமு தென்கோ
ஆற்றேன்எங்கள் அரனேஅரு மருந்தேஎன தரசே
சேற்றார்வயல் புடைசூழ்தரு திருப்பெருந்துறை உறையும்
நீற்றார்தரு திருமேனிநின் மலனேஉனை யானே 8

**514.**

எச்சம்அறி வேன்நான்எனக் கிருக்கின்றதை அறியேன்
அச்சோஎங்கள் அரனேஅரு மருந்தேஎன தமுதே
செச்சைமலர் புரைமேனியன் திருப்பெருந்துறை உறைவான்
நிச்சம்என நெஞ்சில்மன்னி யானாகி நின்றானே 9

**515.**

வான்பாவிய உலகத்தவர் தவமேசெய அவமே
ஊன்பாவிய உடலைச்சுமந் தடவிம்மர மானேன்
தேன்பாய்மலர்க் கொன்றைமன்னு திருப்பெருந்துறை
உறைவாய்
நான்பாவியன் ஆனால்உனை நல்காய்என லாமே 10

திருச்சிற்றம்பலம்

---

8. கோற்றேன் - கொம்புத்தேன். ஆற்றேன் - (பேரின்பப் போதையைத்) தாங்கமுடியாதவனாய் உள்ளேன்.
9. எச்சம் அறிவேன். இங்கு எச்சம் - உண்மை; யானாகிநிற்கும் உண்மையினை உணர்வேன். எனக்கிருக்கின்றதை அறியேன்-யான், எனது என்பவற்றை அறியேன். நிச்சம் - நித்தம் என்பதன் போலி. செச்சை - வெட்சி.
10. பாவிய - பரந்த.

## 35. அச்சப்பத்து

### (ஆனந்தமுறுதல்)

திருத்தில்லையில் அருளியது

அறுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

516. புற்றில்வா ளரவும் அஞ்சேன்
பொய்யர்தம் மெய்யும் அஞ்சேன்
கற்றைவார் சடைஎம் அண்ணல்
கண்ணுதல் பாதம் நண்ணி
மற்றும்ஓர் தெய்வந் தன்னை
உண்டென நினைந்தெம் பெம்மாற்
கற்றிலா தவரைக் கண்டால்
அம்மநாம் அஞ்சு மாறே 1

517. வெருவரேன் வேட்கை வந்தால்
வினைக்கடல் கொளினும் அஞ்சேன்
இருவரால் மாறு காணா
எம்பிரான் தம்பி ரானும்
திருவுரு அன்றி மற்றோர்
தேவர்எத் தேவரென்ன
அருவரா தவரைக் கண்டால்
அம்மநாம் அஞ்சு மாறே 2

2. வெருவரேன் - அஞ்சேன். மாறு - பகை.



518. வன்புலால் வேலும் அஞ்சேன்
வளைக்கையார் கடைக்கணஞ்சேன்
என்பெலாம் உருக நோக்கி
அம்பலத் தாடு கின்ற
என்பொலா மணியை ஏத்தி
இனிதருள் பருக மாட்டா
அன்பிலா தவரைக் கண்டால்
அம்மநாம் அஞ்சு மாறே 3

519. கிளியனார் கிளவி அஞ்சேன்
அவர்கிறி முறுவல் அஞ்சேன்
வெளியநீ றாடும் மேனி
வேதியன் பாதம் நண்ணித்
துளியுலாம் கண்ண ராகித்
தொழுதழு துள்ளம் நெக்கிங்
களியிலா தவரைக் கண்டால்
அம்மநாம் அஞ்சுமாறே 4

520. பிணியெலாம் வரினும் அஞ்சேன்
பிறப்பினோ டிறப்பும் அஞ்சேன்
துணிநிலா அணியி னான்றன்
தொழும்ப ரோடழுந்தி அம்மால்
திணிநிலம் பிளந்துங் காணாச்
சேவடி பரவி வெண்ணீ
றணிகிலா தவரைக் கண்டால்
அம்மநாம் அஞ்சு மாறே 5

4. கிளவி - சொல். கிறி - பொய். வெளிய - வெண்ணிறத்த. துளி உலாம் கண்ணர் - ஆனந்த நீர்த்துளி ததும்பும் கண்ணினர். அளிஇலாதவர் - ஈரம் இலா நெஞ்சினர்.

5. துணிநிலா - துண்டப்பிறை.

521. வாளுலாம் எரியும் அஞ்சேன்
வரைபுரண் டிடினும் அஞ்சேன்
தோளுலாம் நீற்றன் ஏற்றன்
சொற்பதம் கடந்த அப்பன்
தாளதா மரைக ளேத்தித்
தடமலர் புனைந்து நையும்
ஆளலா தவரைக் கண்டால்
அம்மநாம் அஞ்சு மாறே 6

522. தகைவிலாப் பழியும் அஞ்சேன்
சாதலை முன்னம் அஞ்சேன்
புகைமுகந் தெரிகை வீசிப்
பொலிந்தஅம் பலத்து ளாடும்
முகைநகைக் கொன்றை மாலை
முன்னவன் பாத மேத்தி
அகம்நெகா தவரைக் கண்டால்
அம்மநாம் அஞ்சு மாறே 7

523. தறிசெறி களிறும் அஞ்சேன்
தழல்விழி உழுவை அஞ்சேன்
வெறிகமழ் சடையன் அப்பன்
விண்ணவர் நண்ண மாட்டாச்
செறிதரு கழல்க ளேத்திச்
சிறந்தினி திருக்க மாட்டா
அறிவிலா தவரைக் கண்டால்
அம்மநாம் அஞ்சு மாறே 8

---

6. வாள் உலாம் எரி - ஒளி பரக்குமாறு சுவாலித்து எரியும் நெருப்பு. தகைவிலாப் பழி - தடுக்க இயலாத பழி.

7. முன்னம் - முதற்கண்.

8. தறிசெறுகளிறு - கட்டுத்தறியை முறிக்கும் மதயானை. உழுவை - புலி.



524. மஞ்சுலாம் உருமும் அஞ்சேன்
மன்னரோ டுறவும் அஞ்சேன்
நஞ்சமே அமுத மாக்கும்
நம்பிரான் எம்பிரானாய்ச்
செஞ்செவே ஆண்டு கொண்டான்
திருமுண்டம் தீட்ட மாட்டா
தஞ்சுவா ரவரைக் கண்டால்
அம்மநாம் அஞ்சு மாறே 9

525. கோணிலா வாளி அஞ்சேன்
கூற்றுவன் சீற்றம் அஞ்சேன்
நீணிலா அணியி னானை
நினைந்துநைந் துருகி நெக்கு
வாணிலாங் கண்கள் சோர
வாழ்த்திநின் றேத்த மாட்டா
ஆணலா தவரைக் கண்டால்
அம்மநாம் அஞ்சு மாறே 10

திருச்சிற்றம்பலம்

---

9. மஞ்சுலாம் உருமும் - கருமேகத்தில் தோன்றும் இடியேறும். செஞ்செவே - மிகவும் செவ்விதாக. திருமுண்டம் - திரு வெண்ணீற்று முக்குறி. தீட்டுதல் - பூசுதல்.

10. கோண் இலாவாளி - வளைதல் இல்லாத அம்பு. ஆணலாதவர் - வீரமில்லாதவர்.

# 36. திருப்பாண்டிப் பதிகம்

## (சிவானந்த விளைவு)

### திருப்பெருந்துறையில் அருளியது

### கட்டளைக் கலித்துறை

*திருச்சிற்றம்பலம்*

526. *பருவரை மங்கைதன் பங்கரைப் பாண்டியற்*
*காரமுதாம்*
*ஒருவரை ஒன்று மிலாதவ ரைக்கழற்*
*போதிறைஞ்சித்*
*தெரிவர நின்றுருக் கிப்பரி மேற்கொண்ட*
*சேவகனார்*
*ஒருவரை யன்றி உருவறி யாதென்றன்*
*உள்ளமதே*

527. *சதுரை மறந்தறி மால்கொள்வர் சாந்தவர்*
*சாற்றிச்சொன்னோம்*
*கதிரை மறைத்தன்ன சோதி கழுக்கடை*
*கைப்பிடித்துக்*
*குதிரையின் மேல்வந்து கூடிடு மேற்குடி*
*கேடுகண்டீர்*
*மதுரையர் மன்னன் மறுபிறப் போட*
*மறித்திடுமே* 2

---

1. ஒன்றும் இலாதவர் - ஏதும் ஒன்றற நிற்பவர் (தீர்த்தர்) தெரிவரநின்று - கண்ணால் காணுமாறு நின்று.

2. சதுர் - வல்லபம். அறிமால் - ஞானப்பித்து. குடி கேடு - பிறவி ஒழியும்.



528. *நீரின்ப வெள்ளத்துள் நீந்திக் குளிக்கின்ற*
*நெஞ்சங்கொண்டீர்*
*பாரின்ப வெள்ளங் கொளப்பரி மேற்கொண்ட*
*பாண்டியனார்*
*ஓரின்ப வெள்ளத் துருக்கொண்டு தொண்டரை*
*உள்ளங்கொண்டார்*
*பேரின்ப வெள்ளத்துட் பெய்கழ லேசென்று*
*பேணுமினே* 3

529. *செறியும் பிறவிக்கு நல்லவர் செல்லன்மின்*
*தென்னன் நன்னாட்*
*டிறைவன் கிளர்கின்ற காலம்இக் காலம்எக்*
*காலத்துள்ளும்*
*அறிவொண் கதிர்வாள் உறைகழித் தானந்த*
*மாக்கடவி*
*எறியும் பிறப்பை எதிர்ந்தார் புரள*
*இருநிலத்தே* 4

530. *காலமுண் டாகவே காதல்செய் துய்ம்மின்*
*கருதரிய*
*ஞாலமுண் டானொடு நான்முகன் வானவர்*
*நண்ணரிய*
*ஆலமுண் டான்எங்கள் பாண்டிப் பிரான்தன்*
*அடியவர்க்கு*
*மூலபண் டாரம் வழங்குகின் றான்வந்து*
*முந்துமினே* 5

---

4. கிளர்கின்ற - எழுந்தருளுகின்ற. அறிவு ஒண் கதிர் வாள் - ஞானமாகிய ஒளி பொருந்தியவாள். ஆனந் தமா - பேரின்பக் குதிரை.

5. மூலபண்டாரம் வழங்குகின்றான் என்றது சேமநிதிக்கரு வூலத்தைத்திறந்து அருள் நிதியை வழங்குகின்றான் என்றபடி.

531. ஈண்டிய மாயா இருள்கெட எப்பொரு
ளும்விளங்கத்
தூண்டிய சோதியை மீனவ னுஞ்சொல்ல
வல்லன்அல்லன்
வேண்டிய போதே விலக்கிலை வாய்தல்
விரும்புமின்தாள்
பாண்டிய னார்அருள் செய்கின்ற முத்திப்
பரிசிதுவே 6

532. மாயவ னப்பரி மேல்கொண்டு மற்றவர்
கைக்கொளலும்
போயறும் இப்பிறப் பென்னும் பகைகள்
புகுந்தவருக்
காய அரும்பெருஞ் சீருடைத் தன்னரு
ளேஅருளுஞ்
சேய நெடுங்கொடைத் தென்னவன் சேவடி
சேர்மின்களே 7

533. அழிவின்றி நின்றதொர் ஆனந்த வெள்ளத்
திடையழுத்திக்
கழிவில் கருணையைக் காட்டிக் கடிய
வினையகற்றிப்
பழமலம் பற்றறுத் தாண்டவன் பாண்டிப்
பெரும்பதமே
முழுதுல குந்தரு வான்கொடை யேசென்று
முந்துமினே 8

---

6. ஈண்டிய - செறிந்த.

7. மாய வனப்பரி - மாயமான காட்டுக்குதிரை; நரியாகிய குதிரை.

8. பாண்டிப் பெரும் பதம் - பாண்டி நாட்டு ஆட்சியுரிமை.



534. விரவிய தீவினை மேலைப் பிறப்புமுந்
நீர்கடக்கப்
பரவிய அன்பரை என்புருக் கும்பரம்
பாண்டியனார்
புரவியின் மேல்வரப் புந்திகொ ளப்பட்ட
பூங்கொடியார்
மரவியன் மேல்கொண்டு தம்மையுந் தாம்அறி
யார்மறந்தே 9

535. கூற்றைவென் றாங்கைவர் கோக்களை யும்வென்
றிருந்தழகால்
வீற்றிருந் தான்பெருந் தேவியுந் தானும்ஓர்
மீனவன்பால்
ஏற்றுவந் தாருயிர் உண்ட திறல்ஒற்றைச்
சேவகனே
தேற்றமி லாதவர் சேவடி சிக்கெனச்
சேர்மின்களே 10

திருச்சிற்றம்பலம்

---

9. மரஇயல் - மரத்தின் இயல்பு.

# 37. பிடித்த பத்து

## [ முத்திக்கலப் புரைத்தல் ]

திருத்தோணி புரத்தில் அருளியது.

எழுசீர்க் கழி நெடிலடி யாசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

536, உம்பர்கட் கரசே ஒழிவற நிறைந்த
யோகமே ஊற்றையேன் றனக்கு
வம்பெனப் பழுத்தென் குடிமுழு தாண்டு
வாழ்வற வாழ்வித்த மருந்தே
செம்பொருட் டுணிவே சீருடைக் கழலே
செல்வமே சிவபெரு மானே
எம்பொருட் டுன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே. 1

537. விடைவிடா துகந்த விண்ணவர் கோவே
வினையனே னுடையமெய்ப் பொருளே
முடைவிடா தடியேன் மூத்தற மண்ணாய்
முழுப்புழுக் குரம்பையிற் கிடந்து
கடைபடா வண்ணம் காத்தெனை ஆண்ட
கடவுளே கருணைமா கடலே
இடைவிடா துன்னைச் சிக்கெனப் பிடித்தேன் 2
எங்கெழுந் தருளுவ தினியே.

1. வம்பு - புதுமை. வாழ்வு அற - மாயவாழ்க்கை ஒழிய செம் பொருள் - சிவம் என்னும் செம் பொருள். சிக்கென - இறுக,

2, முடைவிடாது - முடைநாற்றம் நீங்கப் பெருது. கடைபடா வண்ணம். - கடைப்படாவண்ணம் - கீழாகாவிதம்,



538. அம்மையே அப்பா ஒப்பிலா மணியே
அன்பினில் விளைந்தஆ ரமுதே
பொய்ம்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்
புழுத்தலைப் புலையனேன் றனக்குச்
செம்மையே ஆய சிவபதம் அளித்த
செல்வமே சிவபெரு மானே
இம்மையே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே. 3

539. அருளுடைச் சுடரே அளிந்ததோர் கனியே
பெருந்திறல் அருந்தவர்க் கரசே
பொருளுடைக் கலையே புகழ்ச்சியைக் கடந்த
போகமே யோகத்தின் பொலிவே
தெருளிடத் தடியார் சிந்தையுட் புகுந்த
செல்வமே சிவபெருமானே
இருளிடத் துன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே. 4

540. ஒப்புனக் கில்லா ஒருவனே அடியேன்
உள்ளத்துள் ஒளிர்கின்ற ஒளியே
மெய்ப்பதம் அறியா வீறிலி யேற்கு
விழுமிய தளித்ததோ ரன்பே
செப்புதற் கரிய செழுஞ்சுடர் மூர்த்தீ
செல்வமே சிவபெரு மானே
எய்ப்பிடத் துன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே. 5

4. பொருளுடைக்கலை - மெய்ந்நூல். தெருள்இடத்து - தெளிவெய்திய விடத்து.

5. மெய்ப்பதம் - உண்மைப் பொருள்; வீறு+இலி: பெருமை இலாதேன். விழுமியது - விழுப்பொருள். எய்ப்பிடத்து - இளைத்துச் சோர்ந்த வேளையில்.

541. அறவையேன் மனமே கோயிலாக் கொண்டாண்
டளவிலா ஆனந்த மருளிப்
பிறவிவே ரறுத்தென் குடிமுழு தாண்ட
பிஞ்ஞகா பெரியஎம் பொருளே
திறவிலே கண்ட காட்சியே அடியேன்
செல்வமே சிவபெரு மானே
இறவிலே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே. 6

542. பாசவே ரறுக்கும் பழம்பொருள் தன்னைப்
பற்றுமா றடியனேற் கருளிப்
பூசனை உகந்தென் சிந்தையுட் புகுந்து
பூங்கழல் காட்டிய பொருளே
தேசுடை விளக்கே செழுஞ்சுடர் மூர்த்தி
செல்வமே சிவபெரு மானே
ஈசனே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே. 7

543. அத்தனே அண்டர் அண்டமாய் நின்ற
ஆதியே யாதுமீ றில்லாச்
சித்தனே பத்தர் சிக்கெனப் பிடித்த
செல்வமே சிவபெரு மானே
பித்தனே எல்லா உயிருமாய்த் தழைத்துப்
பிழைத்தவை அல்லையாய் நிற்கும்
எத்தனே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே. 8

6. அறவையேன் - ஆர்துணையும் அற்றவன். திறவிலே - வெட்டவெளியிலே. இறவிலே - ஈற்றிலே.

8. பிழைத்து - (அவற்றின்) நீங்கி. எத்தன் - மாயன்



544. பால்நினைந் தூட்டுந் தாயினுஞ் சாலப்
பரிந்துநீ பாவியே னுடைய
ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி
உலப்பிலா ஆனந்த மாய
தேனினைச் சொரிந்து புறம்புறந் திரிந்த
செல்வமே சிவபெரு மானே
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே. 9

545. புன்புலால் யாக்கை புரைபுரை கனியப்
பொன்னெடுங் கோயிலாப் புகுந்தென்
என்பெலாம் உருக்கி எளியையாய் ஆண்ட
ஈசனே மாசிலா மணியே
துன்பமே பிறப்பே இறப்பொடு மயக்காந்
தொடக்கெலாம் அறுத்தநற் சோதீ
இன்பமே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே. 10

திருச்சிற்றம்பலம்

10. தொடக்கு - கட்டு.

## 38. திருவேசறவு

### ( சுட்டறிவொழித்தல் )

திருப்பெருந்துறையில் அருளியது

கொச்சகக் கலிப்பா

திருச்சிற்றம்பலம்

**546.**

இரும்புதரு மனத்தேனை ஈர்த்தீர்த்தென் என்புருக்கிக்
கரும்புதரு சுவைஎனக்குக் காட்டினைஉன் கழலிணைகள்
ஒருங்குதிரை உலவுசடை உடையானே நரிகளெல்லாம்
பெருங்குதிரை ஆக்கியவா றன்றேஉன் பேரருளே, 1

**547**

பண்ணார்ந்த மொழிமங்கை பங்காநின் ஆளானார்க்
குண்ணார்ந்த ஆரமுதே உடையானே அடியேனை
மண்ணார்ந்த பிறப்பறுத்திட் டாள்வாய்நீ வாஎன்னக்
கண்ணார உய்ந்தவா றன்றேஉன் கழல்கண்டே 2

**548**

ஆதமிலி யான்பிறப் பிறப்பென்னும் அருநரகில்
ஆர்தமரும் இன்றியே அழுந்துவேற் காவாஎன்
றோதமலி நஞ்சுண்ட உடையானே அடியேற்குன்
பாதமலர் காட்டியவா றன்றேஎம் பரம்பரனே. 3

---

1. ஒருங்குதிரை - அடங்கியுள்ளஅலை.
2. உண்ணார்ந்த - உண்ணுதல் பொருந்திய.
மண்ணார்ந்த பிறப்பு - மண்ணிலே வந்த பிறப்பு,
3. ஆதம்இலி - ஆதரவுஇல்லாத. தமர் - உறவினர். ஓதம் - கடல்,



**549.**

பச்சைத்தால் அரவாட்டீ படர்சடையாய் பாதமலர்
உச்சத்தார் பெருமானே அடியேனை உய்யக்கொண்
டெச்சத்தார் சிறுதெய்வம் ஏத்தாதே அச்சோஎன்
சித்தத்தா றுய்ந்தவா றன்றேஉன் திறம்நினைந்தே 4

**550.**

கற்றறியேன் கலைஞானம் கசிந்துருகேன் ஆயிடினும்
மற்றறியேன் பிறதெய்வம் வாக்கியலால் வார்கழல்வந்
துற்றிறுமாந் திருந்தேன்எம் பெருமானே அடியேற்குப்
பொற்றவிசு நாய்க்கிடுமா றன்றேநின் பொன்னருளே 5

**551.**

பஞ்சாய அடிமடவார் கடைக்கண்ணால் இடர்ப் பட்டு
நஞ்சாய துயர்கூர நடுங்குவேன் நின்னருளால்
உய்ஞ்சேன்எம் பெருமானே உடையானே அடியேனை
அஞ்சேலென் றாண்டவா றன்றேயம் பலத்தமுதே 6

**552.**

என்பாலைப் பிறப்பறுத்திங் கிமையவர்க்கும்அறியவொண்
ணாத்
தென்பாலைத் திருப்பெருந் துறையுறையுஞ் சிவபெருமான்
அன்பால்நீ அகம்நெகவே புகுந்தருளி ஆட்கொண்ட
தென்பாலே நோக்கியவா றன்றேஎம் பெருமானே 7

---

4. பச்சைத் தால் அரவு - பசிய நாவையுடைய பாம்பு.
உச்சத்தார்- உச்சி மிசைச் சூடியவர். எச்சத்தார் - வேள்வியில் நாட்டம் கொண்டோர்,
5. வாக்கியலால் (வாக்கு+இயாலல்) - உபதேசமொழியால்.
7. என்பால் - என்னிடம்.

553;

மூத்தானே மூவாத முதலானே முடிவில்லா
ஒத்தானே பொருளானே உண்மையுமாய் இன்மையுமாய்ப்
பூத்தானே புகுந்திங்குப் புரள்வேனைக் கருணையினால்
போர்த்தேநீ ஆண்டவா றன்றேஎம் பெருமானே

554.

மருவினிய மலர்ப்பாதம் மனத்தில்வளர்ந் துள்ளுருகத்
தெருவுதொறும் மிகஅலறிச் சிவபெருமா னென்றேத்திப்
பருகியநின் பரங்கருணைத் தடங்கடலிற் படிவாமா
றருளெனக்கிங் கிடைமருதே இடங்கொண்ட அம்மானே. 9

555.

நானேயோ தவஞ்செய்தேன் சிவாயநம எனப்பெற்றேன்
தேனாய்இன் அமுதமுமாய்த் தித்திக்குஞ் சிவபெருமான்
தானேவந் தெனதுள்ளம் புகுந்தடியேற் கருள்செய்தான்
ஊனாரும் உயிர்வாழ்க்கை ஒறுத்தன்றே வெறுத்திடவே. 10

திருச்சிற்றம்பலம்

---

8. ஒத்து - வேதம்



# 39. திருப்புலம்பல்

## (சிவானந்த முதிர்வு)

திருவாரூரில் அருளியது

கொச்சகக் கலிப்பா

திருச்சிற்றம்பலம்

556.

பூங்கமலத் தயனொடுமால் அறியாத நெறியானே
கோங்கலர்சேர் குவிமுலையாள் கூறாவெண் ணீறாடி
ஓங்கெயில்சூழ் திருவாரூர் உடையானே அடியேன்நின்
பூங்கழல்கள் அவையல்லா தெவையாதும் புகழேனே. 1

557.

சடையானே தழலாடீ தயங்குமூ விலைச்சூலப்
படையானே பரஞ்சோதி பசுபதீ மழவெள்ளை
விடையானே விரிபொழில்சூழ் பெருந்துறையாய் அடியேன்
நான்
உடையர்னே உனையல்லா துறுதுணைமற் றறியேனே. 2

558.

உற்றாரை யான்வேண்டேன் ஊர்வேண்டேன் பேர்வேண்டேன்
கற்றாரை யான்வேண்டேன் கற்பனவும் இனியமையும்
குற்றாலத் தமர்ந்துறையுங் கூத்தாஉன் குரைகழற்கே
கற்றாவின் மனம்போலக் கசிந்துருக வேண்டுவனே. 3

திருச்சிற்றம்பலம்

---

1. கோங்கு - கோங்கம்பூ; சேர் - போல் (உவம உருபு) கூறு - பாதியனே. எயில் - மதில்
2. தயங்கும் - விளங்கும். பசுபதி - உயிர்முதல்வா! மழ - இளமை
3. உற்றார் - உறவினராக உற்றவர். வேண்டேன் - விரும்பேன். பேர் - புகழ். குரைகழல் - ஒலிக்கும் கழலணிந்த திருத்தாள். கற்றா : கன்று + ஆ கன்றையுடைய பசு.

## 40. குலாப்பத்து

### (அனுபவமிடையீடுபடாமை)

திருத்தில்லையில் அருளியது

கொச்சகக் கலிப்பா

திருச்சிற்றம்பலம்

559.
ஓடுங் கவந்தியுமே உறவென்றிட் டுள்கசிந்து
தேடும் பொருளுஞ் சிவன்கழலே எனத்தெளிந்து
கூடும் உயிருங் குமண்டையிடக் குனித்தடியேன்
ஆடுங் குலாத்தில்லை ஆண்டானைக் கொண்டன்றே.

560.
துடியேர் இடுகிடைத் தூய்மொழியார் தோள்நசையால்
செடியேறு தீமைகள் எத்தனையுஞ் செய்திடினும்
முடியேன் பிறவேன் எனைத்தனதாள் முயங்குவித்த
அடியேன் குலாத்தில்லை ஆண்டானைக் கொண்டன்றே. 2

561.
என்புள் ளுருக்கி இருவினையை ஈடழித்துத்
துன்பங் களைந்து துவந்துவங்கள் தூய்மை செய்து
முன்புள்ள வற்றை முழுதழிய உள்புகுந்த
அன்பன் குலாத்தில்லை ஆண்டானைக் கொண்டன்றே. 3

---

1. ஓடு - பிச்சைப் பாத்திரம். கவந்தி - கோவணம். உள் கசிந்து-மனமுருகி. குமண்டை - களியாட்டம். குனிந்து - உடல் வளைந்து. ஈண்டு உடல் வளைந்தாடும்கூத்தை உணர்த்தியது. குலாத்தில்லை - குலவும் தில்லை; விளங்கும் தில்லை.
2. துடி ஏர் இடுகு இடை - உடுக்கையைப் போன்ற சிறிய இடை. ஏர் உவமைஉருபு. செடி ஏறு தீமை - பாவம் மிகுவதற்குக் காரணமான தீச்செயல்கள். முயங்குவித்த - தன்வயம் இழக்கச் செய்த.
3. துவந்துவங்கள் - பற்றுக்கள். முன்புள்ளவற்றை - முன்செய்த வினைகளை.



562.
குறியும் நெறியுங் குணமுமிலார் குழாங்கள்தமைப்
பிறியும் மனத்தார் பிறிவரிய பெற்றியனைச்
செறியுங் கருத்தில் உருத்தமுதாஞ் சிவபதத்தை
அறியுங் குலாத்தில்லை ஆண்டானைக கொண்டன்றே. 4

563.
பேருங் குணமும் பிணிப்புறும்இப் பிறவிதனைத்
தூரும் பரிசு துரிசறுத்துத் தொண்டரெல்லாஞ்
சேரும் வகையாற் சிவன்கருணைத் தேன்பருகி
ஆருங் குலாத்தில்லை ஆண்டானைக் கொண்டன்றே. 5

564.
கொம்பில் அரும்பாய்க் குவிமலராய்க் காயாகி
வம்பு பழுத்துடலம் மாண்டிங்ஙன் போகாமே
நம்பு மென்சிந்தை நணுகும்வண்ணம் நானணுகும்
அம்பொன் குலாத்தில்லை ஆண்டானைக் கொண்டன்றே. 6

565.
மதிக்குந் திறலுடைய வல்அரக்கன் தோள்நெரிய
மிதிக்குந் திருவடிஎன் தலைமேல் வீற்றிருப்பக்
கதிக்கும் பசுபாசம் ஒன்றுமிலோம் எனக்களித்திங்
கதிர்க்குங் குலாத்தில்லை ஆண்டானைக் கொண்டன்றே. 7

---

4. செறியும் கருத்தில் உருத்து - ஊன்றிய சிந்தையில் தோன்றி.
5. தூரும்பரிசு - மறையும் வண்ணம். துரிசு - (பொய் இருளாகிய) குற்றம்.
6. வம்பு - வீணுகை. நணுகுதல் - சேர்தல்.
7. கதிக்கும் - மேல்எழும். அதிர்க்கும் - (நிலத்தை) அதிரச் செய்யும்.

566.
இடக்குங் கருமுருட் டேனப்பின் கானகத்தே
நடக்குந் திருவடி என்தலைமேல் நட்டமையாற்
கடக்குந் திறல்ஐவர் கண்டகர்தம் வல்லரட்டை
அடக்குங் குலாத்தில்லை ஆண்டானைக் கொண்டன்றே. 8

567.
பாழ்ச்செய் விளாவிப் பயனிலியாய்க் கிடப்பேற்குக்
கீழ்ச்செய் தவத்தாற் கிழியீடு நேர்பட்டுத்
தாட்செய்ய தாமரைச் சைவனுக்கென் புன்தலையால்
ஆட்செய் குலாத்தில்லை ஆண்டானைக் கொண்டன்றே. 9

568.
கொம்மை வரிமுலைக் கொம்பனையாள் கூறனுக்குச்
செம்மை மனத்தால் திருப்பணிகள் செய்வேனுக்
கிம்மை தரும்பயன் இத்தனையும் ஈங்கொழிக்கும்
அம்மை குலாத்தில்லை ஆண்டானைக் கொண்டன்றே. 10

திருச்சிற்றம்பலம்

---

8. இடக்கும் கருமுருட்டு ஏனம் - பூமியைக் கிண்டும் கரிய குற்றியை ஒத்த பன்றி. கண்டகர் - கொடியவர். வல்லரட்டு - கொடிய குறும்பு.
9. பாழ் செய் விளாவி - பாழான வயல் நிலத்தை உழுது. கீழ் - முற்பிறப்பில். கிழியீடு - புதைத்து வைத்த பொன் முடிப்பு.
10. கொம்மை - திரண்ட அம்மை - அழகு.



## 41. அற்புதப்பத்து

### (அனுபவமாற்றாமை)

திருப்பெருந்துறையில் அருளியது

அறுசீர்க் கழிநெடிலடியாசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

569. மைய லாய்இந்த மண்ணிடை வாழ்வெனும்
ஆழியுள் அகப்பட்டுத்
தைய லாரெனுஞ் சுழித்தலைப் பட்டுநான்
தலைதடு மாறாமே
பொய்யெ லாம்விடத் திருவருள் தந்துதன்
பொன்னடி யிணைகாட்டி
மெய்ய னாய்வெளி காட்டிமுன் நின்றதோர்
அற்புதம் விளம்பேனே. 1

570. ஏய்ந்த மாமல ரிட்டுமுட் டாததோர்
இயல்பொடும் வணங்காதே
சாந்த மார்முலைத் தையல்நல் லாரொடுந்
தலைதடு மாறாகிப்
போந்தி யான்துயர் புகாவணம் அருள்செய்து
பொற்கழ லிணைகாட்டி
வேந்த னாய்வெளி யேஎன்முன் நின்றதோர்
அற்புதம் விளம்பேனே. 2

---

1. மெய்யனாய் வெளிகாட்டி - மெய்யுணர்வைத்தரும் ஆசிரியனாய்ப் பரவெளிகாட்டி.
2. ஏய்ந்த - பொருத்தமான. முட்டாத - குறைவுபடாத சாந்தம் - சந்தனம். வேந்தனாய் - ஞான அரசனாய்.

571. நடித்து மண்ணிடைப் பொய்யினைப் பலசெய்து
நானென தெனும்மாயக்
கடித்த வாயிலே நின்றுமுன் வினைமிகக்
கழறியே திரிவேனைப்
பிடித்து முன்னின்றப் பெருமறை தேடிய
அரும்பொருள் அடியேனை
அடித்த டித்துவக் காரமுன் தீற்றிய
அற்புதம் அறியேனே. 3

572. பொருந்தும் இப்பிறப் பிறப்பிலை நினையாது
பொய்களே புகன்றுபோய்க்
கருங்கு ழல்லினார் கண்களால் ஏறுண்டு
கலங்கியே கிடப்பேனைத்
திருந்து சேவடிச் சிலம்பவை சிலம்பிடத்
திருவொடும் அகலாதே
அருந்து ணைவனை ஆண்டுகொண் டருளிய 4
அற்புதம் அறியேனே.

573. மாடுஞ் சுற்றமும் மற்றுள போகமும்
மங்கையர் தம்மோடுங்
கூடி அங்குள குணங்களால் ஏறுண்டு
குலாவியே திரிவேனை
வீடுதந் தென்றன் வெந்தொழில் வீட்டிட
மென்மலர்க் கழல் காட்டி
ஆடு வித்தென தகம்புகுந் தாண்டதோர்
அற்புதம் அறியேனே. 5

---

3. மாயம் - பொய். கடித்த வாய் - கடித்த இடத்தில். ( பற்றுக்களாகிய மாயப் பாம்புகள் கடித்த இடத்தில். ) அக்காரம் - சருக்கரை. தீற்றிய - உண்பித்த.

4. திரு - திருவருள்

5. மாடு - செல்வம். வெந்தொழில் வீட்டிட - (மங்கையருடன்குலாவும் ) கொடுஞ்செயலை அழித்திட. ஆடுவித்து - களிப்பினால் ஆடச் செய்து.



574. வணங்கும் இப்பிறப் பிறப்பிலை நினையாது
மங்கையர் தம்மோடும்
பிணைந்து வாயிதழ்ப் பெருவெள்ளத் தழுந்திநான்
பித்தனாய்த் திரிவேனைக்
குணங்க ளுங்குறி களுமிலாக் குணக்கடல்
கோமளத் தொடுங்கூடி
அணைந்து வந்தெனை ஆண்டுகொண் டருளிய 6
அற்புதம் அறியேனே.

575. இப்பி றப்பினில் இணைமலர் கொய்துநான்
இயல்பொடஞ் செழுத்தோதித்
தப்பி லாதுபொற் கழல்களுக் கிடாதுநான்
தடமுலை யார்தங்கள்
மைப்பு லாங்கண்ணால் ஏறுண்டு கிடப்பேனை
மலரடி யிணைகாட்டி
அப்பன் என்னைவந் தாண்டுகொண் டருளிய 7
அற்புதம் அறியேனே.

576. ஊச லாட்டுமிவ் வுடலுயி ராயின
இருவினை அறுத்தென்னை
ஓசை யாலுணர் வார்க்குணர் வரியவன்
உணர்வுதந் தொளியாக்கிப்
பாச மானவை பற்றறுத் துயர்ந்ததன்
பரம்பெருங் கருணையால்
ஆசை தீர்த்தடி யாரடிக் கூட்டிய 8
அற்புதம் அறியேனே.

---

6. வணங்கும் - தாழ்ந்த. கோமளத்தொடும் - அழகுடைய உமையம்மையுடன்.

7. இணைமலர் - இணைந்த மலர். மைபபு உலாம்கண் - கருநிறம் பரந்த கண்.

8. ஊசலாட்டும் - அலைவுசெய்யும். ஓசையால் - நூலறிவால்.

577. பொச்சை யானஇப் பிறவியிற் கிடந்துநான்
புழுத்தலை நாய்போல
இச்சை யாயின ஏழையர்க் கேசெய்தங்
கிணங்கியே திரிவேனை
இச்ச கத்தரி அயனுமெட் டாததன்
விரைமலர்க் கழல்காட்டி
அச்சன் என்னையும் ஆண்டுகொண் டருளிய
அற்புதம் அறியேனே. 9

578. செறியும் இப்பிறப் பிறப்பிவை நினையாது
செறிகுழ லார்செய்யுங்
கிறியுங் கீழ்மையுங் கெண்டையங் கண்களும்
உன்னியே கிடப்பேனை
இறைவன் எம்பிரான் எல்லையில் லாததன்
இணைமலர்க் கழல்காட்டி
அறிவு தந்தெனை ஆண்டுகொண் டருளிய
அற்புதம் அறியேனே. 10

திருச்சிற்றம்பலம்

9. பொச்சை - கரிந்தகாடு. ஏழையர் - பெண்கள்.
அச்சன் - தந்தை.

10. கிறி - பொய்



# 42. சென்னிப் பத்து

[ சிவவிளைவு ]

திருப்பெருந் துறையில் அருளியது

ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

579. தேவ தேவன்மெய்ச் சேவகன்
தென்பெ ருந்துறை நாயகன்
மூவ ராலும் அறியொணா
முதலாய ஆனந்த மூர்த்தியான்
யாவ ராயினும் அன்பரன்றி
அறியொ ணாமலர்ச் சோதியான்
தூய மாமலர்ச் சேவடிக்கண்நம்
சென்னி மன்னிச் சுடருமே. 1

580. அட்ட மூர்த்தி அழகன்இன்னமு
தாய ஆனந்த வெள்ளத்தான்
சிட்டன் மெய்ச்சிவ லோகநாயகன்
தென்பெ ருந்துறைச் சேவகன்
மட்டு வார்குழல் மங்கையாளையோர்
பாகம் வைத்த அழகன்றன்
வட்ட மாமலர்ச் சேவடிக்கண்நம்
சென்னி மன்னி மலருமே. 2

1. மெய்ச்சேவகன் - உண்மைவீரன் மலர்ச்சோதியன் - (ஆதி அந்தமில்லாமற்) பரந்தசோதி வடிவானவன். மன்னி - நிலைபெற்று.

2. அட்டமூர்த்தி - ஐம்பூதம், சூரியன், சந்திரன், உயிர் எனும் எட்டு மூர்த்தமாயுள்ளவன். சிட்டன் - மேலான வன். மட்டு - தேன்.

581. நங்கை மீரெனை நோக்குமின் நங்கள்
நாதன் நம்பணி கொண்டவன்
தெங்கு சோலைகள் சூழ்பெருந்துறை
மேய சேவகன் நாயகன்
மங்கை மார்கையில் வளையுங் கொண்டெம்
உயிருங் கொண்டெம் பணிகொள்வான்
பொங்கு மாமலர்ச் சேவடிக்கண் நம்
சென்னி மன்னிப் பொலியுமே. 3

582. பத்தர் சூழப் பராபரன்
பாரில் வந்துபார்ப் பானெனச்
சித்தர் சூழச் சிவபிரான்
தில்லை மூதூர் நடஞ்செய்வான்
எத்த னாகிவந் தில்புகுந்தெமை
ஆளுங் கொண்டெம் பணிகொள்வான்
வைத்த மாமலர்ச் சேவடிக்கண் நம்
சென்னி மன்னி மலருமே. 4

583. மாய வாழ்க்கையை மெய்யென் றெண்ணி
மதித்தி டாவகை நல்கினான்
வேய தோளுமை பங்கன் எங்கள்
திருப்பெ ருந்துறை மேவினான்
காயத் துள்ளமு தூறஊறநீ
கண்டு கொள்ளென்று காட்டிய
சேய மாமலர்ச் சேவடிக்கண் நம்
சென்னி மன்னித் திகழுமே. 5

3. பொங்குமாமலர் - விரிந்து விளங்கும் தாமரைமலர்

4. இல் புகுந்து - வீடுதேடி வந்து. (வலிய வந்து)



584. சித்த மேபுகுந் தெம்மையாட்கொண்டு
தீவினைகெடுத் துய்யலாம்
பத்தி தந்துதன் பொற்கழற்கணே
பன்ம லர்கொய்து சேர்த்தலும்
முத்தி தந்திந்த மூவுலகுக்கும்
அப்பு றத்தெமை வைத்திடும்
அத்தன் மாமலர்ச் சேவடிக்கண் நம்
சென்னி மன்னி மலருமே. 6

585. பிறவி யென்னுமிக் கடலைநீந்தத்தன்
பேர ருள்தந் தருளினான்
அறவை யென்றடி யார்கள் தங்கள்
அருட்கு ழாம்புக விட்டுநல்
உறவு செய்தெனை உய்யக்கொண்ட
பிரான்தன் உண்மைப் பெருக்கமாம்
திறமை காட்டிய சேவடிக்கண் நம்
சென்னி மன்னித் திகழுமே. 7

586. புழுவி னாற்பொதிந் திடுகுரம்பையிற்
பொய்த னையொழி வித்திடும்
எழில்கொள் சோதியெம் ஈசன் எம்பிரான்
என்னுடை யப்பன் என்றென்று
தொழுத கையின ராகித் தூய்மலர்க்
கண்கள் நீர்மல்குந் தொண்டர்க்கு
வழுவிலாமலர்ச் சேவடிக்கண் நம்
சென்னி மன்னி மலருமே. 8

7. அறவை - துணை அற்றவன். உண்மைப் பெருக்கமாம் திறமை - உண்மையினது மிகுதியாகிய திறமை.

587. வம்ப னாய்த்திரி வேனைவாவென்று
 வல்வி னைப்பகை மாய்த்திடும்
உம்ப ரான்உல கூடறுத்தப்
 புறத்த னாய்நின்ற எம்பிரான்
அன்ப ரானவர்க் கருளிமெய்யடி
 யார்கட் கின்பந் தழைத்திடுஞ்
செம்பொன் மாமலர்ச் சேவடிக்கண்நம்
 சென்னி மன்னித் திகழுமே. 9

588. முத்த னைமுதற் சோதியைமுக்கண்
 அப்ப னைமுதல் வித்தினைச்
சித்த னைச்சிவ லோகனைத்திரு
 நாமம் பாடித் திரிதரும்
பத்தர்காள் இங்கே வம்மின்நீர்உங்கள்
 பாசந் தீரப் பணிமினோ
சித்த மார்தருஞ் சேவடிக்கண்நம்
 சென்னி மன்னித் திகழுமே. 10

திருச்சிற்றம்பலம்

9. வம்பன் - வீணன்.



## 43. திருவார்த்தை

[ அறிவித்தன்புறுதல் ]

திருப்பெருந்துறையில் அருளியது

எண்சீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

589. மாதிவர் பாகன் மறைப யின்ற
 வாசகன் மாமலர் மேய சோதி
கோதில் பரங்கரு ணையடியார்
 குலாவுநீ திகுண மாக நல்கும்
போதலர் சோலைப் பெருந்து றையெம்
 புண்ணியன் மண்ணிடை வந்திழிந்
தாதிப் பிரமம் வெளிப்ப டுத்த
 அருளறி வார்எம் பிரானா வாரே. 1

590. மாலயன் வானவர் கோனும் வந்து
 வணங்க அவர்க்கருள் செய்த ஈசன்
ஞால மதனிடை வந்தி ழிந்து
 நன்னெறி காட்டி நலம்தி கழுங்
கோல மணியணி மாட நீடு
 குலாவு மிடவை மடநல் லாட்குச்
சீல மிகக்கரு ணைய ளிக்குந்
 திறமறி வார்எம் பிரானா வாரே. 2

1. மாமலர் - உள்ளக்கமலம். மறைபயின்ற வாசகன் - வேதம் பயிலும் சொல்லினன். இழிந்து - (ஆதிப்பிரமம் எனும் நிலையினின்றும்) இறங்கி; ஆதிப்பிரமம் - முதற்சோதி.

2. கோல மணி அணி மாடம் நீடு இடவை எனக்கொண்டு அழகிய மணிமாடங்கள் உயர்ந்து நீண்ட ''இடவை''ப் பதி என உரைக்க. மற்று, இடவை இடை மருது எனும் பதியென்று கொள்ளினுமாம். இப்பதிகளில் அடியவர் பொருட்டு இறைவன் எழுந்தருளினன்.

591. அணிமுடி ஆதி அமரர் கோமான்
ஆனந்தக் கூத்தன் அறுச மயம்
பணிவகை செய்து படவு தேறிப்
பாரொடு விண்ணும் பரவி யேத்தப்
பிணிகெட நல்கும் பெருந்து றையெம்
பேரரு ளாளன் பெண்பாலு கந்து
மணிவலை கொண்டுவான் மீன்விசிறும்
வகையறி வார்எம் பிரானா வாரே. 3

592. வேடுரு வாகி மகேந்தி ரத்து
மிகுகுறை வானவர் வந்து தன்னைத்
தேட இருந்த சிவபெரு மான்
சிந்தனை செய்தடி யோங்க ளுய்ய
ஆடல் அமர்ந்த பரிமா ஏறி
ஐயன் பெருந்துறை ஆதி அந்நாள்
ஏடர் களையெங்கும் ஆண்டு கொண்ட
இயல்பறி வார்எம் பிரானா வாரே. 4

593. வந்திமை யோர்கள் வணங்கி யேத்த
மாக்கரு ணைக்கட லாய்அடியார்
பந்தனை விண்டற நல்கும் எங்கள்
பரமன் பெருந்துறை ஆதி அந்நாள்
உந்து திரைக்கட லைக்கடந்தன்
றோங்கு மதிலிலங் கைஅதனிற்
பந்தணை மெல்விர லாட்கருளும்
பரிசறி வார்எம் பிரானா வாரே. 5

3. அணிமுடி - அழகிய சடாமுடி. படவு - படகு
வான்மீன்விசிறும் - பெரிய கெளிற்று மீனை வீசிப்பிடிக்கும்

4. வேடுருவாகி - வேடுவக்கோலம் தாங்கி. மிகு குறை வானவர் - மிகுந்த குறையுடைய தேவர். பரிமா - குதிரை. ஏடர் - தோழர், அடியார்.

5. பந்தனை - பாசக்கட்டு. பந்தணை மெல்விரலாள் - பந்து பொருந்தும் மெல்லிய விரல்களையுடைய மண்டோதரி.



594. வேவத் திரிபுரம் செற்ற வில்லி
வேடுவ னாய்க்கடி நாய்கள் சூழ
ஏவற்செ யல்செய்யுந் தேவர் முன்னே
எம்பெரு மான்தான் இயங்கு காட்டில்
ஏவுண்ட பன்றிக் கிரங்கி யீசன்
எந்தை பெருந்துறை ஆதி அன்று
கேவலங் கேழலாய்ப் பால்கொ டுத்த
கிடப்பறி வார்எம் பிரானா வாரே. 6

595. நாதம் உடையதோர் நற்க மலப்
போதினில் நண்ணிய நன்னு தலார்
ஓதிப் பணிந்தலர் தூவி யேத்த
ஒளிவளர் சோதியெம் ஈசன் மன்னும்
போதலர் சோலைப் பெருந்து றையெம்
புண்ணியன் மண்ணிடை வந்து தோன்றிப்
பேதங் கெடுத்த ருள்செய் பெருமை
அறியவல் லார்எம் பிரானா வாரே. 7

596. பூவலர் கொன்றைய மாலை மார்பன்
போருகிர் வன்புலி கொன்ற வீரன்
மாதுநல் லாளுமை மங்கை பங்கன்
வண்பொழில் சூழ்தென் பெருந்து றைக்கோன்
ஏதில் பெரும்புகழ் எங்கள் ஈசன்
இருங்கடல் வாணற்குத் தீயில் தோன்றும்
ஓவிய மங்கையர் தோள்புணரும்
உருவறி வார்எம் பிரானா வாரே. 8

6. ஏவற்செயல் செய்யும் தேவர் - (சிவபெருமான் வேட்டுவக் கோலம் கொண்டபோது) அவரின் ஏவல் செய்யும் வேடுவராகக் கோலங் கொண்ட தேவர்கள். ஏ உண்ட - அம்புபட்டு இறந்த. கேவலம் கேழல் - அற்பமான பன்றி.

7. பேதம் கெடுத்து - சிவஞானமருளி.

8. உகிர் - நகம். கடல்வாணன் - கடல் வாழ்க்கையையுடைய வலைஞன். ஓவிய மங்கையர் - சித்திரப்பாவை போன்ற அழகிய உமையம்மை.

597. தூவெள்ளை நீறணி எம்பெ ருமான்
சோதி மகேந்திர நாதன் வந்து
தேவர் தொழும்பதம் வைத்த ஈசன்
தென்னன் பெருந்துறை ஆளி அன்று
காதல் பெருகக் கருணை காட்டித்
தன்கழல் காட்டிக் கசிந்து ருகக்
கேதங் கெடுத்தென்னை ஆண்ட ருளுங்
கிடப்பறி வார்எம் பிரானு வாரே. 9

598. அங்கணன் எங்கள் அமரர் பெம்மான்
அடியார்க் கமுதன் அவனி வந்த
எங்கள் பிரான்இரும் பாசந் தீர
இகபர மாயதோர் இன்ப மெய்தச்
சங்கங் கவர்ந்துவண் சாத்தி னோடுஞ்
சதுரன் பெருந்துறை ஆளி அன்று
மங்கையர் மல்கும் மதுரை சேர்ந்த
வகையறி வார்எம் பிரானு வாரே 10

திருச்சிற்றம்பலம்

---

9. கேதம் கெடுத்து - துன்பம் நீக்கி. கிடப்பு - திருவுள்ளக் கிடக்கை.

10. அங்கணன் - அழகிய கருணைக்கண்ணன். வண்சாத்து - வளப்பமுடைய வணிகர் கூட்டம்.



## 44. எண்ணப்பதிகம்

### (ஒழியா இன்பத்து உவகை)

திருத்தில்லையில் அருளியது

ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

599. பாருரு வாய பிறப்பற வேண்டும்
பத்திமை யும்பெற வேண்டும்
சீருரு வாய சிவபெரு மானே
செங்கம லம்மலர்போல்
ஆருரு வாயஎன் ஆரமு தேஉன்
அடியவர் தொகைநடுவே
ஓருரு வாயநின் திருவருள் காட்டி
என்னையும் உய்யக்கொண் டருளே 1

600. உரியேன் அல்லேன் உனக்கடிமை
உன்னைப் பிரிந்திங் கொருபொழுதுந்
தரியேன் நாயேன் இன்னதென்
றறியேன் சங்கரா கருணையினாற்
பெரியோன் ஒருவன் கண்டுகொள்
என்றுன் பெய்கழல் அடிகாட்டிப்
பிரியேன் என்றென் றருளிய அருளும்
பொய்யோ எங்கள் பெருமானே 2

---

1. பார்உருவாய பிறப்பு - மண்ணிலே வந்த பிறப்பு. ஓர்உருவாய நின்திருவருள் - உனது ஒப்பற்ற அருள்மேனி (குருமூர்த்தம்)

601. என்பே உருக நின்அருள் அளித்துன்
இணைமலர் அடிகாட்டி
முன்பே என்னை ஆண்டு கொண்ட
முனிவா முனிவர் முழுமுதலே
இன்பே அருளி எனையுருக்கி
உயிருண் கின்ற எம்மானே
நண்பே யருளாய் என்னுயிர்
நாதா நின்னருள் நாணுமே 3

602. பத்தில னேனும் பணிந்தில னேனும்உன்
உயர்ந்த பைங்கழல் காணப்
பித்தில னேனும் பிதற்றில னேனும்
பிறப்பறுப் பாய்எம் பெருமானே
முத்தனை யானே மணியனை யானே
முதல்வனே முறையோஎன்
றெத்தனை யானும் யான்தொடர்ந் துன்னை
இனிப்பிரிந் தாற்றேனே 4

603. காணும தொழிந்தேன் நின்திருப் பாதங்
கண்டுகண் களிகூரப்
பேணும தொழிந்தேன் பிதற்றும தொழிந்தேன்
பின்னைஎம் பெருமானே
தாணுவே அழிந்தேன் நின்னினைந் துருகுந்
தன்மைஎன் புன்மைகளாற்
காணும தொழிந்தேன் நீயினி வரினுங்
காணவும் நாணுவனே 5

4. பத்து - பற்று.
5. பேணும்அது - வழிபடுவது. தாணுவே - நிலைபேறுடைய வனே.



604. பாற்றிரு நீற்றெம் பரமனைப்
பரங்கரு ணையோடும் எதிர்ந்து
தோற்றிமெய் யடியார்க் கருட்டுறை யளிக்குஞ்
சோதியை நீதியிலேன்
போற்றியென் அமுதே எனநினைந் தேத்திப்
புகழ்ந்தழைத் தலறியென் னுள்ளே
ஆற்றுவ னாக உடையவ னேஎனை
ஆவஎன் றருளாயே 6

திருச்சிற்றம்பலம்

## 45. யாத்திரைப் பத்து

### (அனுபவாதீதம் உரைத்தல்)

திருத்தில்லையில் அருளியது

அறுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

605. பூவார் சென்னி மன்னனெம்
புயங்கப் பெருமான் சிறியோமை
ஓவா துள்ளம் கலந்துணர்வாய்
உருக்கும் வெள்ளக் கருணையினால்
ஆவா என்னப் பட்டன்பாய்
ஆட்பட் டீர்வந் தொருப்படுமின்
போவோம் காலம் வந்ததுகாண்
பொய்விட் டுடையான் கழல்புகவே 1

1. ஓவாது - இடையறாது. ஒருப்படுமின் - ஒன்று சேருங்கள். பொய்விட்டு - மாய வாழ்வைவிட்டு.

606. புகவே வேண்டா புலன்களில்நீர்
புயங்கப் பெருமான் பூங்கழல்கள்
மிகவே நினைமின் மிக்கவெல்லாம்
வேண்டா போக விடுமின்கள்
நகவே ஞாலத் துள்புகுந்து
நாயே அனைய நமையாண்ட
தகவே யுடையான் தனைச்சாரத்
தளரா திருப்பார் தாந்தாமே 2

607. தாமே தமக்குச் சுற்றமும்
தாமே தமக்கு விதிவகையும்
யாமார் எமதார் பாசமார்
என்ன மாயம் இவைபோகக்
கோமான் பண்டைத் தொண்டரொடும்
அவன்தன் குறிப்பே குறிக்கொண்டு
போமா றமைமின் பொய்நீக்கிப்
புயங்கன் ஆள்வான் பொன்னடிக்கே 3

608. அடியார் ஆனீர் எல்லீரும்
அகல விடுமின் விளையாட்டைக்
கடிசே ரடியே வந்தடைந்து
கடைக்கொண் டிருமின் திருக்குறிப்பைச்
செடிசே ருடலைச் செலநீக்கிச்
சிவலோ கத்தே நமைவைப்பான்
பொடிசேர் மேனிப் புயங்கன்தன்
பூவார் கழற்கே புகவிடுமே 4

2. மிக்க வெல்லாம் - மிகையான மற்றுப்பற்றெல்லாம்.
தகவு - (நரியைப் பரியாக்கும்) தகைமை.

3. விதிவகை - விதிகளை அமைப்போர்
அவன்தன் குறிப்பு - (அடியவரை சிவமாக்கும்) அருட் குறிப்பு.

4. விளையாட்டை - உலகபோகத்தை கடிசேர்அடி - வாசனை பொருந்திய திருவடி. கடைக்கொண்டிருமின் - திருக் கதவம் திறக்கும் தருணம் பார்த்திருங்கள்.



609. விடுமின் வெகுளி வேட்கைநோய்
மிகஓர் காலம் இனியில்லை
உடையான் அடிக்கீழ்ப் பெருஞ்சாத்தோ
டுடன்போ வதற்கே ஒருப்படுமின்
அடைவோம் நாம்போய்ச் சிவபுரத்துள்
அணியார் கதவ தடையாமே
புடைபட் டுருகிப் போற்றுவோம்
புயங்கன் ஆள்வான் புகழ்களையே 5

610. புகழ்மின் தொழுமின் பூப்புனைமின்
புயங்கன் தாளே புந்திவைத்திட்
டிகழ்மின் எல்லா அல்லலையும்
இனியோர் இடையூ றடையாமே
திகழுஞ் சீரார் சிவபுரத்துச்
சென்று சிவன்தாள் வணங்கிநாம்
நிகழும் அடியார் முன்சென்று
நெஞ்சம் உருகி நிற்போமே 6

611. நிற்பார் நிற்கநில் லாவுலகில்
நில்லோம் இனிநாம் செல்வோமே
பொற்பால் ஒப்பாந் திருமேனிப்
புயங்கன் ஆள்வான் பொன்னடிக்கே
நிற்பீர் எல்லாந் தாழாதே
நிற்கும் பரிசே ஒருப்படுமின்
பிற்பால் நின்று பேழ்கணித்தாற்
பெறுதற் கரியன் பெருமானே 7

5. பெருஞ்சாத்தோடு - பெரிய அடியார் திரளுடன்.
கதவுஅது அடையாமே - திருக்கதவம் அடைபடாது திறந்திருக்கும் பொழுதே.

6. நிகழும் அடியார் - தொண்டுசெய் அடியவர் (பழவடியார்.)

7. பொற்பால் ஒப்பாம் - அழகில் தனக்குத்தானே ஒப்பான
பேழ்கணித்தால் - கழிந்ததற்கு இரங்கினால்.

612. பெருமான் பேரா னந்தத்துப்
பிரியா திருக்கப் பெற்றீர்காள்
அருமா லுற்றுப் பின்னைநீர்
அம்மா அழுங்கி அரற்றுதே
திருமா மணிசேர் திருக்கதவந்
திறந்த போதே சிவபுரத்துத்
திருமா லறியாத் திருப்புயங்கன்
திருத்தாள் சென்று சேர்வோமே. 8

613 சேரக் கருதிச் சிந்தனையைத்
திருந்த வைத்துச் சிந்திமின்
போரிற் பொலியும் வேற்கண்ணாள்
பங்கன் புயங்கன் அருளமுதம்
ஆரப் பருகி ஆராத
ஆர்வங் கூர அழுந்துவீர்
போரப் புரிமின் சிவன்கழற்கே
பொய்யிற் கிடந்து புரளாதே. 9

614 புரள்வார் தொழுவார் புகழ்வாராய்
இன்றே வந்தாள் ஆகாதீர்
மருள்வீர் பின்னை மதிப்பாரார்
மதியுட் கலங்கி மயங்குவீர்
தெருள்வீ ராகில் இதுசெய்மின்
சிவலோ கக்கோன் திருப்புயங்கன்
அருள்ஆர் பெறுவார் அகலிடத்தே
அந்தோ அந்தோ அந்தோவே. 10

திருச்சிற்றம்பலம்

9. போரப்புரிமின் - போய்ச்சேர விரும்புங்கள்.

10. மதியுட்கலங்கி - (அவனறிவைத் துணைக்கொள்ளாது) சுயபுத்தியினால் கலக்கமடைந்து.



## 46. திருப்படையெழுச்சி

### (பிரபஞ்சப்போர்)

திருத்தில்லையில் அருளியது

கலிவிருந்தம்

திருச்சிற்றம்பலம்

615.
ஞானவாள் ஏந்துமைஐயர் நாதப் பறையறைமின்
மானமா ஏறுமைஐயர் மதிவெண் குடைகவிமின்
ஆனநீற் றுக்கவசம் அடையப் புகுமின்கள்
வானஊர் கொள்வோம்நாம் மாயப்படை வாராமே 1

616.
தொண்டர்காள் தூசிசெல்லீர் பத்தர்காள் சூழப்போகீர்
ஒண்டிறல் யோகிகளே பேரணி உந்தீர்கள்
திண்டிறல் சித்தர்களே கடைக்கூழை சென்மின்கள்
அண்டர்நா டாள்வோம்நாம் அல்லற்படை வாராமே 2

திருச்சிற்றம்பலம்

1. நாதப்பறை - அஞ்செழுத்தாகிய போர்முரசு. மானமா - கொற்றக்குதிரை. மதிவெண்குடை - சிவஞானம் எனும் வெண்கொற்றக்குடை.

2. தூசி - முன்னணிப்படை. சூழ - பக்கப்படை. பேரணி - பெரிய அணியாகிய நடுப்படை. கடைக்கூழை - பின்னணிப்படை.

# 47. திருவெண்பா

## (அணைந்தோர் தன்மை)

திருப்பெருந்துறையில் அருளியது

நேரிசை வெண்பா

திருச்சிற்றம்பலம்

617.
வெய்ய வினையிரண்டும் வெந்தகல மெய்யுருகிப்
பொய்யும் பொடியாகா தென்செய்கேன் — செய்ய
திருவார் பெருந்துறையான் தேனுந்து செந்தீ 1
மருவா திருந்தேன் மனத்து

618.
ஆர்க்கோ அரற்றுகோ ஆடுகோ பாடுகோ
பார்க்கோ பரம்பரனே என்செய்கேன் — தீர்ப்பரிய
ஆனந்த மாலேற்றும் அத்தன் பெருந்துறையான்
தானென்பார் ஆரொருவர் தாழ்ந்து 2

619.
செய்த பிழையறியேன் சேவடியே கைதொழுதே
உய்யும் வகையின் உயிர்ப்பறியேன் - வையத்
திருந்துறையுள் வேல்மடுத்தென் சிந்தனைக்கே கோத்தான்
பெருந்துறையில் மேய பிரான். 3

---

1. தேனுந்து செந்தீ - ஆனந்தத் தேன்பொங்கும் சோதிவடிவினன்.
2. ஆனந்தமால் - பேரின்பப்பித்து.
3. உயிப்பு - சுவாசம். உறையுள் வேல் மடுத்து - உறையாகிய திரோதான சத்தியிலிருந்து வேலாகிய ஞானத்தை அருளி.



620.
முன்னை வினையிரண்டும் வேரறுத்து முன்னின்றான்
பின்னைப் பிறப்பறுக்கும் பேராளன் — தென்னன்
பெருந்துறையில் மேய பெருங்கருணை யாளன் 4
வருந்துயரந் தீர்க்கும் மருந்து.

621.
அறையோ அறிவார்க் கனைத்துலகும் ஈன்ற
மறையோனும் மாலும்மால் கொள்ளும் — இறையோன்
பெருந்துறையுள் மேய பெருமான் பிரியா 5
திருந்துறையும் என்னெஞ்சத் தின்று.

622.
பித்தென்னை ஏற்றும் பிறப்பறுக்கும் பேச்சரிதாம்
மத்தமே யாக்கும்வந் தென்மனத்தை — அத்தன்
பெருந்துறையான் ஆட்கொண்டு பேரருளால் நோக்கும் 6
மருந்திறவாப் பேரின்பம் வந்து.

623.
வாரா வழியருளி வந்தெனக்கு மாறின்றி
ஆரா அமுதாய் அமைந்தன்றே — சீரார்
திருத்தென் பெருந்துறையான் என்சிந்தை மேய 7
ஒருத்தன் பெருக்கும் ஒளி.

624.
யாவர்க்கும் மேலாம் அளவிலாச் சீருடையான்
யாவர்க்குங் கீழாம் அடியேனை — யாவரும்
பெற்றறியா இன்பத்துள் வைத்தாய்க்கென் எம்பெருமான் 8
மற்றறியேன் செய்யும் வகை.

---

4. பின்னைப்பிறப்பு - இனி உள்ள பிறப்புக்கள்.
5. அறையோ - அறைகூவுகின்றேன்.
6. பேச்சரிதாம் மத்தம் - (பேச்சு + அரிதாம் + மத்தம்) பேச்சற்ற களிப்பு நிலை.
7. மாறின்றி - நீங்காது நின்று.

625.
மூவரும் முப்பத்து மூவரும் மற்றொழிந்த
தேவரும் காணாச் சிவபெருமான் மாவேறி
வையகத்தே வந்திழிந்த வார்கழல்கள் வந்திக்க
மெய்யகத்தே இன்பம் மிகும். 9

626.
இருந்தென்னை ஆண்டான் இணையடியே சிந்தித்
திருந்திரந்து கொள்நெஞ்சே எல்லாந் — தருங்காண்
பெருந்துறையின் மேய பெருங்கருணை யாளன்
மருந்துருவாய் என்மனத்தே வந்து. 10

627.
இன்பம் பெருக்கி இருளகற்றி எஞ்ஞான்றுந்
துன்பந் தொடர்வறுத்துச் சோதியாய் — அன்பமைத்துச்
சீரார் பெருத்துறையான் என்னுடைய சிந்தையே
ஊராகக் கொண்டான் உவந்து. 11

திருச்சிற்றம்பலம்

## 48. பண்டாய நான்மறை

### ( அனுபவத்திற்கு ஐயமின்மை உரைத்தல் )

திருப்பெருந்துறையில் அருளியது

நேரிசை வெண்பா

திருச்சிற்றம்பலம்

628.
பண்டாய நான்மறையும் பாலணுகா மாலயனுங்
கண்டாரு மில்லைக் கடையேனைத் — தொண்டாகக்
கொண்டருளுங் கோகழிஎங் கோமாற்கு நெஞ்சமே
உண்டாமோ கைம்மா றுரை. 1



629.
உள்ள மலமூன்றும் மாய உகுபெருந்தேன்
வெள்ளந் தரும்பரியின் மேல்வந்த — வள்ளல்
மருவும் பெருந்துறையை வாழ்த்துமின்கள் வாழ்த்தக்
கருவும் கெடும்பிறவிக் காடு 2

630.
காட்டகத்து வேடன் கடலில் வலைவாணன்
நாட்டிற் பரிபாகன் நம்வினையை — வீட்டி
அருளும் பெருந்துறையான் அங்கமல பாதம்
மருளுங் கெடநெஞ்சே வாழ்த்து 3

631.
வாழ்ந்தார்கள் ஆவாரும் வல்வினையை மாய்ப்பாருந்
தாழ்ந்துலகம் ஏத்தத் தகுவாருந் — சூழ்ந்தமரர்
சென்றிறைஞ்சி ஏத்தும் திருவார் பெருந்துறையை
நன்றிறைஞ்சி ஏத்தும் நமர் 4

632.
நண்ணிப் பெருந்துறையை நம்மிடர்கள் போயகல
எண்ணி எழுகோ கழிக்கரசைப் — பண்ணின்
மொழியாளோ டுத்தர கோசமங்கை மன்னிக்
கழியா திருந்தவனைக் காண் 5

---

2. கருவும் கெடும் பிறவிக்காடு - பிறவிக் காட்டின் கருவும் கெடும் என்று கூட்டுக.
3. வீட்டி - அழித்து.
4. நமர் - நம்மவர்.
5. நண்ணி - அடைந்து. மன்னிக்கழியாது இருந்தவன் - நிலைபெற்று நீங்காதுறைபவன்.

633.
காணுங் கரணங்கள் எல்லாம்பே ரின்பமெனப்
பேணும் அடியார் பிறப்பகலக் — காணும்
பெரியானை நெஞ்சே பெருந்துறையில் என்றும்
பிரியானை வாயாரப் பேசு 6

634.
பேசும் பொருளுக் கிலக்கிதமாம் பேச்சிறந்த
மாசின் மணியின் மணிவார்த்தை — பேசிப்
பெருந்துறையே என்று பிறப்பறுத்தேன் நல்ல
மருந்தினடி என்மனத்தே வைத்து 7

திருச்சிற்றம்பலம்

6. காணும் கரணங்கள் - ஞானேந்திரியங்கள்.
7. இலக்கிதமாம் - குறியாய் அமைந்தது. மணிவார்த்தை-திருப்புகழ். நல்லமருந்து - பிறவிப் பிணி போக்கும் மருந்து.



# 49. திருப்படையாட்சி

## (சீவோபாதியொழிதல்)

திருத்தில்லையில் அருளியது

பன்னிருசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

635. கண்க ளிரண்டும் அவன்கழல் கண்டு
களிப்பன ஆகாதே
காரிகை யார்கள்தம் வாழ்விலென் வாழ்வு
கடைப்படும் ஆகாதே
மண்களில் வந்து பிறந்திடு மாறு
மறந்திடும் ஆகாதே
மாலறி யாமலர்ப் பாதம் இரண்டும்
வணங்குதும் ஆகாதே
பண்களி கூர்தரு பாடலொ டாடல்
பயின்றிடு மாகாதே
பாண்டிநன் னாடுடை யான்படை யாட்சிகள்
பாடுது மாகாதே
விண்களி கூர்வதோர் வேதகம் வந்து
வெளிப்படு மாகாதே
மீன்வலை வீசிய கானவன் வந்து
வெளிப்படு மாயிடிலே 1

1. கடைப்படும் - சுதந்திரமின்றி இறைவன்வழிப்படும். ஆகாதே - உண்டாகாது; நிகழாது. மறந்திடும் - இறைவனை மறந்து போதல். படையாட்சிகள் - தொண்டராகிய படையை ஆளுந் திறன்கள். வேதகம் - (உலகியலில் நின்றும் வேறுபடுத்திச் சிவமாக்கும்) பொருள்; திருவருள்.

636. ஒன்றினொ டொன்றுமோரைந்தி னொடைந்தும்
உயிர்ப்பறு மாகாதே
உன்னடி யார்அடி யார்அடி யோமென
உய்ந்தன வாகாதே
கன்றை நினைந்தெழு தாயென வந்த
கணக்கது வாகாதே
காரண மாகு மனாதி குணங்கள்
கருத்துறு மாகாதே
நன்றிது தீதென வந்த நடுக்கம்
நடந்தன ஆகாதே
நாமுமெ லாம்அடி யாருட னேசெல
நண்ணுது மாகாதே
என்றுமென் அன்பு நிறைந்த பராவமு
தெய்துவ தாகாதே
ஏறுடை யான்எனை ஆளுடை நாயகன்
என்னுள் புகுந்திடிலே 2

2. ஒன்றினொடு ஒன்றும் - ஒன்றாகிய உயிருடன் பொருந்தும். ஒன்றுதல் - பொருந்துதல். ஐந்தினொடு ஐந்து - ஞானேந்திரியங்கள் ஐந்தும் கன்மேந்திரியங்கள் ஐந்தும். காரணமாகும் அனாதி குணங்கள் - எப்பொருட்கும் காரணன் ஆகிய அனாதியின் குணங்கள் என விரித்துப் பொருள் கொள்க. அனாதி (அநாதி) - ஆதியில்லா இறைவன். நன்றிது தீதெனவந்த நடுக்கம் - நன்மை, தீமை எனும் மாயாகாரியங்களால் உண்டாகும் தடுமாற்றம். பராவமுது - பரவப்படும் அமுது போன்றவன். பரவுதல்- புகழுதல்.



637. பந்த விகார குணங்கள் பறிந்து
மறிந்திடு மாகாதே
பாவனை யாய கருத்தினில் வந்த
பராவமு தாகாதே
அந்த மிலாத அகண்டமும் நம்முள்
அகப்படு மாகாதே
ஆதி முதற்பர மாய பரஞ்சுடர்
அண்ணுவ தாகாதே
செந்துவர் வாய்மட வாரிட ரானவை
சிந்திடு மாகாதே
சேலன கண்கள் அவன்திரு மேனி
திளைப்பன ஆகாதே
இந்திர ஞால இடர்ப்பிற வித்துயர்
ஏகுவ தாகாதே
என்னுடை நாயக னாகிய ஈசன்
எதிர்ப்படு மாயிடிலே 3

638. என்னணி யார்முலை ஆகம் அளைந்துடன்
இன்புறு மாகாதே
எல்லையில் மாக்கரு ணைக்கடல் இன்றினி
தாடுது மாகாதே
நன்மணி நாதம் முழங்கியென் உள்ளுற
நண்ணுவ தாகாதே
நாதன் அணித்திரு நீற்றினை நித்தலும்
நண்ணுவ தாகாதே

3. பறிந்து மறிந்திடும் - தொடர்பற்று வந்தவழியே நீங்கும். அகண்டம் - பிரிக்கப்படாதது; பூரணமானது.
4. நன்மணிநாதம் - யோகியர் கேட்கும் மாசற்ற மணி ஓசை.

மன்னிய அன்பரில் என்பணி முந்துற
வைகுவ தாகாதே
மாமறை யும்அறி யாமலர்ப் பாதம்
வணங்குது மாகாதே
இன்னியற் செங்கழு நீர்மலர் என்தலை
எய்துவ தாகாதே
என்னை யுடைப்பெரு மான்அருள் ஈசன்
எழுந்தரு ளப்பெறிலே 4

639. மண்ணினில் மாயை மதித்து வகுத்த
மயக்கறு மாகாதே
வானவ ரும்அறி யாமலர்ப் பாதம்
வணங்குது மாகாதே
கண்ணிலி காலம் அனைத்தினும் வந்த
கலக்கறு மாகாதே
காதல்செ யும்அடி யார்மனம் இன்று
களித்திடு மாகாதே
பெண்ணலி ஆணென நாமென வந்த
பிணக்கறு மாகாதே
பேரறி யாத அனேக பவங்கள்
பிழைத்தன ஆகாதே
எண்ணிலி யாகிய சித்திகள் வந்தெனை
எய்துவ தாகாதே
என்னை யுடைப்பெரு மானருள் ஈசன்
எழுந்தரு ளப்பெறிலே 5

---

வைகுவது - பொருந்துவது.

5. மாயை மதித்து வகுத்த மயக்கு - நன்று, தீது என வகுத்த மாயாகாரியங்களான மயக்கம். கண்ணிலி காலம் - கண்ணோட்டம் இல்லாத கூற்றுவன் வரும் இறுதிக்காலம். பிணக்கு - ஞானத்திற்கு மாறாய உணர்வு. பவங்கள் - பிறப்புக்கள்



640. பொன்னிய லுந்திரு மேனிவெண் ணீறு
பொலிந்திடு மாகாதே
பூமழை மாதவர் கைகள் குவிந்து
பொழிந்திடு மாகாதே
மின்னியல் நுண்ணிடை யார்கள் கருத்து
வெளிப்படு மாகாதே
வீணை முரன்றெழும் ஓசையில் இன்பம்
மிகுத்திடு மாகாதே
தன்னடி யார்அடி என்தலை மீது
தழைப்பன ஆகாதே
தானடி யோம்உட னேஉய்ய வந்து
தலைப்படு மாகாதே
இன்னியம் எங்கும் நிறைந்தினி தாக
இயம்பிடு மாகாதே
என்னைமுன் ஆளுடை ஈசனென் அத்தன்
எழுந்தரு ளப்பெறிலே 6

641. சொல்லிய லாதெழு தூமணி யோசை
சுவைதரு மாகாதே
துண்ணென என்னுளம் மன்னிய சோதி
தொடர்ந்தெழு மாகாதே
பல்லியல் பாய பரப்பற வந்த
பராபர மாகாதே
பண்டறி யாதப ரானுப வங்கள்
பரந்தெழு மாகாதே

---

6. இன்னியம் - இனிய வாத்தியங்கள்.

7. சொல் இயலாது எழும் தூமணி ஓசை - மௌனத்தில் எழும் மாசிலோசை.

வில்லியல் நன்னுத லார்மயல் இன்று
விளைந்திடு மாகாதே
விண்ணவ ரும்அறி யாத விழுப்பொருள்
இப்பொரு ளாகாதே
எல்லையி லாதன எண்குண மானவை
எய்திடு மாகாதே
இந்து சிகாமணி எங்களை ஆள
எழுந்தரு ளப்பெறிலே 7

642. சங்கு திரண்டு முரன்றெழும் ஓசை
தழைப்பன ஆகாதே
சாதி விடாத குணங்கள்நம் மோடு
சலித்திடு மாகாதே
அங்கிது நன்றிது நன்றெனு மாயை
அடங்கிடு மாகாதே
ஆசைஎ லாம்அடி யாரடி யோம்எனும்
அத்தனை யாகாதே
செங்கயல் ஒண்கண் மடந்தையர் சிந்தை
திளைப்பன ஆகாதே
சீரடி யார்கள் சிவானு பவங்கள்
தெரிந்திடு மாகாதே
எங்கும் நிறைந்தமு தூறு பரஞ்சுடர்
எய்துவ தாகாதே
ஈறறி யாமறை யோன்எனை ஆள
எழுந்தரு ளப்பெறிலே 8

திருச்சிற்றம்பலம்

---

பரப்பு - மனவிரிவு. இந்துசிகாமணி - இளம்பிறையை முடிமணியாய் அணிந்த சிவபெருமான்.

8 சங்கு திரண்டு முரன்றெழும் ஓசை - எண்ணம் யாவும் அற்ற இடத்தில் கேட்கும் சங்கோசை. சாதி விடாத குணங்கள் - குல அபிமானம்.



# 50. ஆனந்த மாலை

## (சிவானந்த விருப்பம்)

திருத்தில்லையில் அருளியது

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

643. மின்னே ரனைய பூங்கழல்க
ளடைந்தார் கடந்தார் வியனுலகம்
பொன்னே ரனைய மலர்கொண்டு
போற்றா நின்றார் அமரரெல்லாம்
கன்னே ரனைய மனக்கடையாய்க்
கழிப்புண் டவலக் கடல்வீழ்ந்த
என்னே ரனையேன் இனியுன்னைக்
கூடும் வண்ணம் இயம்பாயே 1

644. என்னால் அறியாப் பதம்தந்தாய்
யான தறியா தேகெட்டேன்
உன்னால் ஒன்றுங் குறைவில்லை
உடையாய் அடிமைக் காரென்பேன்
பன்னாள் உன்னைப் பணிந்தேத்தும்
பழைய அடிய ரொடுங்கூடா
தென்னா யகமே பிற்பட்டிங்
கிருந்தேன் நோய்க்கு விருந்தாயே 2

---

1. கடையாய் - கடையவனாய். என்னேரனையேன் - (கீழ்மையில்) எனக்கு நானே இணையானவன்.
2. என்னால் அறியாப்பதம் - சிறியேனுடைய தகைமைக்கு மிஞ்சிய பெரிய சிவபதம்.

645. சீல மின்றி நோன்பின்றிச்
செறிவே யின்றி அறிவின்றித்
தோலின் பாவைக் கூத்தாட்டாய்ச்
சுழன்று விழுந்து கிடப்பேனை
மாலும் காட்டி வழிகாட்டி
வாரா உலக நெறியேறக்
கோலங் காட்டி ஆண்டானைக்
கொடியேன் என்றோ கூடுவதே 3

646. கெடுவேன் கெடுமா கெடுகின்றேன்
கேடி லாதாய் பழிகொண்டாய்
படுவேன் படுவ தெல்லாம்நான்
பட்டாற் பின்னைப் பயனென்னே
கொடுமா நரகத் தழுந்தாமே
காத்தாட் கொள்ளுங் குருமணியே
நடுவாய் நில்லா தொழிந்தக்கால்
நன்றோ எங்கள் நாயகமே 4

647. தாயாய் முலையைத் தருவானே
தாரா தொழிந்தாற் சவலையாய்
நாயேன் கழிந்து போவேனோ
நம்பி யினித்தான் நல்குதியே
தாயே யென்றுன் தாளடைந்தேன்
தயாநீ என்பால் இல்லையே
நாயேன் அடிமை உடனாக
ஆண்டாய் நான்தான் வேண்டாவோ 5

3. செறிவு - எல்லாரது உள்ளங்களிலும் ஊடுருவி நிற்கும் வியாபகம். மாலும் காட்டி - மயக்கமான பந்த வாழ்வினைப் படைத்து. வழிகாட்டி - வீட்டு வாழ்விற்கு (முத்திநெறிக்கு) உரிய வழியை அறிவித்து. தோலின்பாவை - தோலால் ஆய பொம்மை.

5. சவலை - தாய்ப்பாலில்லாது மெலிந்த குழந்தை.



648. கோவே யருள வேண்டாவோ
கொடியேன் கெடவே அமையுமே
ஆவா என்னா விடில்என்னை
அஞ்சேல் என்பார் ஆரோதான்
சாவா ரெல்லாம் என்னளவோ
தக்க வாறன் றென்னாரோ
தேவே தில்லை நடமாடி
திகைத்தேன் இனித்தான் தேற்றாயே 6

649. நரியைக் குதிரைப் பரியாக்கி
ஞால மெல்லாம் நிகழ்வித்துப்
பெரிய தென்னன் மதுரை யெல்லாம்
பிச்ச தேற்றும் பெருந்துறையாய்
அரிய பொருளே அவிநாசி
அப்பா பாண்டி வெள்ளமே
தெரிய அரிய பரஞ்சோதீ
செய்வ தொன்றும் அறியேனே 7

திருச்சிற்றம்பலம்

6. சாவார் - வறிதே மூத்து இறப்பார். என் அளவோ - எனது நிலையினராமோ.

7. நிகழ்வித்து - அற்புதம் உண்டாக்கி.

## 51. அச்சோப் பதிகம்

### (அநுபவ வழியறியாமை)

திருத்தில்லையில் அருளியது

கலிவிருத்தம்

திருச்சிற்றம்பலம்

650.
முத்திநெறி அறியாத மூர்க்கரொடு முயல்வேனைப்
பத்திநெறி அறிவித்துப் பழவினைகள் பாறும்வண்ணஞ்
சித்தமலம் அறுவித்துச் சிவமாக்கி எனையாண்ட
அத்தனெனக் கருளியவா றார்பெறுவார் அச்சோவே 1

651.
நெறியல்லா நெறிதன்னை நெறியாக நினைவேனைச்
சிறுநெறிகள் சேராமே திருவருளே சேரும்வண்ணம்
குறியொன்றும் இல்லாத கூத்தன்தன் கூத்தையெனக்
கறியும்வண்ணம் அருளியவா றார்பெறுவார் அச்சோவே 2

652.
பொய்யெல்லாம் மெய்யென்று புணர்முலையார் போகத்தே
மையலுறக் கடவேனை மாளாமே காத்தருளித்
தையலிடங் கொண்டபிரான் தன்கழலே சேரும்வண்ணம்
ஐயனெனக் கருளியவா றார்பெறுவார் அச்சோவே 3

653.
மண்ணதனிற் பிறந்தெய்த்து மாண்டுவிழக் கடவேனை
எண்ணமிலா அன்பருளி எனையாண்டிட் டென்னையுந்தன்
சுண்ணவெண்ணீ றணிவித்துத் தூய்நெறியே சேரும்வண்ணம்
அண்ணலெனக் கருளியவா றார்பெறுவார் அச்சோவே 4

---

அச்சோ - இது வியப்பு என்றபடி

1. பாறும் வண்ணம் - அழியும்படி. சித்தமலம் - மனவழுக்கு. அழுக்கு. இங்கு அகங்கார மமகாரங்களைக் குறித்தது.
4. எண்ணம் இலாஅன்பு - எண்ணம் யாவும் அற்ற மெய்யன்பு.



654.
பஞ்சாய அடிமடவார் கடைக்கண்ணால் இடர்ப்பட்டு
நெஞ்சாய துயர்கூர நிற்பேன்உன் அருள்பெற்றேன்
உய்ஞ்சேன்நான் உடையானே அடியேனை வருகஎன்
றஞ்சேல்என் றருளியவா றார்பெறுவார் அச்சோவே 5

655.
வெந்துவிழும் உடற்பிறவி மெய்யென்று வினைபெருக்கிக்
கொந்துகுழற் கோல்வளையார் குவிமுலைமேல் வீழ்வேனைப்
பந்தமறுத் தெனையாண்டு பரிசறஎன் துரிசுமறுத்
தந்தமெனக் கருளியவா றார்பெறுவார் அச்சோவே 6

656.
தையலார் மையலிலே தாழ்ந்துவிழக் கடவேனைப்
பையவே கொடுபோந்து பாசமெனுந் தாழுருவி
உய்யுநெறி காட்டுவித்திட் டோங்காரத் துட்பொருளை
ஐயனெனக் கருளியவா றார்பெறுவார் அச்சோவே 7

657.
சாதல்பிறப் பென்னுந் தடஞ்சுழியில் தடுமாறிக்
காதலின்மிக் கணியிழையார் கலவியிலே விழுவேனை
மாதொருகூ றுடையபிரான் தன்கழலே சேரும்வண்ணம்
ஆதியெனக் கருளியவா றார்பெறுவார் அச்சோவே 8

658.
செம்மைநலம் அறியாத சிதடரொடுந் திரிவேனை
மும்மைமலம் அறுவித்து முதலாய முதல்வன்தான்
நம்மையும்ஓர் பொருளாக்கி நாய்சிவிகை ஏற்றுவித்த
அம்மையெனக் கருளியவா றார்பெறுவார் அச்சோவே 9

திருச்சிற்றம்பலம்

திருவாசகம் முற்றிற்று

---

5. பஞ்சாய அடி - பஞ்சு போன்ற மென்மையான பாதம்.
6. கொந்து - பூங்கொத்து (மெலித்தல் விகாரம்) கோல்வளை - சங்குவளையல். பரிசு - இயல்பு. துரிசு - குற்றம் (பாசம்)
7. தாழ் உருவி - (கதவுக்கிடும்) தாழக்கோலை உருவி எறிந்து செம்மைநலம் - வீட்டின்பம்.
9. சிதடர் - அறிவிலி. பித்தனுமாம். அம்மை - தாயுமானவன்.

உ

சிவமயம்

# திருவாசகம்

# பாட்டு முதற்குறிப்பு அகராதி


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| அங்கணன் | 228 | அருணனிந்திரன் | 141 |
| அங்கிஅருக்கன் | 120 | அருந்தவருக்கு | 117 |
| அடர்புலனால் | 77 | அருமந்த தேவர் | 109 |
| அடற்கரிபோற் | 75 | அருளாதொ | 147 |
| அடியார் ஆனீர் | 232 | அருளாரமுத | 188 |
| அடியார் சிலர் | 187 | அருளுடைச்சுடரே | 207 |
| அடியேன் அல்ல | 191 | அரைசனே | 150 |
| அடியேன் அல்லேன் | 58 | அரைசே அறியா | 77 |
| அட்ட மூர்த்தி | 221 | அரைசே பொன் | 146 |
| அணிமுடி | 226 | அரையாடு நாகம் | 109 |
| அண்டப்பகுதி | 12 | அலரவனும் | 114 |
| அண்ணா மலையான் | 88 | அல்லிக் கமல | 170 |
| அதுபழச் | 143 | அவமாய | 109 |
| அத்தனே | 208 | அழகேபுரிந் | 194 |
| அத்தி யுரித்தது | 121 | அழிவின்றி | 204 |
| அத்தேவர் | 104 | அழுகேன் | 60 |
| அப்பனேயெனக்கு | 63 | அளவறுப் | 44 |
| அம்பரமாம் | 117 | அளவிலாப் | 186 |
| அம்பலத்தே | 117 | அளித்துவந்து | 156 |
| அம்மையே | 207 | அளிபுண் | 162 |
| அயனை அனங்கனை | 114 | அறவேபெற் | 189 |
| அயன்தலை | 102 | அறவையேன் | 208 |
| அரிக்கும் | 109 | அறிவனே | 47 |
| அரியானே | 38 | அறிவிலாத | 43 |

| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| அறுகெடுப்பார் | 97 | இரங்கும் நமக்கு | 147 |
| அறுக்கிலேன் | 155 | இரந்திரந் | 151 |
| அறையோ | 237 | இருகை யானை | 46 |
| அன்பராகி | 154 | இருதலைக் கொள்ளி | 68 |
| அன்பினால் | 149 | இருந்தென்னை | 238 |
| அன்றால நீழ | 120 | இருந்தென்னை யாண்டு | 71 |
| அன்றேயென் | 193 | இருப்பு நெஞ்ச | 57 |
| அன்னேஇ | 84 | இரும்புதரு | 210 |
| ஆடரப்பூ | 132 | இருள்திணிந் | 168 |
| ஆடுகின்றிலை | 43 | இல்லைநின்கழல் | 62 |
| ஆட்டின் தலை | 123 | இழித்தனன் | 53 |
| ஆட்டுத் தேவர் | 154 | இன்பந் தருவன் | 136 |
| ஆணோ அலியோ | 129 | இன்பம் | 238 |
| ஆதமிலி | 210 | இன்பான் | 140 |
| ஆதியும் | 82 | இன்றெனக் | 151 |
| ஆமாறுன் | 37 | இன்னிசை | 142 |
| ஆயநான் | 40 | ஈசனே நீ | 57 |
| ஆயமொழி | 140 | ஈசனேஎன் | 48 |
| ஆர்க்கோ | 236 | ஈண்டிய | 204 |
| ஆர்த்த பிறவி | 86 | ஈரம்பு | 122 |
| ஆவகைநாமும் | 101 | உகந்தானே | 146 |
| ஆவா அரி | 110 | உங்கையிற் | 88 |
| ஆவா திருமால் | 122 | உடைய நாதனே | 63 |
| ஆற்றகில்லேன் | 169 | உடையாள் | 145 |
| ஆனையாய் | 93 | உடையானே | 49 |
| ஆனைவெம் | 72 | உணர்ந்தமா முனிவர் | 150 |
| இடக்குந் | 216 | உண்டொர் | 46 |
| இணையார் திருவடி | 118 | உண்ணப் புகுந்த | 123 |
| இந்திரனும் மாலயனும் | 90 | உத்தம னத்தன் | 33 |
| இந்திரிய வயம் | 184 | உம்பர்கட் | 206 |
| இப்பாடே | 139 | உய்யவல்லார் | 122 |
| இப்பிறப்பி | 219 | உரியேன் | 229 |
| இயக்கிமாரறு | 183 | உருகிப் பெருகி | 111 |

| | பக்கம் |
|---|---|
| உருத்தெரியா | 184 |
| உரைமாண்ட | 128 |
| உலக்கை | 98 |
| உலவாக் | 94 |
| உவலைச் சமயங்கள் | 112 |
| உழிதரு கா | 34 |
| உழைதரு | 80 |
| உள்ளப் படாத | 107 |
| உள்ளமல | 239 |
| உள்ளனவே | 73 |
| உற்ற ஆக்கை | 168 |
| உற்றாரை | 213 |
| உன்னற் கரியசீர் | 132 |
| உன்னற் கரியதிரு | 130 |
| உன்னையுகப் | 136 |
| ஊசலாட்டு | 219 |
| ஊனாய் உயிராய் | 94 |
| எங்கணாயக | 178 |
| எச்சம்மறிவே | 197 |
| எண்ணிலேன் | 166 |
| எண்ணுடை | 127 |
| எந்தையாய் | 47 |
| எந்தையெந் | 118 |
| எம்பிரான் போற்றி | 53 |
| எய்த லாவது | 56 |
| எய்த்தேன் | 163 |
| எரிமூன்று | 119 |
| எறும்பிடை | 73 |
| எனைநானெ | 196 |
| என்பாலைப் | 211 |
| என்புள்ளுரு | 214 |
| என்பே | 230 |
| என்றும் | 125 |

| | பக்கம் |
|---|---|
| என்னணி | 243 |
| என்னப்பன் | 113 |
| என்னாலறியா | 247 |
| என்னையப்பா | 70 |
| ஏகாச மிட்ட | 124 |
| ஏசா நிற்பர் | 147 |
| ஏசினும் | 8 |
| ஏதமிலா | 138 |
| ஏய்ந்த | 217 |
| ஏராரிளங் | 138 |
| ஏர்தரும் | 134 |
| ஏழைத்தொழும் | 128 |
| ஏனையாவரும் | 45 |
| ஐயநின் | 55 |
| ஒண்ணித் திலநகையா | 83 |
| ஒண்மையனே | 72 |
| ஒப்புனக் | 207 |
| ஒருவனே போற்றி | 53 |
| ஒன்றாய் | 105 |
| ஒன்றினோ | 242 |
| ஒன்றும்போ | 192 |
| ஒடுங்கவந்தி | 214 |
| ஓயாதே | 91 |
| ஓய்வி லாதன | 45 |
| ஓரொருகால் | 87 |
| கடகரியும் | 271 |
| கடலினுள் | 69 |
| கடலின்திரை | 196 |
| கடலே யனைய | 189 |
| கடவுளே போற்றி | 52 |
| கடையவனேன் | 65 |
| கட்டறுத்தெனை | 47 |
| கண்களிரண் | 241 |





| | பக்கம் |
|---|---|
| கண்டது செய்து | 76 |
| கண்ணஞ் | 131 |
| கண்ணப்பன் | 104 |
| கண்ணார் | 194 |
| கதியடியேற் | 79 |
| கமலநான் | 178 |
| கயன்மாண் | 111 |
| கரணங்கள் | 105 |
| கருடக்கொடி | 161 |
| கருவாய் உல | 106 |
| கலந்துநின் | 187 |
| கல்லாதபுல் | 185 |
| கல்லாமனத்து | 91 |
| களிவந்த | 70 |
| கள்வன் | 107 |
| கறங்கோலை | 110 |
| கற்போலு | 126 |
| கற்றறியேன் | 211 |
| கனவேயுந் | 110 |
| கன்னார் | 110 |
| காசணிமின் | 97 |
| காட்டகத்து | 239 |
| காணலாம்பரமே | 46 |
| காணும் | 240 |
| காணுமதொ | 230 |
| காணுமாறு | 59 |
| காதார் குழையாட | 87 |
| காப்பாய் | 172 |
| காமனுடலு | 127 |
| காருடைப் | 137 |
| காருறு | 66 |
| காலமுண்டாக | 203 |
| கானார் புலி | 115 |

| | பக்கம் |
|---|---|
| கிஞ்சுக | 139 |
| கிளியனார் | 199 |
| கிளிவந்த | 94 |
| கிற்றவாமன | 44 |
| கீதமினிய | 134 |
| குதுகுதுப்பு | 76 |
| குலங்களைந்தாய் | 74 |
| குலம்பாடி | 112 |
| குழைத்தாற் | 191 |
| குறியும் நெறி | 215 |
| குறைவிலா | 150 |
| கூடிக்கூடி | 190 |
| கூவின | 142 |
| கூறும் நாவே | 192 |
| கூற்றை | 205 |
| கெடுவேன் | 248 |
| கேட்டாயோ | 91 |
| கேட்டாரும் | 42 |
| கையார் வளை | 93 |
| கையால்தொழு | 163 |
| கொந்தணவும் | 137 |
| கொம்பரில்லா | 71 |
| கொம்பில் | 215 |
| கொம்மை | 216 |
| கொழுமணி | 74 |
| கொள்ளுங்கில் | 47 |
| கொள்ளேர் பிளவக | 65 |
| கொள்ளேன் | 32 |
| கொன்றை | 133 |
| கோணிலா | 201 |
| கோயில் சுடுகாடு | 113 |
| கோல மேனி | 183 |
| கோலவரை | 130 |

| | பக்கம் |
|---|---|
| கோலாலமாகி | 115 |
| கோவேயருள | 249 |
| கோழிசிலம்ப | 85 |
| கோற்றேன்மொ | 139 |
| கோற்றேனென | 197 |
| சங்கமரற்ற | 101 |
| சங்கரா போற்றி | 52 |
| சங்கு | 246 |
| சச்சையனே | 75 |
| சடையானே | 213 |
| சட்டோ நினைக்க | 105 |
| சதுரை | 202 |
| சந்திரனை | 94 |
| சலமுடைய | 117 |
| சாடிய வேள்வி | 122 |
| சாதல் | 251 |
| சாதி குலம் | 185 |
| சாவமுன் | 33 |
| சித்தமேபுகு | 223 |
| சிந்தனை | 41 |
| சிந்தை செய்கை | 57 |
| சிரிப்பார் | 148 |
| சிரிப்பிப்பன் | 81 |
| சீரார் திருவடி | 121 |
| சீரார் பவள | 126 |
| சீலமின்றி | 248 |
| சீவார்ந்தீ | 162 |
| சுடர்பொற் | 169 |
| சுந்தரத் | 135 |
| சுந்தர நீறணிந்து | 97 |
| சுருள்புரி | 158 |
| சூடகந் தோள்வளை | 98 |
| சூடுவேன் | 94 |

| | பக்கம் |
|---|---|
| சூரியனார் | 124 |
| செங்கணவன்பால் | 88 |
| செங்கண்நெடு | 89 |
| செடியாராக்கை | 164 |
| செப்பார் | 92 |
| செம்மை | 251 |
| செய்தபிழை | 236 |
| செய்யவாய் | 139 |
| செய்வதறியா | 48 |
| செல்வம்நல் | 47 |
| செழிகின்ற | 66 |
| செழுக்கமல | 157 |
| செறியும்இப் | 220 |
| செறியும்பிற | 203 |
| சேரக் கருதி | 234 |
| சொல்லிய | 245 |
| சோதியாய் | 152 |
| சோதியே சுடரே | 177 |
| சோலைப்பசுங்கிளி | 140 |
| ஞாலம் | 156 |
| ஞானக் கரும்பின் | 101 |
| ஞானவாள் | 235 |
| தகைவிலா | 200 |
| தக்கனு | 124 |
| தக்கனையும் | 114 |
| தச்சு விடு | 122 |
| தந்ததுன் | 152 |
| தரிக்கிலேன் | 51 |
| தவமேபுரிந்தி | 33 |
| தறிசெறி | 200 |
| தனித்துணை | 78 |
| தனியனேன் | 41 |
| தன்மைபிற | 50 |





| | பக்கம் |
|---|---|
| தாதாடு | 138 |
| தாதாய்மூவே | 172 |
| தாமே | 232 |
| தாயாய் | 248 |
| தாரகை போலும் | 81 |
| தாரா அருளொ | 190 |
| தாராய் உடையா | 60 |
| தாளியறுகின் | 133 |
| தானந்தம் | 115 |
| திகழத்திகழும் | 170 |
| திண்போர் | 121 |
| திருந்துவார் | 180 |
| திருமாலும் | 108 |
| திருவார் | 108 |
| தில்லைமூதூர் | 05 |
| தினைத்தனை | 104 |
| தீதில்லை | 126 |
| தீர்க்கின்ற | 67 |
| தீர்ந்த அன்பு | 54 |
| துடிகொள் | 178 |
| துடியேர் | 214 |
| துணியா உருகா | 189 |
| துண்டப் பிறை | 92 |
| துப்பனே | 179 |
| தூவெள் | 228 |
| தெங்குலவு | 131 |
| தென்பாலுகந் | 115 |
| தேரைநிறுத்தி | 124 |
| தேவதேவன் | 221 |
| தேவர் கோவறியாத | 42 |
| தேனக மாமலர் | 102 |

| | பக்கம் |
|---|---|
| தேனாடு கொன்றை | 119 |
| தேனைப் பாலை | 50 |
| தேன்பழச் | 135 |
| தேன்புக்க | 116 |
| தையலார் | 251 |
| தையலோர் | 133 |
| தொண்டர்காள் | 235 |
| தோலுந் துகிலும் | 107 |
| நங்காய் | 115 |
| நங்கைமீரெனை | 222 |
| நஞ்சமர் | 129 |
| நடித்து | 218 |
| நண்ணிப் | 239 |
| நமச்சிவாய | 01 |
| நரியைக் | 249 |
| நல்கா | 148 |
| நல்லமலரின் | 124 |
| நன்றாக | 116 |
| நாடகத்தால் | 36 |
| நாதமுடை | 227 |
| நாமகள் நாசி | 123 |
| நாயிற்கடைப் | 118 |
| நாயிற்கடையா | 193 |
| நாயேனை | 106 |
| நானாரடி | 195 |
| நானாரென் | 103 |
| நானுமென் | 106 |
| நானேயோ | 212 |
| நான்தனக் | 106 |
| நான்மறை | 124 |
| நான்முகன் முத | 21 |

| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| நித்தமணுள | 132 | பந்தவிகார | 243 |
| நிருத்தனே | 177 | பப்பற | 143 |
| நிலம்நீர் | 126 | பரந்துபல் | 34 |
| நிற்பார் | 233 | பரம்பரனே | 76 |
| நினைப்பதாக | 56 | பரவுவாரவர் | 166 |
| நினையப் பிற | 171 | பரவுவாரிமை | 38 |
| நீக்கிமுன் | 168 | பரிதிவாழ்ஒளி | 175 |
| நீண்டகரத் | 132 | பரிந்துவந்து | 171 |
| நீண்ட மாலும் | 170 | பருவரை | 202 |
| நீதியாவன | 165 | பவனெம் | 35 |
| நீரின்ப வெள்ள | 203 | பழிப்பில் | 80 |
| நீலவுருவிற் | 135 | பழுதில்தொல் | 176 |
| நெக்கு நெக் | 171 | பற்றும் கவை | 196 |
| நெடுந்தகை | 69 | பன்னுட் பரவி | 119 |
| நெறிசெய் | 119 | பாங்கினொடு | 186 |
| நெறியல்லா | 250 | பாசம்பரஞ் | 82 |
| நோயுற்று | 105 | பாசவேரறு | 208 |
| பங்கயம் | 127 | பாடவேண்டும் | 64 |
| பச்சைத்தால் | 211 | பாடிமால்புக | 174 |
| பஞ்சாய (திருவேசறவு) | 211 | பாடிற்றிலேன் | 80 |
| பஞ்சாய (அச்சோ) | 251 | பாதாளம் | 85 |
| பஞ்சின்மெல் | 175 | பாரார்விசும் | 90 |
| படமாக | 120 | பாருருவாய | 229 |
| பணிவார் பிணி | 60 | பாரொடு | 173 |
| பண்சுமந்த | 92 | பாரோர் | 163 |
| பண்டாய | 238 | பார்பதம் | 152 |
| பண்ணார்ந்த | 210 | பார்பாடும் | 111 |
| பண்ணினேர் | 174 | பார்ப்பதி | 123 |
| பண்பட்ட | 118 | பாகனார்க் | 124 |
| பத்தர்சூழ | 222 | பாலும் | 120 |
| பத்திமையும் | 185 | பால்நினைந் | 209 |
| பத்திலனே | 230 | பாவநாசா | 176 |
| பந்தணைவிர | 175 | பாழ்ச்செய் | 216 |





| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பாற்றிரு | 231 | பூத்தாரும் | 125 |
| பிட்டுநேர்பட | 181 | பூமேல் | 108 |
| பிணக்கிலாத | 181 | பூவலர் | 227 |
| பிணியெலாம் | 199 | பூவார் | 231 |
| பித்தனென் | 166 | பூவியல் | 96 |
| பித்தென்னை | 237 | பூவேறு | 103 |
| பிரமன் | 127 | பெருநீரற | 73 |
| பிறவிதனை | 185 | பெருமான் | 234 |
| பிறவி யென்னு | 223 | பெரும்பெரு | 158 |
| பிறிவறியா | 160 | பெற்றது | 72 |
| புகவேதகே | 35 | பெற்றிபிறர்க் | 95 |
| புகவேவேண்டா | 232 | பேசப்பட் | 58 |
| புகழ்மின் | 233 | பேசிற்றும் | 40 |
| புகுவதா | 44 | பேசும் | 240 |
| புகுவேன் | 51 | பேதமில்ல | 183 |
| புணர்ப்ப | 54 | பேராசை | 120 |
| புத்தன் புரந்த | 112 | பேருங்குண | 215 |
| புத்தன் முத | 126 | பைங்குவளை | 86 |
| புரந்தரனு | 123 | பைந்நாப்ப | 195 |
| புரள்வார் | 234 | பொச்சை | 220 |
| புலன்கள் | 74 | பொதும்புறு | 77 |
| புலையனேனை | 154 | பொத்தை | 167 |
| புவனியிற் | 144 | பொய்யவ | 67 |
| புழுவினுற் | 223 | பொய்யனேன் | 153 |
| புறமே | 59 | பொய்யாய | 107 |
| புற்றில்வாள் | 198 | பொய்யெல் | 250 |
| புற்றுமாய் | 153 | பொருட்பற்றி | 125 |
| புன்புலால் | 209 | பொருத்த | 62 |
| பூங்கமல | 213 | பொருந்தும் | 218 |
| பூசுவதும் | 113 | பொருளே | 70 |
| பூணொணுத | 182 | பொலிகின்ற | 68 |
| பூதங்கள் ஐந் | 186 | பொழிகின்ற | 158 |
| பூதங்கள் தோறு | 142 | பொன்னிய | 245 |

| | பக்கம் |
|---|---|
| போகம் | 55 |
| போது சேரய | 155 |
| போரேறே | 48 |
| போற்றியருளுக | 89 |
| போற்றியிப் | 54 |
| போற்றியென் | 52 |
| போற்றியென்வா | 141 |
| போற்றியென்று | 47 |
| போற்றியோம் | 51 |
| மஞ்சுலாம் | 201 |
| மடங்க | 71 |
| மண்ணதனிற் | 250 |
| மண்ணினில் | 244 |
| மதிக்குந் | 215 |
| மத்துறு | 75 |
| மருவினிய | 212 |
| மருளனேன் | 180 |
| மலங்கினேன் | 182 |
| மலைமகளை | 114 |
| மலையரை | 116 |
| மறுத்த | 67 |
| மன்ன எம் | 64 |
| மன்னவனே | 79 |
| மாடுஞ் சுற்ற | 218 |
| மாடுநகை | 99 |
| மாதாடு | 130 |
| மாதிவர் | 225 |
| மாயவனப் | 204 |
| மாய வாழ்க் | 222 |
| மாயனே | 155 |
| மாலயன் | 225 |
| மாலறியா | 83 |
| மாலேபிரமனே | 111 |

| | பக்கம் |
|---|---|
| மாவடுவகிர | 160 |
| மாவார | 121 |
| மாழைமை | 159 |
| மாறிநின்றெனை | 43 |
| மாறிநின்றென் | 149 |
| மாறிலாத | 61 |
| மாறுபட் | 68 |
| மானம் அழிந் | 127 |
| மானே நீ | 84 |
| மானேர் நோக்கிமணை | 192 |
| மானேர் நோக்கிஉமை | 59 |
| மானேர் நோக்கியுமை | 49 |
| மானோர் பங்கா | 190 |
| மிடைந்தெ | 162 |
| மின்கணி | 159 |
| மின்னிடை | 100 |
| மின்னேர | 247 |
| முடித்த வாறும் | 50 |
| முதலைச்செவ் | 78 |
| முத்தணி | 99 |
| முத்தனே | 179 |
| முத்தனை | 224 |
| முத்தன்ன | 83 |
| முத்திக்குழன்று | 111 |
| முத்திநெறி | 250 |
| முத்துநல் | 96 |
| முந்தியமுதல் | 144 |
| முழுதயில் | 70 |
| முழுமுதலே | 146 |
| முழுவதுங் | 34 |
| முன்னீறும் | 129 |
| முன்னாய | 121 |
| முன்னானை | 95 |





| | பக்கம் |
|---|---|
| முன்னிக் | 87 |
| முன்னின்று | 66 |
| முன்னைஎன் | 185 |
| முன்னைப்பழ | 85 |
| முன்னைவி | 237 |
| மூத்தானே | 212 |
| மூவரும் | 238 |
| மூன்றங் | 129 |
| மெய்தான் | 32 |
| மெய்யனே | 179 |
| மேலைவானவ | 46 |
| மேவும்உன் | 188 |
| மையிலங்கு | 61 |
| மைப்பொலியு | 93 |
| மையமர் | 100 |
| மையலாய் | 217 |
| மொய்ப்பால் | 161 |
| மொய்யார் | 86 |
| யாவர்க்கும் | 237 |
| யானேதும் | 36 |
| யானேபொய் | 61 |
| வட்டமலர் | 102 |
| வணங்கத்தலை | 119 |
| வணங்குமிப் | 219 |
| வணங்குநின் | 56 |
| வண்ணந்தான் | 41 |
| வந்திமை | 226 |
| வம்பனாய் | 224 |
| வம்பனேன் | 173 |
| வருந்துவன் | 36 |
| வலைத்தலை | 78 |
| வல்லைவா | 174 |
| வழங்குகின் | 160 |

| | பக்கம் |
|---|---|
| வளர்கின்ற | 66 |
| வளைந்தது | 122 |
| வன்புலால் | 199 |
| வன்னெஞ்சக் | 106 |
| வாட்டடங் | 98 |
| வாராவழி | 237 |
| வாவிங்கே | 136 |
| வாழ்கின்றாய் | 39 |
| வாழ்த்துவதும் | 37 |
| வாழ்ந்தார் | 239 |
| வானாலாம் | 200 |
| வானநாட | 62 |
| வானவன் | 120 |
| வானாகி | 37 |
| வான்கெட்டு | 112 |
| வான்பாவிய | 197 |
| வான் வந்த | 90 |
| விச்சதின்றி | 63 |
| விச்சுக்கேடு | 58 |
| விச்சைதான் | 42 |
| விடுமின் | 233 |
| விடைவிடா | 206 |
| விண்ணகத் | 144 |
| விண்ணாளுந் | 92 |
| விண்ணோர் | 112 |
| விரவிய | 205 |
| வினைக்கேடரும் | 196 |
| வினைப்பிறவி | 184 |
| வினையிலே | 40 |
| வினையென் | 45 |
| வெஞ்சின | 123 |
| வெஞ்சேலனைய | 164 |
| வெந்து | 250 |

| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| வெய்யவன் | 123 | வேண்டும்வே | 188 |
| வெய்யவினை | 236 | வேண்டேன் | 197 |
| வெருவரேன் | 198 | வேதமும் | 103 |
| வெள்ளத் | 69 | வேதமொழி | 131 |
| வெள்ளந்தாழ் | 39 | வேவத் | 227 |
| வெள்ளைக் | 132 | வேனில்வேள் | 38 |
| வெறுப்பன | 157 | வேனில்வேள்க | 45 |
| வேடுருவாகி | 226 | வைத்த நிதி | 104 |
| வேண்டத்தக்க | 193 | வைப்புமா | 165 |
| வேண்டும்நின் | 55 | வையகம் | 99 |


உ

# திருவாசக உண்மை

### சிவபுராணம்

தேசுறுமா ணிக்கமெனச் சிறந்ததிரு வாசகத்திற்
பேசுதிருச் சிவபுரா ணத்தகவற் பெருமைசொலில்
ஈசர்தமக் கியல்பான திருநாம முதலெவையு
மாசறவே வாழ்கவென வாழ்த்துகின்ற வருட்குறிப்பாம். 1

### கீர்த்தித்திருவகவல் — திருவண்டப்பகுதி

புகழ்பெருகுஞ் செய்கையெல்லாம் புகலகவ லொன்றுகுந்
திகழ்திருவண் டப்பகுதித் திருவகவல் செப்பியது
தகுசிருட்டி திதியொடுக்கஞ் சாற்றுதிரோ தம்பொதுவா
யகலமுறத் தேர்ந்திடவே யருளியநற் பொருளாகும். 2

### போற்றித்திருவகவல் — திருச்சதகம் — நீத்தல் விண்ணப்பம்

முத்திபெறு நெறியறியு மொழிபோற்றித் திருவகவல்
சத்தியஞா னந்தருதே சிகர்மோகஞ் சதகமதா
மித்தையுல கினையகற்றி விடாமலெனை யாண்டருளென்
றத்தரறிந் திடநீத்தல் விண்ணப்ப மறைந்ததுவாம். 3

### திருவெம்பாவை — திருவம்மானை

மலவிருளுற் றுறங்காமன் மன்னுபரி பாகரருட்
செலமுழுக வருகவெனச் செப்பறிரு வெம்பாவை
நலமுறுமந் தணர்வடிவாய் நாரணன்காண் பரியபத
நிலமதில்வந் தாள்கருணை நினைந்தாட லம்மானை. 4

### திருப்பொற்சுண்ணம் — திருக்கோத்தும்பி

சத்திகளாற் றனுகரண புவனபோ கங்கடமை
யத்தனுக்குச் சுண்ணமவை யாமிடிக்கக் கூவுதலே
யொத்ததிருச் சுண்ணமுயர் போதமொரு வண்டாகச்
சித்தவிகா ரத்தூது செப்பிவிடல் கோத்தும்பி. 5

திருத்தெள்ளேணம் — திருச்சாழல்

பொன்னார்மெய் யண்ணலரும் போதவின்ப மேமிகுந்து
தென்னாதென் னாவெனவே தெள்ளேணங் கொட்டியதா
முன்னார் கலையுமுண ராமுகை யாமேடி
தன்னாற் பதிமுதன்மை சாற்றியதாந் திருச்சாழல். 6

திருப்பூவல்லி — திருவுந்தியார்

தேவரறி யாதசிவன் றேடியே யாண்டநல
மாவலொடுஞ் சொல்லி யடியாரோ டுங்கூடிப்
பூவியந்து கொய்தல் திருப்பூவல்லி யாமரன்சீர்
பாவமுறு தீமையறப் பாடல் திருவுந்தியதே. 7

திருத்தோணோக்கம் — திருப்பொன்னூசல்

சித்தஞ் சிவமாக்கிச் செய்தனவே புண்ணியமா
யத்தன் செயுங்கருணைக் காராமை யுண்மிகுந்து
பொத்திய கைகொட்டிப் புகழ்தல் தோணோக்கமருட்
சத்தியிருந் தாடத்தா லாட்டிடுதல் பொன்னூசல். 8

திருவன்னைப்பத்து — குயிற்பத்து

நேயம்மி குந்த நிலைகுலையக் கூடுதலை
யாயவருட் டாய்க்கங் கறைதலன்னைப் பத்தாகுந்
தூயவருட் குயிலேநற் சோதியெனைக் கூடுதற்குன்
வாயினாற் கூவெனமுன் வாழ்த்தல்குயிற் பத்தாமே. 9

திருத்தசாங்கம் — திருப்பள்ளியெழுச்சி

பேர்நாடூ ராறுமலை பெயரூர்தி படைமுரசு
தார்கொடியெ லாமரற்குச் சாற்றல்தசாங் கமதா
மோர்மரு திருப்பள்ளி யெழுச்சிபணி விடைகேட்
டார்வமுட னாண்டவரற் கன்புசெயு மியல்பே. 10



கோயின்மூத்ததிருப்பதிகம் — கோயிற்றிருப்பதிகம்

செத்திலாப்பத்து — அடைக்கலப்பத்து

கோயின்மூத்த திருப்பதிகஞ் சிதம்பரத்தி லருளடையுங்
குறிப்பதாகு, மேயுங்கோயிற் றிருப்பதிகம் பெருந்துறைத்
தேசிகர் மோகமியம்பலாகு, மாய பசுபோ தம்முற்றுங்
கெடவேண்டலேசெத்தி லாப்பத் தாகு, மோதுவல்வா
தனைகள் வந்தணுகாம லடைக்கலப்பத் துரைத்ததாமே. 11

ஆசைப்பத்து — அதிசயப்பத்து

கருவியுறும் ஊனுடற்கண் வாராமல்
திருவருளிற் கலப்ப தற்கே
அரனடியைப் புகழ்ந்துபெரு கார்வமொடு
பாடுதலே யாசைப் பத்தாம்
வெருவிமலத் தினைச்சீலத் தொன்றாகும்
அடியர்குழாத் துடனே கூட்டும்
பரமரருட் பெருமைமிகு தியைப்புகழ்ந்து
பாடல் அதிசயப் பத்தாமே 12

புணர்ச்சிப்பத்து — வாழாப்பத்து

ஆண்டகுரு வைப்பிரியா தணைந்துபணி
புரிந்துமிகு மன்போ டின்பம்
பூண்டுகிடக் கப்பெறுவ தென்றுகொலோ
எனும்விருப்பம் புணர்ச்சிப் பத்தாம்
நீண்டவுல கத்தினிற்பற் றொன்றிலேன்
இவ்வுடற்க ணின்று வாழேன்
மாண்டகுநின் பதநிழற்கீழ் வருகவருள்
புரியெனுஞ்சொல் வாழாப் பத்தே 13

அருட்பத்து — திருக்கழுக்குன்றப்பதிகம்

சோதியருட் சுடர்விளக்கே துயர்ப்பிறவி
கடல்விடுத் துன்தாள் சேர்தற்கு
ஆதரித்திங் குனையழைத்தால் அதெந்துவென
கேளெனுஞ்சொல் அருட்பத் தாகும்

நீதிமறை பரவுதிருப் பெருந்துறையிற்
குருவடி வாய்நிகழ்ந்த கோலம்
காதலொடுங் காட்டினையே எனுங்களிப்புப்
பகர்தல் திருக்கழுக் குன்றாமே. 14

### கண்டபத்து — பிரார்த்தனைப்பத்து

இந்திரிய வயமயங்கா தேயெடுத்துத்
தானாக்கும் எழிலா னந்தம்
கந்தமலி தில்லையினுட் கண்டேனென்
றுவந்துரைத்தல் கண்ட பத்தாம்
அந்தமிலா ஆனந்தத் தகலாமல்
எனையழுத்தி யாள்வா யென்று
சிந்தைகலந் துரைத்ததுவே பிரார்த்தனைப்பத்
தாய்ப்புகலுஞ் செய்கை யாமே. 15

### குழைத்தபத்து — உயிருண்ணிப்பத்து

இழைத்தேனிவ் வாக்கைபொறுத் தினிக்கணமும்
பொறுக்கலேன் ஏழை யேனைக்
குழைப்பதேன் பிழைபொறுத்தாள் எனவிரங்கிக்
கூறுதலே குழைத்த பத்தாம்
தழைத்துவளர் பேரின்பந் தானாகி
உயிர்தோன்றாத் தன்மை யாய்த்துன்
பொழித்துநிறை வைப்பெறுதல் உயிருண்ணிப்
பத்தாவிங் குரைத்த தாமே. 16

### அச்சப்பத்து — திருப்பாண்டிப் பதிகம்

தரையில்வளர் வினைமுழுதும் வரினும்அஞ்சேன்
சிவசமயத் தவஞ்சா ராதார்
அருகின்வரக் காண்கின்மனம் அஞ்சுமென
இகழ்ந்துரைத்தல் அச்சப் பத்தாம்
புரவியின்மேற் பாண்டியன்முன் வரும்பதத்தை
யாம்பெறுமற் புதம்போல் யாரும்
விரவுமின்கள் என்றடியார்க் குறுதிசொலல்
திருப்பாண்டி விருத்த மாமே. 17



### பிடித்தபத்து — திருவேசறவு

மிக்கபிறவித் துயரெ லாமொழித்து
விடுத்துவமிங் களித்த லாலே
சிக்கறச் சிக்கெனப் பிடித்தேன் நின்னையென்று
துணிவு செப்பல் பிடித்த பத்தாம்
தக்கபரியாய் நரியை யாக்குதல்போல்
எனைப்பெரிதாய்த் தாக்கித் தாட்கீழ்
அக்கணம்வைத் தனையே யென்றிரங்கல்திரு
வேசறவென் றியம்ப லாமே. 18

### திருப்புலம்பல் — குலாப்பத்து

கரைந்துருகும் பேரன்புன் கழலிணைக்கே
கற்றாவின் மனம்போ லென்றுந்
திருந்தும்வகை யெனக்கருள்க வெனக்கேட்ட
திருப்புலம்ப லாகு முள்ளம்
விரும்புசிவா னந்தவெள்ளம் விழைந்துதில்லை
நாயகனை மிகக்கொண் டாடி
நிரம்புமனக் களிமிகுத்த விறுமாப்பே
குலாப்பத்தாய் நிகழ்த்த லாமே 19

### அற்புதப்பத்து — சென்னிப்பத்து

மாயவுருக் கொண்டுளத்தை மயக்குமின்னார்
கண்வலையுண் மயங்கு வேற்கிங்
காயுமறி வளித்தாள லதிசயமென்
றுரைத்தலற்பு தப்பத் தாகுந்
தூயவருட் குருபதத்தைச் சூட்டுதற்குப்
பெற்றவுயர் சுகத்தை நோக்கிச்
சேயமலர்ப் பதத்தருமை யடியரொடும்
வியந்துரைத்தல் சென்னிப் பத்தே. 20

### திருவார்த்தை — எண்ணப்பதிகம்

அறம்பெருகும் பெருந்துறையிற் றமையாண்ட
 செயன்முதலா வரன்சீ ராட்டின்
றிறமறிவா ரெம்பிரா னுவரென
 வுரைத்தறிரு வார்த்தை யாகு
நிறம்வளரு மலர்ப்பொழில்சூழ்ந் தோங்குதிருத்
 தில்லைமன்று ணிமல னுமத்
திறம்பெருகு மின்பமரு ளென்றலெண்ணப்
 பத்தெனவுந் திகழ்த்த லாமே. 21

### யாத்திரைப்பத்து — திருப்படையெழுச்சி

பொல்லாத பவத்தைவிட்டுச் சிவன்கழற்கீழ்ப்
 புகுங்காலம் புணர்ந்த தெற்கிங்
கெல்லாரும் வாருமெனக் கருணையினு
 லழைத்திடல்யாத் திரைப்பத் தாகு
மல்லாத துர்க்குணமா யப்படைகள்
 விளையாம லருள்வா ளேந்தி
நல்லோர்க ளியாருமெம்மோ டெய்துமெனப்
 படையெழுச்சி நவிற லாகும். 22

### திருவெண்பா — பண்டாயநான்மறை

தொந்தமா மலமொறுத்துச் சுகம்பெருக்கிப்
 பெருந்துறைவாழ் சோதி யென்றன்
சிந்தனையே யூராகக் கொண்டிருந்தா
 ரென்றுரைத்த திருவெண் பாவா
மெந்தைதிருப் பெருந்துறையை யேத்துநம
 ரேவாழ்வுற் றிடர்சேர் பாச
பந்தமறுத் திடுவரெனப் பண்டாய
 நான்மறையும் பகர்ந்த தாமே. 23



### திருப்படையாட்சி — ஆனந்தமாலை — அச்சோப்பதிகம்

வாகுதிருப் பெருந்துறையா ரெழுந்தருளப்
 பெறிலெல்லா வளங்கண் முற்று
மாகுமெமக் கல்லாத தாகாதென்
 றியம்பல்படை யாட்சி யாகு
மோகமிகு மடியரொடும் கூடவிரும்பிய
 தானந்த மொழியு மீசர்
போகசுக மெனக்களித்தா ரார்பெறுவா
 ரெனுமருமை புகற லச்சோ. 24

உ

சிவமயம்

# திருவாசகப் புகழ்ப்பாடல்கள்

## திருவாசகம் என்னும் தேன்

தொல்லை இரும்பிறவிச் சூழும் தளைநீக்கி
அல்லலறுத் தானந்தம் ஆக்கியதே — எல்லை
மருவா நெறிஅளிக்கும் வாதவூர் எங்கோன்
திருவா சகம்என்னும் தேன்

கற்பாந்த காலங் கடவாக் கடல்கடக்கத்
தெப்பமாய் வந்தெனக்குச் சேர்ந்ததே — அப்பன்
உருவா சகங்கொண் டுரைத்த தமிழ்மாலைத்
திருவா சகம்என்னும் தேன்

திருவா சகமென்னும் தேன்பருகித் தேசமெல்லாம்
கருவே ரறுத்தருளிக் கருங்கடலை வேர்துளைத்திட்
டுருவா சகமென்னும் உண்மையுணர்ந் துத்தமனுர்
திருவா சகமென்னும் தேனினருட் காரணமே

## துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள்

[நேரிசையாசிரியப்பா]

விளங்கிழை பகிர்ந்த மெய்யுடை முக்கண்
காரணன் உரையெனும் ஆரண மொழியோ
ஆதிசீர் பரவும் வாதவூர் அண்ணல்
மலர்வாய்ப் பிறந்த வாசகத் தேனே
யாதோ சிறந்தது என்குவிர் ஆயின்

வேதம் ஓதின் விழிநீர் பெருக்கி
நெஞ்சம்நெக் குருகி நிற்பவர்க் காண்கிலேம்
திருவாசகம் இங்கொருகால் ஓதின்
கருங்கல் மனமும் கரைந்துகக் கண்கள்
தொடுமணற் கேணியில் சுரந்துநீர் பாய
மெய்ம்மயிர் பொடிப்ப விதிர்விதிர்ப் பெய்தி
அன்பர் ஆகுநர் அன்றி
மன்பதை உலகின் மற்றையர் இலரே

[நேரிசையாசிரியப்பா]

பெருந்துறை புகுந்து பேரின்ப வெள்ளம்
மூழ்கிய புனிதன் மொழிந்தவா சகமே
வாசகம் அதற்கு வாச்சியம்
தூசகல் அல்குல்வேய்த் தோள்இடத் தவனே

[நேரிசையாசிரியப்பா]

வலமழு வுயரிய நலமலி கங்கை
நதிதலை சேர்ந்த நற்கரு ணைக்கடல்
முகந்துல குவப்ப வுகந்தமா ணிக்க
வாசக னெனுமொரு மாமழை பொழிந்த
திருவா சகமெனும் பெருநீ ரொழுகி
ஓதுவார் மனமெனு மொண்குளம் புகுந்து
நாவெனு மதகி னடந்து கேட்போர்
செவியெனு மடையிற் செவ்விதிற் செல்லா
உளமெனு நிலம்புக வூன்றிய வன்பாம்
வித்திற் சிவமெனு மென்முளை தோன்றி
வளர்ந்து கருணை மலர்ந்து
விளங்குறு முத்தி மெய்ப்பயன் றருமே

[நேரிசையாசிரியப்பா]

நலமலி வாதவூர் நல்லிசைப் புலவ
மனநின் றுருக்கு மதுர வாசக
கலங்குறு புலனெறி விலங்குறு வீர
திங்கள் வார்சடைத் தெய்வ நாயகன்
ஒருகலை யேனு முணரா னஃதான்று
கைகளோ முறிபடுங் கைகள் காணிற்
கண்களோ வொன்று காலையிற் காணும்
மாலையி லொன்று வயங்கித் தோன்றும்
பழிப்பி னொன்று விழிப்பி னெரியும்

ஆயினுந் தன்னை நீபுகழ்ந் துரைத்த
பழுதில் செய்யு ளெழுதின னதனாற்
புகழ்ச்சி விருப்பன் போலும்
இகழ்ச்சி யறியா வெண்பணி வானே

[நேரிசையாசிரியப்பா]

திருவார் பெருந்துறைச் செழுமலர்க் குருந்தின்
நிழல்வா யுண்ட நிகரிலா னந்தத்
தேன்தேக் கெறியுஞ் செய்யமா ணிக்க
வாசகன் புகன்ற மதுர வாசகம்
யாவரும் ஓதும் இயற்கைத் தாதலின்
பொற்கலம் நிகர்க்கும் பூசுரர் நான்மறை
மட்கலம் நிகர்க்கும் மதுர வாசகம்
ஓதின் முத்தி உறுபயன்
வேதம் ஓதின் மெய்ப்பயன் அறமே

[நேரிசையாசிரியப்பா]

செய்ய வார்சடைத் தெய்வ சிகாமணி
பாதம் போற்றும் வாதவூர் அன்ப
பாவெனப் படுவதுன் பாட்டுப்
பூவெனப் படுவது பொறிவாழ் பூவே

## வடலூர் வள்ளலார் இராமலிங்க சுவாமிகள்

[தரவுக் கொச்சகக் கலிப்பா]

தேசத்தில் இனிக்கின்ற தெள்ளமுதே மாணிக்க
வாசகனே ஆனந்த வடிவான மாதவனே
மாசகன்ற நீதிருவாய் மலர்ந்ததமிழ் மாமறையின்
ஆசகன்ற அநுபவம்நான் அநுபவிக்க அருளுதியே 1

கருவெளிக்குட் புறனாகிக் காரணமெலாங் கடந்துநின்ற
பெருவெளிக்கு நெடுங்காலம் பித்தாகித் திரிகின்றோர்
குருவெளிக்கே நின்றலறக் கோதறநீ கலந்ததனி
உருவெளிக்கே மறைபுகழும் உயர்வாத வூர்மணியே 2



மன்புருவ நடுமுதலா மனம்புதைத்து நெடுங்காலம்
என்புருவாய்த் தவஞ்செய்வார் எல்லாரு மேமாக்க
அன்புருவம் பெற்றதன்பின் அருளுருவம் அடைந்து பின்னர்
இன்புருவம் ஆயினைநீ எழில்வாத வூரிறையே. 3

உருவண்டப் பெருமறையென் றுலகமெலாம் புகழ்கின்ற
திருவண்டப் பகுதியெனும் திருவகவல் வாய்மலர்ந்த
குருவென்றெப் பெருந்தவருங் கூறுகின்ற கோவேநீ
இருவென்ற தனியகவல் எண்ணமெனக் கியம்புதியே 4

தேடுகின்ற ஆனந்தச் சிற்சபையின் சின்மயமாய்
ஆடுகின்ற சேவடிக்கீழ் ஆடுகின்ற ஆரமுதே
நாடுகின்ற வாதவூர் நாயகனே நாயடியேன்
வாடுகின்ற வாட்டமெலாம் வந்தொருக்கால் மாற்றுதியே 5

சேமமிகுந் திருவாத வூர்த்தேவென் றுலகுபுகழ்
மாமணியே நீயுரைத்த வாசகத்தை எண்ணுதொறுங்
காமமிகு காதலன்தன் கலவிதனைக் கருதுகின்ற
ஏமமுறு கற்புடையாள் இன்பினும்இன் பெய்துவதே 6

வான்கலந்த மாணிக்க வாசகநின் வாசகத்தை
நான்கலந்து பாடுங்கால் நற்கருப்பஞ் சாற்றினிலே
தேன்கலந்து பால்கலந்து செழுங்கனித்தீஞ் சுவைகலந்தென்
ஊன்கலந்து உயிர்கலந்து உவட்டாமல் இனிப்பதுவே 7

வருமொழிசெய் மாணிக்க வாசகநின் வாசகத்தில்
ஒருமொழியே என்னையும்என் னுடையனையும் ஒன்றுவித்துத்
தருமொழியாம் என்னிலினிச் சாதகமேன் சஞ்சலமேன்
குருமொழியை விரும்பியயல் கூடுவதேன் கூறுதியே 8

பெண்சுமந்த பாகப் பெருமான் ஒருமாமேல்
எண்சுமந்த சேவகன்போல் எய்தியதும் வைகைநதி
மண்சுமந்து நின்றதுமோர் மாறன் பிரம்படியால்
புண்சுமந்து கொண்டதுநின் பொருட்டன்றோ புண்ணியனே 9

வாட்டமிலா மாணிக்க வாசகநின் வாசகத்தைக்
கேட்டபொழு தங்கிருந்த கீழ்ப்பறவைச் சாதிகளும்
வேட்டமுறும் பொல்லா விலங்குகளும் மெய்ஞ்ஞான
நாட்டமுறும் என்னில்இங்கு நானடைதல் வியப்பன்றே 10

## திருவாசகப் பெருமை

வள்ளுவர்நூல் அன்பர்திரு வாசகந்தொல் காப்பியமே
தெள்ளுபரி மேலழகன் செய்தவுரை — ஒள்ளியசீர்த்
தொண்டர் புராணம் தொகைசித்தி யோராறும்
தண்டமிழின் மேலாம் தரம்

தேவர் குறளும் திருநான் மறைமுடிவும்
மூவர் தமிழும் முனிமொழியும் — கோவை
திருவாசகமும் திருமூலர் சொல்லும்
ஒருவா சகமென் றுணர்.

மாசறுமணிபோற் பன்னுள் வாசகமாலை சாத்திப்
பூசனை செய்துபன்னுட் புண்ணியமன்று ளாடும்
ஈசனதடிக்கீ ழெய்திசுறிலா அறிவானந்தத்
தேசொடு கலந்துநின்றுர் சிவனருள் விளக்க வந்தார்

## திருவாசகச் சிறப்பு

### (பழம்பாடல்)

பெருகும் வையை தனைஅழைப் பிக்குமே
பிரம்படிக்குப் பிரான்மேனி கன்றுமே
நரியெ லாம்பரி யாக நடத்துமே
நாடிமூகை தனைப்பேசு விக்குமே
பரிவிற் பிட்டுக்கு மண்சுமப் பிக்குமே
பரமனே டெழுதக் கோவைபாடுமே
வருகும் புத்தரை வாதினில் வெல்லுமே
வாத வூரர் வழங்கிய பாடலே.

தயவு செய்து பிழைகளைத் திருத்திக்கொண்டு நூலை வாசியுங்கள்.

# பிழை திருத்தம்

| பக்கம் | பாடல் | பிழை | சரி |
|---|---|---|---|
| ix | — | பிறிதாவென்றும் | பிறிதொன்றும் |
| 55 | 76 | வேன்பு | லேன்பு |
| 103 | 214 | ஞரு | ஞருக் |
| 122 | 295 | உலைந்தன | உளைந்தன |
| 178 | அடிக்குறிப்பு முதல்வரி | நெற்றிக்கண் | நெற்றிக்கண் |
| 179 | 464 | புரங்கள் | புரங்கள் |
| 187 | 486 | களைத்துன் | களைந்துன் |
| 191 | 497 | கேவோ | கோவே |
| 202 | 527 | சாந்தவர் | சார்ந்தவர் |
| 204 | உரை | பாண் - ப் | பாண்டிப் |
| 208 | 543 | கிக்கென | சிக்கென |
| 215 | 562 | ஆண்டானைக | ஆண்டானைக் |
| 218 | 572 | மாடுஞ் | மாடுஞ் |
| 236 | உரை | உயிப்பு | உயிர்ப்பு |
| 239 | 631 | நமச | நமர் |
| 248 | 646 | சேடி | கோடி |
| 250 | | அநுபவ வழியறியாமை | அநுபவ வழி அறியாமை |
| 254 முதற் பாதி | 4 ஆவது வரி | 94 | 49 |
| 2 ஆம் பாதி | 7 ஆவது வரி | 8 | 81 |
| 2 ஆம் பாதி | 26 ஆவது வரி | 271 | 116 |

உ

சீர்காழித் தேவருக்கு மங்களம்
திருநாவுக் கரசருக்கு மங்களம்
சீர்பெருகு சுந்தரர்க்கு மங்களம்
திவ்விய மாணிக்கர்க்கு மங்களம்

— சிவயோக சுவாமிகள்

அச்சுப்பதிவு :

ஞ. வீ. அச்சகம்
384, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.